# உதயன்

பக்கங்கள்

விலை ரூபா 20.00

www.onlineuthayan.com

சுடர் 28 கதிர் 104 வள்ளுவர் ஆண்டு 2044 மாசி 26 ஞாயிற்றுக்கிழமை (10/03/2013) UTHAYAN - A Lively National Tamil Daily


# இலங்கை உள்விவகாரத்தில் தலையிடவேயிடாது இந்தியா

## வெளிவிவகார அமைச்சர் குர்ஷித் திட்டவட்டம்

புதுடில்லி, மார்ச் 10

இலங்கை உட்படப் பிற நாடுகளின் உள் விவகாரங்களில் இந்தியா ஒருபோதும் தலையிடாது என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.


இலங்கை மீது ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா சமர்ப்பித்துள்ள பிரேரணைக்கு இந்தியா ஆதரவு வழங்கவேண்டும் எனக் கோரிக்கைகள் வலுத்துவரும் நிலையில் சல்மான் குர்ஷித் இப்படிக் கூறியுள்ளார்.

புதுடில்லியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆசிய பசுபிக் அனைத்துலக வர்த்தக சம்மேளன மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

அடுத்தவரின் பிரச்சினையில் நாம் எப்போதும் தலையிடுவதில்லை. மற்ற நாடுகளின் விவகாரங்களில் தலையிட்டு ஒரு தரகராக செயல்பட இந்தியா விரும்புவதில்லை.

பார்க்க பக்கம் 04



## அமெரிக்காவின் பிரேரணைக்கு சீனா, ரஷ்யா, ஜப்பான் எதிர்ப்பு

### இந்தியா தொடர்ந்தும் மௌனம்

ஜெனிவா, மார்ச் 10

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா கொண்டு வந்துள்ள பிரேரணைக்கு ஜப்பான், சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. இலங்கையில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்த நேரத்தில் அமெரிக்காவின் பிரேரணை தேவையற்றது எனவும் அவை கருத்து வெளியிட்டுள்ளன. அதேவேளை, இந்தியா இந்த விடயத்தில்

பார்க்க பக்கம் 04

## பிரேரணையின் இறுதி வரைவு கடுமையானதாகவே இருக்கும்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நம்பிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 10

ஜெனிவாவில் இடம்பெற்றுவரும் மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில், இலங்கைக்கு எதிராக அமெரிக்காவால் சமர்ப்பிக்கப்படும் இறுதி வரைவு வலுவானதாக அமையுமென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்பார்ப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 22 ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் இடம்பெற்று வருகின்றது. இந்தக் கூட்டத் தொடரில் இலங்கை அரசுக்கு எதிரான பிரேரணையின்

பார்க்க பக்கம் 04

## புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின் வடக்கில் எதிர்ப்பு எதுவுமில்லை

### சவேந்திரசில்வா கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 10

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் வடக்கில் எந்தவொரு எதிர்ப்புப் போராட்டமும் இடம்பெறவில்லை என ஐ.நாவுக்கான இலங்கைப் பிரதித் தூதுவர் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் பிடியில் இருந்து தப்பித்து, இப்போது வடக்கில் அமைதி மற்றும் உறுதித்தன்மையை ஏற்பட்டுள்ள நிலையில் சில சக்திகள் அரசியல் நோக்கத்துடன் இலங்கை அரசுமீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைச்

பார்க்க பக்கம் 04

## மன்மோகன் முன் குவியும் தபால் அட்டைகள்

சென்னை, மார்ச் 10

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் இலங்கை அரசுக்கு எதிராக இந்தியா வாக்களிக்க வேண்டும் எனக்கோரி இந்தியப் பிரதமருக்கு அஞ்சல் அட்டை அனுப்பும் போராட்டம் நேற்றுச் சனிக்கிழமை காலை சென்னை அண்ணா சாலையில் உள்ள தலைமைத் தபால் நிலைய அலுவலகத்தில் நடைபெற்றது.

தமிழர் எழுச்சி இயக்கமும், தமிழர் பெண்கள் செயற்களமும் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.

இதில் முன்பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள், பெண்கள், தமிழின உணர்வாளர்கள் என சுமார் 200 இக்கும் அதிகமானோர் பங்கேற்றனர்.

அவர்கள் எழுதிய அஞ்

பார்க்க பக்கம் 0

## லொயோலா கல்லூரி மாணவர்கள் 2 ஆவது நாளாகவும் போராட்டம்

சென்னை, மார்ச் 10

தமிழினப் படுகொலை நிகழ்த்திய இலங்கை அரசு மீது போர்க் குற்ற விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்பது உட்படப் பல கோரிக்கைகளை வலியுறுத்திச் சென்னை லொயோலாக் கல்லூரி மாணவர்கள் 8 பேர் ஆரம்பித்துள்ள உண்ணாநிலைப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

இலங்கை மீது சர்வதேச போர்குற்ற விசாரணை நடத்

பார்க்க பக்கம் 04

## பாலச்சந்திரனின் படுகொலை ராகுலின் மனதை உலுக்கியது





புதுடில்லி, மார்ச் 10

*விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனின் கொலை உலகத்தை உலுக்கியது போலவே காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தியின் மனதையும் பாதித்துவிட்டது என்று இந்*

பார்க்க பக்கம் 04

## சிங்களக் கடும் போக்கு அமைப்பின் அலுவலகத்தை திறந்தார் கோத்தா

யாழ்ப்பாணம், மார்ச் 10

சிங்கள, பௌத்த கடும்போக்கு அமைப்பாக உருவாகிவரும் பொதுபல சேனா அமைப்பின் அலுவலகம் காலி, திவன நகரில் பாதுகாப்பு அமைச்சின் செயலரும், ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷவால் நேற்று சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இலங்கையில் அண்மைக்காலமாக முஸ்லிம் மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும் எதிராகக் குரல் கொடுத்து வருவதுடன் பௌத்த, சிங்கள ஆதிக்கத்தை நிலைநாட்டும் வகை

பார்க்க பக்கம் 04






மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமிழ் அகதிகளை நாடு கடத்துவதற்கு எதிராக ஜெனிவாவில் ஆர்ப்பாட்டம்

## நாளை திங்கட்கிழமை காலை முதல் மாலை வரை

ஜெனிவா, மார்ச் 10

சுவிற்சர்லாந்து நாட்டில் புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட ஈழத் தமிழர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதற்கு எதிராக ஜெனிவா நகரில் ஐ.நா. முன்றலிலே ஆர்ப்பாட்ட நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நாளை திங்கட்கிழமை காலை முதல் மாலை வரை இந்தக் கண்டன ஆர்ப்பாட்ட நிகழ்வு இடம்பெற உள்ளது.

புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட இளைஞர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வில் தற்போது ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 22 ஆவது கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக வீருகை தந்துள்ள பிரதிநிதிகளும் பங்குகொள்வார்கள் எனத் தெரிகின்றது.

ஆர்ப்பாட்ட நிகழ்வை ஒட்டி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையிடம் மனு ஒன்றும் கையளிக்கப்பட உள்ளது. குறித்த மனுவை மனித உரிமைகள் சபையின் சிவில் பாதுகாப்புப் பிரிவுத் தலைவி யூன்ரே அம்மையாரிடம் கையளிப்பதற்கான ஏற்பாடுகளை சுவிஸ் தமிழர் பேரவையின் செயலாளர் தம்பிப்பிள்ளை நமசிவாயம் மேற்கொண்டுள்ளார்.

2009 மே மாதத்தில் இலங்கை அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் முடிவுக்கு வந்ததை அடுத்து, நாட்டில் மோதல் முடிவடைந்து விட்டதாகக் கருதும் சுவிஸ் அரசு புகலிடக் கோரிக்கையாளர்களின் விண்ணப்பங்களை நிராகரித்து வருவதுடன், அவர்களை நயத்தாலும் பயத்தாலும் திருப்ப அனுப்பும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது. ஆதாரங்களாக வழங்கும் தகவல்களை ஏறெடுத்தும் பாராமல் தங்களது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு வருவதாகப் புகலிடக் கோரிக்கையாளர்கள் வேதனையுடன் தெரிவித்து வருகின்றார்கள். தமது கோரிக்கைகளும், மேன்முறையீடுகளும் உதாசீனம் செய்யப்படும் நிலையில் விடயத்தை சர்வதேச மட்டத்தில் எடுத்துச் செல்ல அவர்கள் முடிவு செய்துள்ளனர்.

இதேவேளை, புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுத் திருப்ப அனுப்பப்படுபவர்கள் இலங்கையில் பாலியல் ரீதியாகவும் வேறு விதமாகவும் துன்புறுத்தப்படுவதாக அண்மையில் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தனது 140 பக்க அறிக்கையில் சுட்டிக் காட்டியிருந்தது. மோதல் முடிவுக்கு வந்துள்ள நிலையிலும் இலங்கையில் தமிழ் மக்கள் பாரபட்சம், இராணுவ அச்சுறுத்தல், கடத்தல், பாலியல் வன்புணர்வு உட்படப் பல கொடுமைகளுக்கு இலக்காகுவதாக உலக மன்றங்களில் விவாதிக்கப்பட்டு வருகின்ற போதிலும் அவற்றைக் கவனத்தில் எடுக்காது தமிழர்களைத் திருப்பி அனுப்புவதில் சுவிஸ் அரசு அக்கறையாகச் செயற்பட்டு வருகின்றது. சுமார் 3000 பேர் வரையான தமிழர்களைத் தாம் திருப்பி அனுப்ப உத்தேசித்துள்ளதாக 2011 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் சமஷ்டி அரசாங்கம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## பஸ் கட்டண உயர்வு குறித்து முடிவில்லை

பேச்சுக் குறித்த அறிக்கை தனக்கு கிடைக்கப்பெற்றதும் இறுதி முடிவு எடுக்கப்படும்

கொழும்பு, மார்ச் 10

பஸ் கட்டண உயர்வு குறித்து இதுவரை தீர்மானம் ஒன்றும் எடுக்கப்படவில்லை என தனியார் போக்குவரத்து அமைச்சர் சி.பி.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் தனியார் பஸ் சங்கங்கள் பலவற்றுடன் பேச்சு நடத்தியதாக அவர் குறிப்பிட்டார்.

பேச்சுக் குறித்த அறிக்கை தனக்கு கிடைக்கப்பெற்றதும் இறுதி முடிவு எடுக்கப்படும் என அமைச்சர் கூறினார்.

எனினும் பஸ் கட்டண அதிகரிப்புக்கு தனியார் போக்குவரத்து அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளதாகத் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மின்சார கட்டணம் அதிகரிக்கும் அபாயம்

கொழும்பு, மார்ச் 10

மின்சார கட்டணமும் விரைவில் அதிகரிக்கவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மின் அலகொன்றுக்கான ஆகக்குறைந்த கட்டணமான 3 ரூபாவிலிருந்து ஒன்பது ரூபாவாக அதிகரிக்கப்படவிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இலங்கை மின்சார சபையின் அதிகாரிகளுக்கும் மின்சக்தி அமைச்சின் அதிகாரிகளுக்கும் இடையில் அலரி மாளிகையில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது. (த)

## கிணற்றில் தவறி விழுந்து பெண் சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 10

கிணற்றில் தண்ணீர் அள்ளிய வேளை தவறி விழுந்த வயோதிபப் பெண் ஒருவர் நீரில் மூழ்கி மரணமானார்.

நேற்று சனிக்கிழமை 9 மணியளவில் கோப்பாய் தெற்கு கட்டப்பிராய் பகுதியில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த சந்திரலிங்கம் விமலா (வயது-59) என்ற வயோதிபப் பெண்ணே இவ்வாறு மரணமானவராவார்.

சடலம் கோப்பாய் பொலிஸாரால் பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (த-78)

## சட்டவிரோத மணல் அகழ்வோரை கைதுசெய்ய பொலிஸ் காவலரண்

யாழ்ப்பாணம், மார்ச் 10

அரியாலை கிழக்கு பூம்புகார், நாவலடி பிரதேசங்களில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் செல்வோரைக் கைது செய்வதற்கு அங்கு பொலிஸ் காவலரண்கள் இந்த வாரத்தில் அமைக்கப்படவுள்ளன.

தற்போது இப்பகுதியில் இரவு வேளையில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இதனை உடனடியாகத் தடுத்து நிறுத்துமாறு பொலிஸாரிடம் கோரப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் அ.இரவீந்திரதாசன் தெரிவித்தார்.

இதனையடுத்து இப்பகுதியில் இரண்டு பொலிஸ் காவலரண்கள் இந்த வாரத்தில் அமைக்கப்பட்டு பொலிஸ் ரோந்து இடம்பெறும் எனப் பொலிஸார் அறிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்தப் பிரதேசத்தில் கட்டாக்காலி கால்நடைகள் கடத்தல், சட்டவிரோதமான மணல் அகழ்வு என்பன ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளன எனவும் தொடர்ந்து பிரதேச பொது அமைப்புக்கள், பொதுமக்களின் உதவியுடன் விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் கூறினார். (த-17)

## இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் மலேசிய அரசு வாக்களிக்க வேண்டும்

### அந்நாட்டு மனித உரிமை அமைப்பு கோரிக்கை

கோலாலம்பூர், மார்ச் 10

ஐ.நா மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் அமெரிக்காவினால் கொண்டுவரப்படவிருக்கின்ற பிரேரணைக்கு மலேசியா ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்று மலேசியாவின் மனித உரிமை அமைப்பான சுவராம் அமைப்பின் தலைவர் கே.ஆறுமுகம் தெரிவித்துள்ளார்.

ஐ.நா மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக எதிர்வரும் 22ஆம் திகதி அமெரிக்கா தீர்மானம் ஒன்றை கொண்டுவரவுள்ள நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதால் மலேசியா இலங்கைக்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் குருட்டுக் கண் கொண்டு பார்க்காமல் மலேசியா இலங்கைக்கு எதிராக வாக்களிக்க வேண்டும். 1983 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரையிலும் நடத்தப்பட்ட விடுதலைப் புலிகளுக்கு இடையிலான போரில் 10,000 க்கும் மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் இன்னும் சிலர் முகாம்களில் வசிக்கின்றனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை மனித உரிமை மேம்பாட்டு விடயங்களில் திருப்தி அடைய முடியாது என ஐ.நா மனித உரிமைகள் சபை சுட்டிக்காட்டியுள்ள நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளதுடன் இலங்கைக்கு எதிராக வாக்களிக்குமாறும் கோரியுள்ளார். (த)

## ரூபா.2 லட்சம் பெறுமதியான மடிக்கணினிகள் திருட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 10

பட்டப்பகலில் வீடு புகுந்த திருடர் 2 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு மடிக் கணினிகளைத் திருடிச் சென்றுள்ளனர். என்று யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் யாழ். வைமன் வீதியில் நேற்றுச் சனிக்கிழமை இடம் பெற்றது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் விரிவுரையாளர் ஒருவரின் வீட்டிலேயே இந்தத் திருட்டு இடம் பெற்றுள்ளது.

வீட்டில் யாரும் இல்லாத வேளை உட்புகுந்த திருடர்கள் இரண்டு கணினிகளையும் திருடிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. விசாரணை மேற்கொண்டுள்ளோம் என்று மேலும் பொலிஸார் தெரிவித்தனர். (த-4)

## இரண்டாவது ‘லிப்ட்’ பொருத்த மின்சார சபையினர் இழுத்தடிப்பு

### போதனா வைத்தியசாலையில் நோயாளர் அவதி

யாழ்ப்பணம், மார்ச்10

‘லிப்ட்’ பொருத்துவதாக கூறி 83 இலட்சம் ரூபாவைப் பெற்றுகொண்ட இலங்கை மின்சாரசபை இதுவரை அதனைப் பொருத்தாது இழுத்தடிப்புச் செய்து வருகின்றது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள நான்கு மாடிக் கட்டடத் தொகுதியில் ஒரு ‘லிப்ட்’ இதுவரை பொருத்தப்படாமையால் நோயாளர்கள், அவர்களைப் பார்வையிடச் செல்பவர்கள், பணியாளர்கள் பலரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

‘லிப்ட்’ பொருத்துவதாக கூறி 83 இலட்சம் ரூபாவைப் பெற்றுகொண்ட இலங்கை மின்சாரசபை இதுவரை அதனைப் பொருத்தாது இழுத்தடிப்புச் செய்து வருகின்றது. அந்தப் பணத்துக்கு என்ன நடந்ததென்று தெரியவில்லை. இழுத்தடிப்புக்கான காரணம் கூறப்படவில்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

நான்கு மாடிக்கட்டடத் தொகுதியில் 16 சிகிச்சை விடுதிகள் இயங்கிவருகின்றன. குழந்தைகள் சிகிச்சை விடுதி, சத்திரசிகிச்சை விடுதி, பெண் நோயாளர் விடுதி என்பனவும் இந்தக் கட்டடத் தொகுதியில் இயங்கி வருகின்றன.

குறித்த விடுதிகளுக்குச் சென்று வருவதிலேயே நோயாளர்கள், அவர்களைப் பார்வையிடச் செல்வோர், வைத்திய சாலைப் பணியாளர்கள் எனப் பலரும் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர்.

ஒரு ‘லிப்ட்’ இயங்கி வருகின்ற போதும் அது நோயாளர்களுக்கு மட்டும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அதிலும் நெருக்கடி ஏற்படுவதால் சில நோயாளர்கள் மாடிப்படிகளினுடாகவே சிகிச்சை விடுதிக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக முதியவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மின்சாரசபைக்கு பணம் வழங்கி ஒன்றரை வருட இழுபறிக்குப் பின்னர் கடந்த வருட இறுதியில் ஒருவாறு ஒரேயொரு ‘லிப்ட்’ மட்டும் பொருத்தப்பட்டது. மற்றையது வெகுவிரைவில் பொருத்தப்படும் எனக் கூறப்பட்ட போதும் அது இதுவரை பொருத்தப்படவில்லை.

இது தொடர்பில் வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜாவுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:-

இரண்டாவது ‘லிப்ட்’ ஐயும் பொருத்தித் தருவதாகக் கூறினார்கள். ஆனால் அதனை இன்னும் அவர்கள் செயற்படுத்த வில்லை. காரணமும் கூறவில்லை. நோயாளர்களுக்குத் தற்பொழுது ஒரேயொரு ‘லிப்ட்’ மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அவர்களுக்கான பணம் கொடுக்கப்பட்டுவிட்டது-என்றார். (த-4)

## பலாலி பாதுகாப்பு வலயத்துக்கு எதிரான மனு மீதான விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச்10

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் சமர்ப்பித்த பலாலி உயர் பாதுகாப்பு வலயத்துக்கு எதிரான மனு நாளை திங்கட்கிழமை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருந்த நிலையில், அரச தரப்பு சட்டத்தரணிகள் ஜெனிவாவுக்கு சென்றுள்ளமையால் வழக்கு பிறிதொரு தினத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாலாலி அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்கு எதிராக பத்து ஆண்டுகளுக்கு முன்னர் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு மனுக்கள் கடந்த வருடம் நவம்பர் மாதம் 12 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

இந்த மனுக்கள் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு அரச தரப்பால் முன்வைக்கப்பட்ட ஆட்சேபனையையும் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க உள்ளிட மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் நிராகரித்திருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா மற்றும் விவசாயிகள் சிலர் இந்த வழக்குகளை 2003 ஆம் ஆண்டில் தாக்கல் செய்திருந்தனர்.

பலாலி பிரதேசத்திலிருந்து வெளியேற்றப்பட்ட மக்களில் 40 சதவீதமானோர் அங்கு மீளக்குடியமர்த்தப்பட்டுவிட்டதாகவும், அங்கு தொடர்ந்து மீளக்குடியமர்வு நடை பெற்று வருவதால் இந்த மனுக்களை தொடர்ந்தும் விசாரணை செய்ய வேண்டிய அவசியமில்லை என்று அரச தரப்புச் சட்டத்தரணி தெரிவித்ததை மறுதலித்த மனுதாரர் தரப்புச் சட்டத்தரணி, அரசு கூறும் மீளக்குடியமர்வு நடவடிக்கைகள் முடங்கியுள்ளது என்று தெரிவித்தார்.

எனவே மக்கள் சொந்த இடங்களுக்குச் செல்ல அனுமதி வழங்குமாறு மனுதாரர்கள் சார்பில் கேட்டக்கப்பட்டதை உயர் நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு, இது தொடர்பில் ஆட்சேபனைகளை நாளை திங்கட்கிழமைக்குள் முன்வைக்குமாறு தெரிவித்து வழக்கை ஒத்தி வைத்திருந்தது.

நாளை இந்த வழக்கு மீண்டும் எடுத்துக் கொள்ளப்படவிருந்த நிலையில், அரச தரப்பு சட்டத்தரணிகள் ஜெனிவாவில் இருப்பதால் பிறிதொரு தினத்துக்கு வழக்கை ஒத்தி வைக்குமாறு இவர்கள் கேட்டதற்கமைய வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (த-5)

## குடும்பஸ்தருக்கு கோடரி வெட்டு

தலையில் கோடரி வெட்டுக்கு இலக்கான குடும்பஸ்தர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் அரியாலை, மாம்பழம் சந்தியை அண்மையிலுள்ள நாவலர் வீதியில் நேற்று சனிக்கிழமை பிற்பகல் இடம் பெற்றது. இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கந்தசாமி ஜெயா (வயது-42) என்பவரே கோடரி வெட்டுக்கு இலக்கானவராவார்.

5பேர் கொண்ட குழுவினரே அவரது கடைக்குச் சென்று கடையில் வைத்து கோடரியால் வெட்டிக் காயப்படுத்தினர். என்று தெரிவிக்கப்படுகிறது. (த-4)

# மாற்றுத் திறனாளிகளின் உரிமை திணைக்களங்களால் புறக்கணிப்பு

## சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் இமெல்டா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 10

*சட்ட திட்டங்களைப் பல திணைக்களங்கள் நடை முறைப்படுத்தத் தயங்குவதால் மாற்றுத் திறனாளிகளின் சட்ட உரிமைகள் புறக்கணிக்கப்படுகின்றன. இதனால் அவர்கள் பெரும் பாதிப்பை எதிர்கொள்கின்றனர்.*

*இவ்வாறு சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.*

மணியந்தோட்டம் உதயபுரம் கிராமத்தில் வசித்துவரும் பழனியாண்டி இராமையா குடும்பத்தினருக்கு உதவி வழங்கும் நிகழ்வு நேற்று உதயபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உதவிகளை வழங்கி அங்கு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தக் குடும்பத்தில் 3 பேர் மாற்றுத் திறனாளிகளாக உள்ளனர். அத்துடன் வருமானத்தை தேடக் கூடியவர்களை இழந்தும் உள்ளனர். இதனைக் கருத்தில் கொண்டு சுயதொழிலை மேலும் விருத்தி செய்வதற்கான உதவிகளையும் வழங்கவுள்ளோம்.

இலங்கை முழுவதும் போராலும் பிறப்பினாலும் அங்கவீனமடைந்தவர்கள் இருக்கிறார்கள்.

அவர்கள் அனைவருக்கும் வாழ்வாதார உதவிகளை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாகப் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரச் செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றோம்.

ஊடகங்கள் மூலமாக மாற்றுத் திறனாளிகளது தேவைகள் குறித்த விடயங்கள் வெளிப்படுத்தப்படுமிடத்து அவற்றுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு உதவிகள் வழங்கப்படும்.

சமூக சேவைகள் அமைச்சு வடபகுதி, தென்பகுதி என்ற பாகுபாடு காட்டுவதில்லை. எந்தப் பகுதியாக இருந்தாலும் விசேட தேவை உடையவர்களுக்கான உதவிகளை வழங்கத் தயாராக உள்ளது.

இதனைவிட விசேட தேவை உடையவர்களுக்கு வருடாந்தம் ஆயிரம் வீடுகள் இலங்கை முழுவதும் அமைத்துக் கொடுக்கும் திட்டமும் நடைமுறையில் உள்ளது:

கடந்த வருடம் முல்லைத்தீவில் 100 வீடுகளும் யாழ்ப்பாணத்தில் 100 வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டன. இந்த வருடமும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன,

அமைச்சு 200 இற்கும் மேற்பட்ட உளவள ஆலோசகர்களின் உதவியுடன் மாற்று வலுவுடையோருக்கு ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றது. மாவட்ட மட்டத்தில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும் நடத்தப்பட்டு வருகின்றன.



மாற்று வலுவுடையோருக்குச் சட்ட ரீதியான உரிமைகள் உள்ளன. அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு அரச உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுப்பது இல்லை. இவ்வாறான விடயங்களில் அரச அதிகாரிகள் மிகவும் அக்கறையுடன் செயற்பட வேண்டும்.- என்றார்.

இந்த நிகழ்வில் 9 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை அந்தக் குடும்பத்தினரிடம் கையளிக்கப்பட்டது. அத்துடன் வாழ்வாதார சுயதொழிலுக்கான உதவிகளை வழங்க விரைவில் ஏற்பாடு செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மலசலகூடம், கிணறு போன்றவற்றை மாற்று வலுவுடையோர் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் அமைத்துத் தருவதாகவும் உறுதிமொழி அளித்தார்.

இந்த நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் உட்பட சமூக சேவைகள் அமைச்சின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

(ம-14-17)

## நிகழ்வுகள் இன்று

### பொதுக்கூட்டம்

வடமராட்சி, மார்ச் 10

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் காலை 9 மணிக்கு அல்வாய் மாலி சந்தியில் உள்ள நிறுவன மண்டபத்தில் நிறுவனத் தலைவர் பா.இரகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டிப் பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ கலந்து கொள்வார். (ம-8)

### நிறுத்தல் அளவைக்கு முத்திரையிடல்

தென்மராட்சி, மார்ச் 10

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட வணிக நிலையங்கள், சந்தை வியாபாரிகள் ஆகியோரால் பயன்படுத்தப்படும் அளவை, நிறுவை உபகரணங்களுக்கு இந்த வருடத்துக்கு உரிய முத்திரையிடும் பணி நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

நாளை 11 ஆம் திகதி முதல் தொடர்ந்து 12, 14, 15 ஆகிய திகதிகளில் நகரசபை வளாகத்தில் உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணிகள் இடம்பெறவுள்ளதால் வணிக நிலையங்கள், சந்தை வியாபாரிகள் மற்றும் தமது அளவை நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையிடுமாறு நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்துள்ளார். (ம-9)

# தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களை பயன்படுத்தினால் இறுக்கமான நடவடிக்கை

## கடல்தொழில் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ். குடாக்கடல் பகுதியில் தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தித் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் மீது இறுக்கமான முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன என்று கடல் தொழில் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தற்போது குடாக் கடலில் மீனவர்கள் அரசால் தடை செய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பான முறைப்பாடுகள் எமக்குக் கிடைத்து வருகின்றன.

இந்தத் தடை செய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தித் தொழிலில் ஈடுபடும் மீனவர்களைக் கையும்மெய்யுமாக பிடிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கெனக் கடல் பகுதியில் திணைக்கள பரிசோதகர்கள் திடீர் சோதனைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு திடீர் சோதனை நடவடிக்கையின் போது சிக்கிக் கொள்ளும் மீனவர்கள் மீதும் உரிய சட்ட நடவடிக்கைகள் இறுக்கமான முறையில் மேற்கொள்ளப்படும்.

குறிப்பாக குடாநாட்டில் உள்ள சில கடற்றொழில் உபகரணங்கள் விற்பனை நிலையங்களில் தடை செய்யப்பட்ட இவ்வாறான உபகரணங்கள் மறைவாக வைத்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றன என்றும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்த நிலையில் கடல்தொழில் உபகரணங்கள் விற்பனை நிலையங்கள் மீதும் திடீர் சோதனை நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

ஏற்கனவே தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்திக் கடல்தொழிலில் ஈடுபட வேண்டாம் என்று பல தடவைகள் மீனவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அதையும் மீறி மீனவர்கள் தாராளமாக இவ்வாறு தடை செய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னாரில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.- என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(ம-13-17)

# கோண்டாவில் ஆயுள்வேத ஆஸ்பத்திரிக்கு புதிய கட்டம்

## அமைப்பதற்குத் தீர்மானம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

கோண்டாவில் ஆயுள்வேத வைத்திய சாலைக்குப் புதிய கட்டடம் அமைக்க நல்லூர் பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபையின் விசேட கூட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெற்றது.

கோண்டாவில் ஆயுள் வேத வைத்திய சாலை மிகவும் பழமையானது. போதிய வசதிகள் இல்லை. வைத்தியசாலைச் சூழலில் நிறைய புற்களும் பற்றைகளும் உள்ளன.

அவற்றைத் துப்புரவு செய்வதுடன் புதிய கட்டடம் ஒன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

மூலிகைத் தோட்டம் அமைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று உறுப்பினர் பெ.கனகசபாபதி தெரிவித்தார்.

இதனை அடுத்து புதிய கட்டடம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

(ம-7)

# சேதமடைந்த மதகால் பயணிப்பதில் அவலம்



யாழ்ப்பாணம், மார்ச் 10

மாம்பழம் சந்தியில் இருந்து நாயன்மார்கட்டுக்குச் செல்லும் கனகரத்தினம் வீதியில் உள்ள மதகு ஒன்று கடந்த பல மாதங்களாக உடைந்து விழும் நிலையில் உள்ளது.

இதனால் இந்த வீதியால் செல்வோர் பெரும் அவலங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

நல்லூர் சமுர்த்தி வங்கி, குளத்தடி பிள்ளையார் கோயில் ஆகியவற்றுக்கு முன்பாக உள்ள இந்த மதகு மிகவும் பழைமை வாய்ந்ததுடன் உடைந்த நிலையில் மிக நீண்ட காலமாகக் காணப்படுகிறது.

இதேவேளை, கடந்த வாரம் இரவுவேளை இந்த வீதியால் வந்த குடும்பஸ்தர் ஒருவர் இந்த மதகினுள் தவறி வீழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

தென்பகுதியில் இருந்து வரும் வாகனங்களின் நன்மை கருதி பிரதான வீதிகள் செப்பனிடப்படுகின்றன.

இந்தநிலையில் மக்களின் அன்றாடப் போக்குவரத்துப் பாதைகளில் ஏற்படும் இடையூறுகளைச் சீர் செய்ய முன் வராமல் இருப்பது விசனமளிக்கிறது என்று இந்தப் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடிக் கவனமெடுக்க வேண்டும் என்று மக்கள் கோருகின்றனர். (ம-17-288)



எல் பி மோட்டார் சைக்கிள் லீசிங்
காப்புறுதி பணத்தில் 50% சேமிப்பு
அங்கு இங்கு எந்த சென்றாலும்
குறைந்த பதிக்கட்டணம் எம்மிடமே!
தொடர்புகளுக்கு 0777 571082
* நிபந்தனைகளுக்குட்பட்டது

யாழ்ப்பாணம் - 0212 219455, 0214 920310-1
சுன்னாகம் - 0777 718412, 0214 920331-9
மானிப்பாய் - 0212 255955, 0214 923356-7
நெல்லியடி - 0777 718426, 0214 923358-9
சாவகச்சேரி - 0777 718428, 0214 923360-1
கிளிநொச்சி - 0777 718407, 0214 923362-3

L B FINANCE

எல் பி ஃபினான்ஸ் பீ எல் சி
இல.275/75, பேராசிரியர் ஸ்ரான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07. www.lbfinance.com
தொலைபேசி 011 4 521000

# செய்தியாளர் மீதான தாக்குதலுக்குக் கண்டனம்

## சுதந்திர ஊடகக் குரல் விடுத்தது

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ்ப்பாண ஊடகவியலாளர் உ.சாளின் மீது நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இனந்தெரியாதோரால் மிலேச்சத்தனமான - காட்டுமிராண்டித்தனமாக - நடத்தப்பட்ட தாக்குதலை 'சுதந்திர ஊடகக் குரல்' என்ற பத்திரிகையாளர் அமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது.

இவர் மீதான தாக்குதலுடன் யாழ். மாவட்டத்தில் ஊடகங்கள் மீது இந்த வருடத்தில் இடம்பெற்ற மூன்றாவது தாக்குதல் சம்பவம். அதேநேரத்தில் இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய எவரும் கைது செய்யப்படாதது பல்வேறு சந்தேகங்களை தோற்றுவிக்கின்றது- என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ். குடாநாட்டில் ஊடகங்கள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதலின் ஆகப் பிந்திய காடைத்தனமான தாக்குதலாக சாளின் மீதான தாக்குதல் அமைந்துள்ளது. குரல் கொடுக்கும் சிவில் சமூகங்களையும் ஏற்கனவே ஒடுக்கியுள்ள நிலையில் மக்களின் குரலாக இன்னமும் ஒலித்துக் கொண்டிருக்கும் ஊடகங்களையும் மௌனிக்க செய்வதற்கான முயற்சிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

கடந்த ஜனவரி மாதம் உதயன் பத்திரிகையினதும், பெப்ரவரி மாதம் தினக்குரல் பத்திரிகையினதும் விநியோக ஊழியர்கள் தாக்கப்பட்டதுடன் அவர்கள் கொண்டு சென்ற பத்திரிகைப் பிரதிகளும் மோட்டார் சைக்கிள்களும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக இப்போது செய்தியாளர் ஒருவர் தாக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சியாக யாழ். ஊடகங்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல் தொடர்பில் எதுவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படாமல் இருப்பது, இலங்கை அரசும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுபவர்களும் இத்தகைய சம்பவங்களுக்கு உடந்தையாக இருக்கின்றனரா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

எழுந்துள்ள சந்தேகத்தை உறுதிப்படுத்தும் விதத்தில் செயற்படாது தாக்குதல்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளை கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்துமாறு பொலிஸாரிடமும் அரசிடமும் வலியுறுத்துகின்றோம்- என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-5)

# சந்திரிக்கா மீண்டும் அரசியலுக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 10



முன்னாள் ஜனதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, மீண்டும் அரசியலுக்கு களமிறங்கும் நோக்குடன் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும், அவரின் இந்த முயற்சிக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்களும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தனது கணவரின் சிரார்த்த தினத்தில் உரையாற்றும் போது, நாட்டின் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தேசிய அரசு அமைக்கப்பட வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

இதன் பின்னணியிலேயே அவர் மீண்டும் அரசியலில் களமிறங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்கள், தேர்தல் மாவட்டத் தலைவர்கள் ஆகியோருடன் தொடர்ச்சியாகக் கலந்துரையாடல் நடத்தத் திட்டமிட்டுள்ளார்.

கட்சியின் மூத்த தலைவர் ஒருவரின் நேரடிக் கண்காணிப்பிலும் அவரது ஏற்பாட்டிலுமே இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முதலாவது கட்டம் இந்த வாரம் குருநாகலில் இடம்பெறவுள்ளதுடன், அடுத்த கலந்துரையாடல் அநுராதபுரத்தில் இடம்பெறவுள்ளது.

மேலும் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அமைச்சரவையில் உள்ள அமைச்சர்களுடனும் சந்திரிகா பேச்சு நடத்தவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

## புலிகள்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

சுமத்துவதாகவும் அவர் கூறி னார்.

ஜெனிவா பிரேரணைக்கு ஆதரவளிக்கக் கோரி தமிழ்நாட்டில் மணி என்பவர் தீக்குளித்துத் தற்கொலை செய்து கொண்ட சூழ்நிலைகள் குறித்து விசாரிக்கப்பட வேண்டும் என்றும் சவேந்திர சில்வா குறிப்பிட்டுள்ளார்.

ஊடக முனையில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் மிகுந்த செயற்றிறனுடன் இயங்குகின்றனர் எனவும், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடர், பொதுநலவாய மாநாடு ஆகியன நடக்கவுள்ள நேரத்தில் இந்தக் குற்றச்சாட்டுகள் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், பெரும்பாலான தமிழ் மக்களிடம் இது எடுபடவில்லை என்றும் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா மேலும் கூறியுள்ளார்.

(த)

## இலங்கையில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பிற நாடுகளின் உள்விவகாரங்களில் இந்தியா எப்போதும் தலையிடாது. ஆலோசனை கேட்காதவர்களுக்கும், பாதுகாப்பான, நல்ல ஆலோசனையைச் சரியான நேரத்தில் இந்தியா வழங்கும். இந்தியா இயல்பாகச் செயற்படவே விரும்புகிறது.

எந்தக் காரணமும் இல்லாமல், நாம் ஏதாவது ஓர் அணியில் இணைந்து கொண்டு உரக்கக் குரல் கொடுக்க வேண்டியது அவசியமில்லை. அதே நேரத்தில் மற்றொரு நாடு குறித்து தாக்கிப் பேச வேண்டிய தேவையும் இல்லை. அனைத்துலக அளவில் ஒரு நாடு அதிகாரம் செலுத்தும் வகையில் செயற்படுவதை இந்தியா எப்போதும் ஏற்றுக் கொண்டதில்லை.

ஒரே நேரத்தில் இரு எதிரி நாடுகளுடன் நம்பிக்கையுடன் பேச இந்தியாவால் முடியும். மென்மையாக நடந்து கொள்வதாக இந்தியா மீது அடிக்கடி குற்றம் சாட்டப்படுவதுண்டு.

உலக நாடுகள் அனைத்தும் செழிப்புடன் இருக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தால், யாருடனும் கடுமையாக நடந்து கொள்ள வேண்டியதில்லை. அதனால் உலக காவல்காரன் கருத்துக்கு நாங்கள் ஆதரவு அளிப்பதில்லை.

சீனாவிடமிருந்து கூட சில விடயங்களை கற்று, ஆரோக்கியமான போட்டியைச் சந்திக்கவே இந்தியா விரும்புகிறது.-என்றார்.

(த)

## பாலச்சந்திரனின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த சில நாள்களுக்கு முன்பு தமிழகத் தலைவர்களை புதுடில்லியில் சந்தித்த அந்தக் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி, பாலச்சந்திரன் படுகொலை உலகத்தை உலுக்கியது போலவே எனது மனதையும் பாதித்து விட்டது என உருக்கத்துடன் கூறியுள்ளார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் இலட்சக்கணக்கான மக்கள் அந்த நாட்டு இராணுவத்தால் ஈவு இரக்கம் இன்றிப் படுகொலை செய்யப்பட்டனர். சுதந்திரமான பன்னாட்டு விசாரணை வேண்டும் என்று தமிழகத்தைச் சேர்ந்த பல்வேறு அரசியல் கட்சிகள் ஐ.நாவுக்கு கோரிக்கை விடுத்து வருகின்றன. இதே போல உலக நாடுகளில் உள்ள தமிழர்கள் பலர் குரல் கொடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் 12 வயது மகன் பாலச்சந்திரன் படுகொலை செய்யப்பட்ட படங்களை 'சனல்-4' தொலைக்காட்சி அண்மையில் வெளியிட்டது. இதனால் உலகத் தமிழர்களும், மனித உரிமை அமைப்புகளும், அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகளும் கொதித்து எழுந்தன.

ஆனால் பாலச்சந்திரன் கொல்லப்பட்டது சரிதான் என்று ஜனதா கட்சி தலைவர் சுப்ரமணியசுவாமி கருத்துத் தெரிவித்தார். பாலச்சந்திரன் படுகொலை குறித்து ராகுல் காந்தியிடம் இருந்து விரைவில் இரங்கல் தகவல் வெளியாகலாம்-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த)

## மன்மோகன்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

சல் அட்டையில், ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் அமெரிக்கா கொண்டு வரும் பிரேரணைக்கு ஆதரவாக இந்தியா வாக்களிக்கவேண்டும், தமிழின அழிப்புச் செய்த இலங்கை அரசுடனான அனைத்து உறவுகளையும் உடனடியாக நிறுத்தவேண்டும், தமிழர் பகுதிகளை சிங்களமயமாக்குவதை நிறுத்துவதோடு, அங்கு குவிக்கப்பட்டிருக்கும் சிங்கள இராணுவத்தை உடனே வெளியேற்றவேண்டும், இலங்கையில் நடந்த போர்க்குற்றம் மற்றும் இன அழிப்பு பற்றிய சுதந்திரமான பன்னாட்டு போர்க்குற்ற விசாரணை நடத்தப்படவேண்டும், உலகம் முழுவதும் வாழ்கின்ற ஈழத் தமிழர்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்தவேண்டும் போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

(த)

## லொயோலா...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தப் படவேண்டும்; ஈழத்தில் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்; இலங்கைத் தூதரகத்தைத் தமிழகத்தில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும்; இலங்கை மீது பொருளாதாரத் தடை கொண்டுவர இந்தியா ஒத்துழைக்க வேண்டும்; உலகத் தமிழர்களைப் பாதுகாக்கத் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்; தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை தடுக்க நடவடிக்கை வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தியே லொயோலாக் கல்லூரி மாணவர்கள் 8 பேர் நேற்றுமுன்தினம் முதல் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

லொயோலாக் கல்லூரிக்குள் நேற்றுமுன்தினம் உள்ளிருப்புப் போராட்டத்தை சுமார் 500 மாணவர்கள் தொடங்கியதால் நுங்கம்பாக்கம் பகுதியில் பொலிஸார் பெருமளவு குவிக்கப்பட்டனர். அப்பகுதியிலேயே இலங்கை தூதரகமும் இருப்பதால் அது தாக்குதலுக்குள்ளாகக் கூடும் என்ற சூழ்நிலையும் நிலவியது. இதனால் பொலிஸார் அவர்களை அங்கிருந்து அகற்ற முயன்றனர். இதனால் அங்கு பெரும் பதற்றமான நிலை ஏற்பட்டது.

(த)

## பிரேரணையின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

நகல் அமெரிக்காவால் கடந்த வியாழக்கிழமை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளுக்கு கையளிக்கப்பட்டுள்ள பிரேரணையின் நகலில், இலங்கை மீது சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடத்த வேண்டும் என்று நேரடியாக எதுவும் தெரிவிக்கப்படாததுடன், பிரேரணையை நடைமுறைப் படுத்த நீண்டகால அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனிடம் கேட்டபோது,

''அமெரிக்காவால் தற்போது பிரேரணையின் நகலே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பகிரங்கமாகத் தெரிவிக்க விரும்பவில்லை.

ஏனெனில் இது நகல்தான். இது உறுப்பு நாடுகளுக்கு வழங்கப்பட்டு அவர்களால் மாற்றியமைக்கப்படலாம். அதன்பின்னரே இறுதிப் பிரேரணை சமர்ப்பிக்கப்படும்.

அந்த இறுதி விசாரணை இலங்கைக்கு எதிரான, வலுவுள்ளதொன்றாக அமையும் என்றே நாங்கள் எதிர்பார்க்கின்றோம். இறுதிப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் எங்களின் கருத்துகளை பகிரங்கமாகத் தெரிவிப்போம்''-என்றார்.

(த-5)

## சிங்கள...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யில் பொதுபலசேனா அமைப்பு செயற்பட்டு வருகின்றது.

அந்த அமைப்பின் அலுவலகமே காலியில் நேற்றுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஜேர்மன் கலாசார நிறுவனத்தின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட அந்த அலுவலகத்தினூடாக புத்த பிக்குகளுக்குப் பயிற்சி வழங்கப்படவுள்ளதுடன், பொது பலசேனாவின் முக்கிய செயற்றிட்டங்களும் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதனைத் திறந்து வைத்து உரையாற்றிய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, பொது பலசேனா அமைப்பினால் முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளைப் பாராட்டிப் பேசியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(த-5)

## அமெரிக்காவின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தொடர்ந்தும் மௌனமாகவே உள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் கொண்டுவரப்படும் பிரேரணை தொடர்பான உப மாநாட்டின் போதே இந்த நாடுகள் தமது கருத்தை வெளியிட்டுள்ளன.

பிரேரணை தொடர்பில் கருத்தறியும் உப மாநாடொன்று நேற்றுமுன்தினம் ஜெனிவாவில் இடம்பெற்றது. பிரேரணையின் இறுதி வரைவை மேற்கொள்வதற்காக, நாடுகளின் கருத்துக்களை உள்வாங்கும் பொருட்டு அமெரிக்கா இதனை ஏற்பாடு செய்திருந்தது.

இந்த உப மாநாட்டின்போது பிரே ரணை தொடர்பில் மேற்குலக நாடுகள் இறுக்கமானதும் உறுதியானதுமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியவேளை, இலங்கையின் நேச நாடுகளான ஜப்பான், சீனா, ரஷ்யா ஆகியன கடும் எதிர்ப்பை வெளியிட்டன. இந்தியா இறுதிவரை மௌனமாகவே இருந்தது.

இந்த உப மாநாட்டில் இலங்கைத் தரப்பும் தனது கருத்துக்களை கூறுவதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தது.

அமெரிக்காவின் ஐ.நா. மனித உரிமைகள் சபைப் பிரதிநிதி எலின் டொனாகே இந்த உப மாநாட்டைத் தலைமை வகித்து நடத்தினார்.

கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்குப் பின்னர் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கு கூட்டாகத் தொழில்படுவதற்கு இலங்கை ஒத்துழைக்கவில்லை என்றும் கூட்டுப் பிரேரணை ஒன்றை கொண்டு வருவதற்கும் இலங்கை ஒத்துழைக்கவில்லை எனவும் டொனாகே அங்கு தெரிவித்திருந்தார். இலங்கையின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸை அமெரிக்காவுக்கு அழைத்துப் பேசியும் பயன் ஏதும் கிட்டவில்லை என்றும் அவர் கூறினார்.

இதன் பின்னர் இலங்கைத் தரப்புக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கான வதிவிடப் பிரதிநிதி ரவீநாத் ஆரியசிங்க அங்கு கருத்துக்களை முன்வைத்தார்.

''நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் பெரும்பாலானவை நிறைவேற்றப்பட்டுவிட்டன. இராணுவ மயமாக்கல் ஏதும் இல்லை. உயர்பாதுகாப்பு வலயங்கள் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளன.தமிழர்கள் அனைவரும் அவர்களின் சொந்த இடங்களுக்குத் திரும்பிவிட்டனர். கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுவிட்டன. எனவே அமெரிக்காவின் பிரேரணை தேவையற்றது'' என்று அவர் அங்கு கூறினார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த ஜப்பான் பிரதிநிதி ஹெலிமோ, ''இலங்கை அனைத்துலக நாடுகளுடன் ஒத்துழைக்கின்றது. வடகொரியாவைப் போன்று இல்லை. ஆகையினால் இந்தப் பிரேரணை தேவையில்லை''- எனக் கூறினார்.

இதற்குப் பதில் அளித்த ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி, ''இந்தப் பிரேரணை அவசியம் தேவை. பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்கப்படவேண்டும்'' எனக் கோரினார்.

அதைத் தொடர்ந்து சீனப் பிரதிநிதி, ''இலங்கையில் முன்னேற்றம் கண்டுவரும் இன நல்லிணக்கத்துக்கு இந்தப் பிரேரணை கேடு விளைவிக்கும்''- எனத் தெரிவிக்க, ரஷ்யா வும் அதனை ஆமோதித்துக் கருத்து வெளியிட்டது.

இதேநிலைப்பாட்டில் பாகிஸ்தான், தாய்லாந்து, வெனிசுலா, இந்தோனேசியா, ஈரான், ஈக்குவடோர் ஆகிய நாடுகளும் பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இலங்கைக்கான தங்களின் ஆதரவை வெளிப்படுத்தின.

ஜேர்மனி, பிரிட்டன், பிரான்ஸ், சுவிஸ், ஒஸ்ரியா போன்ற ஐரோப்பிய நாடுகளுடன் ஆபிரிக்க நாடுகளான சியரா லியோன், பொஸ்வானா போன்ற நாடுகளும் பிரேரணையின் உள்ளடக்கத்தில் உள்ள சில வார்த்தைகளில் மாற்றம் வேண்டுமே அன்றிப் பிரேரணை சரி என்று கருத்துரைத்துள்ளன.

இறுதிவரை இவற்றையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த இந்தியா கருத்து ஏதும் சொல்லாமல் வாய்மூடி மௌனம் காத்தது என்று தெரிவிக்கப்பட்டது.(த)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு:
advt@uthayan.com
0215671111

## யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்
### சமையல் மற்றும் அலுவலகப் பராமரிப்பாளர் (பெண்) பதவி வெற்றிடம்

வெற்றிடமாகவுள்ள மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் பழைய பூங்கா வீதி, சுண்டிக்குளியிலுள்ள யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவங்களை நேரில் பெற்று எதிர்வரும் 26.03.2013 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம். 20.03.2013 ஆம் திகதிவரை விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்படும்.

தலைவர்:
**யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்.**

(சி/6994) (45.6.7)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மறைவு
06.03.2011

அமரர்
**சூசைப்பிள்ளை ரேமன்ட் ஜெயப்பிரகாசம்**
(ஓய்வுபெற்ற நிர்வாக அதிகாரி, பிரதேச செயலகம், உடுவில்)

அன்புடனும் பண்புடனும் எம்மை வளர்த்த பாசமுள்ள அப்பா!
நீங்கள் பிரிந்து இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன
கவலை குறையவில்லை கண்ணீரும் நிற்கவில்லை
கடவுள் அருளால் உங்களை அருமை அப்பாவாகப் பெற்றோம்
நாம் செய்த பாவத்தால் விரைவில் உங்களை இழந்து
தவிக்கின்றோம்
பாவம் கொடியது இழப்பு மிகக் கொடியது
உங்களை இழந்த எமக்கு அமைதியுண்டோ இவ்வுலகில்.

**தெகிவளை.** கண்ணீருடன் மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

(C/6802)(26.6.7)

Premier ONE
## பிறீமியர் வன்



பிறிமியர் வன் குடிதண்ணீரானது நவீன தொழில்நுட்ப முறைகளின்படி சுத்திகரிக்கப்பட்டு போத்தலில் அடைக்கப்படுகிறது.

இயற்கை எழில் கொஞ்சும் மல்வானை பகுதியிலுள்ள மிக ஆழ் குழாய் கிணறுகள் மூலம் நீர் பெறப்படுகின்றது.

எமது உற்பத்திகள் தரச்சான்றிதழைப் பெற்றுள்ளதுடன் சுகாதார அமைச்சினதும் அங்கீகாரம் பெற்றது.

விலை ரூபா 200/= மட்டும்

தாகம் தீர்ப்பதற்கு உங்கள் வீடு தேடி வர எப்பொழுதும் தயாராக இருக்கின்றது பிறிமியர் வன் குடிதண்ணீர்.

Free Office & Home Delivery
(யாழ். மாநகர எல்லைக்குள்)

ஏக விநியோகஸ்தர்கள்: ஆச்சி பூட் சென்ரர்
117, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2092, 0773294341.

(c/6993) (10.6.7)

### பொது அறிவித்தல்



**Mohamed Ansar**
**Mohamed Anaas**
(முஹம்மது அனாஸ்)
**ID NO : 912823172 V**

கிரீன்விச் கல்லூரியின் யாழ்ப்பாண கிளையில கடமையாற்றிய
முஹம்மது அன்சார் முஹம்மது அனாஸ்
தற்பொழுது சேவையில் இல்லை.

அத்துடன் கிரீன்விச் கல்லூரிக்கும்
முஹம்மது அன்சார் முஹம்மது அனாஸுக்கும்
எதுவித தொடர்புமில்லை,
இவரால் செய்யப்பட்ட பண கொடுக்கல் வாங்கலுக்கு
கிரீன்விச் கல்லூரி பொறுப்பேற்காது
என்பதை இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின்
சகலருக்கும் இத்தால் அறியத்தருகின்றோம்.

இவர் இந்த கிரீன்விச் கல்லூரியின் பெயரைக்
குறிப்பிட்டு பணம் கொடுக்கல் வாங்கல் செய்தால்
எமது கல்லூரி எக்காரணம் கொண்டும்
பெறுப்பேற்கமாட்டாது
என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

Director
Greenwich College, 34, Galle Road,
Dehiwela. Tel : 0722 419 418

# ஆண்டு இறுதிக்குள் புதிய அடையாள அட்டை

கொழும்பு, மார்ச் 10

புதிதாக விநியோகிகிகப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள இலத்திரனியல் ஆள் அடையாள அட்டைகள் இந்த ஆண்டின் இறுதிக்குள் வழங்கப்படும் என்று ஆள்பதிவுத் திணைக்களம் தெரிவிக்கிறது.

இது சம்பந்தமாக மேற்படி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகமான ஆர். எம். எஸ். சரத்குமார தெரிவித்திருப்பதாவது :-

தற்போது அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ள மற்றும் வழங்கப்படாதுள்ள 16 மில்லியன் பேரின் விவரங்களை சேகரித்துக் கொள்வது தொடர்பாக பிரதேச பணிமனைகளில் ஆள்களைப்பதிவு செய்யும் 332 அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

அது தொடர்பாக தற்போது சேகரித்துக் கொள்ளப்பட்டுள்ள பட்டதாரிப் பயிலுநர்களுள் 800 பேரை ஆள்களைப் பதிவு செய்யும் திணைக்கத்துக்கு இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதிய இலத்திரணியல் ஆள் அடையாள அட்டையின் விவரங்களை உள்ளடக்கும் போது ஒவ்வொரு நபர்களினதும் விரல் அடையாளங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு இதன் மூலம் எவராலும் மோசடிகள், ஊழல்களை மேற்கொள்ள இயலாது போகும் என்றார் சரத்குமார. (ஒ- 22)

# சிவராத்திரி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 10

மகா சிவராத்திரி விழாவை முன்னிட்டு இந்து சமய அலுவல்கள் அமைச்சு இன்று இரவு முழுவதும் பல்வேறு நிகழ்வுகளை நடத்தவுள்ளது. மகா சிவராத்திரியையொட்டி கீரிமலையில் உள்ள சிவபூமி மடத்தில் இன்று முழுவதும் தொடர் அன்னதானம் வழங்கப்படும்.

### வேலைக்கு ஆள்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கிக் கொண்டிருக்கும் பிரபல இலத்திரனியல் நிலையத்திற்கு பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு ஆள்கள் தேவை.

1) T.V, றேடியோ திருத்துநர்
2) விற்பனையாளர்கள் (ஆண், பெண் இருபாலரும்)

தங்களுடைய சுயவிவரக் கோவையை 15 நாள்களுக்குள் கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மே.பா.உதயன்
விள இல:4441
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(34354)(6.7.11)

### Dialog & Abans
### அங்கீகாரம் பெற்ற முகவர்கள்

**காரியாலய தலைமை நிர்வாகி மற்றும் வாடிக்கையாளர் சேவை அதிகாரி**
(ஆண் மற்றும் பெண்)

நீங்கள் திறமையான சுறுசுறுப்பான இளைஞரா? வாடிக்கையாளர் சேவைகளை முன்னின்று விருப்புடன் செயலாற்ற நாட்டம் கொண்டவரா? அப்படியாயின் இதோ! டயலொக்/அபான்ஸ் அங்கீகாரம் பெற்ற முகவர் நிலையத்தில் பணிபுரியும் வாய்ப்பு

கடமைகள்
- டயலொக் டெலிகொம் வழங்கும் வாடிக்கையாளர் சேவைகளை விட கூடுதலாக சேவையாற்றக்கூடியதாயிருத்தல்.
- VAS மற்றும் கட்டணப்பட்டியல்கள் தொடர்பாக வாடிக்கையாளர்களுக்கு மேலதிக தகவல்களை வழங்ககூடியதாயிருத்தல்.
- டயலொக் GSM/ DTV/ CDMA/ ப்ரோட்பேண்ட் விற்பனைசெய்யக்கூடியதாயிருத்தல்
- மேலதிக கடமைகளை பொறுப்பேற்று நிறைவேற்றக்கூடிய ஆற்றல்

தகுதிகள்
- 18-30 வரையான வயதெல்லையை கொண்டிருத்தல்.
- க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தரத்தில் சித்தி
- சிறந்த தொடர்பாடல் தகுதியை கொண்டிருத்தல்
- பாடசாலை விடுகைப்பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- அந்தந்த துறையில் உள்ள அனுபவம் மேலதிக தகைமையாகக்கொள்ளப்படும்.
- ஆங்கில அறிவு அவசியம்.

காரியாலய தலைமை நிர்வாகி
முல்லைத்தீவு பிரதேசத்திற்கும்

காசாளர்
யாழ்ப்பாணம்

வாடிக்கையாளர் சேவை உத்தியோகஸ்தர்
முல்லைத்தீவு, நெல்லியடி மற்றும் வவுனியா ஆகிய பிரதேசங்களுக்கும் தேவைப்படுகின்றார்கள்

நேர்முகப்பரீட்சைகள் எதிர்வரும் மார்ச் மாதம் 11 ஆம் மற்றும் 12 ஆம் திகதிகளில் காலை 10.00 மணியிலிருந்து பிப.2.00 மணிவரை கீழுள்ள முகவரியில் நடைபெறும். ஆர்வமுள்ளவர்கள் கீழுள்ள முகவரிக்கு சமுகமளிக்கவும்.

DIALOG SERVICE POINT
No.234A, Kandy Road, Vavuniya
தொலைபேசி: 077 7397735
077 2680252

Abans

## Walk-in Interviews



Demak

BOI அங்கீகாரமுடைய மோட்டார் சைக்கிள்களை பொருத்தும் மற்றும் சந்தைப்படுத்தும் முன்னணி நிறுவனமான நாம் எமது குழாமில் திறமை மிக்கவர்களை இணைத்துக்கொள்ளவுள்ளோம். கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு வழங்கப்படும் அத்துடன் இத்துறையில் மென்மேலும் உயர்வடையவும் வாய்ப்புகள் வழங்கப்படும்.

| காலி | கண்டி | பதுளை | வவுனியா |
|---|---|---|---|
| March 14 | March 18 | March 20 | March 20 |

| யாழ்ப்பாணம் | திருகோணமலை | மட்டக்களப்பு | அம்பாறை |
|---|---|---|---|
| March 21 | March 23 | March 24 | March 25 |

Walk-in Interviews

### பிராந்திய விற்பனை நிர்வாகி

### தொழில்நுட்ப விற்பனை அதிகாரி

### வியாபார விரிவாக்கல் அதிகாரி

### தொழில்நுட்ப விற்பனை பிரதிநிதி

உங்களுக்கு அருகாமையில் உள்ள கிளைக்கு சமுகமளித்து நேர்காணலில் பங்குகொள்ளலாம். அல்லது walkin@demakmotor.lk க்கு உங்கள் CV இணை அனுப்பி வைக்கலாம்.

Interviews will be held on following places

காலி- 14 March
Harsha Motors-No 223 Colombo Road, Kaluwella-Galle

கண்டி - 18 March
Sampath Madura (Near Devon) 4A- Sangaraja Mw, Kandy

பதுளை - 20 March
Heritage Hotel - No 205, Keppitipola Road - Badulla

வவுனியா - 20 March
Seven Hills
No.66, 2nd Cross St., Vavuniya

யாழ்ப்பாணம் - 21 March
Seven Hills
No. 754, Hospital Rd, Jaffna

திருகோணமலை - 23 March
JKAB Park Hotel
93 love lane, (Nillaveli Road) Trinco

மட்டக்களப்பு - 24March
Treat OOO Hotel
103,Lady Manning Drive, Batticaloa

அம்பாறை - 25 March
Asiri Enterprises
Kandy Rd, Ampara

E-mail : walkin@demakmotor.lk More Info: 0770 105 899

The Manager - Human Resource
Demak Sales & Services Lanka (Pvt) Ltd
(A Member of Demak Group - Malaysia )
199, Vauxhall Street, Colombo - 02 Tele / Fax : 011 7 711 211
Email : walkin@demakmotor.lk

Demak

## இலவச அழகுக்கலை பயிற்சி

200/= பதிவுக்கட்டணத்துடன் 3 பிரிவுகளாக Facial, Gold facial, Threading, Pedicure,Manicure,Hair Style,Hair Cut,Make-Up என பயிற்சிகள் அனைத்தும் செய்முறை விளக்கத்துடன் இடம் பெறும்.பயிற்சியின் முடிவில் சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும். அறிமுக வகுப்பில் கலந்து கொண்டு உங்களது பதிவுகளை மேற்கொள்ளலாம். அன்றை தினம் இணைபவர்கள் 1990/= தொடக்கம் 14870/= வரை பெறுமதியான பொருள்களை 300/= இற்கு பரிசாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

**திகதி: 12.03.2013**
**நேரம்:10.00 மணி**
**இடம்: ஒறிபிளேம்,யாழ் கிளை நிறுவனம்**
**187/30, யூனியன் ஒழுங்கை,யாழ்ப்பாணம்.**
(சத்திர சந்தி அருகில், கொட்டடி வீதி)
தொடர்பு:0772288243
★ நிபந்தனைக்கு உட்பட்டது
(வவுனியா, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களிலும் பயிற்சிகள் நடைபெறுகின்றன.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில்
10.08.1930

விண்ணுலகில்
20.02.2012

அமரர்
**கணேஸ் சின்னம்மா**

ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம் மனம்
உங்கள் அன்பும் அரவணைப்பும்
எங்களை ஆறுதல் படுத்தட்டும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
நிகரை ஞானவைரவப் பெருமானை
வேண்டித் தொழுகின்றோம்.

பிரதான வீதி,
சங்கானை.
குடும்பத்தினர்.

(34345)(10.6.7)

## 62ஆவது அகவை வாழ்த்து



பேராசிரியர் **க.தேவராஜா**

அவர்கள் ஆஸ்திரேலியாவில் தனது குடும்பத்துடன் இன்று (10.03.2013) ஞாயிற்றுக்கிழமை பிறந்தநாளை கொண்டாடுகின்றார். அவரை இன்றுபோல் என்றும் வாழ்க வளமுடன், என வாழ்த்துகின்றோம். அவரது பிறந்தநாளில் யாழ். பல்கலைக்கழகத்தில் நீண்டகால சேவைக்கான விருது கிடைத்ததையிட்டும் பாராட்டுகின்றோம்.

த.வரதராஜா (அதிபர்- எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்)
சரா.புவனேஸ்வரன் (இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்க செயலாளர்)
ஜ.புவனேந்திரன் (ஓய்வுநிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர்- தீவகம்)
சண்.வாமதேவன் (அதிபர்- கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயம்)
வி.எஸ்.மகேந்திரன் (அதிபர்- நவீல்ட் பாடசாலை கைதடி)
வி.தயாபாலன் (ஆசிரியர்- யாழ். இந்துக் கல்லூரி, கங்கை ஓவ் செற் உரிமையாளர்)
இரா.அருட்செல்வம் (அதிபர் A.T.C)
ஞானதிருக்கேதீஸ்வரன் (அதிபர் K.T.C)
தி.சிவகுமார் (அதிபர் S.T.C)
என்.பாலகிருஸ்ணன், என்.இராஜன் (பிற்ஸ்மன் நிறுவனம், மானிப்பாய்)

Best Wishes



## R. J அழுகுக்கலை நிலையம்



[குளிரூட்டப்பட்ட வசதியுடன்]

மணப்பெண் அலங்காரம், (f)பேசியல், கெயார்ஸ்ரைல்ஸ், சாறிவேக்ஸ், கேக்ஐசிங், தலைமுடி சுருட்டுதல், அயன் செய்தல் போன்ற வசதியுடன்

அனுபவம் மிக்க வேலையாள் தொடர்பு கொள்ளவும்.



111/2, பிறவுண் றோட், கொக்குவில், யாழ்ப்பாணம்.
தொ.பே.இல-0776471194
இணை நிறுவனம்: ஆசோ அழகு நிலையம் பிறவுண் றோட், கலட்டி, யாழ்ப்பாணம்.



## வேலைவாய்ப்புகள்

ஈஸ்வரன் போக்குவரத்துச் சேவையில் பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

01. **போக்குவரத்து முகாமையாளர்**
(அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள் விரும்பத்தக்கது)
02. **பணம் வசூலிப்பாளர்**
(பிணைப் பணம் செலுத்தக் கூடியவராக இருத்தல் வேண்டும்)
03. **கள உத்தியோகத்தர்**
04. **சாரதி** (இலகு ரக வாகனம் செலுத்தக் கூடியவர்)

ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் இவ் விளம்பரம் பிரசுரமாகி 07 நாள்களுக்குள் நேரில் வரவும்.
(யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது)

இல.69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



## வீடு வாடகைக்குண்டு

நாவலர் வீதியில் அன்ன சத்திர ஒழுங்கையில் 8 அறைகள் கொண்ட மேல்மாடி வீடு A/C, பாதுகாப்புCamera வாகனத் தரிப்பிடத் துடன் சகல வசதிகளுடனும்
**வீடு வாடகைக்கு உண்டு.**
நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:-
*0770476299, 0772287211*


## மரண அறிவித்தல்

### திருமதி அலிஸ் கருணானந்தயோகம்மா-தம்பையா



ஈவினை, புத்தூர் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அலிஸ் கருணானந்த யோகம்மா நேற்று (09.03.2013) சனிக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சொலமன் செல்லத்துரை-கோப் அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற முத்துப்பிள்ளை தம்பையா வின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி, மங்கையர்க்கரசி, S.Y.பரராஜசிங்கம் ஆகியோரின் அன்பு சகோதரியும் திருச்செல்வராணி, மனோகரன், மகாலிங்கம், மனோன்மணி, செல்வசொலமன் ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற சாமுவேல் (I.S.A) மற்றும் பரமேஸ்வரி, தவமணி, அமிர்தலிங்கம், சரோஜனிதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் மதிச்செல்வி அருட்குமார் (யா/ஆவரங்கால் நடராஜா மகாவித்தியாலயம்) சத்தியநாதன்-சீலா(இந்தியா), யூட்-ரஜனி(நோர்வே), ஜெயந்தினி-சுதாகரன்(இங்கிலாந்து), ஜெயந்தன் (இலங்கை பெந்தக்கொஸ்தே திருச்சபை), சூரியவதனா (ஆசிரியை, வவுனியா கல்நாட்டின குளம்), ஸ்ரீபன் ஜெபச்செல்வன்(அங்கிலிக்கன் திருச்சபை), டோசி(பளை மத்திய கல்லூரி), கேதீஸ்குமரன்(பாம் கனி), ஜனகன்-மைதிலி (நற்செய்தியாளர்), ஜனனி-றோகான்(பலாலி ஆசிரியர் கலாசாலை) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் சிந்துஜா, வீனுஜா, மேபல், அலிஸ், பெனோ, ஜொயானா, ஜோ, ஆஷேல், தெபோரான், அபிநாத், ஜெர்சோன், ஆத்மீகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரது இல்லத்தில் இன்று (10.03.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப.2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் ஈவினை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஈவினை,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

பொலிஸார் உட்பட இருவரின் சடலங்கள் நேற்று மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 10

ஹிருந்து கோட்ட என்ற இடத்திலிருந்து பொலிஸ் சார்ஜன்ட் உட்பட இருவரது சடலம் நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக ஸ்ரீவர்த்தன தெரிவித்தார்.

பொலிஸ் அவசர தொலைபேசிப் பிரிவுக்கு கிடைக்கப் பெற்ற அழைப்பபை யடுத்து, பொலிஸார் ஹிருந்து கோட்ட, ஹட்டாட்டவ என்ற இடத்துக்குச் சென்றனர்.

அங்கு கைவிடப்பட்ட வீடொன்றிலிருந்து இரண்டு சடலங்களைப் பொலிஸார் மீட்டனர். அதில் ஒருவர் பொலிஸ் சார்ஜன்ட் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் புலன் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறன்றது.

(த-5)


advt@uthayan.com
0215671111



## மணமகள் தேவை UK Citizan

இந்து கௌரவ குடும்பம் 15.04.1973 (Gov Doctor) MBBS பரணி 35 கி.பாவம் உடையவர் படித்த மணமகளை எதிர்பார்க்கின்றனர். Fax:- 0044085488847 Tel00447833819736 (Miss) Chitra004@yahoo.co.uk.




## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள Lanka Ashok TenWheeler LJ.xxxx தொடர் இலக்கமுடைய கொன்ரையினர் விற்பனைக்குண்டு.

தொடர்பு- 0778925868,0779985970


## மரண அறிவித்தல்

### இராமச்சந்திரா சுதாகரன்



விளாத்தித்தோட்டம் மூளாய் வீதி வட்டுக் கோட்டையைப் பிறப்பிடமாகவும், சுழிபுரம் மேற்கு, சுழி புரத்தினை வதிவிட மாகவும் கொண்ட இராமச்சந்திரா சுதா கரன் நேற்று முன் தினம் (08.03.2013) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் இராம ச்சந்திரா காலஞ் சென்ற நல்லம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும் இராசரத்தினம்-வள்ளிநாயகி தம்பதியரின் மருமகனும், ஜெயரஞ்சினியின் அன்புக் கணவரும் யோகப்பிரியன்(மாணவன், யா/யாழ்ப்பாணக்கல்லூரி), மோகனப்பிரியா(மாணவி, யா/விக்ரோரியாக்கல்லூரி), கஜப்பிரியன் (மாணவன், யா/சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை) ஆகியோரின் அன்புத்தந்தையும், சிவகுருநாதர் கனகசபாபதியின் (தர்மகத்தா, உடுக்கியவளை தேவஸ்தானம்), சுலோசனா (அதிபர் -யா/மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயம்), சுகிர்த ராணி (இலண்டன்), பிரபாகரன்(இலண்டன்), சுமதி (கிராமிய வங்கி-சங்கானை ப.நோ.கூ.சங்கம்), தயாகரன்(C.D.O) ஆகியோரின் அன்புச்சகோதரனும் சிவலிங்கம் (இலண்டன்), மஞ்சுளா (இலண்டன்), மாலினி (C.D.O), ஜெயரஞ்சன்(பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.03.2013) ஞாயிற்றுக் கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்ப டும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"பிரியவாசா",
சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
021-3737744


## வீடு விற்பனைக்குண்டு

அல்லாரை வடக்கு, கொடிகாமத்தில் புது வீட்டுடன் கூடிய 14 பரப்புக் காணி உடனடியாக விற்பனைக்குண்டு.

தொடர்பு-021 222 8790,
078 303 3850

(33690)(5.6.7)



## மணமகள் தேவை UK Citizan

இந்து கௌரவ குடும்பம் 15.04.1973 (Gov Doctor) MBBD பரணி 35 கி.பாவம் உடையவர் படித்த மணமகளை எதிர்பார்க்கின்றனர். Fax:- 0044085488847 Tel00447833819736 (Miss) Chitra004@yahoo.co.uk.



## பதவி வெற்றிடம்

பல் தேசிய நிறுவனத்திற்கு Education Technologies கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- Trainee Marketing Executive (after A/L'S)
- Marketing Executive (With one year Experience)
- A/L Pass
- Below 35 years
- Male & Female

நேர்முகப் பரீட்சைகள் 11.03.2013 தொடக்கம் 16.03.2013 நடைபெறவுள்ளன.
தகைமை உடையவர்கள் நேரில் வரவும்.
Can earn more than Rs. 40,000/= Within 3 months.
Overseas Trips and Many More

**Education Technologies**
**N0:100,2nd Floor, Manipay Road, Jaffna.**
*Contact Branch Manager*
*GANTHANY*
*0773434823*

(c/6323)(6.7.11)


## மரண அறிவித்தல்

### திருமதி சந்திரலிங்கம் விமலா



கட்டப்பிராய் கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்திரலிங்கம் விமலா நேற்று (09.03.2013) சனிக் கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசிரியர் இரத்தினம்- பூமணி தம்பதியரின் அன்பு மகளும், அச்சுவேலி வடக்கு செல்லர்-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், செல்லர் சந்திரலிங்கத்தின் (சித்திரம் சித்தப்பா, சாரதி) அன்பு மனைவியும், காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் தவரத்தினம் (ஜேர்மனி), நிர்மலா, ஜோகரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பூவலிங்கம், மகாலிங்கம் ஆகியோரின் மைத்துனியும், சுகுணராஜ் (மாநகரசபைச் சாரதி), விமல்ராஜ் (அபுதாபி), சர்மிளா, சுமன்றாஜ் (றோசன்) ஆகியோரின் அன்புத் தாயும், சுமதி, இளங்கோ ஆகியோரின் அன்பு மாமியும், சாரதாதேவி, கேமாவதி, சந்திரராசா (சிறி) ஆகியோரின் மைத்துனியும், ஜக்சினின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (11.03.2013) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் தெற்கு,
கட்டப்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மக்களின் நாளாந்தத் தேவைகளை தறுக்கணிக்கும் போக்கு ஏனோ..?

அரசர்கள் காலத்தில், மக்களுக்குத் தெரிவிக்க வேண்டிய தகவல்களை முரசுகொட்டி, பறைஅறைந்து அறிவிப்பது வழமையாக இருந்தது. காலம் செல்லச் செல்ல, அரச அறிவிப்புகளை வர்த்தமானி மூலம் பகிரங்கப்படுத்துவது வழக்கத்துக்கு வந்தது.

இலங்கையைப் பொறுத்தவரை, நாட்டின் இடது சாரித் தலைவர்களில் ஒருவரான பொருளாதாரக் கலாநிதி என்.எம்.பெரேரா நிதியமைச்சராக இருந்த வேளை, நள்ளிரவோடு நள்ளிரவாக மக்களின் அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றங்களை அறிவித்து, குறிப்பிட்ட நள்ளிரவு தொடக்கம் நடைமுறைப் படுத்தப்படுவது சர்வசாதாரணமாகியது.

இப்போது என்னவெனில், அடிக்கடி திடீர் திடீரென விலையேற்றங்கள் அரசினால் அறிவிக்கப்படுகின்றன. அவை மக்களின் அன்றாடத் தேவைகளுக்கும், பிரதான சேவைகளுக்கும் என்று மாறிமாறிக் குறுகிய இடைவெளிகளில் வந்துகொண்டிருக்கின்றன. மக்களின் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் தொடக்கம் பிரதான சேவைக் கட்டணங்கள் வரை உயர்த்தப்படுகின்றன.

பிந்திய செய்திகளின் பி ரகாரம், எரிபொருள் விலை ஏற்றமும், மின்சாரக் கட்டண அதிகரிப்பும் மக்களின் அன்றாட வாழ்க்கையின் தொண்டைக் குழியைத் திருகும் நிலையை உண்டாக்கி உள்ளன.

எரிபொருள்களின் விலை உயர்ந்தால் மிகச்சில பாவணைப் பொருள்களைத் தவிர ஏணைய அனைத்தினதும் விலைகள் மக்களின் கைகளுக்கு எட்டாதவாறு எகிறிப்பாயும்.

அதேபோன்று, மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டால், வீட்டுப்பாவனைச் செலவு தொடக்கம் உற்பத்திப் பொருள்கள் வரையான பலவற்றினதும் விலைகள் வரை உயரும். உடல் உழைப்புக் கீழ் நோக்கிச் செல்ல, இயந்திரம் சார் செயற்பாடுகள் நாளாந்தம் அதிகரித்துச் செல்லும் போக்கே இப்போதையதாகும். உதாரணமாக சிரட்டைக் கரிச் சூட்டில் மடிக்கப்பட்ட ஆடைகள் இப்போது மின்சாரம் கொண்டு மெருகூட்டப்படுகின்றன. ஏன் அண்ணளவாக 60 சத வீதமான வீடுகளில் சமையல் உட்பட வீட்டுத் தோட்டத்துக்கு நீர் பாய்ச்சுவது வரை மின்சார சாதனங்களே பயன்படுத்தப்படுகின்றன.

காலம் மாற வாழ்க்கை முறையும் மாறுவது இயல்பே. அந்த வகையில் விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சிகளின் பெறுபேறுகளை அடைவதும் அனுபவிப்பதும் தவிர்க்க முடியாதவை; தடுக்கவும் கூடாதவை.

இலங்கை போன்ற,

ஏனைய வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் அடிக்கடி விலை உயர்வுகளும், கட்டண உயர்வுகளும் ஒப்பீட்டளவில் குறைவு என்றால் அது தவறன்று.

மக்கள் நலன் நாடும் திட்டமிடுதல் தேய்ந்துபோதல், ஆட்சிபீடம் ஏறியதும் மக்களின் வரிப்பணத்தைச் சுரண்டும், முழுங்கும் போக்குப் பெருப்பது போன்ற ஜனநாயக விரோதச் செயற்பாடுகளால் அடிக்கடி விலை உயர்வுகளும், பொதுச் சேவைகளுக்கான கட்டண உயர்வுகளும் தடுக்க இயலாதவாறு எகிறிச் செல்கின்றன.

நாட்டுக்கு வருவாய் தரும், இலாபம் தரும் துறைகளை ஆட்சிக் கட்டிலில் உள்ளோரும், அவர்களின் அடிவருடிகளும் கௌவிப் பிடித்துக்கொண்டு, அவற்றைத் தமது சொந்தச் சொத்தாகப் பயன்படுத்தும் போக்கும் -

மக்களின் வாழ்க்கைக் கஷ்டங்களைப் போக்குவதற்கு முதன்மை இடம்தராமல், தமக்கு நயம் பயக்க வல்ல செயற்பாடுகளை முடுக்கி விடுவதும் இந்த நாட்டை, ஆட்சியைப் பீடித்த சன்னி தோஷமாகி விட்டது.

இத்தகைய நிர்வாகப் போக்கினால், மின்சாரக் கட்டணம் மூன்று மடங்கு உயரும் என்று எதிர்வு கூறப்படுகிறது. மின் அலகு ஒன்றுக்கான ஆகக்குறைந்த கட்டணம் மூன்று ரூபாவிலிருந்து ஒன்பது ரூபாவாக உயர்த்தப்படும் என்று சொல்லப்படுகிறது. அந்தக் கணக்குச் சரியானால், எல்லாத் துறைகளின் செலவினங்களும் ஊதிப் பெருக்கும். அதன் விளைவு மக்களை மட்டுமன்றி நாட்டின் வளர்ச்சியையும் தறுக்கணிக்கச் செய்துவிடும்.

இந்த இலட்சணத்தில் அனைத்துலக மட்டத்தில் அதி உச்ச வளர்ச்சியை நினைத்தும் பார்க்க இயலாத ஒரு பீடையான பின்புலமே மிஞ்சும். மக்கள் நலன்களைப் புறமொதுக்கி ஆட்சிபீடத்தில் உள்ளவர்கள் தமது நலன்களை முன்னிறுத்தி அல்லது தாம் நினைத்த சொந்த ஆதாயங்களை எய்தும் உள்நோக்கத்துடன் செயற்படுவது நாட்டையும் மக்களின் வாழ்க்கை நிலையையும் வழிகளையும் பின்னகர்த்திச் சென்று ஆழக்குழியில் வீழ்த்தவே உதவும்.

நாட்டினதும், மக்களினதும் எதிர்கால நலன்களை மனதில் கொள்ளாமல் திடீர் முடிவுகளையும் திட்டங்களையும் செயற்படுத்த முனையும் போக்கு எந்த வகையிலும் ஆக்கபூர்வமான பயன்களையும் மக்களினது வாழ்க்கை நலன்களையும் எய்துவதற்கு வகை செய்யமாட்டா.

தமக்கு வாய்ப்பான காரணங்களைக் கூறிக்கொண்டு மக்களையும் தேசத்தையும் நீண்டகாலத்துக்கு ஏமாற்ற இயலாது. அதன் பலாபலன்களை முதலில் உணரமுடியாதனவாக இருப்பினும் விளைவுகள் பூதாகரமாகவே மிஞ்சும்.

# மாற்றுவலுவுடையோருக்கு ஏற்றவாறு ஓய்வு நிலையம் அமைக்க நடவடிக்கை

## தூர இடங்களுக்குப் பயணிப்போரின் நலனைக் கருத்தில் கொண்டு இந்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 10

கொழும்பு - யாழ்ப்பாணத்துக்கான பயணத்தை மேற்கொள்ளும் மாற்றுவலுவுடையவர்களுக்கான ஓய்வு நிலையம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சமூக சேவைகள் திணைக்களம் இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்று சமூக சேவைகள் திணைக்களத்தின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

கொழும்பு - யாழ்ப்பாணத்துக்கான பயணத்தை மேற்கொள்ளும் மாற்றுவலுவுடையவர்கள் நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்ளும் போது ஓய்வு எடுப்பதற்கு விசேட இடங்கள் இல்லை.

இதனால் அவர்கள் மலசலகூட வசதிகள் மற்றும் ஓய்வு இடங்களைப் பெற முடியாதவர்களாக உள்ளனர்.

இது தொடர்பான சமூக சேவைகள் திணைக்கள அதிகாரிகள் நேரடியாக அவதானித்துள்ளனர்.

இதற்கு அமைவாக நீண்ட தூரப் பயணத்தின் போது மாற்றுவலுவுடையவர்கள் ஓய்வு எடுப்பதற்கு ஏற்ற வகையிலான ஓய்வு நிலையத்தை வெகு விரைவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கெனச் சமூக சேவைகள் அமைப்பு விசேட செயற்றிட்டத்தை மேற்கொள்ளவுள்ளது.

இதனைப் போன்று ஏனைய இடங்களிலும் குறிப்பாக சேவை நிலையங்களில் மாற்றுத் திறனாளிகள் தமது தேவைகளை இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படவுள்ளன.

இது தொடர்பாக சகல திணைக்களங்களுக்கும் கடிதம் மூலம் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.- என்று தெரிவித்தார். (ம-14)

# கீரிமலை நகுலேஸ்வரத்தில் சிவராத்திரி தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம்,மார்ச் 10

மகா சிவராத்திரியை முன்னிட்டு கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்தில் சிவராத்திரி பூசைகளும் தேர்த் திருவிழாவும் இடம் பெறவுள்ளன.

நகுலேஸ்வர ஆலயத்தில் சிவராத்திரியை முன்னிட்டு திருவிழா கடந்த 24 ஆம் திகதி தொடக்கம் இடம்பெற்று வருகிறது.

இன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணிக்கு 1008 சங்காபிசேகமும், விசேட அலங்கார பூசையும், காலை 7 மணிக்கு வசந்தமண்டப் பூசையும் இடம் பெற்று முற்பகல் 10.35 மணிக்கு தேர்த் திருவிழா நடைபெறவுள்ளது.

நாளை திங்கட்கிழமை அதிகாலை 4 மணிக்கு மூன் றாம் சாமப் பூசையும், அதி காலை 5 மணிக்கு நான்காம் சாமப் பூசையும் இடம்பெற்று மும்மூர்த்திகள் 'கண்டகி' தீர்த்தத்துக்கு எழுந்தருளி தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (3-14)

# பளைப் பிரதேசத்துக்கு நிரந்தரப் பொலிஸ் நிலையம்

பளை,மார்ச் 10

பளைப் பிரதேசத்துக்கான நிரந்தரப் பொலிஸ் நிலையம் நாளை மறுதினம் திறந்து வைக்கப்படவுள்ளது.

பளைப் பிரதேச செயலகத்துக்கு வடக்குப் புறமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையக் கட்டடமே திறந்து வைக்கப்படவுள்ளது.

பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்து மூன்று வருடங்களில் நிரந்தர கட்டட வசதிகள் இல்லாததால் தனியார் கட்டடம் ஒன்றில் இதுவரை காலமும் பொலிஸ் சோதனைச் சாவடியாக இயங்கி வந்ததால் பிரதேச மக்கள் தமது தேவைகளுக்காக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்குச் சென்று வந்தனர்.

கடந்த டிசெம்பர் மாதம் பொலிஸாரால் நடத்தப்பட்ட நடமாடும் சேவையில் கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகரிடம் நிரந்தரப் பொலிஸ் நிலையம் அமைத்துத் தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனையடுத்து பிரதேச செயலகத்துக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தில் நிரந்தரப் பொலிஸ் நிலையம் இயங்கவுள்ளது என்று கூறப்பட்டது. (ம-9)

# மாதகல் நுணசை வித்தியாலயத்தை ஆரம்ப பாடசாலையாக்கத் திட்டம்

## பெற்றோர் கடும் எதிர்ப்புத் தெரிவித்து மனு

வலி.வடக்கு, மார்ச் 10

மாதகல் நுணசை வித்தியாலயத்தில் தரம் 5 வரையான வகுப்புகளை நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

வலிகாமம் கல்வி அலுவலகமும் சண்டிலிப்பாய் கல்விக் கோட்டமும் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கு பெற்றோர் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருட இறுதியில் பலத்த சிரமத்தின் மத்தியில் இந்தப் பகுதியில் மக்களின் மீளக்குடியமர்வு இடம்பெற்றதைத் தொடர்ந்து இந்தப் பாடசாலையும் மீள இயங்கத் தொடங்கியது.

தற்போது இந்தப் பாடசாலை க.பொ.த சாதாரண தரம் வரைக்கும் வகுப்புகளைக் கொண்டுள்ளது. வசதி குறைந்த வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களின் பிள்ளைகளே இங்கு கல்வி கற்று வருகின்றனர்.

இந்த நிலையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறித்துப் பெற்றோர் தரப்பில் பெரும் எதிர்ப்பு வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது.

இது தொடர்பான எதிர்ப்பு மனு ஒன்றையும் வலயம், கோட்டம் ஆகியவற்றுக்குப் பெற்றோர் அனுப்பி வைத்துள்ளனர்.

இது தொடர்பில் வடமாகாணக் கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:-

அண்மையில் மீள இயங்கத் தொடங்கிய பாடசாலையே அது. அங்கு மாணவர்கள் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் ஜி.சீ.ஈ.சாதாரணதரம் வரை பாடசாலையை இயங்க வைக்க முடியாதுள்ளது.

அதனால் தற்போதைக்கு 5 ஆம் தரம் வரை பாடசாலையை இயக்கத் தீர்மானித்துள்ளோம்.

மாணவர் தொகை அதிகரிப்பின் சாதாரணதரம் வரை வகுப்புகளை அதிகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.-என்றார். (ம-4-86)

# குகதாசனுக்கு பணி நீடிப்பு இல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 10

வடமாகாண கணக்காய்வாளராகப் பணியாற்றிய வி.குகதாசனுக்குப் பணி நீடிப்பு வழங்கப்படவில்லை.

மீள் ஒப்பந்த அடிப்படையிலேயே அவர் அந்தப் பணியில் அமர்த்தப்பட்டிருந்தார்.

கடந்த மாதம் 21 ஆம் திகதி அவரது ஒப்பந்த காலம் நிறைவடைந்தது. எனினும் அவருக்குப் பணி நீடிப்பு வழங்க ஆளுநர் அலுவலகம் விரும்பவில்லை.

குகதாசனின் செயற்பாடுகள் தொடர்பில் ஆளுநர் அலுவலகத்துக்குக் கிடைக்கப்பெற்ற தகவல்கள் இதற்குக் காரணமாக இருக்கலாம் என்று அதிகாரிகளால் கூறப்பட்டது. (ம-4-5)

# கல்விக்கான புலமைப் பரிசில் திட்டத்தில் மாணவர்களை இணைக்க நடவடிக்கை

வலி. வடக்கு, மார்ச் 10

யாழ். மாவட்டக் கமத்தொழில் திணைக்களத்தால் வருடாந்தம் வழங்கப்படும் கல்விக்கான புலமைப் பரிசில் திட்டத்தில் இணைத்துக் கொள்வதற்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகளில் யாழ். மாவட்ட விவசாய சம்மேளனங்கள் ஈடுபட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் உள்ள விவசாயிகளின் பிள்ளைகளில் சுமார் முப்பது முதல் முப்பத்தைந்து பிள்ளைகளுக்கு வருடாந்தம் கமத்தொழில் திணைக்களத்தால் புலமைப் பரிசில் வழங்கப்படுவது வழமை.

அந்த வகையில் இந்த முறையும் புலமைப்பரிசில் வழங்குவதற்கு என்று 2014 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் சமுர்த்தி நிவாரணம் பெறாத பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்கள் மற்றும் அங்கவீனர்களைக் கொண்ட குடும்பங்கள், இடம்பெயர்ந்து மீள்குடியமர்ந்துள்ள குடும்பங்கள் ஆகியவற்றில் இருந்து உரிய மாணவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் புலமைப் பரிசில் திட்டத்தில் ஒரு மாணவனுக்கு சுமார் 20 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (ம-86)

## தந்தை ஒருவரின் விடாப்பிடியால் வலயக் கல்வி அலுவலகத்தில் பரபரப்பு

மாங்குளம், மார்ச் 10

தனது பிள்ளையின் பாடசாலை விடுகைப் பத்திரத்தைப் பெறுவதில் தந்தை ஒருவர் விடாப்பிடியாக நின்றதால் துணுக்காய் கல்வி அலுவலகத்தில் கடந்த புதன் கிழமை சிறிது நேரம் பரபரப்பு நிலவியதாகத் தெரிய வந்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் மாமடு, பழம்பாசி அ.த.க.பாடசாலையில் தரம் 4 இல் கல்வி கற்கும் தமது பிள்ளையின் விடுகைப் பத்திரத்தை வழங்குமாறு பெற்றோர் பாடசாலை அதிபரிடம் கேட்டுள்ளனர். அதற்கு அவர் மறுப்புத் தெரிவித்ததால் துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்தில் முறையிடப்பட்டது.

இந்தக் குடும்பத்தினர் தற்போது வசிக்கும் கிராமத்தில் இருந்து வெளியேறுவதாக அந்தப் பகுதியைச் சேர்ந்த கிராம அலுவலரிடம் கடிதம் வாங்கிச் சமர்ப்பித்தால் மட்டுமே விடுகைப் பத்திரம் வழங்க முடியுமென அங்கு பதிலளிக்கப்பட்டது.

இதனால் ஆத்திரமடைந்த அந்தப் பிள்ளையின் தந்தை வலயக் கல்விப் பணிப்பாளருடன் முரண்பட்டதால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. தமது பிள்ளையின் விடுகைப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளாது தான் அந்த இடத்தை விட்டு அகல மாட்டேன் என அந்தத் தந்தை அடம்பிடித்ததால் வேறு வழியின்றி வலயக் கல்விப் பணிப்பாளரின் உத்தரவின் பிரகாரம் அந்த விடுகைப் பத்திரம் வழங்கப்பட்டது.

இது தொடர்பாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது;

மேற்படி பாடசாலையில் 10 பிள்ளைகள் மட்டுமே கல்வி கற்று வருவதாகவும் அங்கிருந்து மாணவர்கள் விலகிச் சென்றால் அந்தப் பாடசாலையையே மூட வேண்டிய நிலை உருவாகும்.

மேலும் அதிபர் உட்பட இரு ஆசிரியைகள் அங்கு கடமையில் உள்ளனர். பாடசாலைக்கு வேண்டிய உட்கட்டமைப்பு வசதிகளையும் செய்து கொடுத்துள்ளோம்.- என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் மிகவும் பின்தங்கிய அந்தக் கிராமத்திலுள்ள பாடசாலை மூடப்பட்டு விடக் கூடாது என்பதற்காகவே விடுகைப் பத்திரங்களை வழங்குவதில் தாம் கட்டுப்பாடுகளை விதித்துள்ளதாகவும் அவர் கூறினார். (க-422)

## தனியார் வீட்டில் தபாலகம்

முல்லைத்தீவு, மார்ச் 10

ஒட்டுசுட்டான் தபாற்கந்தோர் தொடர்ந்தும் தனியார் வீட்டில் இயங்கி வருகிறது.

புதிய கட்டடத்தின் வேலைகள் யாவும் பூர்த்தியடைந்த நிலையிலும் திறந்து வைக்கப்படாது எவருக்காகவோ காத்திருக்கிறது அந்தத் தபாலகம்.

இந்த நிலையில் இங்கு வசிக்கும் மக்கள் இரண்டு தொடக்கம் மூன்று கிலோ மீற்றர் தூரம்வரை நடந்து சென்று தமது தபாலக சேவைகளைப் பெற்றுவருகின்றனர். (சு-௨00)

## அக்கராயன் ம.வி.மாணவருக்கு விடுதி வசதியை ஏற்படுத்தி தருக

### பெற்றோர் தரப்பில் வேண்டுகோள்

கிளிநொச்சி,மார்ச் 10

கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயத்தில் மாணவர்களுக்கான விடுதி வசதியை ஏற்படுத்துமாறு பெற்றோர் தரப்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாடசாலையில் வன்னேரிக்குளம், அம்பலப் பெருமாள்குளம், கோட்டைகட்டியகுளம், கோணாவில், யூனியன்குளம், ஜெயபுரம், முக்கொம்பன், ஆனைவிழுந்தான் குளம், அமதிபுரம், ஆரோக்கியபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மாணவர்களும் கல்வி கற்று வருகின்றனர்.

இவர்கள் தமது கிராமங்களிலிருந்து நீண்டதூரம் பயணம் செய்து அக்கராயனை அடைய வேண்டிய நிலையில் உள்ளனர்.

ஆனால் சீரான போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்படாமையால் இந்த மாணவர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். சில மாணவர்கள் சுமார் 20 கிலோ மீற்றருக்கு அப்பால் இருந்தும் வந்து செல்கின்றனர்.

போருக்கு முந்திய காலப் பகுதியில் இந்தப் பாடசாலையில் மாணவர்கள் தங்கி நிற்பதற்கான விடுதி வசதிகள் தற்காலிகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. ஆனால் போரின் பின்னர் இந்த வசதி இல்லாத நிலையிலேயே காணப்படுகின்றது. இதனால் தூர இடங்களிலிருந்து வந்து இங்கு கல்வி கற்று வரும் மாணவர்கள் தினமும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போது அக்கராயன் மகாவித்தியாலயத்தில் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புகளில் கலை, வர்த்தகப் பாடங்கள் போதிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# கொக்கிளாய் கடலில் தொடரும் அத்துமீறிய மீன்பிடித் தொழில்

### மீளக்குடியமர்ந்த மக்களின் வாழ்வாதாரம் மோசமாகப் பாதிப்பு

முல்லைத்தீவு, மார்ச் 10

முல்லைத்தீவு கொக்கிளாய் ஆற்றுப் பகுதியில் மீன்பிடித் தொழில் நடவடிக்கைகள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருவதாகவும் இதனால் தமது வாழ்வாதாரம் மிக மோசமான நிலையை அடைந்துள்ளது என்றும் இந்தப் பகுதி மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

சட்டவிரோத மீன்பிடிச் செயற்பாடுகள் அதிகரித்துள்ளமையே இதற்குக் காரணம் என்று அவர்கள் மேலும் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு கொக்கிளாய் ஆறு மற்றும் வட்டுவாகல் ஆறு உள்ளிட்ட சிறு கடல் பகுதிகளில் 1973 ஆம் ஆண்டின் கடல்தொழில் சட்டத்தின் கீழ் கூட்டுவலை பாவித்தல், வெளியிணைப்பு இயந்திரங்கள் பயன்படுத்துதல், தங்கூசி வலைகள் பாவிப்பது போன்ற தொழில் நடவடிக்கைகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாரம்பரிய முறைகளில் தொழில்களை மேற்கொள்வதற்கான அனுமதிப்பத்திரங்களே குறிப்பிட்ட கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், புளியமுனை, மாரியமுனை, தென்னமரவாடி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

அதன்படியே இந்தப் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 8 ஆயிரத்து 200 வரையான குடும்பங்கள் தமது வாழ்வாதாரத் தொழில்களை மேற்கொண்டு வந்த நிலையில் கடந்த 1983 ஆம் ஆண்டு இந்தப் பகுதி மக்கள் வெளியேற்றப்பட்டு மீண்டும் கடந்த 2010 ஆம் ஆண்டு மீள் குடியேறியுள்ளனர். ஆயினும் அவர்கள் இதுவரை தமது பாரம்பரிய தொழில் நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

பெரிய கடுக்குப்பனை, சின்னக்கடுக்குப்பனை போன்ற பகுதிகளைச் சேர்ந்த பெரும்பான்மையின மீனவர்களும், வெளிமாவட்ட மீனவர்களும் குறித்த கொக்கிளாய் ஆற்றில் வெளியிணைப்பு இயந்திரங்கள் பாவித்து மீன்பிடியில் ஈடுபடுவதுடன் சட்ட விரோத தொழில் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் கொக்கிளாய் பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் தமது தொழில் நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ள முடியாமல் தவிக்கின்றனர்.

தமது கடல்தொழில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் குறித்த கடற்கரையில் தாங்கள் வசிக்கும் போதும் தமக்குத் தேவையான கடலுணவுகளை 400 ரூபா, 450 ரூபாவுக்கு வாங்கி உண்ணவேண்டிய நிலை காணப்படுவதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இது தொடர்பாகப் பல அதிகாரிகளுக்கும் தகவல்கள், மனுக்கள் வழங்கியும் இதுவரை எந்த பயனும் கிடைக்கவில்லை என அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (த-6)

## பிரதேச சபை அனுமதியின்றி சந்தையில் இறைச்சிக் கடை

கிளிநொச்சி, மார்ச் 10

கிளிநொச்சி பொதுச் சந்தையில் பிரதேச சபையின் தீர்மானமின்றி இறைச்சிக்கடை அமைக்கப்பட்டு வருகின்றமை குறித்து கரைச்சிப் பிரதேச சபையின் உறுப்பினர் சுவிஸ்கரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் உள்ள கிளிநொச்சி நகரசேவைச் சந்தையில் சபையால் எந்தத் தீர்மானங்களும் எடுக்கப்படாமல் சபையின் அனுமதியின்றி மாட்டிறைச்சிக் கடை ஒன்று மலசலகூட கட்டடத் தொகுதிக்கு அருகில் அமைக்கப்பட்டு வருகின்றது.

இது சபையின் அனுமதியின்றி அமைக்கப்பட்டு வருகின்றமை குறித்து விசனம் வெளியிட்டுள்ள பிரதேச சபை உறுப்பினர் சுவிஸ்கரன் சந்தையின் சுற்றுச்சூழல், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அதனை அமைக்க வேண்டும் என்றும் அரசியல் செல்வாக்கில் இவ்வாறான வேலைத்திட்டங்கள் எதனையும் மேற்கொள்ள வேண்டாம் என்றும் கோரியுள்ளார். (த-6)

## மயானங்கள் புனரமைப்பில்லை

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தின் 90 வீதமான பகுதிகளில் மக்கள் மீளக்குடியேறிய போதிலும் அங்குள்ள மயானங்கள் தொடர்ந்தும் காடாகக் காட்சி தருகின்றன.

பிரதேசத்தில் உள்ள ஒவ்வொரு மயானமும் நான்கு அல்லது ஐந்து கிராமங்களுக்கு உரியது என உரிமை கொண்டாடப்படுகின்ற போதிலும் அவற்றைத் துப்புரவாக வைத்திருக்க எவரும் முன்வராதது குறித்துக் கவலை தெரிவிக்கப்பட்டது.

சில மயானங்கள் இருப்பது கூடத் தெரியாமல் பற்றையால் மூடிக் காணப்படுகின்றன. எரியூட்டும் இடம் தவிர்ந்த ஏனைய பகுதிகள் பற்றைக் காடாகக் காணப்படுகின்றன.

சடலத்தைப் பற்றைகளுக்கூடாகவே எரியூட்டும் இடத்துக்குக் கொண்டு செல்ல வேண்டிய நிலை காணப்படுகிறது. இது தொடர்பாக மக்களிடம் கேட்ட போது பிரதேச சபையினரைக் குறை சொல்கிறார்கள்.

மயானம் மக்களின் பாவனைக்குரியது. அதனைத் துப்புரவாக வைத்திருந்தால் அதற்குத் தேவையான அபிவிருத்தி வேலைகளை பிரதேச சபை செய்யும். பற்றைக் காட்டைத் துப்புரவு செய்ய பிரதேச சபையை எதிர்பார்ப்பது பிரதேச மக்களின் கையாலாகாத்தனம் என்றே கூறவேண்டுமென பிரதேச சபையினர் தெரிவித்தனர். (த-9)

## பன்னங்கண்டி வீதியை புனரமைக்கக் கோரிக்கை

கிளிநொச்சி, மார்ச் 10

கிளிநொச்சி முரசுமோட்டை 4 ஆம் கட்டைச் சந்தியில் இருந்து சேற்றுக்கண்டி, பன்னங்கண்டி ஊடாக செல்லும் பிரதான வீதி புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுவதனால் இதனூடாக பயணிக்கும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி - பரந்தன்- முல்லைத்தீவு ஏ-35 வீதியில் முரசுமோட்டை 4 ஆம் கட்டைச் சந்தியில் இருந்து சேற்றுக்கண்டி, பன்னங்கண்டி, முரசுமோட்டை, ஐயன்கோயிலடி போன்ற கிராமங்களுக்கு செல்லும் நீர்ப்பாசனத் திணைகளத்துக்குச் சொந்தமான 4 ஆம் கட்டை பன்னங்கண்டி வீதி இதுவரை புனரமைக்கப்படவில்லை. இதனால் அது குன்றும் குழியுமாகக் காணப்படுவதுடன் குறித்த வீதிக்கு அருகே சமாந்தரமாகச் செல்லும் நீர்ப்பாசனக்கால்வாய் மற்றும் வீதிக்கு குறுக்காகப் போடப்பட்டுள்ள பாலம் என்பனவும் சேதமடைந்துள்ளன.

இதனால் இவ்வீதியைப் பயன்படுத்தும் பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் எனப் பலரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறித்த வீதியை புனரமைத்து தமது போக்குவரத்துக்கு ஏற்ற வழிவகைகளை ஏற்படுத்தித் தருமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-6)

## வள்ளிபுனத்தில் குடியமர்ந்த 25 குடும்பங்களுக்கு உதவி

முல்லைத்தீவு, மார்ச் 10

முல்லைத்தீவு வள்ளிபுனம் கிராமத்தில் மீள்குடியேறியுள்ள 25 குடும்பங்களுக்கு தலா 35 ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் கிராம அலுவலர் பிரிவில் கடந்த 2011 ஆம் ஆண்டு 450 வரையான குடும்பங்கள் மீளக் குடியேறிய நிலையில் குறிப்பிட்ட சில குடும்பங்கள் தவிர, ஏனைய குடும்பங்களுக்கு பல்வேறு நிறுவனங்களினூடாக வாழ்வாதார உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அந்தப் பகுதியில் காலம் தாழ்த்தி மீள்குடியேறிய 30 வரையான குடும்பங்களுக்கு எதுவித வாழ்வாதார உதவிகளும் கிடைக்கவில்லை என்றும், இதனால் குறித்த குடும்பங்கள் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. இதனையடுத்துக் குறித்த கிராமத்துக்குச் சென்ற அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று உடனடியாக தேவைப் பகுப்பாய்வுகளை மேற்கொண்டது.

இதனடிப்படையில் 25 குடும்பங்களுக்கு 'கெயார்' நிறுவனம் தலா 35 ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகளை வழங்கியுள்ளது. இந்த நிகழ்வில் கிராம அலுவலர் சிறிரங்கநாதன், 'கெயார்' திட்ட இணைப்பாளர் ஜெயராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர் என கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர் ஐ.மாதவராஜா தெரிவித்தார். (த-6)

## பளை முன்பள்ளிகளுக்கு படையினர் உதவி

பளை, மார்ச் 10

பளைப் பிரதேசத்தில் இயங்கும் முன்பள்ளிகளுக்குப் பிரதேச படைப்பிரிவினர் உதவி வருகின்றனர்.

பிரதேசத்தில் இயங்கும் 40 முன்பள்ளிகளைப் பொறுப்பேற்று அங்கு கடமையாற்றும் ஆசிரியைகளுக்கு மாதாந்த வேதனத்தை படையினர் வழங்கி வருகின்றனர்.

அத்துடன் அந்தந்தப் பிரிவில் இயங்கும் முன்பள்ளி ஆசிரியைகளின் மூலம் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான மாணவர்களுக்கு மாலை நேர வகுப்புகளையும் நடத்தி வருகின்றனர்.

சில முன்பள்ளிகளில் மாணவர்களுக்கான சத்துணவு சமைப்பதற்கான சமையலறைக் கொட்டில்களையும் படையினர் அமைத்து வருவதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

பிரதேச முன்பள்ளிகளின் மாணவர்களுக்கு பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையினர் சத்துணவுகளை மாதாந்தம் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (த-9)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

**கார் விற்பனைக்கு**

12ஸ்ரீ TOYATO CORRLLA
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 529 6698
(34352)(5-6-7)

**தேவை**

சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள், கிளிநொச்சியில் பணியாற்றுவதற்கு சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் தேவை. பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

தகைமை: O/L

சம்பளம் மாதம் - 45,000/ ரூபா விவரக் கோவை, பாஸ்போட் அளவு போட்டோ, தேசிய அடையாள அட்டை போட்டோ பிரதி, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், போட்டோ பிரதி என்பனவற்றுடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: த.சுதர்சன்
(விற்பனை முகாமையாளர்)
இல.86, உதயநகர் மேற்கு,
கிளிநொச்சி.
T.P- 0776177383, 0778803006
(24289)(6.7.11)

### தங்கையின் காதலை கண்டித்த

# அண்ணனுக்கு கொட்டன் அடி; மற்றொருவருக்கு வெடித்தது காது

தென்மராட்சி, மார்ச் 10

தங்கையின் காதலை கண்டித்த அண்ணனுக்கு கொட்டன் அடி. உதவிக்குச் சென்றவருக்கு வெடித்தது காது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மட்டுவில் சந்திரபுரம் பகுதியில் இடம்பெற்றது.

சம்பவம் குறித்து தெரிய வருவதாவது:

தங்கையின் காதலை விரும்பாத அண்ணன் தங்கையை கண்டித்ததுடன் தண்டித்தும் உள்ளார். இதனால் தங்கைக்கு கையில் பாதிப்பு ஏற்பட்டது. இதனைக் கேள்வியுற்ற தங்கையின் காதலன் அண்ணனை தேடி வந்து அண்ணனைத் தாக்கினார்.

தாக்குதலில் அவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. அவரைத் தாக்க விடாமல் தடுக்கச் சென்ற அயலவருக்கும் அடி விழுந்தது. கொட்டன் அடியில் காது வெடித்தது. காயமுற்ற இதே இடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவகுமார் (வயது 40), ரவிகரன் ஜெயந்தினி (வயது 35), உதவிக்குச் சென்ற கிருஷ்ணன் பகீரதன் (வயது 48) ஆகியோர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பகீரதன் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஒ-9)

**வீடு வாடகைக்குண்டு**

யாழ்ப்பாணம்,பலாலி வீதி, கந்தர்மடத்தில் வாகனத்தரிப்பிட வசதியுடன்கூடிய,அலுவலக, களஞ்சியத்துக்கும் உகந்ததான வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:077 755 8340
(34348)(5 6 7)

### மாதாந்த உதவிப்பணம் தபாலகங்களுக்கு

நவாலி,மார்ச் 10

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களது மார்ச் மாதத்துக்கான கொடுப்பனவுகள் பிரதேச செயலகத்தால் தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன் தத்தமது தபாலகங்களுக்கு சென்று பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு சமூக சேவை உத்தியோகத்தர் வி.சிவ ராசா கூறியுள்ளார்.(ம-100)

**காணி விற்பனைக்கு**

திருநெல்வேலியில்
கிணறு சுற்று
மதிலுடன் கூடிய
4 பரப்பு காணி
விற்பனைக்கு
உண்டு
(சி/6872)(6.7)
0773 170 038
0773 619 648

# VACANCY

2000 ஆம் ஆண்டு குத்தகைச் சட்ட இல.56 இன் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் அனுமதி வழங்கப்பட்ட விசேட நிதிக் குத்தகை நிறுவனமாகிய லிஸ்வின் இன்வெஸ்ட்மன்ஸ் லிமிட்டெட் நிதி நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் இயங்கும் கிளையில்

**★ Manager & Pawning Assistant.**

ஆகிய பதவி வெற்றிடங்கள் உண்டு.

## Post of Manager

**தகைமைகள்:**

- ★ தொடர்பாடல் திறமையும் சுறுசுறுப்பும் துரித தீர்மானம் எடுக்கக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
- ★ அலுவலக தொடர்பாடல் மற்றும் அலுவலக வேலைகளை ஆங்கிலத்தில் செய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
- ★ நிதியியல், வங்கியியல், லீசிங் போன்ற அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
- ★ வயது எல்லை 30-45 வரை.
(ஓய்வு பெற்ற வங்கி அலுவலர்கள் வயது கணிக்கப்படமாட்டாது.)

## Post of Pawning Assistant.

**தகைமைகள்:**

- ★ G.C.E (A/L)
- ★ நகைகள் தொடர்பான அனுபவம்.
- ★ கணக்கியல் தொடர்பான அனுபவம்.
- ★ கணினி தொடர்பான அனுபவம்.
- ★ வயது : 18-30 வரை

மேற்கூறிய தகைமையுடையோர் (07) ஏழு நாள்களுக்குள் careers@lisvin.com எனும் மின் அஞ்சல் மூலம் விண்ணப்பிக்கவும்.

**LISVIN INVESTMENTS LIMITED**
56/17, ஸ்ரான்லி வீதி (சம்பத் வங்கிக்கு அருகில்),
யாழ்ப்பாணம்.
(10) (c/6988)

# மரண அறிவித்தல்

## பொன்னையா உருத்திராங்கதன்

(மாஸ்டர்)



யாழ்ப்பாணம், நாவற்குழியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா உருத்திராங்கதன் (06.03.2013) பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-யோகம்மா (இணுவில் மேற்கு) தம்பதியரின் அன்பு மருமகனும், தேவசேனா அவர்களின் அன்புக் கணவரும், மாறன், மீரா ஆகியோரின் பாசமிகு தந்தையும், திவாகரன், கஸ்தூரி ஆகியோரின் அன்பு மாமனாரும், உஷா, சஞ்சய், கஷ்லி ஆகியோரின் பாசமிகு பேரனும், இன்பராசா, பத்மலோசினி, பாமினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், விஜயசந்திரன், சுசிலாதேவி, சுந்தரலிங்கம், சண்முகலிங்கம் (சண்யோ), சிவநேசலிங்கம், காலஞ்சென்ற இந்திரசேனா மற்றும் விஜயசேனா, அமிர்தலிங்கம் (ராசன்), பதுமசேனா ஆகியோரின் அன்பு மைத்துனரும், மண்டலநாயகி, சந்திராதேவி, பாமதி, கனகநாயகம், சுந்தரலிங்கம் (அப்பன்), லோகேஸ்வரி (பவா) ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.03.2013) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் பிரான்ஸில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'துரை மலர்ப் பொய்கை'
இணுவில் மேற்கு.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
(சி/6863)(10,6.7)

## UNIVERSITY OF JAFFNA
## INVITATION FOR BIDS

**Completion of Construction of Boys' Hostel at Ariviyal Nagar Complex, Kilinochchi, Faculty of Agriculture.**

1. The Chairman, Procurement Committee of University of Jaffna, now invites sealed bids from eligible and qualified bidders for "Completion of Construction of Boys' Hostel" as described below and at an estimated to cost of Rupees Forty Two Million (Rs 42,000,000/=) with VAT.

   This shall be a measure and pay contract and the construction period is Two Hundred and Eighty (280) Calendar Days.

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction for grade C5 or above with the Institute for Construction Training and Development (ICTAD).
4. Interested bidders may obtain further information from the **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna, Thirunelvely, Jafna.** and view the Bidding Documents at the same address on any working day from **9:00 hrs to 16:00 hrs.**
   Contact numbers are: Phone.021 2219201, Facsimile: 021 2219201.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna, Thirunelvely, Jafna.** from the 11th March, 2013 until 28th March, 2013 from 9:00 hrs to 15:00 hrs and upon payment of a non-refundable fee of **Rupees Five thousand (Rs.5,000/-).**
6. Sealed Bids shall be delivered or sent by registered post to the The Chairman, Procurement Committee of University of Jaffna, Thirunelvely, Jafna P.O Box 57, to reach on or before 14.00 hrs on the 1st April, 2013. Bids will be opened soon after closing, at 14.15 hrs on the 1st April, 2013 at the same venue in the presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid at least for a period of **91 Days** from the date fixed for receiving of Bids or any extended date.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in the Section 09 in the Bidding document.
   - In favour of "*Vice Chancellor, Chairman, Procurement Committee, University of Jaffna.*"
   - For a amount of **Rs. 500,000/=**
   - Issued by one of the agencies indicated in the clause 16.0 of the Schedule.9
9. Pre bid meeting will be held at Ariviyal Nagar Complex, Kilinochchi, at **10.30 hrs on 22nd March, 2013.**

**Vice -Chancellor**
**Chairman, Procurement Committee,**
**University of Jaffna, Thirunelvely,Jaffna.**
**09.03.2013**

(C/6990)(6.7.10)

## சிற்பவேலைகளில் புதிய அத்தியாயம்

இலங்கையில் முதன்முதலாக அறிமுகப்படுத்தியுள்ள ROBO-X5 அதிநவீன டிஜிற்றல் இயந்திரத்தின் மூலம் முதிரை,வேம்பு,தேக்கு போன்ற வைரமான மரங்களில் யாழ் மக்களின் மனங்கவர்ந்த அன்னம், தீபநாயகி,மயில் போன்ற சிற்பங்களை மிகத்துல்லியமான வடிவமைப்புடன் மூன்று நாள்களில் உங்கள் கனவு இல்லங்களின் கதவுகள்,நிலைகள்,இல்லங்களின் பெயர்ப்பலகைகள் போன்றனவற்றை ஆயிரத்திற்க்கும் மேற்பட்ட புத்தம் புதிய டிசைன்களில் பெற்றுக்கொள்ள

**மூர்த்தி டிஜிற்றல் சிற்பாலயம்**

62/20,ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.0212221358




(சி/6992)(6.7)

# மரண அறிவித்தல்

## செல்லையா சுப்பிரமணியம்

(நீதிமன்ற ஊழியர்-ஊர்காவற்துறை, உரிமையாளர்-ராகன்ஜா பந்தல் சேவை)



வேலணை மேற்கு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சுப்பிரமணியம் கடந்த (08.03.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கார்த்திகேசு மற்றும் ஆசைப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், புஸ்பராணியின் (M.O.H Office, வேலணை ), அன்புக் கணவரும், கனகமணி, அரசரெத்தினம், இராஜதுரை, குணரத்தினம், சீவரத் தினம், இராசாத்தி அம்மா, பூமணி, சரஸ்வதி, நேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், கோமதி (கனடா), தனபதி (கனடா), தேவதாசன் (பிரான்ஸ்), மதிவதனா (கொழும்பு), சத்தியபாமா, ஞானதாசன் (பிரான்ஸ்), சிறிபாமா(ஆசிரியர், ஸ்ரான்லிக்கல்லூரி)ஆகியோரின் அன்பு மைத்துனரும், தர்மினி (நீதிமன்றம், பருத்தித்துறை-முகாமைத்துவ உதவியாளர்), சியாமினி, சுகன்ஜா, தனுருத்திரி, ராகன்ஜா ஆகியோரின் அன்புத்தந்தையும், சதீஸ் (PHI,R.DHS Office,Jaffna), திலீபன் (கட்டார்) ஆகியோரின் மாமனாரும், அபிநாத்தின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(10.03.2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப.10.00 மணியளவில் வேலணை தாளயம்பதி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வேலணை மேற்கு, 6ஆம் வட்டாரம். (34347)(6.7.11) குடும்பத்தினர்.

**காணி விற்பனைக்கு**

மல்லாகம் கே.கே.எஸ்.வீதியில் (சோடாக்கம்பனி ஒழுங்கை) 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777532994

**வீடு, காணி விற்பனைக்கு**

தெஹிவளையில் 2 nd Lane இல் கட்டுமானப் பணிகள் நடந்து கொண்டிருக்கும் தொடர்மாடியில் 2B/R மற்றும் 3B/R வீடுகள் விற்பனைக்குண்டு. (c/6884)(6.7.11)
தொடர்பு: 0777368764

**யாழ் நகரில் வீடு விற்பனைக்கு**

யாழ். நகர் கடைத்தெருவுக்கு அண்மித்ததாகவும், சுமார் மூன்று பரப்பில் அமைந்ததும் ஆகிய மாடி வீடு விற்பனைக்கு உண்டு. (c/6886)(6.7.11)
தொடர்பு: 0772279219

**வீடு காணி விற்பனைக்கு**

யாழ். திருநெல்வேலி கிழக்கு, ஆடியபாதம் வீதி, கேணியடி ஒழுங்கையில் (25m அண்மையில்) 6 பரப்பும் 11 குளியும் காணி வீட்டுடனும் இரண்டு கிணறுகளுடனும் விற்பனைக்கு உண்டு இரு பகுதிகளாகவும் வாங்கலாம்
தொ.பே :0773 740 715 RG ads

லண்டன் / கனடா / அமெரிக்கா / சுயிஸ் / ஜெர்மன் / பிரான்ஸ் / இத்தாலி / டென்மார்க் / அவுஸ்திரேலியா / நியூஸ்லாந்து ஆகிய நாடுகளுக்கு செல்ல இருப்பவர்களுக்கு

**வங்கியில் பணவைப்பு**

அரச வங்கியில் 12, 6, 3 மாதங்களுக்கான முன் பின் வங்கியில் பணவைப்பு
Saving Book - FD- Statement
விசா பெற்றுக் கொள்வதற்கு தேவையான சகல உதவிகளும் எம்பசி வேலைகள் செய்து தரப்படும்.
077 4789289
077 9122334
No. 52 Davidson Road, Colombo 04.
நேரத்தை முன்கூட்டியே பதிவு செய்துவிட்டு வரவும்.
FLEX Graphic

**பணிப்பெண் தேவை**

ஒரு சிறிய குடும்பத்தில் சமையல் உட்பட சகல வீட்டு வேலைகளையும் செய்யும் திறனும் நற்பண்பும் வாய்ந்த 37 வயதுக்கு உட்பட்ட ஒரு பணிப்பெண் உடன் பணிக்குத் தேவை. பணிக்கு வருபவர் எந்தவித பொறுப்பும் அற்றவராக இருக்க வேண்டும். பணிக்கு வர விரும்புகின்ற பணிப்பெண் மட்டுமே தொலைபேசி அழைப்பை ஏற்படுத்த வேண்டும்.
தொடர்பு: 0775167472

**STUDY IN ABROAD**

UK, USA & NEW ZEALAND
- O/L OR AL
- with or without IELTS
- part time 20hrs
- Tuition Fee After Visa

AUS - O/L , IELTS 5.5

Switzerland, Germany, Latvia, Malta, Canada & Netherland
Australian based Courses in Sri Lanka from - May
CHARLTON BROWN
- Early Childhood
- Child Care
- Age Care

Register Now...! No age limit


MALAYSIA transfer programmes for USA / FINLAND/ UK/CANADA/ NZ/AUS

HOTLINES 0770 131 959 0770 131 960
IELTS , TOEFL Preparation Classes
Reliance 37th Lane, Wellawatta, Colombo 06. info.reliance.edu@gmail.com

**REALMATRIMONY யின் மணப்பந்தல்**

- 1985, பூரம் Accountant,Srilanka மணமகளுக்கு மணமகன் தேவை,
- 1994,அத்தம் Srilanka, மணமகளுக்கு மணமகன் தேவை,
- 1978, ரோகினி, Programme Assistant, மணமகளுக்கு மணமகன் தேவை.
- 1989,உத்தரம் 2, Teacher,Srilanka, மணமகளுக்கு மணமகன் தேவை,
- 1983, உத்திரட்டாதி, Draughtsman,Srilanka மணமகளுக்கு மணமகன் தேவை,
- 1975, அனுஷம்,Dental Surgent,Srilanka மணமகளுக்கு மணமகன் தேவை
- 1972, அஸ்வினி, Cleark,Srilanka மணமகளுக்கு மணமகன் தேவை
- 1986, அவிட்டம் 1, Doctor Srilanka மணமகளுக்கு மணமகன் தேவை
- 1979, கேட்டை, Teacher,Srilanka மணமகனுக்கு மணமகள் தேவை
- 1970, அவிட்டம் 2, Bussiness,France Citizen மணமகனுக்கு மணமகள் தேவை
- 1977, ஆயிலியம், Programme Officer, Srilanka மணமகனுக்கு மணமகள் தேவை
- 1983, திருவாதிரை, Doctor,Australia Citizen மணமகனுக்கு மணமகள் தேவை

Real Matrimony(Pvt)Ltd
இல.05, வைமன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.
Tel : 021 4923 739 / 864 / 738
WWW.realmatrimony.com ,E-Mail : support@realmatrimony.com




**பற்களின் கூர்உணர்ச்சி என்பது நீங்கள் எண்ணுவதை விடவும் பாரதூரமான ஒன்றாக அமையலாம் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்களா?**

சூடான, குளிரான, புளிப்பான அல்லது இனிப்பான, ஏதேனும் ஒன்றை நீங்கள் உள்ளெடுக்கும் சமயத்தில் உங்களுடைய பற்களில் சிறிய நேரத்திற்கு ஏற்படுகின்ற கூரிய வலியே பற்களின் கூர் உணர்ச்சி எனப்படுகின்றது. பற்களில் கூர்உணர்ச்சி உள்ள போது கூரிய வலி ஏற்படுவதும், பின்னர் அற்றுப்போவதுமான நிலைமை காணப்படுகின்றது. இதற்கு ஆரம்பத்திலேயே உரிய சிகிச்சையை மேற்கொள்ளாத பட்சத்தில் நிலைமை மோசமாக மாறலாம்.

**உரிய காலத்தில் சிகிச்சையை மேற்கொள்ளாது அலட்சியமாக இருந்து உங்களுடைய வாழ்வில் மோசமான பாதிப்பிற்கு முகங்கொடுக்க வேண்டாம்**

பற்களின் கூர்உணர்ச்சிக்கு உரிய சிகிச்சையை மேற்கொள்வது மிக முக்கியமானது. உங்களுடைய பல்வைத்தியரிடம் இது தொடர்பான மேலதிக விபரங்களையும், உரிய ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

ஆரோக்கியத்திற்கான இச்செய்தியை உங்களுக்கு வழங்குவது இலங்கை பல் மருத்துவர்கள் சங்கம்

வர்த்தக சமூக நலன்புரி முன்னெடுப்பு - கிளக்ஸோஸ்மித்கிளைன்

SRI LANKA DENTAL ASSOCIATION

GlaxoSmithKline

GREY

# சிவ விரதங்களுள் தலையாயது சிவராத்திரி

■ பிரணாரூபன்

சிவனுக்குரிய விரத நாள்களில் மிகமுக்கியமானது மாசி மாதத்தில் வரும் மகா சிவராத்திரி விரதமாகும். கிருஷ்ண பக்க 14 ஆம் நாளில் வரும் மகா சிவராத்திரிக்கு அடுத்த நாள் அமாவாசை விரதம் அமைகிறது. திங்கட்கிழமையன்று அமாவாசை விரதநாளும் அமைவதால் அது யோக சிவராத்திரி என்ற முக்கியத்துவத்துக்கும் உரியதாகிறது.



### அற வாழ்க்கை

இறைவன் இந்தப் பிரபஞ்சத்தை படைத்து ஒரு நியதிப்படி ஒழுங்கமைத்து காத்து நடத்தி வருகின்றார். அந்த நியதிக்கு அமைந்து கோள்களும், நட்சத்திரங்களும் செயற்படுவதாலேயே பிரபஞ்சம் இயங்கி வருகின்றது. அதே வகையில் இந்தப் பூமியில் மனிதர்கள் வாழ்வதற்கு நியதிகளும், ஒழுங்கு முறைகளும் இருக்கின்றன. அந்த நியதியே தமிழில் அறம் என்றும், வடமொழியில் தர்மம் என்றும் கூறப்படும் நியதிக்கு மாறாக நடக்கும் போது சமூக குழப்பங்களும், சீரழிவுகளும் ஏற்படுகின்றன. சமூகத்தில் எமது பங்களிப்பு வகிக்கும் பாத்திரத்துக்கு ஏற்ப, அறங்கள் வெவ்வேறாக வகுக்கப்பட்டுள்ளன.

ஆண்களுக்கான அறம், பெண்களுக்கான அறம், பெற்றோர்-பிள்ளைகள் அறம், செய்யும் தொழில்களுக்கு அமைந்த அறம் என அவை வகைப்படுத்தப்பட்டுள்ளன. எமக்கென்று வகுக்கப்பட்டுள்ள அறத்துக்கமைந்து நாம் வாழும் போது எமது உலகியல் வாழ்வு அமைதியும் சந்தோசம் உடையதாகவும் அமைவதுடன், இறைவனது அருளை ஈட்டுவதும் சாத்தியமாகும்.

### யோக வாழ்வு

யோகம் என்றால் இணைதல் என்று அர்த்தம். இறைவனுடன் இணைதலுக்கான வாழ்க்கை முறையே யோக வாழ்வு எனப்படும். யோக வாழ்வில் உயர்ந்த நிலையை அடைந்தவரை யோகி என்றழைப்பர். யோகி தனது வாழ்வை சமநிலையில் நோக்குவார். இன்பம், துன்பம், புகழ்-இகழ் போன்ற வாழ்வின் இருமை நிலைகளில் மனம் குழம்பாமல் சமநிலையில் வாழ்வைக் கொண்டு செல்வார். பதட்டப்படாத, உணர்ச்சி வசப்படாத மனநிலையை யோகி கொண்டிருப்பார். சாதாரண மனிதர்கள் ஒவ்வொருவரும் தத்தமது தன்மைக்கேற்ப வெவ்வேறு வகைப்பட்ட யோக முறைகளைக் கைக்கொண்டு பக்குவப்படலாம். பக்தியோகம், கர்ம யோகம், ஞான யோகம் என அடிப்படையில் மூன்று யோக முறைகள் உண்டு. எமக்குப் பொருத்தமான யோக முறையைக் கைக்கொண்டு இறைவனுடன் இணைதலுக்கான முயற்சியை மேற்கொள்ளலாம்.

### இறை வாழ்க்கை

உலகத்தில் இறைவனை முதன்மைப்படுத்தி வாழும் வாழ்வே இறை வாழ்க்கை எனப்படும். உலகத்து விடயங்களில் இறை தன்மையே நிரந்தரமானது, சர்வ வல்லமை, சர்வ வியாபகமானது. இறைவனோடு கூடிய உறவே நிரந்தரமானது. ஏனைய உறவுகள் மாறும் தன்மையுடையன. தற்காலிகமானவை. கல்வி, பணம், பொருள் அனைத்தும் இறைக்கு அடுத்தபடியே. ஆகவே இறை வாழ்க்கை வாழ்பவரே அமைதியான, மனத்திருப்தியான வாழ்வை வாழ்பவராவார்.

எமது பிறப்பின் நோக்கம் இறைவனை அடைதல் ஆகும். அதை நோக்கிய வாழ்வையே நாம் அமைத்துக் கொள்ள வேண்டும். ஆனால் நாம் இறைவனை அடைய முனைவதை விடுத்து உலகியல் முன்னேற்றங்களான தொழில் அந்தஸ்து, சொத்துக்கள் போன்றவற்றில் உயர்ந்து விடவே முயலுகின்றோம். இது தவறு. இந்த முறையானது குளிக்க முயன்று சேறு பூசிக்கொள்வதற்கு ஒப்பாகும். நாம் உலகில் பிறவி எடுத்தது எமது வினைகளை அகற்றி இறைவனை நெருங்கவே. அதற்கேற்ற வகையில் அறவாழ்வு, யோக வாழ்வு என்பவற்றைக் கைக் கொள்வதனூடான இறை வாழ்வை அனுசரித்து பிறவியின் நோக்கத்தை நிறைவு செய்வோம்.

(இன்று 10.03.2013 மகா சிவராத்திரி தினமாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் இங்கு பிரசுரமாகிறது)

### சிவ வாழ்வு

சிவனை முழுமுதல் கடவுளாக ஏற்று அதற்கேற்ற வாழ்வு நெறியை கடைப்பிடித்து வாழும் இறை வாழ்வை சிவ வாழ்வு என்பர். இல்லத்தில் சிவன், சிவன் குடும்பம், சிவலிங்கம் என்பவற்றை வைத்து வணங்கிவரல் வேண்டும். மேலும் முறையான வயதில் சிவதீட்சை பெற்று தினசரி கடைப்பிடிக்க வேண்டிய நியமங்களை கடைப்பிடித்து வர வேண்டும். திருநீறு, உருத்திராட்சம் எனும் சிவசின்னங்களை அணிந்து நமசிவாய எனும் பஞ்சாட்சர மந்திரத்தை தினசரி பகல் இரவாக ஓதி வர வேண்டும். நாளின் எந்த நேரமும் சிவ சிந்தனையில் திளைத்திருத்தல் வேண்டும். காலை, மாலை சிவவழிபாட்டுடன் சிவத் தியானத்திலும் ஈடுபட்டு வர வேண்டும். வெள்ளி தோறும் ஆலய வழிபாட்டுடன் சிவனுக்குரிய விரதங்களை அனுஷ்டித்து வரவேண்டும். எமது வாழ்வை சிவனுக்கு அர்ப்பணித்து எல்லாம் சிவன் செயல் என்ற நிலையில் வாழ்தல் வேண்டும். இவ்வாறு சிவ வாழ்வு வாழ்பவர்கள் சைவ சமயிகளாக அடையாளப் படுத்தப்படுகின்றனர்.

### சிவராத்திரிகள்

ஒவ்வொரு மாதத்தின் அமாவாசை நாளும் சிவராத்திரி ஆகும். மாசிமாத அமாவாசை தினம் மகாசிவராத்திரி ஆகும். அமாவாசை தினத்தன்று சந்திரனின் ஈர்ப்பு விசை குறைவு. அதனால் மனம் பொதுவாகவே அமைதியடைந்திருக்கும். அமைதியடைந்த மனநிலை தியானம் செய்வதற்கு அனுகூலமானதாகும். எனவே ஒவ்வொரு அமாவாசை தினமும் விழித்திருந்து தியானத்தில் ஈடுபடுவது நன்று. விழித்திருந்து தியானம் செய்வதற்கு உணவைக் குறைத்தல் அனுகூலமானது. அதற்கமையவே அன்றைய தினம் உபவாசம் அனுஷ்டிக்க வழிகாட்டப்பட்டுள்ளது. உபவாசம் என்றால் வெறுமனே உணவைத் துறத்தல் மட்டுமென்பதல்ல. உபவாசம் என்பது இறைவனுக்கு அருகில் வாசம் செய்வது என்றும் பொருள்படும். எனவே சிவராத்திரிகள் தோறும் ஆகாரத்தைக் குறைத்து சிவ சிந்தனையுடன் பொழுதைக் கழிக்க வேண்டும். முடியுமானவரையில் சிவ தியானத்தில் ஈடுபடலாம். அத்துடன் சிவபெருமானின் மகிமைகளை விளக்கும் நூல்களை வாசித்தும், ஒலி, ஒளி பதிவுகளை பார்த்தும் கேட்டும் சிவசிந்தனையில் லயித்திருத்தல் ஆன்ம ஈடேற்றத்துக்கு உதவும். ★

# சிவராத்திரி தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 10

ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் காரைநகர் சிவன் ஆலயத்தில் சிவராத்திரி விழா இன்று நடைபெறவுள்ளது.

ஆலயத்தில் சிவராத்திரி தினத்தன்று பகல் திருவாசகம் முற்றோதல் இடம் பெறும். இரவு சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானுக்கு நான்கு சாமங்களும் விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெறும்.

அதேவேளை சிவராத்திரியை முன்னிட்டு மணிவாசகர் சபையால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசு வழங்கும் நிகழ்வும் இடம் பெறும். மறுநாள் திங்கட் கிழமை காலை துர்வாச சாகர சமுத்திர தீர்த்தம் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

★ ★ ★

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமைபொலிகண்டி ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலயத்தில் காலை 9மணிக்கு சிவாச்சாரியர்களால் சமய தீட்ஷை வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது என ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர்.

★ ★ ★

வடமராட்சி, மார்ச் 10

பருத்தித்துறை, புலோலி பசுபதீஸ்வரர் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் சிவராத்திரி விழாவில், இரவு 7மணிக்கு ''பூஜ்ஜியம்'' என்னும் தலைப் பில் விசேட சிறப்புச் சொற் பொழிவு இடம்பெறும். இச் சொற்பொழிவை சைவப் புலவர் பொன். சுகந்தன் நிகழ்த்துவார். (3-8)

★ ★ ★

வடமராட்சி, மார்ச் 10

பருத்தித்துறை ஓடக்கரை மாடன் ஆலயத்தின் சிவராத் திரி விழா நிகழ்வுகள் இன்று இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளன.

நிகழ்வில் இளைஞர்கள் மற்றும் சிறுவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறும். (3-8)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ்ப்பாணம் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் சிவராத்திரி விழா நிகழ்வு நடைபெறவுள்ளது. இன்று மாலை 5.55 இற்கு ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் பஜனை, வில்வ அர்ச்சனை, கோளறு பதிகம், அபிஷேக ஆராதனைகள் என்பனவும் இடம் பெறும்.

★ ★ ★

வடமராட்சி, மார்ச் 10

பருத்தித்துறை பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தின் மகா சிவராத்திரி விழா இன்று நடைபெறவுள்ளது. நிகழ்வில் நான்கு சாமப் பூசைகளும், சொற்பொழிவுகள், பஜனை, விசேட அபிஷேக ஆராதனைகளும் இடம்பெறும்.

★ ★ ★

பளை, மார்ச் 10

இயக்கச்சி மல்வில் கிருஷ்ணர் ஆலயத்தில் மகா சிவராத்திரி விழா இன்று இரவு நடைபெறவுள்ளது.

இரவு நான்கு சாமப் பூசைகளுடன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் ஆசிரியர் ஜெகநாதனின் சமயச் சொற்பொழிவும் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் சமய சமூகப் பணிகளில் ஈடுபட்டுவரும் இருவர் கௌரவிக்கப்படவுள்ளனர். ஓய்வுநிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப. அரியரத்தினம், ஓய்வுநிலைக் கிராம அலுவலர் வினாசித்தம்பி ஆகியோரே இவ்விதம் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அத்துடன் மகா சிவராத்திரியையொட்டி அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (3-9)

★ ★ ★

வடமராட்சி, மார்ச் 10

சிவராத்திரியை முன்னிட்டு வடமராட்சி நவிண்டில் இளைஞர்கள் நடத்தும் மாபெரும் நாடக விழாவும் பாட்டுப்போட்டியும் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வு நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இன்று இரவு 7 மணிக்கு நடைபெறும். ஆரம்ப நிகழ்வாக பாட்டுப் போட்டியும் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (3-78)

★ ★ ★

இடைக்காடு காசி விஸ்வநாதர் ஆலயத்தில் மகா சிவராத்திரி விழா நடைபெறவுள்ளது.

நான்கு ஜாமமும் அபிஷேகமும் விஷேட பூசைகளும் நடைபெறும்.

நள்ளிரவு 12 மணிக்கு லிங்கோற்பவருக்கு விஷேட அபிஷேகம் பூசை, பஞ்சமுக வில்வ அர்ச்சனை ஆகியன நடைபெறவுள்ளது. 12.30 மணிக்கு சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசனின் சிறப்பு சொற்பொழிவும் இடம்பெறும்.

★ ★ ★

கற்சிலைமடு ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் மகா சிவராத்திரி பூசை நடைபெறவுள்ளது.

விசேட பூசை அபிசேகங்களுடன் நான்கு சாமப் பூசைகள் வெகு சிறப்பாக இடம்பெறும்.

★ ★ ★

வடமராட்சி, மார்ச் 10

பண்டத்தரிப்பு, பிரான் பற்று அருள்மிகு முருகமூர்த்தி ஆலயத்தில் இன்று நடைபெறும் மகா சிவராத்திரி விழாவில் இரவு 8 மணிக்கு 'அன்பே சிவம் என்பர் அந்த அன்பு இன்றைய சமூகத்தில் அதிகரிக்கின்றதா? அல்லது அருகி வருகின்றதா? என்ற தலைப்பில் சிறப்புப் பட்டிமன்றம் நடைபெறவுள்ளது.

சொல்வேந்தர் பொன். சுகந்தன் தலைமையில் நடைபெறும் இப்பட்டிமன்றத்தில் யாழ். மாவட்ட பட்டிமன்றக் குழுவினர் பங்குபற்றுவார்கள். (3-8)

★ ★ ★

தென்மராட்சி, மார்ச் 10

சாவகச்சேரி சங்கத்தானை இத்தியடி விநாயகர் ஆலயத்தில் மகா சிவராத்திரி உற்சவம் நடைபெறவுள்ளது.

இரவு நான்கு சாமப் பூசையுடன் ஆலய இந்து இளைஞர் மன்றம், அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் கலை நிகழ்வுகளும் மாணவர்களுக்கிடையிலான சமய அறிவுப் போட்டியும் நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.(3-9)

★ ★ ★

ஆவரங்கால் நடராஜ இராமலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இன்று சிவராத்திரி வழிபாடுகள் சிறப்பாக நடைபெறவுள்ளது. இரவு நான்கு ஜாமமும் விசேட அபிஷேகம், ஆராதனைகள் நடைபெறும். இரவு 8 மணிக்கு சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசன் சிவராத்திரி மகிமை பற்றி சொற்பொழிவாற்றவுள்ளார். தொடர்ந்து மாணவர்களுக்குரிய பரிசளிப்பு விழா நடைபெறும். அதனைத் தொடர்ந்து சிறப்பு பட்டிமன்றமும் நடைபெறவுள்ளது.

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 10

உரும்பிராய் கிழக்கு கண்ணகை என வழங்கும் கண்ணகா பரமேஸ்வரி அம்பாள் ஆலயத்தின், மகா சிவராத்திரி விழா இரவு நான்கு ஜாமப் பூசைகளுடன் நடைபெறவுள்ளது. சிவராத்திரியை முன்னிட்டு உரும்பிராய் மாணவர்களிடையே நடத்தப்பட்ட சைவ சமய அறிவுப் பரீட்சையின் பரிசளிப்பு விழா ம.நிர்ணியநாதன் சுவாமிகள் தலைமையில் நடைபெறும்.

சைவப்புலவர் செ. கந்தசத்தியதாசன் சிவ வழிபாடும் சைவர்களும் எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றவுள்ளார். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 10

மகா சிவராத்திரியை முன்னிட்டு ஒன்றைக் கொடுத்து ஒன்றைப்பெறும் நிகழ்வு இன்று மாலை 4 மணிக்கு இல.211 பிறவுண் வீதியில் அமைந்துள்ள பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தில் நடைபெறவுள்ளது. (3-14)

## விபத்துக்களில் இருவர் காயம்

வீதி விபத்துக்களில் சிக்கிக் காயமடைந்த இருவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தென்மராட்சி பிரதேசத்தில் வாகன விபத்தில் சிக்கிக் காயமடைந்த யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த பசுபதி நவரத்தினம் (வயது-65) என்பவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி காயமடைந்த வரணி நாவற்காட்டைச் சேர்ந்த நாகேஸ்வரன் கமல் (வயது-23) என்பவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இதேவேளை, பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த ராதா பிரதீபன் (வயது-25) என்பவர் தாக்குதலுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-9)


## காணி விற்பனைக்கு

கோண்டாவில், பலாலி வீதிக்கு அருகில் பாமஸ் அவனியூவில் 7 ¾ பரப்பு காணி விற்பனைக்குண்டு

தொடர்புக்கு: **0776916169**

(34314) (10.6.7)

## PERSONAL CLASS

கணினி MS-Office, Java, C#, C++, VB.net, Internet and E-mail போன்ற கணினி சம்பந்தப்பட்ட பாடங்கள் யாவும் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். (ஆசிரியை) தொடர்புக்கு: **0775543134**

(34316) (10.6.7)

## வீடு விற்பனைக்கு

தொண்டமனாறு,வடக்குத் தெரு எனும் முகவரியில் அமைந்துள்ள இரு அறைகள், மண்டபம், இணைந்த சமையலறை, இணைந்த மலசலகூடம் மற்றும் வெட்டுக்கிணற்றுடன் (நன்னீர்) கூடிய புதிதாகக் கட்டப்பட்ட வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:077 706 2493 தரகர் தேவை இல்லை.

(34327)(5-6-7)

## மணமகன் தேவை

யாழ். இந்து 1980, 8 இல் செவ்வாய், கிரக பாவம் 71, உயரம்5' உள்ள பட்டதாரி மணமகளுக்கு உள்நாட்டிலோ, வெளியூரிலோ PR உள்ள தகுந்த மணமகன் தேவை.

தொடர்பு:077 589 1016

(34332)(5-6-7)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

கோண்டாவில்,யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய 30-40 வயதிற்குட்பட்ட வீட்டுப் பணிப்பெண்தேவை. சம்பளம்-13,000/= வழங்கப்படும். நேரில் வரவும். இல.181,பொற்பதி வீதி, கோண்டாவில்.

தொடர்பு:077 087 2446

(34328)(5-6-7)

## மணமகன் தேவை

*79 இல் பிறந்த, ஒன்றில் செவ்வாய் 37 பாவமுடைய, B.Com ஆசிரியருக்கு அரச நிறுவனத்தில் பணிபுரிபவரோ அல்லது சொந்ததொழில் செய்யும் மணமகன் தேவை. சீதனம் தகுதிக்கு ஏற்ப கொடுப்பனவு செய்யப்படும்.

தொடர்பு:கமலக்கண்ணன் திருமண சேவை
இல.435/3,கோயில் வீதி, நல்லூர்.
தொ.பே.: 077 607 0862

(34335)(5-6-7)


## கண்ணீர் அஞ்சலி

### குமாரசாமி வைத்திலிங்கம்



எமது அன்பு மைத்துனரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாலுகால் மடம்,
ஆனைக்கோட்டை.

நா.சிவானந்தராசா
(மைத்துனர், குட்டி மாமா)
குடும்பத்தினர்.

(34331)(6.7.11)


## கோழிப்பண்ணை வாடகைக்கு

3 ஏக்கர் தென்னங்காணி (வருமானமுள்ள) 10,000 கோழி 200ஆடு, 50 மாடு, 10 நாய் போன்றவை வளர்க்கக்கூடிய அதிவசதிகள் கொண்ட பண்ணையும் சகல வசதிகளும் கொண்ட 42 அடி வீடு என்பன அடங்கிய பண்ணை வாடகைக்கு விடப்படும்.

(26170)(5-6-7) தொடர்பு:077 230 4097

## விற்பனைக்கு

வளர்ப்புக் கலர் மீன்கள், மீன் தொட்டி, மீன் தொட்டி உபகரணங்கள், பல இனக் குருவி வகைகள், புறாக்கள், முயல், கினிப்பிக், நாய்க்குட்டி போன்ற செல்லப் பிராணிகள் மற்றும் பூமரக்கன்றுகள் என்பவற்றை மலிவான விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

* வியாபாரிகளுக்கு விசேட விலைக் கழிவு

T.P: 0759880000
0754985400
0217912997

தொடர்புகளுக்கு: மல்ரி பாம் சென்ரர்,
61, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

(34324)(10.6.7)


## மரண அறிவித்தல்

### செல்லையா யோகராசா



ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் 75/14, யாழ் வீதி, யாழ்ப்பாணத்தை (ஸ்ரீதர் தியேட்டர் பின்புறம்) வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா யோகராசா கடந்த 06.03.2013 இல் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசக்தி செல்லையா- நேசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஞானமுத்து மற்றும் நல்லம்மா தம்பதியரின் மருமகனும், யோகராணியின் அன்புக் கணவரும், செந்தில்குமரன் (சுவிஸ்),ராஜ்குமார் (ஜேர்மனி),கீதா(கனடா), சதீஸ்குமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தாட்சாயினி, குணகௌரி, குலேந்திரகுமார், நிமாளினி ஆகியோரின் மாமனும், சாரங்கன், சாம்பவி, சாரூஜன், றொபின், கெபின்,ரம்யா, அக்ஷயா, தாரணி ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி,வேலையா, சுப்பிரமணியம் (குட்டி) மற்றும் பாக்கிய நாதன், செல்லமணி, சிவலிங்கம் (இந்தியா), தங்கராணி (இந்தியா), நாகேஸ்வரி, யோகேஸ்வரி,சிவசாமி, சூரியமலர்,உதயராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி,கமலாவதி மற்றும் யோகராசா, குமாரசாமி, அன்னலிங்கம், நவரட்ணம், மகாலிங்கம், தவமலர்,கருணாவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(11.03.2013) திங்கட்கிழமை மு.ப.11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ்ப்பாணம் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 74/14,யாழ் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 077 045 8967

தகவல்:
மனைவி,பிள்ளைகள்.

(34334)(5.6.7)


Vacancy Announcement

MAG
saves lives builds futures

## Community Liaison Team Leader
### Vavuniya
[Contract Position]

**MAG** is a not-for-profit organization clearing landmines, unexploded ordnance (UXO) and other remnants of conflict for the benefit of communities worldwide.

MAG is seeking to recruit an experienced individual for the position of Community Liaison Team Leader. To be considered for this post, you need to demonstrate competency in the following criteria.

**Requirements:**
- Understanding of Community Liaison operating procedures
- Ability to collect, record and analyse information in an accurate manner.
- Ability to interpret information and compile accurate reports
- Ability to lead a small team, and able to lead by good example.
- Ability to plan activities and resources for efficiency.

**Qualifications, Skills and Knowledge**
- Previous experience, knowledge and understanding of Community Liaison principles
- Excellent communication skills and a strong ability to work effectively with people
- Good level of computer proficiency
- Previous experience in the humanitarian sector preferred.
- Excellent attention to detail.
- Drivers license is desirable.

**Aptitude:**
- Ability to establish and develop effective working relationships in a cross-cultural environment at all levels internally and externally.
- Excellent team player and representative of the organisation.
- Professional and ethical approach to work.

Salary will be based upon the MAG Salary Scale on a fixed term contract basis. Applications are to be submitted by email to info@magsrilanka.org. Please indicate, "CLTL Application" on the subject line of the email. Applications should include a cover letter that describes your relevant experience as well as your current curriculum vitae with details of two non-related referees. A full job description is available upon request by sending an email to the above email address.

**Deadline: 5:00 pm Friday 15 March 2013**

We thank all applicants, but only those short-listed will be contacted. This post is on a fixed term contract basis, with possibility of renewal subject to donor funding. MAG is an equal opportunities employer; women are highly encouraged to apply.

(26171)(10.6.7)

## உதவித் தாதியர் பயிற்சிகள்

உதவித்தாதியர் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் எம்மால் கோரப்படுகின்றன. கீழ்க் குறிப்பிட்ட தகைமை உடையவர்கள் தங்களின் விண்ணப்பத்தை **22.03.2013** ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், கேன் நிறுவனம், இல.5, சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும். விண்ணப்பப் படிவங்களை வேலை நாள்களில் முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை இந்த அலுவலகத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தகைமைகள்:
- ★ வயது 18 தொடக்கம் 35 வரை
- ★ பெண்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம்
- ★ க.பொ.த. உயர் தரத்தில் உயிரியல் பாடத்தில் குறைந்ததுசாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
- ★ க.பொ.த.சாதாரணத்தில் ஆங்கில பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

நபர் ஒருவருக்கு பயிற்சிக் காலத்தில் மாதாந்த படியாக ரூபா 3000.00 வழங்கப்படும் பயிற்சிக் காலம் 6 மாதங்கள் ஆகும். பயிற்சி ஆரம்ப திகதி 01.04.2013 ஆகும்.

டாக்டர் என்.சிவராஜா
(தலைவர்)

கேன் நிறுவனம்
இல.5, சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில், சுன்னாகம்.




## வர்ணம் பூசுவதற்கான கேள்விப்பத்திரம் கோரல்

மானிப்பாய், மருதடி விநாயகர் ஆலயத்தின் கட்டுமானங்களுக்கும், கோபுரத்திற்கும் வர்ணம் பூசுவதற்காக தங்களிடமிருந்து கூலிக்கான கேள்விப் பத்திரம் கோரப்பட்டுள்ளது. மேலதிக விவரங்களை ஆலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

(34241)(6.7.11)

## புத்தம் புதிய வீடு விற்பனைக்குண்டு

இல. 77/A, சம்பியன் வீதியில் அமைதியான சூழலில் நன்னீர் கிணற்றுடன், சுற்று மதிலுடன் கூடிய புத்தம் புதிதாக நிர்மாணிக்கப் பட்ட வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: **0772470590, 0778543106**




# நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 104

## சிறுவர்களைத் தாக்கும் கொழுக்கிப் புழு



சிறுவர்களில் குடற் புழுக்களின் தாக்கமானது பொதுவாக காணப்படுகின்ற ஒரு பிரச்சினையாகும். இது மக்களிடையே பூச்சித் தாக்கமென அழைக்கப்படுகின்றது. குடற் புழுக்களில் ஒன்றான கொழுக்கிப் புழுவின் தொற்றல் இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும் பரவலாகக் காணப்படுகின்றது.

கொழுக்கிப் புழுத் தொற்றுக்குள்ளாகிய சிறுவர்களின் சிறுகுடலில் ஒரு பெண் புழுவானது ஒரு நாளைக்கு 25,000 - 30,000 வரையிலான முட்டைகளை இடுகின்றது. இம் முட்டைகள் மலம் மூலம் மண்ணை அடைகின்றன. இவ்முட்டைகள் மண்ணில் விருத்தியடைந்து குடம்பி புழுவாகி மாறி பரவும் நிலையை அடைகின்றன.

சிறுபிள்ளைகள் இம் மண்ணிலே வெறும் காலுடன் நடக்கையில்/ கைகளால் மண் விளையாடும்போது கை, கால்களின் மென்மையான பகுதிகளூடாக துளையிட்டு உட்செல்கின்றன. பின்னர் இவை படிப்படியாக முன்னேறி குருதிக் குழாய்களை அடைந்து (நாளம்) பின்னர் படிப்படியாக வலது இதயம், சுவாசப்பை, சுவாசக்குழாய், தொண்டை என்பவற்றை கடந்து, சிறுகுடலை அடைகின்றன. இவை சிறுகுடலில் வளர்ச்சியடைந்து நிறை புழுக்களாக மாறுகின்றன.

### சிறுவர்களின் உடலில் கொழுக்கிப் புழுவின் தாக்கங்கள்.

1.புழு துளையிட்டு உட்சென்ற தோல் பகுதியில் தொடர்ச்சியான கடி ஏற்படுவதுடன் தோல் சிவந்து கொப்பளங்கள் உருவாகலாம்.

2.சுவாசப்பையினுள் செல்லும்போது சுவாசப்பையில் காணப்படும் குருதி மயிர்க் குழாய்களைச் சேதப்படுத்துவதனால் இரத்தக் கசிவு ஏற்படுதல்.

3.நிறை புழுக்கள் சிறுகுடலின் வெவ்வேறு பாகங்களில் துளையிட்டு இரத்தத்தை உறிஞ்சி உணவாக பயன்படுத்துவதாலும், துளையிட்ட இடங்களில் தொடர்ச்சியான இரத்தக் கசிவு ஏற்படுவதனாலும் குருதிச் சோகை ஏற்படுகின்றது.

### சிறுவர்களில் தெரியும் அறிகுறிகள்

1.தோல் வீக்கம்.
2.பாதங்கள், கைகளில் அரிப்பு/கடி
3.காய்ச்சல்
4.இருமல்
5.மேல் வயிற்று வலி.
6.சமிபாடின்மை
7.வாந்தி
8.சோர்வு
9.களைப்பு
10.உடல் வெளிறல்.
11.படிப்பில் மந்த நிலை.

### கொழுக்கிப் புழுத் தாக்கத்திலிருந்து தடுத்துக் கொள்ளல்

1.பாதுகாப்பான மலசல கூடங்களை பாவித்தல்.

2.குழந்தைகளின் மலக் கழிவுகளை வெற்று மண்ணில் புதைப்பதைத் தவிர்த்து அவற்றை மலசலகூடக் குழியினுள் இட்டு அகற்றல்.

3.மலங்கழித்த பின்னர் கைகளை சவர்க்காரமிட்டுக் கழுவுதல்.

4.மலங்கழிக்கச் செல்லும் போதும் வீட்டுக்கு வெளியே விளையாடச் செல்லும் போதும் பாதணிகளை அணிதல்.

5.மண்ணில் விளையாடிய பின்னரும் உணவு உண்ண முன்னரும் கைகளை நன்றாக சவர்க்காரமிட்டு கழுவுதல்.

6.கை, கால், நகங்களை ஒழுங்கு முறையாக வெட்டி பராமரித்தல்.

7.தாய்மார் உணவு தயாரிக்கும் முன் தங்கள் கைகளைச் சவர்க்காரமிட்டுக் கழுவுவதுடன், பச்சை இலைவகை, காய்கறிகளை உப்பு நீரில் நன்கு கழுவ வேண்டும்.

### சிகிச்சைமுறை

வைத்திய அறிவுறுத்தல்களின் படி பூச்சி மாத்திரையை காலம் தவறாது பாவித்தல் வேண்டும். இரண்டு வயதுக்கு உட்பட்டவர்களுக்கு ஒரு வகை மருந்தும், இரண்டு வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு வேறு மருந்தும் வழங்கப்படுகின்றது. இரண்டு வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கு பெரியவர்களின் மருந்தைக் கொடுத்தல் கூடாது.

சிறுவர்கள் பூச்சி மருந்து உட்கொள்கையில் பெரியவர்கள் உட்பட வீட்டில் உள்ள அனைவரும் ஒரே நாளில் ஒரு நேரத்தில் வயதுக்கேற்ற மருந்துகளை எடுக்க வேண்டும்.

முட்டைகள் மூலமான மீள் தொற்றுதலைத் தடுக்க உள்ளாடைகள், படுக்கை விரிப்புகள் என்பவற்றை சுடுநீரில் அவித்தல், துவைத்தல், வெயிலில் காய விடுதல் வேண்டும்.

புழு தொற்றுக்கு சந்தர்ப்பம் அதிகமுள்ள சிறுவர்களுக்கு 2-3 மாதத்துக்கு ஒருமுறை மருந்து பரிந்துரைக்கப்படுகின்றது.

குழந்தைகள் சிறுவர்களின் வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற இந்தக் கொழுக்கிப் புழுக்களை இலகுவில் சுகாதாரப் பழக்க வழக்கங்களை கடைப்பிடிப்பதன் மூலமும் பொருத்தமான முறையில் மருந்தை உள்ளெடுப்பதன் மூலமும் கட்டுப்படுத்த முடியும்.

மருத்துவர் ஹஜந்தினி குமாரகுலசிங்கம்,
நீரிழிவு சிகிச்சை நிலையம், யாழ்.போதனா வைத்தியசாலை.

உதயனின் இந்த வைத்தியமலர் யாழ். போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவால் தொகுத்து வழங்கப் படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப் பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி..., நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

## போதுமம்மா கோதுமை மா!

[] மருத்துவர் கதிரேசபிள்ளை தர்ஷனன்,
மாவட்ட பொது வைத்தியசாலை,
சிலாபம்

மண் வீட்டில் வாழ்ந்தாலும்
மகிழ்வோடு வாழ்ந்திருந்தோம்- இப்போ
முன் வீட்டில் சலரோகம்
முடக்கில் கொலஸ்ரோலரம்
பின் வீட்டில் பிறஷர், பக்கத்தில் பக்கவாதம்!
என் வீட்டில் எப்போது என்னவரும் நானறியேன்

கண்டதையும் தின்றுவிட்டுக் கதையளந்து திரிந்ததனால்
உண்டதனை உழைத்து உரமாக்க மறந்ததனால்
குண்டரென்று ஆகிக் கூனாகிக் குறையாகிக்
கிண்டலுக்கு ஆளாகும் கீழ்நிலைமை வந்ததெப்போ?

நாற்பதுகள் தாண்டியபின் நாட்டுக்குள் வந்த ஒன்று
[ch] சீப்பாக வந்து எம்மைச் சீரழித்த கோதுமை மா!
மூப்புவென்ற நம் வாழ்வின்
முதுகெலும்பை முடக்கியது
ஆப்பாக வந்து எங்கள் அடிவயிற்றைக் கலக்கியது.

வந்த புதிதினிலோ சவப்பெட்டி ஒட்டும் மா!- அது
சந்து பொந்தெல்லாம் மலிவாகக் கிடைத்ததனால்
நொந்து போய் இருந்தவர்க்கு அன்றாட உணவாச்சு
பிந்தி வந்த நாள்களெல்லாம் பிரளயமாய்ப் போயாச்சு

கரைத்து அதை ஊற்றி எடுத்தால் திடீர் தோசை
விறைப்பாகத் தட்டியதைச் சுட்டெடுத்தால் றொட்டி
தரையில் அதைப் போட்டுழக்கிப்
போறணையில் போட்டால் பாண்!
நுரை தள்ளும் வரை அடித்து
வெதுப்பினால் அதன் பேர் கேக்!

உருட்டி அதற்குள்ளே கறி வைத்தால் றோள்ஸ்
உருண்டையாய்ச் செய்து உள்ளே
கறி வைத்தால் போண்டா!
விரும்பி அதற்குள்ளே இனிப்பு வைத்தால் சூசியம்
அருந்தும் உணவிலெல்லாம் அநியாயம் செய்கின்றோம்!

கொத்தினால் பிட்டு! குழலிலிட்டால் குழல்பிட்டு
மெத்தென்று குழைத்துப் பிழிந்தவித்தால் இடியப்பம்
அத்தனையும் ஒற்றை மாவிலேயே ஆக்கி வைத்து
மொத்தமாய் விழுங்குகிறோம்,
விழுங்கி விட்டுத் தூங்குகிறோம்!

இதனால்....
தொந்தி பெருக்கும், தினம் தொப்பை பல உருவெடுக்கும்
முந்தி வரும் சலரோகம், சாப்பிட்டால் மூச்சு முட்டும்!
சந்தியிலே போகையிலே சனம் பார்த்துக் கதைகதைக்கும்
பந்தியிலே குந்திவிட்டால் காற்சட்டை கிழிந்து விடும்!

உலகத்தில் பலபேரும் உணராத மருத்துவத்தை
சுலபத்தில் சொன்னவர்கள் நம்முன்னோர்,
சொன்னவற்றில் சிலவற்றைப் பேணும்
நாம் சிந்தித்து வாழ்ந்திருந்தால், பலவற்றைத்
தவிர்த்திருப்போம்! பலமோடு வாழ்ந்திருப்போம்!



## வீடு, காணி விற்பனைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதி,வேம்படிச் சந்திக்கு அருகில் 3 பரப்பு கொண்ட வீடு,காணி விற்பனைக்குண்டு. உயர் விலை கோருவோருக்கு முன்னுரிமை.(ஞாயிறு,சனி முழுநாளும், கிழமை நாள்களில் 4 மணிக்குப் பின்)

(றி/6865)(5-6-7) தொடர்பு:077 408 6527

## பெயர் மாற்றம்

கொட்டாஞ்சேனை,கொழும்பு-13 இல் வசிக்கும் சுந்தரமூர்த்தி நிறஞ்சலா என்னும் பெயரை இன்றில் இருந்து நான் Fathima Nilufa என்று பெயர் மாற்றம் செய்துள்ளேன் என அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

(34344)(5-6-7) Fathima Nilufa

## உதவித் தொழிலாளர்கள் தேவை

சிமெந்தை மூலப் பொருளாகக் கொண்டு பாவனைப் பொருள்கள் செய்யும் நிறுவனமொன்றிற்கு உதவித் தொழிலாளர்களுக்கான வெற்றிடம் உண்டு. மேசன் உதவியாளர்களும் விண்ணப்பிக்கலாம். தங்குமிட வசதி உண்டு. விண்ணப்பிக்க வேண்டிய முகவரி.

இல. 24,ஜஸ்வெல் ரிவேஸ், மீரிவான, நுகேகொடை.

(றி/6857)(5-6-7) தொ.பே.: 077 741 4292

## தேவை

கொழும்பு,வெள்ளவத்தையில் வயோதிபர்கள், அங்கவீனர்கள், மனநோயாளர்களுக்கான காப்பகங்களில் வெற்றிடங்கள் உண்டு. அரசாங்க வைத்தியரின் மேற்பார்வையின் கீழ் தாதியர் வசதி மற்றும் சகல வசதிகளுடன் பராமரிக்கப்படுகிறது. சராசரி கட்டணங்கள் மாத்திரமே அறவிடப்படும். சேவை தேவைப்படின் தொடர்புகளுக்கு: 071 510 5726, 077 315 0497

(றி/6867)(5-6-7)

## கார் விற்பனைக்கு

Nissan Sunny (Ex Saloon) JI -XXXX தொடரிலக்கமுடைய (உற்பத்தி வருடம் 2001, white colour) Reverse Camera, 2.3 million (Negotiable) விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:0715387131

(34340) (6.7.11)

## லொறி உடன் விற்பனைக்கு

42 Sri x x x x Isuzu - (இசுஸ்) லொறி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 6701 293

(34353) (6.7.45)


### விநாயகர் வீதியுலா

துன்னாலை கோவிற்கடவை சித்தி விநாயகர் ஆலய சிவராத்திரி நிகழ்வு இன்று இரவு 9.00 மணிக்கு ஆலயத்தில் இடம் பெறவுள்ளது. விசேட பூசை ஏற்பாடுகளை தொடர்ந்து ஆரம்பமாகும் நிகழ்வில் என். எஸ். ஜெகநாதன் விஜயகுமார் குழுவினரின் தவில் கச்சேரியும் கம்பவாரிதி இ.ஜெயராஜ் வழங்கும் விசேட சொற்பொழிவு இடம்பெறும்.

நிகழ்வுகளை தொடர்ந்து மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட கட்டுச் சப்பரத்தில் விநாயகப் பெருமான் வீதியுலா வருவார்.


advt@uthayan.com
0215671111

## விற்பனைக்கு

பன்றிகளும், பன்றிக்குட்டிகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: அண்ணா பாம், உரும்பிராய் வீதி, இணுவில்.

(c/6981)(6.7.11)

## வீட்டுடன் கூடிய காணியும் அதனோடு தொடர்புள்ள காணியும் விற்பனைக்கு

வீட்டுடன் கூடிய 9 பரப்பு காணியும், பயனுள்ள மரங்களுடனான 5 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு. இவை நல்ல சுற்றாடலில் அமைந்ததும் இரண்டுக்கும் தனித் தனியே கிணறுகளைக் கொண்டதுமாகும். இவை சுன்னாகம் தெற்கு Bank Lane இல் அமைந்துள்ளது.

(34333) (5.6.7) தொடர்பு:- 071 847 4915, 077 026 2486

## பணிப்பெண் தேவை

வயது முதிர்ந்த இருவரை வீட்டில் தங்கியிருந்து பராமரிக்கக் கூடிய 45 வயதிற்கு மேற்பட்ட சைவ போசனமுள்ள பணிப் பெண் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு:077 902 4343 (27789)(5-6-7)

## யாழ். பல்கலைக் கழகத்திற்கான 2013 புதுமுக மாணவர்களுக்கான அறிவித்தல்

யாழ். பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களுக்கும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு CIMA மற்றும் BCS கற்கை நெறிகளின் அனைத்து மட்டங்களுக்கும் (Levels)40% புலமைப்பரிசில் வழங்குவதற்கு யாழ். CAPSTONE நிறுவனம் தீர்மானித்துள்ளது. 154A/1, நாவலர் வீதி என்ற முகவரியில் உள்ள எமது தலைமைக் காரியாலயத்தில் 20.03.2013 இற்கு முன்னதாக வருகை தந்து அல்லது 077 914 8753/ 021 222 0727 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு உங்கள் புலமைப் பரிசில்களை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

CAPSTONE
-Join the Best, Become the Best

(34343) (5.6.7)


# கண்ணீர் அஞ்சலி



வேலணை மேற்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், கொண்ட

## செல்லையா சுப்பிரமணியம்

(கூட்டுறவாளர், உப சபை உறுப்பினர், முன்னாள் பணிப்பாளர், வேலணை புல நோ.கூ.சங்கம்)

கூட்டுறவுச் சமூகம் ஒரு மகத்தான மனிதனை இழந்து நிற்கின்றது.

அன்னாரின் இழப்பால் துயரடையும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வேலணை பல நோ.கூ.சங்கம் பணிப்பாளர்கள், பணியாளர்கள்.

(சி/6989) (10.6.7)

# மரண அறிவித்தல்

## திருமதி பரமேஸ்வரி கந்தசாமி



மீசாலை மேற்கு, வங்களா வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி கந்தசாமி (08.03.2013) வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தசாமியின் பாசமிகு துணைவியாரும்,காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், சிவனேசன் (U.K), சிவகுமார் (U.K), சகிலா (பிரான்ஸ்), வித்தியா (U.K), பிரதீபா, நித்யா (ஆசிரியை - ப/ஊவா ஹைலண்ட்ஸ், தமிழ் மகா வித்தியாலயம், பண்டாரவளை) ஆகியோரின் பாசமிகு தாயும், தர்சினி, அயந்தி, வசந்தகுமாரன், சசிக்குமாரன், கிருபாகரன் (முகாமையாளர், 'டயலக்',சாவகச்சேரி), கவீந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், இராசம்மாவின் (கனடா) பாசமிகு தங்கையும், கார்த்திகேசுவின் (கனடா) அன்பு மைத்துனியும், நிக்‌ஷனா, கீர்த்தீஸ், அன்யய், நதீஷா, அபூர்வா, நிருஜா, வர்சா, அஸ்வின், தஸ்வின், கவின், தபேஷ், நிகேஷ், ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.03.2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வங்களா வீதி,
மீசாலை மேற்கு, மீசாலை.

(27880) (45.6.7)

தகவல்:
குடும்பத்தினர்
தொ.பே. 077 744 8696,
077 7334 374.

# இருபாலை, செம்மணி பகுதிகளுக்கு ஒரு வாரமாக குடிதண்ணீர் இல்லை

இருபாலை, செம்மணி பிரதேசங்களுக்கு கடந்த ஒரு வாரகாலமாகக் குடிதண்ணீர் விநியோகிக்கப்படவில்லை. இதனால் அந்தப் பிரதேச மக்கள் குடிதண்ணீரின்றிப் பெரும் அவஸ்தைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு அண்மைக்காலமாக வலி.கிழக்கு பிரதேச சபை பவுசர் மூலம் குடிதண்ணீரை விநியோகித்து வந்தது. கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு அருகில் உள்ள குழாய்க் கிணற்றில் இருந்து பவுசர் மூலம் இந்த மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் இடம்பெற்று வந்தது.

இந்தக் குடிதண்ணீர் விநியோகம் கடந்த ஒருவார காலத்துக்கு மேலாக இடம்பெறவில்லை என்றும் இதனால் தாம் குடிதண்ணீரைப் பெறுவதற்கு பெரும் சிரமப்பட்டு வருவதாகவும் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இது குறித்து வலி.கிழக்கு பிரதேச சபைத் தலைவருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, குடிதண்ணீரை மக்களுக்கு விநியோகிக்கும் பவுசருக்கான சாரதிகளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாகவே சம்பந்தப்பட்ட பிரதேச மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. சாரதிகளின் பற்றாக்குறையால் பிரதேச சபையின் அத்தியாவசிய பணிகள் அனைத்துமே முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது – என்றார்.

# மைத்திரிபாலவின் மகனுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் மகனுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணை ஜூன் மாதம் 20 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பிரதிப்பொலிஸ் மா அதிபர் வைத்தியலங்காரவின் மகன் அசேல தாக்கப்பட்டமை தொடர்பிலேயே அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான வழக்கு விசாரணைகள் வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் றியால் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது கல்குடா பொலிசார் விசாரணை அறிக்கையொன்றை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர்.

இதன்போது, சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் மகனின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி என்.எம்.சஹீட் முன்னிலையானார்.

இந்த விவகாரம் தொடர்பில் பொலிஸ் விசாரணை நிறைவடைந்துள்ளதாகவும் இது சிறிய குற்றம் என்பதால் இதை வாழைச்சேனை மத்தியஸ்தர் சபைக்குப் போடுமாறு விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்ததாக அவர் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

வழக்கை விசாரணை செய்த நீதிபதி றியால் வழக்கை ஜூன் மாதம் 20ஆம் திகதிக்கு ஒத்திவைத்ததுடன் மத்தியஸ்தர் சபையின் அறிக்கையை ஜூன் 20ஆம் திகதி நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டார்.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் மகன், பிரதிப்பொலிஸ் மா அதிபர் வைத்தியலங்காரவின் மகன் ஆகியோருக்கிடையில் கடந்த பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி பாசிக்குடாவிலுள்ள ஹோட்டல் ஒன்றில் கைகலப்பு இடம்பெற்றது.

இதேவேளை, சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் சட்டத்தரணிகளான அமைச்சர் பைசர் முஸ்தபா, லலித் திஸாநாயக்க, என்.எம்.சஹீட் அகியோரும் இதன்போது முன்னிலையாகியிருந்தனர். (த)

## பிரதியமைச்சர் காதரின் மனு நிராகரிப்பு

பிரதியமைச்சர் அப்துல் காதரின் கோரிக்கையைக் கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நிராகரித்துள்ளது. முன்னாள் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தமைக்காக ஐக்கிய தேசியக்கட்சியினால் தனக்கு எதிராக 09 ஆம் திகதி நடத்தவிருந்த ஒழுக்காற்று நடவடிக்கையை நிறுத்துமாறு கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனுவையே நீதிமன்றம் நிராகரித்தது.

இந்த மனுவில் பிரதிவாதிகளாக ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித்தலைவருமான ரணில் விக்கிரமசிங்க, கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இதேவேளை எதிர்வரும் 28 ஆம் திகதி இருவரையும் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அவர்களுக்கு கடிதம் அனுப்புமாறு மாவட்ட நீதவான் அமல் ரணராஜா உத்தரவிட்டுள்ளார். (த)





Graduate Diploma in Engineering

நீங்கள் எந்த நிலையில் இருக்கின்றீர்கள்?

- Post Graduate Diploma (IVQ Level 7)
- EC^UK Registration → Incorporated Engineer
- Graduate Diploma Equal to BEng (Hons), UK (IVQ Level 6) ← NDT/ HND/NDES/NDET/ Degree with Mathematics or Physics/ OUSL Diploma
- → Asst. Engineer
- Advanced Diploma (IVQ Level 5) ← NCT/ NCIT/ NCQS/ equal Technical qualifications
- → Supervisor
- Diploma (IVQ Level 3) ← A/L Maths, Science, Certificate courses in related field
- Certificate (IVQ Level 2) ← O/L, A/L commerce, Art

யாருக்கானது.

- NDT, HND முடித்தவர்கள்.
- Maths, Science இல் Bsc பட்டம் பெற்றவர்கள்.
- City & Guilds Advanced Diploma முடித்தவர்கள்.
- A / L முடித்தவர்கள் Diploma மட்டத்தில் இருந்து தொடரலாம்.

City & Guilds ஏன் அவசியமானது? @ SCOT

- Uk யை தலைமையகமாக கொண்டு 100 க்கு மேற்பட்ட நாடுகளின் பல்கலைக்கழகங்கள், அரச நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள்.
- தவணை முறையில் பாடநெறிக்கட்டணத்தை செலுத்தும் வசதி.
- பொறியியல் படிப்புக்களின் இறுதி வருடத்தை Uk பல்கலைக்கழகங்களில் தொடரும் வாய்ப்பு.
- குறித்த துறையில் Diploma பாடநெறியை முடிப்பவர்களுக்கு பிரபல பொறியியல் கம்பனிகளில் வேலைவாய்ப்புக்கள் பெற்றுத் தரப்படும்.

Civil Engineering
Quantity surveying
Motor Vehicle
Electrical & Eletronics

Electrical & Electronics மற்றும் Motor Vehicle
கற்கைநெறிகள் வரும் மார்ச் 10ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதால்...
உங்கள் பதிவுகளுக்கு அழையுங்கள்

(C/6824)

City & Guilds APPROVED CENTRE

SKILLS COLLEGE OF TECHNOLOGY
Jaffna Campus
No. 207, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
Email : kajan@skillsinternational.lk
Website : www.skillsinternational.lk
Like us on Face book
www.facebook.com/scot.jaffna

0214 666 699
0771 067 394

SMS மூலம் விபரங்களைப் பெற ..
உங்கள் (Name) (Address) (Course) போன்ற விபரங்களை Type செய்து 0777 762 283 க்கு SMS செய்யுங்கள்.

# அருணோதயக் கல்லூரியில் 38 மாணவர்கள் இரத்ததானம்

அளவெட்டி, மார்ச் 10

அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் 'இரத்ததான முகாம்' கடந்த புதன்கிழமை நடைபெற்றது. தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை இரத்த வங்கியினரால் இந்த முகாம் நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் அருணோதயக் கல்லூரி மாணவர்கள் 38 பேர் இரத்ததானம் செய்துள்ளனர். வைத்தியசாலை இரத்த வங்கியினால் ஏற்கனவே பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வுக் கருத்தமர்வு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (3-51)

## தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு நாளை விடுமுறை

மகா சிவராத்திரியை முன்னிட்டு இந்து பாடசாலைகளுக்கு நாளை திங்கட்கிழமை விசேட விடுமுறை என கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கும் நாளை விசேட விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடுமுறைக்கு பதிலீடாக எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை பாடசாலைகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.(3-9)

## வர்த்தக ஊழியருக்கு நாளை லீவு வழங்குக

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு விரதமிருக்கும் வர்த்தக உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் நன்மை கருதி மகா சிவராத்திரி தினத்துக்கு அடுத்த நாளாகிய நாளை திங்கட்கிழமை வர்த்தக ஊழியர்களுக்கு விடுமுறை வழங்குமாறு யாழ். வணிகர் கழகம் அறிவித்திருக்கிறது. (ஒ)



கொழும்புத்துறை மணியந்தோட்ட முன் பள்ளியில் இடம்பெற்ற கால்கோள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினர் அ.இரவீந்திரதாசன் மங்கல விளக்கேற்றுகிறார். அருகில் ஜே/89 கிராம உத்தியோகத்தர் எஸ். ஞானேந்திரன் காணப்படுகின்றார். (ம-17)

## நவநாள் வழிபாடு

அல்வாய் சக்கோட்டை புனித பிரான்சிஸ்கு சவேரியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவுக்கான ஆயத்த வழிபாடுகள் கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளன. நவநாள் ஆராதனைகள் தினமும் மாலை 5 மணிக்கு திருச்செபமாலை ஆராதனையுடன் நடைபெற்று வருகின்றது. நாளைமறுதினம் செவ்வாய்க் கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை விழாவும் மறுநாள் காலை 7 மணிக்கு திருவிழா திருப்பலியும் நடைபெறவுள்ளது. (3-51)

## மானிப்பாய் மகளிர் பொன்விழா போட்டி முடிவுகள் வெளியாகின

மானிப்பாய் மகளிர் கல்லூரியின் பொன் விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

**உருவாக்கி எழுதுதல்**

**முதலாம் பிரிவு**

முதலாம் இடம் - கிருசாந் அன்புத்துரை, சங்கானை சிவப்பிரகாச ம.வி, 2 ஆம் இடம்- வர்ணியா வரதராசா, இளவாலை கன்னியர் மடம் ம.வி, 3 ஆம் இடம் ஜீவிதா யோசப் ரவீந்திரன், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

**இரண்டாம் பிரிவு**

முதலாம் இடம்- லிசானி ராஜேந்திரம், இளவாலை கன்னியர் மடம் ம.வி, 2ஆம் இடம்- யோக நாதன் ஐங்கரன், விக்ரோறியாக் கல்லூரி, 3 ஆம் இடம்- நிருஜா சாந்தகுமார் சங்கானை சிவப்பிரகாச ம.வி.

**மூன்றாம் பிரிவு**

முதலாம் இடம்- மேரி பிரிய தர்சினி அமலகுமார், இளவாலை கன்னியர் மடம் ம.வி, 2 ஆம் இடம்- தேவதர்சினி தர்மகுலராஜ், இராமநாதன் கல்லூரி. 3 ஆம் இடம்- ஜோசப் ரவீந்திரன் திபுசன், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை

**சொல்வதெழுதல்**

**முதலாம் பிரிவு**

முதலாம் இடம்- மாருதிகா கிருஷ்ணவசீகரன், இளவாலை கன்னியர் மட ம.வி, 2 ஆம் இடம்- பிருந்தா சாந்தகுமார், விக்ரோறியாக் கல்லூரி, 3 ஆம் இடம்- தியாகராசா கிரிதரன், சங்கானை சிவப்பிரகாச ம.வி,

**இரண்டாம் பிரிவு**

முதலாம் இடம்- பவித்திரா விக்னேஸ்வரன், சென். ஆன்ஸ் றோமன் க.த.க.பாடசாலை, 2 ஆம் இடம்- கமி கந்தராசா, இராமநாதன் கல்லூரி, 3 ஆம் இடம் - தனேஷிகா யோகேஸ்வரன், சங்கானை சிவப்பிரகாச ம.வி.

**மூன்றாம் பிரிவு**

முதலாம் இடம்- தாரணி திருநாவுக்கரசு, விக்ரோறி யாக் கல்லூரி, 2 ஆம் இடம்- கெஜிகா சிறிதரன், பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை, 3 ஆம் இடம்- மனோகரன் நிருசன், யூனியன் கல்லூரி. (3)

## எவற்றை இழந்தால் நல்லது

என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும் என்கிறார் இயேசு இன்றைய லூக்கா நற்செய்தியில்(லூக்.9,22-25).

அன்பானவர்களே, இத்தவக்காலத்தில் நாம் எவற்றைத் துறப்பது? நாம் எவற்றை இழந்தால் நல்லது என்று ஒரு சிறிய பட்டியல் தயாரிக்க முயற்சி செய்து பார்ப்போமே

குறை கூறுவதைத் துறக்கலாம்.நிறைவுள்ளவர்களாக வாழலாம்.தாழ்வு மனப்பான்மையைத் துறக்கலாம். உயர் தன்மையுடையவர்களாக வாழலாம்.

தீர்ப்பிடுவதைத் துறக்கலாம். நல்லெண்ணமுடையவர்களாக வாழலாம்.அழுது புலம்புவதைத் துறக்கலாம்.கடவுள் நம்பிக்கையுடையவர்களாக வாழலாம்.

நம்பிக்கையற்ற தன்மையைத் துறக்கலாம். நம்பிக்கை கொண்டவர்களாக வாழலாம். பகையுணர்வைத் துறக்கலாம். அன்புறவோடு வாழலாம்.

**தவக்காலச் சிந்தனை**

எதிர்மறை எண்ணங்களைத் துறக்கலாம். நேர் மறையான எண்ணங்களோடு வாழலாம். தேவையற்ற அழுத்தங்களைத் துறக்கலாம். சகோதர உணர்வோடு வாழலாம்.

பொறாமையுணர்வைத் துறக்கலாம்.பிறரும் நல்லவர்களே என வாழலாம்.

புறம்பேசுவதைத் துறக்கலாம்.நாவடக்கம் உள்ளவர்களாய் வாழலாம். பாவத்தைத் துறக்கலாம். புண்ணியச் செயற்பாட்டில் வாழலாம்.

இன்றைய நாளில் இச்சிறிய பட்டியலை வாழ்ந்து பார்ப்போம். இயேசுவின் உண்மைச் சீடர்களாக வாழ நமக்குச் சிலுவைகள் தேவை. அன்றாட வாழ்வில் சிலுவைகள் சுமந்து இயேசுவைப் பின்பற்றுவோம்.

எஸ்.மரியல்ராஜ்

## நெடுந்தீவில் சிறுவர் பூங்கா

யாழ்ப்பாணம், மார்ச் 10

நெடுந்தீவு மணல் கிணற்றடியில் சிறுவர் பூங்கா அமைக்கும் வேலைகள் விரைவில் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன. பூங்காப் பகுதியில் தற் சமயம் சிறுவர்களுக்கான கல்வி, விளையாட்டுப் பயிற்சிகளுக்கான மண்டபம் என்பன அமைக்கப்பட்டு வருகின்றன.

நெல்சிப் திட்டத்தில் ரூபா ஒரு கோடி 65 லட்சம் செலவில் இந்த மண்டபம் மற்றும் பூங்கா அமைக்கும் பணிகள் பிரதேச சபையால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (3-7)

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் புதிய அதிகாரி உங்களை மதிப்பார். புதிய திட்டங்கள் நிறைவேறும்.

**இடபம்:** எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளைச் சரி செய்வீர்கள். உத்யோகத்தில் உங்களின் கடின உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும். நிம்மதி கிடைக்கும்.

**மிதுனம்:** வேலைச் சுமையால் பதற்றம் அதிகரிக்கும். வியாபாரத்தில் புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உத்தியோகத்தில் பிறரின் குறைகளைச் சுட்டிக் காட்ட வேண்டாம். இடம் பொருள் ஏவல் அறிந்து செயற்பட வேண்டும்.

**கடகம்:** உங்கள் பலம் பலவீனத்தை உணருவீர்கள். சகோதர வகையில் நன்மை உண்டு. விரும்பிய பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். பண விடயத்தில் கறாராக இருங்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**சிங்கம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். பழைய உறவினர், நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வேற்று மதத்தவர் உதவுவார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்து கொள்வீர்கள்.

**கன்னி:** உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுய ரூபத்தை புரிந்து கொள்வீர்கள். சிக்கனமாகச் செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். புதியவரின் நட்பால் ஆதாயமடைவீர்கள். உத்தியோகத்தில் அமைதி நிலவும். நினைத்தது நிறைவேறும்.

**நாளை**

மாசி- 27 திங்கட்கிழமை 11.03.2013

திதி: அமாவாசை பி.இ. 02.10 வரை

நட்சத்திரம்: சதயம் பி.ப. 12.51வரை

சுபநேரம்: 12.22- 01.52 வரை

இராகுகாலம்: 07.52- 09.22 வரை

**துலாம்:** எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும், எதிர்பாராத ஒரு வேலை முடியும். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**விருச்சிகம்:** துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பார்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிக்கு சில ஆலோசனைகள் தருவீர்கள்.

**தனுசு:** கடந்த இரண்டு தினங்களாக இருந்த மன உளைச்சல், வீண் பதற்றம், அலைச்சல் யாவும் நீங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார். தடைப்பட்ட வேலைகள் நிறைவேறும்.

**மகரம்:** உங்களை அறியாமலேயே ஒரு வித படபடப்பு, தாழ்வு மனப் பான்மை வந்து செல்லும். தன்னம்பிக்கை குறையும். உதவி கேட்டு உறவினர்களும் தர்மசங்கடத்துக்கு ஆளாக்குவார்கள். நேர்மறை எண்ணங்கள் தேவை.

**கும்பம்:** எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து போகும். திட்டமிடாத செலவுகளை போராடிச் சமாளிப்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு இலாபம் வரும்.

**மீனம்:** அனுபவ பூர்வமாகவும், அறிவு பூர்வமாகவும் பேசி எல்லோரையும் கவர்வீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளை பகிர்ந்து கொள்வார்கள். உத்தியோகத் தில் சில நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | 9 | 3 | | | | 8 |
| | 9 | | | | | 3 | | |
| 8 | 5 | | 1 | 6 | | 7 | | 4 |
| | | | | 9 | | | | 6 |
| 2 | | 4 | | 7 | | 1 | | 9 |
| 9 | | | | 5 | | | | |
| 3 | | 6 | | 2 | 5 | | 8 | 1 |
| | | 2 | | | | | 4 | |
| 1 | | | | 4 | 3 | | | 5 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1 | 4 | 5 | 2 | 7 | 6 | 9 | 3 |
| 5 | 9 | 3 | 6 | 4 | 8 | 2 | 7 | 1 |
| 2 | 6 | 7 | 3 | 1 | 9 | 8 | 5 | 4 |
| 1 | 7 | 2 | 4 | 9 | 5 | 3 | 6 | 8 |
| 4 | 3 | 9 | 1 | 8 | 6 | 5 | 2 | 7 |
| 6 | 8 | 5 | 2 | 7 | 3 | 1 | 4 | 9 |
| 7 | 2 | 8 | 9 | 6 | 1 | 1 | 4 | 5 |
| 3 | 4 | 1 | 7 | 5 | 2 | 9 | 8 | 6 |
| 9 | 5 | 6 | 8 | 3 | 4 | 7 | 1 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

சிவசிவ



# கீரிமலை நகுலேஸ்வரம்

# திருவருள் மிகு ஸ்ரீ நகுலாம்பிகை சமேத ஸ்ரீ நகுலேஸ்வரப் பெருமான் திருக்கோயில்

# மஹா சிவராத்திரியும், தேர்த்திருவிழாவும் - 10-03-2013



## குருக்களின் அருளாசியுரை

திருப்பெருமா மேருவரைச் சிகரமூன்றுட் சேரு
மிரு சிகரமாய் திகழுமீழத் தூரப்
பெருமா முகமெனும் யாழ்ப்பாணம் தன்னில்
உத்தரத்திற் கீரிமலை உறைந்து நாளும்
விருப்பமரு நகுலேஸ்வரநருளைக் கொண்டு
மேவிய வங்கர் கோயில் விளங்குவய்ந்த திருப்பணிகள்
செய்பவரும் செய்விப்போரும்
திரவியங்களீபவரும் சிறந்து வாழி



''நமஸ்சம்பலேச மயோ பவேச நமஸ்சங்காராயச நமஸ் சிவாயச''

ஆதி அந்தம் இல்லா அரும் பெருஞ்சோதியும் பஞ்ச கிருத்தியங்களுக்கு காரணமானவரும், கண்ட தீர்த்தம், தலம், மூர்த்தியும் ஒருங்கே அமையப் பெற்றதும், புராணகாலச் சிறப்புப் பெற்றது மான, பஞ்ச ஈஸ் வங்களில் ஒன்றான கீரிமலை நகுலேஸ்வரம் எனப் பெயர்ப் பெற்ற திவ்ய தலத்தில், நித்தியசான்னித்தியத்துடன் உறைந் திருக்கின்ற நகுலேஸ்வரப் பெருமான் இன்று புதிய சித்திரத் தேரில் அடியார்க்குக் காட்சி அளிக்கின்றார். இத் தேர் குறுகிய காலத்தில் (மூன்று மாதம்) தனுஷா சிற்பாலய சிற்ப வல்லுநர்களால் பரஞ்சோதி சதீஸ்குமார் தலைமையில் தேர் உருவாகி நேற்றைய தினம் வெள்ளோட்டம் நடைபெற்று இன்று புதிய சித்திரத்தேரில் எம் பெருமான் வீதி உலா வந்து அருள்பாலிக்க வேண்டும்.

எல்லாம் வல்ல நகுலேஸ்வரப்பெருமானைத் தரிசித்து தொடர்ந்து மகா சிவராத்திரி நிகழ்வில் கலந்து கொண்டு நிறைவான சிவனருள் பெறுவதற்கு எல்லாம் வல்ல நகுலேஸ்வர சமேத நகுலேஸ்வரனை வேண்டுகின்றேன்.

ராஜராஜ ஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள், ஆதீன கர்த்தா.

## அருளாசிச் செய்தி



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம் பொருளான சிவபெருமான் தம்மை வழிபடும் அடியார்களுடைய துன்பங்களைத் நீக்கும் பொருட்டு கீரிமலை என்னும் புண்ணியஸ்தலமான நகுலேஸ்வரத்திலே நகுலாம்பிகாசமேத நகுலேஸ்வரப் பெருமானாக எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக்கின்றார். அந்த அருமையான பெருமைமிக்க ஆலயத்திலே இன்று தேர்த்திருவிழா. அடியார்க்கருளும் பரமசிவன் இன்று அழகான சித்திரத் தேரிலே அம்பிகையோடு ஆரோகணிக்கின்றார். அழகே உருவான நகுலேஸ்வரர் நகுலாம்பிகையோடு தேரிலே வரும் அற்புதக் காட்சி வர்ணிக்கமுடியாத பேரழகுடையது. இன்றைய அருள்மிகு தேர்த்திருவிழா நன்னாளிலே சிவனுக்குகந்த சிவராத்திரி விரதகால அருட்காட்சியாக கீரிமலையிலே பக்தர்களுக்கருளும் பாங்கு சொல்லி அடங்காது. எல்லாம் வல்ல நகுலேஸ்வரநாதர் எல்லோருக்கும் அருள்பாலித்து பேரானந்த மயமான பெருவாழ்வருள வேண்டுமென்று பிரார்த்தித்து அருளாசிகள் நல்கி வாழ்த்துகின்றோம். அனைவரும் சுகமே வாழ வேண்டுமென்று வாழ்த்தி மகிழ்கின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், நல்லை ஆதீனம்.

## நகுலேஸ்வரப்பெருமானை நாடி வழிபட நமக்கொரு தீர்வு கிடைத்து விடும்



சிவபூமி எனத் திகழும் எமது ஈழத் திருநாட்டில் ஐந்து சிவாலயங்களில் ஒன்றாக விளங்கும் நகுலேஸ்வரத்தில் இன்று தேர்த் திருவிழா மிகச் சிறப்பாக நடை பெறுகின்றது. பல்லாயிரக்கணக்கான சிவபக்தர் அருள்மிகு ஸ்ரீ நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப்பெருமானை வேண்டி அனுஷ்டிக்கின்ற தலையாய சிவ விரதங்களில் ஒன்றான சிவ ராத்திரியைப் பக்தி சிரத்தையுடன் அனுஷ்டித்து நாளை அதிகாலையில் இருந்து சுவாமியின் கண்டகி தீர்த்தத்தில் தீர்த்த ஸ்ஞானம் செய்யும் திருக்காட்சி வட புலத்தின் சைவ ஆசார மகத்துவ விரத சிறப்பைப் பெருக்கியிருக்கின்றது. எல்லாம் வல்ல நகுலேஸ் வரப் பெருமானை நாடி நல்லருள் பெற்று நல்ல வண்ணம் வாழ் வோமாக. - மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்.

## வடம் பிடித்து வினைப் பயனை அறுங்கள்

இன்று திருவருள்மிகு நகுலாம்பிகை சமேத ஸ்ரீ நகுலேஸ்வரப் பெருமான் சித்திரத் தேரில் அடியார்களுக்கு காட்சி கொடுக்கின்றார். இத் திருத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே அமையப் பெற்ற திருத்தலமாகும். இன்றைய நாளில் வடம் பிடிக்க வாருங்கள், உங்கள் பிறவி வினைப் பயனை அறுங்கள். தொடர்ந்து இன்றைய தினம் மகா சிவராத்திரி தினமாகும். அடியார்கள் யாவரும் சிவன்ராத்திரி விழாவில் கலந்து கொண்டு, உலகில் வாழ்வில் துன்பங்களில் இருந்து விடுபட்டு உய்வோமாக.



- க.கு. க. சிவபால்.
அடியாருக்கு அமுதூட்டும் அன்னலார்

## தேரேறி வந்து திருவருள் புரிய வேண்டும்



சீருந் திருவும் பொலியும் கீரிமலை தன்னிலே
நகுலேஸ்வரர் எனும் நல்ல நாமத்துடன் எழுந்தருளி
பேரும் புகழும் விளங்க அழகுத் தேரில் ஆரோகணித்து
நாங்கள் அனைவருமே நலமுடனே வாழ்ந்திட
பாரும் உலகும் பக்குவமாய் உயர்ச்சி பெற்று
வேரோடு வினை களைந்து வேதனை தீர்த்திட
வாரும் என வரவேற்கின்றோம் நகுலேஸ்வர நாதரே
தேரேறி வந்தே திருவருள் புரிய வேண்டுமையா!

கீரிமலைப் பதியிலே கைதொழுமடியார்க்கருள் புரிய
நகுலேஸ்வர நாதராக வீற்றிருக்கும் சிவனே!
ஊரிலுள்ளோர் எல்லாம் உன்னத வாழ்வு பெற்றிட
நகுலாம்பிகையோடு தேரிலேறி வலம் வந்து
பாரிலுள்ளோர் பயன்பெறவே பவனியே வந்தருளி
வடம் பிடித்திழுப்போர்க்கு வரமெலாந் தந்து
மாரி மழை பொழிய மக்கள் எல்லோரும் வாழ்ந்திட
தேரேறி வந்தே திருவருள் புரிய வேண்டுமையா!

சிவநெறிக் கலாநிதி, இராசையா ஸ்ரீதரன்

விளம்பர அனுசரணை

அசல் 22 கரட் தங்கத்தில் நவீன
காலத்துக்கேற்ற புதிய டிசைன்களில்
செய்துகொள்ள சிறந்த ஸ்தாபனம்
**ஆசைப்பிள்ளை அன் சன்ஸ்**
**K.T. பிளாசா**
பிரதான வீதி, சங்கானை.
தொ.பே. 021 321 2399

**இ.ச.பே.நாகரத்தினம் சக நிறுவனம்**
52, 54 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 3096, 021 222 7286
57/47, களஞ்சிய அறை,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

மின்சாரப்பொருள்கள் இலத்திரனியல்
பொருள்களை நியாயமாகவும்
தரமானதாகவும் பெற்றுக்கொள்ள
**சுந்தர்சன்**
யாழ்.வீதி, மானிப்பாய்.
TP: 021225 5136, Fax 021225 5136

ஐஸ்கிறீம் வகைகள், குளிர்பான வகைகள்
அனைத்தையும் ஓடருக்குப்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
**அம்பிகா கிறீம்கவுஸ்**
மலைவேம்படி, அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

அசல் 22 கரட் தங்கத்தில் நவீன
காலத்துக்கேற்ற புதிய டிசைன்களில்
செய்துகொள்ள சிறந்த ஸ்தாபனம்
**சிறி தேவி கருமாரி நகைமாடம்**
83/1, கஸ்தூரியார் வீதி,
செம்மாதெரு, யாழ்ப்பாணம்.

**அண்ணா கோப்பி**
துரை வீதி, இணுவில்
அண்ணா நிறுவனத்தின் புதியதோர்
உற்பத்தி அண்ணா நூடில்ஸ் உடனடித்
தயாரிப்பு உண்ணச் சுவையான உணவு
அண்ணா உற்பத்தி விற்பனை
நிலையங்கள் எல்லா இடங்களிலும்
பெற்றுக்கொள்ளலாம்

**பட்டாபி படமாடம்**
கண்ணாடி வகைகளின் ஏக விநியோகஸ்தர்
64, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 7821
இல.225, 227, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 4351

**அருள் குளோபல் என்ரப்பிரைஸ்**
வெளிநாடுகளுக்கா துரித தபால்
பொதிகள் சேவை
இல.1 பிறவுண் வீதி. நாவலர் வீதி சந்தி. யாழ்ப்பாணம்.
International Courier Cargo Service
T.P: 021 222 6113

**வேல்முருகன்**
வணிக நிலையம்
இல.56 A(378), இல.295 (21),
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். 0774489932

ஐஸ்கிறீம் வகைகள், குளிர்பான வகைகள்
அனைத்தையும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்
**ஸ்ரீ காளி கிறீம் கவுஸ்**
கட்டுவன் வீதி, மல்லாகம்.
தொ.பே. 0770870516

**பிரகலாத் பவான்**
சிற்றுண்டிச் சாலை.
நகுலேஸ்வரா வீதி,
நகுலேஸ்வரம்.

ஐஸ்கிறீம் வகைகள், குளிர்பான வகைகள்
அனைத்தையும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்
**லிங்கேஸ் கிறீம் கவுஸ்**
மயிலனை, சுன்னாகம்.



**சாரங்கா நாணயமாற்று சேவை**
**Sharanga Money Exchange (Pvt) LTD**
(Permit No: Ecd/ In/ Aut/ Mc/ 164)
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 021 222 6972

**அம்பாள் மரக்காலை**
இல.261, பருத்தித்துறை வீதி,
வீரமாகாளி அம்பாள் கோயிலடி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
021 222 0043, 0777111147

**க.கு.கந்தையாபிள்ளை**
இல.318, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.




**சன் மோட்டோர் அன் சேர்விஸ்**
மோட்டார் சைக்கிள், மோட்டார் வாகனங்கள் சேர்விஸும் திருத்த
வேலைகளும் செய்து தரப்படும்.
புதிய அறிமுகம்
டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டால் விற்பனை செய்யப்
பட்ட வாகனங்களுக்கு இலவச சேர்விஸ் செய்து கொடுக்குமிடம்.
வல்லை வீதி, சங்கானை. T.P. 0777174181

**North And East Engineering**
Jaffna Road, Manipay.
Hot Line: 0777568685,
021 7200290

# இலங்கையில் காப்புறுதித்துறையின் எல்லைகளை மாற்றியுள்ளது AIA

முன்னர் அவிவா NDB காப்புறுதி என அழைக்கப்பட்ட காப்புறுதி நிறுவனம் கடந்தவாரம் வியக்கத்தகு வகையில் புரட்சிகரமாக AIA இன்ஷுவரன்ஸ் லங்கா பீஎல்சீ என மாற்றம் பெற்றது. AIA இன்ஷுவரன்ஸ் ஆசியாவின் முன்னணி காப்புறுதியாளர் என்பதுடன் அதன் சந்தை முதலீட்டு பெறுமதி அடிப்படையில் உலகின் ஐந்தாவது இடத்தினை வகிக்கின்றது. இலங்கையில் அதன் புதிய பெயர் மாற்றம் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்திலும் நாடெங்கிலும் பரவியுள்ள அனைத்து கிளை அலுவலகங்களிலும் வெளிப்படையாக மாற்றம் பெற்றது.

நிறுவனத்தின் கூட்டுறவு வர்த்தக நாமம் அவிவா NDB இல் இருந்து AIA என மாற்றம் பெறுவது நிறுவனத்தின் 25 ஆண்டுகால வரலாற்றில் மிகப்பெரிய சாதனை மைல் கல்லாகும்.

இல 75, குமரன் ரத்னம் வீதி, கொழும்பு2 இல் அமைந்துள்ள தலைமை அலுவலகம் மற்றும் நாடெங்கிலும் பரவியுள்ள 57 கிளை அலுவலகங்கள் மற்றும் 15 பிராந்திய அபிவிருத்தி அலுவலகங்களில் இம்மாற்றத்தினை தெளிவாக நோக்க முடிந்தது. தனித்துவமாக AIA வர்த்தக நாமம் மக்களுக்கு தற்போது பழக்கமானதாக மாறியுள்ளதுடன், நிறுவனம் தற்போது ஆசியாவின் காப்புறுதி ஜாம்பவானாக இலங்கை மக்களுக்கு அறிமுகம் செய்யத் தயாராகவுள்ளது.

ஆசியா முழுவதும் உள்ள தமது சந்தைகளில் குறித்த பிரதேசத்துக்குரிய மிக முக்கிய அடையாளச் சின்னம் ஒன்றினை தமது தொடர்பாடலில் இணைத்து கொள்வது AIA நிறுவனத்தின் வழமையாகும். அதற்கமைய இலங்கையின் பிரசித்திபெற்ற தலதா மாளிகையின் நிழல் படத்தினை ஆசியாவின் பிரபல்ய சின்னத்துடன் காண முடியும்.

நிர்வாக இயக்குநர் ஷா.ரவூப் கருத்து வெளியிடுகையில்:-

''AIA குழுமத்தின் ஒரு பகுதியாக இணைவது பெருமை தருவதுடன் அதன் கூட்டுறவு மற்றும் நிதிபலம் எமது வாடிக்கையாளர்களுக்கு மிகச் சிறந்த பலனைத் தரும்'' எனத் தெரிவித்தார். ''AIA என நமது வர்த்தகநாமம் பெறுவது, எமது வர்த்தக சின்ன மாற்றத்தின் மிகமுக்கிய மைல் கல்லா கும். AIA ஊடாக வரும் நீண்டகால அனு பவம் மற்றும் ஆசிய பிராந்தியம் பற்றிய அறிவும், அனுபவமும் எமது வர்த்தக நடவடிக்கைகளை மேலும் முன்கொண்டு செல்ல உதவும்'' என சந்தைப்படுத்தல் மற்றும் பேங்க் அசூரன்ஸ் பொது முகாமையாளர் அமல் பெரேரா தெரிவித்தார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் ஆசியாவின் காப்புறுதி ஜாம்பவான் AIA இனால் அவிவா NDB கைப்பற்ற எதிர்பார்க்கின்றது என்பதனை அறிவிக்கப்பட்டது தொடக்கம் இப்பெயர் மாற்றம் எதிர்பார்க்கப்பட்டு வந்தது. AIA குழுமத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் தலைவர் மார்க் டக்கர் இலங்கைக்கு விஜயம் செய்து நடத்திய ஊடக சந்திப்பில் இலங்கையினை தமது 16 ஆவது சந்தையாக தெரிவு செய்ய உள்ள ஆர்வத்தினை தெரியப்படுத்தினார். 2012 டிசெம்பர் மாத இறுதியில் அ.டொ 109 மில்லியன் பெறுமதியை செலுத்தி நிறுவனத்தின் 92.3% உரிமையை AIA தன்னகப்படுத்தியது. AIA குழுமம் சுயாதீனமான பொதுப்பட்டியலிடப்பட்ட கிழக்காசிய ஆயுள் காப்புறுதியாளர் என்பதுடன் இலங்கைக்கு மேலதிகமாக ஹொங்கொங், தாய்லாந்து, சிங்கப்பூர், மலேசியா, சீனா, கொரியா, பிலிபீனஸ், அவுஸ்திரேலியா, இந்தோனேசியா, தாய்வான், வியட்நாம், நியூசிலாந்து, மக்காவு, புரூனே, இந்தியா என்பனவற்றில் தமது செயற்பாடுகளை கொண்டு இயங்குகிறது. AIA தனது 16 சந்தைகளில் 13 இடங்களில் முன்னணி இடத்தினை வகிக்கின்றது AIA ஆசியாவில் மிக ஆழமான வரலாற்றினை கொண்டுள்ளதுடன் 90 ஆண்டுகளுக்கு முன்னர் சங்காயில் ஸ்தாபிக்கப்பட்டது.

2012 மே 31 ஆம் திகதிக்கு அமைய குழுமத்தின் மொத்த சொத்துக்களின் பெறுமதி அ.டொ. 119 பில்லியன்கள் ஆகும். ஆசிய பசுபிக் பிராந்தியத்திலுள்ள மிகச் சிறந்த விரிவான முகவர் வலையமைப்பு மற்றும் ஊழியர்கள் ஊடாக பலதரப்பட்டவர்களின் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைகளை AIA பூர்த்தி செய்து வருகின்றது. 24 மில்லியனுக்கு அதிகமான தனிநபர் காப்பீடுகளை பெற்றவர்கள் மற்றும் 10 மில்லியனுக்கு அதிகமான குழும காப்புறுதி திட்ட அங்கத்தவர்களுக்கு AIA சேவையாற்றி வருகின்றது.



# பயோ மார்க்கெற்றிங்கின் உதவித் திட்டம் வழங்கல்

யாழ்ப்பாணம்,மார்ச் 10

பயோ மார்க்கெற்றிங் நெற் வேக்ஸ் நிறுவனத்தின் முதலாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வு கடந்த 2ஆம் திகதி யாழ்.கிறீன் கிறாஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கே.திலகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கைதடி நவீல்ட் பாடசாலைக்கு 10 லீற்றர் கொள்ளளவான சலவைத் திரவமும், உரும்பிராயைச் சேர்ந்த எஸ்.சுதாகரன் என்ற பாடசாலை மாணவனுக்கு மாதாந்தம் இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவும் வழங்கப்பட்டது.

இந்த மாணவனுக்கான கொடுப்பனவு தொடர்ச்சியாக ஐந்து வருடங்களுக்கு மாதாந்தம் வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கடந்த 3 மாதகாலமாகத் தனது சேவையை ஆரம்பித்துள்ள குறித்த நிறுவனம் ஜி.சி.ஈ.சாதாரணதரம் மற்றும் ஜி.சி.ஈ.உயர்தரம் பயின்ற முகாமைத்துவத்தில் ஆர்வமுடைய இளைஞர்களுக்கு பயிற்சிகளை வழங்கி தொழில் வாய்ப்பை பெற்றுக் கொடுக்கவுள்ளதாகவும் நிறுவனப் பணிப்பாளர் தெரிவித்தார். (த-14)

## மகளிர் தினத்தை முன்னிட்டு இலவசமாகப் 'பால்மா' வழங்கல்

தென்மராட்சி,மார்ச் 10

சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி அங்கர் பால்மா உற்பத்தி நிறுவனத்தின் தயாரிப்பான அன்லின் பால்மா பைக்கற்றுக்கள் மகளிர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மகளிர் தின விழாவில் கலந்துகொள்ளும் பெண்களுக்கு விநியோகிக்கவென சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஊடாக அன்லின் பால்மா பைக்கற் விநியோகிக்கப்பட்டன.

நிகழ்வில் கலந்துகொண்ட 108 பெண்களுக்கு பால்மா பைக்கற்றுக்கள் விநியோகிக்கப்பட்டதாக லயன் எஸ்.எஸ்.அருளானந்தம் தெரிவித்தார்.

பால்மாவின் பயன்பாடு தொடர்பாக நிறுவனப் பிரதிநிதி கரண்ரூபன் உரையாற்றினார். (த-9)

# ஆசிரியர்கள், மாணவர்களின் தகவல்தொழில்நுட்ப அறிவை அதிகரிக்க ஏற்பாடு

மைக்ரோசொப்ட் ஸ்ரீலங்கா நிறுவனமும், கல்வி அமைச்சின் அறிவுடைச் சமூகத்திற்கான கல்வி செயற்திட்டமும் (EKSP) தகவல் தொழில்நுட்பத்தை மையமாக கொண்டு இணைந்து நடாத்தும் நிகழ்ச்சியான Innovative Teachers and Students மார்ச் மாதம் 11ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் கல்வி அமைச்சரசு பந்துல குணவர்தன தலைமையில் நடைபெறவுள்ளது.

தனியார் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் கல்வி அமைச்சின் கண்காணிப்பின் கீழ் நாடு தழுவிய ரீதியிலுள்ள பாடசாலைகளை இலக்காகக் கொண்டு இத்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது.

மைக்ரோசொப்ட் ஸ்ரீலங்கா நிறுவனம் கடந்த 8 ஆண்டுகளாக கல்வி அமைச்சுடன் இணைந்து முன்னெடுக்கும் இத்திட்டமானது பல்வேறு பரிமாணங்களைத் தாண்டி வெற்றிப்பயணத்தை தொடுகின்றது.


சம்பிரதாய கல்வி முறைமை, கற்பிக்கும் நெறிமுறைகள் ஆகியவற்றுக்கு புறம்பாக கல்வியை தொழில்நுட்பத்துடன் தொடர்புபடுத்துவது எவ்வாறு என்பது தொடர்பில் ஆசிரியர்களையும் மாணவர்களையும் அறிவுறுத்துவதே நிகழ்ச்சியின் பிரதான நோக்கமாகும். இதன்மூலம் சர்வதேச கல்வி முறைமைக்கேற்ப தம்மை தயார்ப்படுத்திக் கொள்ள மாணவர் களுக்கும் ஆசிரியர்களுக்கும் சந்தர்ப்பம் கிட்டுகின்றது.

இத்திட்டத்தின் பெறுபேறாக நாட்டின் கிராமப்புறங்களை சேர்ந்த அநேக பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளில் தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துகின்றமை சிறப்பம்சமாகும்.

ஆசிரியர்களைப் போன்று மாணவர்களிடையேயும் தகவல் தொடர்பாடல் தொடர்பில் பெரிய ஆவல் ஏற்பட்டுள்ளமையானது, பாடசாலையின் கல்வி கற்பித்தல், பயிலுதல் ஆகிய முறைமைகளிலும் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன.

இதனால் Innovative Teachers and Students செயற்திட்டம் கடந்த பல ஆண்டுகளாக இலங்கையின் கல்வித் துறையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. விசேடமாக வடக்கு கிழக்கு மாணவர்களும் இதில் கலந்து கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இச்செயலமர்வில் கலந்து வெற்றி பெறும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பெறுமதி வாய்ந்த பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்க கல்வி அமைச்சும், மைக்ரோசொப்ட் ஸ்ரீலங்கா நிறுவனமும் நடவடிக்கை எடுத்துள்ளன.



ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை தனது புதிய கிளையை கடந்த 4ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ்.இராசாவின் தோட்டம் பகுதியில் திறந்து வைத்தது. இந்த நிகழ்வில் கியூமெடிக்கா பணிப்பாளர் வூல்வ் ஹாங் குறோஸ் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

# பிரதேச அபிவிருத்தி வங்கியின் மகளிருக்கான கடன் உதவிகள்

யாழ்ப்பாணம்,மார்ச் 10

பிரதேச பொருளாதாரத்தை வலுப்படுத்தும் சௌபாக்கியமான இலங்கையை உருவாக்கும் பிரதேச அபிவிருத்திக்கான கடன் உதவிகளை கல்வியங்காடு மகளிர் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு பிரதேச அபிவிருத்தி வங்கி வழங்கியது.



கல்வியங்காடு சங்கிலியன் மன்ற மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சட்டத்தரணி கே.கேசவன், பிரதேச அபிவிருத்தி வங்கிப் பொது முகாமையாளர் சு.சிவநேசநாதன் ஆகியோர் கடன் உதவிக்கான காசோலைகளை மகளிருக்கு வழங்கினார்கள். சுமார் ஐம்பது மகளிர் ரூபா 50 ஆயிரம் வரை கடனுதவிகளைப் பெற்றுக் கொண்டனர். (த-7)

# பெண்கள் விடுதலையை வெற்றி கொள்வதற்கு உரிமைப் போராட்டத்தில் அணி சேருங்கள்

## மகளிர் தின விழாவில் சரவணபவன் எம்.பி. அழைப்பு

> போரின்போது படையினரிடம் சரணடைந்த எவரும் காணாமற் போகவில்லை என்றால் தங்கள் பிள்ளைகளைத் தேடியலையும் அன்னையரும், தங்கள் கணவர்களைத் தேடியலையும் பெண்களும் மனநோயாளிகளா? நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் ஆதாரங்களுடன் சாட்சியம் அளித்தவர்கள் பொய்யர்களா? காணாமற்போனோர் பற்றிய விவரங்களைக் கோரி இடம்பெறும் ஆர்ப்பாட்டங்களும், உண்ணாநோன்புப் போராட்டங்களும் பொழுது போக்குக்காக நடத்தப்படுகின்றனவா? சிங்களப் படையினரை வழிநடத்தும் கோத்தபாய ராஜபக்ஷ மட்டும் உண்மை பேசுகிறார். பாதிக்கப்பட்ட பெண்களும் தாய்மார்களும் பொய் பேசுகின்றார்கள் என்றால், உலகம் அதை ஏற்றுக்கொள்ளுமா?

யாழ்ப்பாணம், மார்ச் 10

இன்று பெண்கள் மீதான ஒடுக்குமுறை என்பது இன ஒடுக்குமுறையில் ஓர் அங்கமாக மாறிவிட்டது. இவ்வாறான நிலையில் அரசியல் விடுதலை முழுமை அடையும் போதே பெண்களின் விடுதலையும் சாத்திய மாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் எமது உரிமைப் போராட்டத்தில் பெண்களும் இணைந்து- அரசியல் விடுதலை மூலம்- பெண்கள் விடுதலையை வெற்றி கொள்ள முடியும். அதற்காக பெண்கள் அணிதிரள வேண்டும்.

-இவ்வாறு அழைப்பு விடுத்திருந்தார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட மகளிர் அமைப்புக்கள் ஒன்றிணைந்து வழக்கம்பரையில் ஏற்பாடு செய்திருந்த மகளிர் தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் பேசும்போது மேலும் தெரிவித்ததாவது:

இன்று உலகம் முழுவதும் மகளிர்தினம் கொண்டாடப்படுகிறது. ஆர்ப்பாட்டப்பேரணிகள், கருத்தரங்குகள் கண்காட்சிகள் எனப் பலமுனைகளிலும் பெண்களின் குரல்கள் ஓங்கி, ஒலிக்கின்றன. ஆனால், இன்றுவரை பெண்கள் மீதான ஒடுக்குமுறைகள் ஒழிந்து போய்விடவில்லை.அவை கூடுவிட்டுக் கூடு பாயும் மந்திரவாதியைப் போல் வடிவங்கள் மாறி மாறி வலம்வருகின்றன. எல்லா விதமான ஒடுக்குமுறைகளுக்கும் மேலாக இலங்கைப் பெண்கள் மீது அரச வன்முறைகள் ஏவப்பட்டு தொண்டைக்குழிகள் திருகப்படுகின்றன. எங்கள் பெண்களின் உடல்கள் சிதைக்கப் படுகின்றன. மனங்கள் கசக்கப்படுகின்றன. தட்டிக்கேட்க வகையற்றவர்ளாக தடுமாறி துடிதுடிக்க வைக்கப்படுகின்றனர்.

எங்கள் கலாசார வாழ்வில் குடும்பம் ஒரு கோயில், அந்தக் கோயிலில் நாயகனாக கோலோச்சுபவன் கணவன். அந்தக் கணவனின் மேன்மையிலேயே குடும்பம் என்ற நந்தவனம் பூத்துக் குலுங்குகின்றது. ஒரு தலைவன் இல்லாக் குடும்பம் வேரிழந்த செடியாக வாடி வதங்குகிறது. துடுப்பில்லாத வள்ளமாகத் தள்ளாடுகிறது. சகல பொறுப்புகளையும் பெண்களே சுமக்கும் கொடிய நிலை திணிக்கப்படுகிறது.

போரைக் காரணம் காட்டி அரசபடைகள் நடத்திய அகோர வேட்டையில் எங்கள் பெண்கள் கணவன்மாரைப் பறிகொடுத்தனர். தந்தையரை இழந்தனர். கூடப்பிறந்த சகோதரரை இழந்தனர். இன்று பல்லாயிரம் தமிழ்ச் சகோதரிகள் விதவைகளாக, ஆதரிக்க எவருமற்ற அநாதைகளாக, வறுமையிலும் தனிமையிலும் வாடுகின்றனர். அவர்களை அவல வாழ்வுக்குள் தள்ளிய ஆட்சியாளர்கள் அவர்களின் விடிவுக்கு வழிகாட்டவில்லை. விமோசனத்துக்குக் கரம் கொடுக்கவில்லை. மாறாக அவர்கள் மீது மேலும் மேலும் துயரங்களைச் சுமத்துகின்றனர்.

இலங்கைப் படையினர் பாலியல் வல்லுறவை ஒரு போர் ஆயுதமாகப் பயன்படுத்தினர். இது மனித உரிமைகள் காப்பகத்தின் குற்றச்சாட்டு. எங்கள் பெண்கள் எத்தனை பேர் படையினரின் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திக் கொல்லப்பட்டனர். எத்தனை பேர் பாலியல் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டு, தங்கள் வாழ்வை இழந்தனர். இது இன்னும் எண்ணி முடிக்கப் படாத கணக்கு. ஆனால் அரசு மறுப்பு அறிக்கைகளுக்குள் தன்னை மறைக்க முயல்கிறது. ஆனால் அவலங்களுக்குள் தள்ளப்பட்டு இன்னும் உயிர் மட்டும் எஞ்சியிருக்கும் பெண்களும், 'சனல் 4' வீடியோக் காட்சிகளும் அசைக்க முடியாத சாட்சிகளாக எழுச்சி பெற்று நிற்கின்றன. போரின்போது எவருமே காணாமற் போக வில்லையாம். இப்படிச் சொன்னவர் வேறு யாருமல்ல, நாட்டின் தலைவரான ஜனாதிபதியின் சகோதரரும், இலங்கையின் பாதுகாப்புக்குப் பொறுப்பானவருமான பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ. அதுமட்டுமல்ல அவர் வடக்கு, கிழக்கு தமிழர்களின் பிரதேசம் அல்ல என பொய்யை உண்மையைப் போல் கூறி முழங்கியவர்.

### கோத்தாவின் பம்மாத்து

போரின்போது படையினரிடம் சரணடைந்த எவரும் காணாமற் போகவில்லை என்றால் தங்கள் பிள்ளைகளைத் தேடியலையும் அன்னையரும், தங்கள் கணவர்களைத் தேடியலையும் பெண்களும் மனநோயாளிகளா? நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் ஆதாரங்களுடன் சாட்சியம் அளித்தவர்கள் பொய்யர்களா? காணாமற்போனோர் பற்றிய விவரங்களைக் கோரி இடம்பெறும் ஆர்ப்பாட்டங்களும், உண்ணாநோன்புப் போராட்டங்களும் பொழுது போக்குக்காக நடத்தப்படுகின்றனவா? சிங்களப் படையினரை வழிநடத்தும் கோத்தபாய ராஜபக்ஷ மட்டும் உண்மை பேசுகிறார். பாதிக்கப்பட்ட பெண்களும் தாய்மார்களும் பொய் பேசுகின்றார்கள் என்றால், உலகம் அதை ஏற்றுக்கொள்ளுமா?

எங்கள் பெண்கள் தங்கள் பிள்ளைகளை, கணவன்மாரை, தந்தையரை பத்து வருடங்கள், பதினைந்து வருடங்கள் என சிறையில் வாடவிட்டு வறுமையிலும் தனிமையிலும் வாடுகின்றனர். அவர்களை விடுதலை செய்ய அல்லது நீதிமன்றில் நிறுத்தக்கோரி நடத்தப்பட்ட போராட்டங்கள் செவிடன் காதில் ஊதிய சங்காகி வீண்போயின. அவர்கள் குற்றவாளிகள் தான் என்றால் அரசு ஏன் நீதி விசாரணைக்கு மறுக்கிறது? அப்படிச் செய்வோம், இப்படிச் செய்வோம் என வாக்குறுதி வழங்கிவிட்டு ஏன் காற்றில் பறக்க விடுகிறது?

படுகொலைகள், பாலியல் வன்முறைகள், காணாமற்போகச் செய்தல், நீண்ட காலம் சிறையில் அடைத்து வைத்தல் என்பன அவர்களைப் பாதித்தாலும் அடிப்படையில் துன்பங்களில் உழல்பவர்கள் பெண்களே. பெண்கள் மீதான அரச ஒடுக்குமுறை, பொருளாதார ஒடுக்குமுறை, பாலியல் ஒடுக்குமுறை, உளவியல் அடிப்படையிலான ஒடுக்குமுறை, நடமாட்ட சுதந்திரத்துக்கான ஒடுக்குமுறை எனப் பல வடிவங்களில் விரிகிறது.

### அரசின் கையாள்களின் ஓலம்

அரச ஒடுக்குமுறைக்கு எதிராக பெண்களின் ஒவ்வொரு அடியும் பெண் விடுதலை நோக்கிய பயணத்தில் நாம் நடக்கும் ஒவ்வொரு படிகள், இப்படியாக எமது தமிழ்ச் சமூகம் ஒடுக்கப்படும் இவ்வேளையில், அந்த ஒடுக்குமுறைகளின் கையாள்கள் அரசுடன் இணங்கிப் போகவேண்டுமென ஓலமிடுகின்றனர். ஒடுக்குமுறைகளுடன் இணக்க அரசியல் நடத்தி ஒடுக்குமுறையின் பங்காளிகளாக மாறிவிட்ட இவர்கள் எம்மை இணங்கிப் போகவில்லை எனக் குற்றம் சுமத்துகின்றனர். ஆனால் மக்களைப் பொறுத்தவரையில் இணக்க அரசியல் என்பது ஏமாற்றப்படும் அரசியலாக, வஞ்சிக்கப்படும் அரசியலாக, ஒடுக்குமுறைகளை ஆதரிக்கும் அரசியலாகவே வரலாறு முழுவதும் நீண்டு வந்தது.

சிங்கள ஆட்சியாளர்களுடன் சேர். பொன். இராமநாதன் ஓர் இணக்க அரசியலை மேற்கொண்டார். ஆனால் மேல்மாகாண பிரதிநிதித்துவம் தருவதாகக் கூறி ஏமாற்றிய வஞ்சனையால் தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாகவே சட்டசபைத் தேர்தலைப் பகிஷ்கரிக்கும் நிலை தோன்றியது. அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் டட்லி சேனநாயக்காவுடன் ஓர் இணக்க அரசியலை நடத்தி ஓர் அமைச்சரானார். அவரின் சம அந்தஸ்துக் கோரிக்கை வெற்றி பெறவில்லை. மாறாக மலையக மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது. கிழக்கில் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப் பட்டன. தமிழரசுக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஓர் இணக்க அரசியலை மேற்கொண்டு அமரர் திருச்செல்வம் அமைச்சரானார். வாக்களிக்கப்பட்ட மாவட்டசபை கிடைக்கவுமில்லை. திருமலை கோணேஸ்வர வலயம் புனித பிரதேசமாகப் பிரகடனப் படுத்தப்படவுமில்லை.

அல்பிரட் துரையப்பா, அருளம்பலம், தியாகராசா போன்றவர்களும் சிறிமாவோ பண்டாரநாயக்காவுடன் இணக்க அரசியலை நடத்தினர். தமிழ் மக்களுக்கு எந்தவொரு விமோசனமுமே கிடைக்கவில்லை. மாறாக புதிய அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் தமிழ் மக்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாக்கப்பட்டனர். தரப்படுத்தல் மூலம் தமிழ் மாணவர்களின் உரிமை பறிக்கப்பட்டது.

### டக்ளஸின் இணக்க அரசியல்

இன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஓர் இணக்க அரசியலை நடத்துகிறார். எம்மையும் இணக்க அரசியலில் இணைத்து தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைக்குத் துணைபோகும் படிக்கு உரத்துக் குரல் எழுப்புகிறார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருப்பதையும், பறிகொடுப்பதாகக் கண்ணீர் விட்டவாறே பறிப்பவர்களின் கரங்களுக்கு உரமூட்டி வருகிறார். பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்ட பொலிஸ், சிவில் நிர்வாக உரிமைகளைப் பறித்த 18 ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவு அளித்து அமைச்சர் டக்ளஸின் இணக்க அரசியல் பெருமை பெற்றது. 'திவிநெகும' மூலம் மாகாணசபையின் மேலும் பதின்மூன்று அதிகாரங்கள் பறிக்கப் பட்டன. அமைச்சரின் இணக்க அரசியல் வடக்கு, கிழக்கை இரண்டாகப் பிரித்தன. தமிழ் மக்களின் ஆணி வேரையே அறுக்கும் இவ்வாறான கைங்கரியங்களுக்கு துணை போக ஓர் இணக்க அரசியல் தேவையா?

போரின் காரணமாக இடம்பெயர்ந்த வலிகாமம் வடக்கின் மக்கள் இன்றுவரை அகதிமுகாம்களில் அல்லற்படுகின்றனர். வளம் கொண்ட விவசாய பூமி வலிகாமம் வடக்கு மிளகாய், வாழை, மரவள்ளி என இலங்கைப் பொருளாதாரத்துக்கு வளம் சேர்த்த மண் இது. மாவிட்டபுரம் வெற்றிலை என்ற சொல் கேட்டாலே நாவில் நீர் ஊறும். வளம் அள்ளித் தந்த அந்த மண் இன்று இராணுவ ஆக்கிரமிப்பில் சிக்கிக் கிடக்கிறது. மயிலிட்டியின் மீன் வரவுக்காக ஒரு காலத்தில் கொழும்புச் சந்தை காத்துக்கிடக்கும். அலையடிக்கும் அந்தக் கடற்கரை மண் இன்று ஆக்கிரமிப்பாளர்களின் பாதங்களில் சிதைகிறது. இருபத்துமூன்று ஆண்டுகள் கடந்த பின்பும் அங்கு மக்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்படவில்லை. அந்த மக்கள் தாம் பிறந்து வளர்ந்து தொழில் செய்து வாழ்ந்த இந்தப் பூமியைக் கேட்டு நடத்தும் போராட்டங்கள் மீது வன்முறைகள் மேற்கொள்ளப் படுகின்றன. குழப்பும் முயற்சிகள் இடம்பெறுகின்றன. அந்த மக்களுக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒருமுறை தானும் குரல் கொடுத்தார்ா? ஒரு விரலை அசைத்தாவது ஆதரவு கொடுத்தாரா? அமைச்சரவையில் ஒரு கோரிக்கை முன்வைத்தாரா?

இன்று நாவற்குழியில் சிங்களக் குடியேற்றம், கிளிநொச்சியில் சிங்களக் குடியேற்றம், மணலாற்றில் சிங்களக் குடியேற்றம், முள்ளியவளை தமிழ் மக்கள் 1972 தொடக்கம் குடியிருந்த ஐயனார்புரத்தில் முஸ்லிம் குடியேற்றம். ஒட்டுமொத்தத்தில் தமிழ் மக்களின் பாரம்பரிய தாயக பூமியிலேயே இன விகிதாசாரத்தை மாற்றி தமிழ் மக்களை சிறுபான்மையினராக்கிப் பல வீனப்படுத்தும் சதி அரங்கேற்றப்படுகிறது.

### இணக்க அரசியலா? துரோக அரசியலா?

எல்லாவற்றையும் பறித்து தமிழ் மக்களைப் படுகுழியில் தள்ளும் இந்த இணக்க அரசியல் தேவைதானா? இது இணக்க அரசியலா அல்லது துரோக அரசியலா? அண்மையில் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மன்னார் அடம்பனில் குடிதண்ணீர்த் திட்டத்தைத் திறந்து வைத்து உரையாற்றும்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அபிவிருத்தியில் ஒரு கல்லையாவது தூக்கிப்போட்டார்களா எனக் கேள்வி எழுப்பினார்.

அதிகாரத்தில் இருப்பவர்கள் ஆட்சியாளர்கள், மக்களிடம் வரி வாங்குபவர்கள் ஆட்சியாளர்கள், வெளிநாடுகளில் கடன் பெறுபவர்கள் ஆட்சியாளர்கள். அபிவிருத்திகளை மேற்கொள்ளவேண்டிய கடமை அவர்களுடையதே. எந்தவித அதிகாரமும் இல்லாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எப்படி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்?

மாவட்டப் பிரதேச அபிவிருத்திக் கூட்டங்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அழைக்கப்படுவதில்லை. அப்படி அவர்கள் கலந்து கொண்டாலும் அவர்களின் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி கலந்துகொண்ட அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டத்துக்குக் கூடத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்படவில்லை. இப்படியான ஒரு திட்டமிட்ட புறமொதுக்கல் நிலையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் ஒரு கல்லை என்ன, ஒரு துரும்பைக்கூட அபிவிருத்தியில் தூக்கிப்போட முடியுமா? தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தெரிவுசெய்தமை அபிவிருத்தி என்ற பேரில் அடிவருடி அரசியல் நடத்தவல்ல. இழந்துபோன உரிமைகளை மீண்டும் பெற, பறிபோகும் தாயக மண்ணைத் தடுத்துக் காக்கவே. அகன்ற வீதிகள், உயர்ந்த கட்டடங்கள் இவை மட்டும் அபிவிருத்தியாகிவிட முடியுமா? அபிவிருத்தி என்பது அலங்காரக் காட்சிகளும், அழகுக் கோலங்களுமா?

மக்களின் உரிமைகள் கிட்டும்போது, வாழ்வாதாரம் மேம்படுத்தப்படும் போதுதான் மக்கள் அகன்ற வீதிகளின் பயன்களை அனுபவிக்க முடியும். உயர்ந்த கட்டடங்களில் நம் தேவையைப் பூர்த்தி செய்ய முடியுமா? தனது சொந்தக் காணிக்குப் போக அனுமதிக்கப்படாத ஒருவனுக்கு அகன்ற வீதியால் என்ன பயன்? தனது சொந்தத் தொழிலைச் செய்ய அனுமதிக்கப்படாத ஒருவனுக்கு உயர்ந்த கட்டடங்களால் என்ன பயன்?

இன்று பெண்கள் மீதான ஒடுக்குமுறை என்பது இனஒடுக்குமுறையின் ஓர் அங்கமாக மாறிவிட்டது. எனவே அரசியல் விடுதலை முழுமையடையும்போதே பெண்களின் விடுதலையும் சாத்தியமாகும்.

எனவே, எமது உரிமைப் போராட்டத்தில் பெண்களும் ஆயிரமாயிரமாய் இணைந்து அரசியல் விடுதலை மூலம் பெண்கள் விடுதலையை வெற்றிகொள்ள அணி திரளுமாறு அன்புடனும் உரிமையுடனும் அழைக்கின்றேன் - என்றார் சரவணபவன். (ஓ)

# அண்ணாசிலை அணியை தோற்கடித்து இறுதிச் சுற்றுக்குள் சென்.பீற்றர் வி.க.

கரணவாய்,மார்ச் 10

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் நேற்று முன்தினம் இடம்பெற்ற பரபரப்பான ஆட்டத்தில் சென் பீற்றர்ஸ் அணி அண்ணா சிலை விளையாட்டுக் கழக அணியை தோற்கடித்து அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

அணிக்கு 11 வீரர்கள் பங்கு பற்றும் வடமராட்சிப் பிரதேசத்துக்கு உட்பட்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகிறது.

இதில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஆட்டம் ஒன்றில் சென் பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணியும், அண்ணா சிலை விளையாட்டுக் கழக அணியும் மோதின.

ஆட்டம் தொடங்கி முடியும் வரை மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இவ் வாட்டத்தில் எந்த அணி வெற்றிபெறும் என்று கூற முடியாத அளவுக்கு ஆட்டத்தில் அனல் பறந்தது.

முதல் பாதி ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் தத்தமது அணிக்கான கோலைப் பெறும் முயற்சிகளில் ஈடுபட்டனர். இதனால் இரு அணி வீரர்களின் ஆட்டங்களினால் இரு பகுதி கோல்ப் பகுதியை அடிக்கடி பந்து ஸ்பரித்த வண்ணம் இருந்த போதும் கோல் பெறும் வாய்ப்புக்களை இரு அணியினரும் தவறவிட்ட வண்ணம் இருந்தனர்.

இரு அணியினரும் கோல் பெறாத நிலையில் இடைவேளைக்காக ஆட்டம் நிறுத்தப்பட்டது.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகியதும் போட்டியில் இறுக்கநிலை காணப்பட்டது. இரு அணியினரும் வெற்றிக் கோலைப் பெறுவதற்காக கடுமையாகப் போராடினர். இந்நிலையில் சென் பீற்றர்ஸ் அணி வீரர் அசோக் தனக்கு கிடைத்த பந்தினை எவ்வித பதட்டமும் இன்றி கோல் கம்பத்துக்குள் புகுத்தி கோல் ஒன்றைப் பெற்றுக் கொடுத்தார். இக் கோலே அவ்வணியின் வெற்றிக் கோலாகவும் அமைந்தது.

இதன் பின்பு இரு அணியினரும் பெரும் முயற்சிகளை மேற்கொண்டபோது கோலைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இறுதியில் சென்.பீற்றர் அணி 1:0 என்ற கோல்க்கணக்கில் வெற்றியீட்டியது.

அதற்கு முன்னர் இடம் பெற்ற மற்றொரு ஆட்டத்தில் வதிரி டையமன்ஸ் விளையாட்டுக்கழகமும், சமர பாகு நியூட்டன் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டனர். இதில் டையமன்ஸ விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியது.

(400-422)

# உடையார்கட்டு ம.வி. அணி கிரிக்கெட்டில் சம்பியனானது

புதுக்குடியிருப்பு. மார்ச் 10

புதுக்குடியிருப்பு கோட்டப் பாடசாலைகளுக் கிடையில் இடம்பெற்ற பெண்களுக்கான 5 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் உடையார்கட்டு மகா வித்தியாலயம் சம்பியனாகியது.

புதுக்குடியிருப்பு றோ.க. வித்தியாலய மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் உடையார்கட்டு மகா வித்தியாலய அணியை எதிர்த்து புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற உடையார் கட்டு மகா வித்தியாலய அணி, துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய உடையார் கட்டு மகா வித்தியாலய அணி வை.சர்மிளா, எஸ். காயத்திரி ஆகியோரின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் 4 இலக்குகளை இழந்து 52 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் காயத்திரி 15 ஓட்டங்களையும் , வை.சர்மிளா ஒரு சிக்ஸர், இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக 25 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி சார்பில் சிந்துஜா, கஸ்தூரி ஆகியோர் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

53 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி உடையார்கட்டு மகா வித்தியாலயத்தின் துல்லியமான பந்துவீச்சிற்கும், களத்தடுப்புக்கும் ஈடு கொடுக்க முடியாமல் 4.2 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 44 ஓட்டங்களை மட்டும் பெற்று 8 ஓட்டங்களால் தோல்வியை சந்தித்தது.

இந்த அணியின் மூன்று வீராங்கனைகள் ''ரன் அவுட்'' முறையில் ஆட்டம் இழந்தமை குறிப்பிடத்தக்கது.

(400)

# மாத்தளை தோமஸ்,ஜனாதிபதி கல்லூரி தேசிய ஹொக்கியில் சம்பியன்கள்

## யாழ்ப்பாணத்தில் நேற்று விறுவிறுப்பான ஆட்டங்கள்



ஜனாதிபதி பெண்கள் கல்லூரி

மாத்தளை தோமஸ் கல்லூரி



யாழ்ப்பாணம்,மார்ச்10

பாடசாலை அணிகளுக்-கிடையிலான 19 வயதுப் பிரிவு ஆண்,பெண் இருபாலாருக்குமான தேசியமட்ட ஹொக்கிச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டங்கள் நேற்றுச் சனிக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பிக்னல் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றன இதில் பெண்கள் பிரிவில் ஜனாதிபதி பெண்கள் கல்லூரியும், ஆண்கள் பிரிவில் மாத்தளை சென்.தோமஸ் கல்லூரி அணியும் வெற்றி பெற்று 2013 ஆம் ஆண்டுக்க தமதாக்கிக் கொண்டன.

முதலில் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கொழும்பு ஜனாதிபதி பெண்கள் கல்லூரியை எதிர்த்து மாத்தளை சங்கமித்த பெண்கள் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் கொழும்பு ஜனாதிபதி பெண்கள் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டிச் சம்பியன் ஆகியது.

மூன்றாமிடத்துக்குகான ஆட்டத்தில் கண்டி சீத்தா தேவி கல்லூரி அணியை எதிர்த்து அன்ரனிஸ் பெண்கள் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் கண்டி சீத்தா தேவி கல்லூரி அணி 4:0 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டி மூன்றாமிடத்தை தனதாக்கிக் கொண்டது. இறுதியாட்டத்தில் சிறந்த கோல்காப்பாளராக மாத்தளை சங்மித்த பெண்கள் கல்லூரி அணியைச் சேர்ந்த ரெக்மினி பாக்கிய கொடித்துவக்கு தெரிவு செய்யப்பட்டார். சிறந்த வீராங்கனையாக ஜனாதிபதி பெண்கள் கல்லூரி அணியைச் சேர்ந்த சதுணி உமேஷா தெரிவு செய்யப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் கண்டி சில்வெஸ்ரர் கல்லூரி அணியை எதிர்த்து மாத்தளை சென். தோமஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் மாத்தளை சென் தோமஸ் கல்லூரி அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டிச் சம்பியனானது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் கொழும்பு வெஸ்லி கல்லூரி அணியை எதிர்த்து கண்டி தர்மராஜா கல்லூரி அணி மோதிக் கொண்டது இதில் கொழும்பு வெஸ்லி கல்லூரி அணி 2:0 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டி மூன்றாமிடத்தை தனதாக்கிக் கொண்டது. இறுதியாட்டத்தில் சிறந்த கோல்காப்பாளராக கண்டி சில்வெஸ்ரர் கல்லூரி அணியைச் சேர்ந்த சனஹ சத்துருவா தெரிவு செய்யப்பட்டார்., சிறந்த வீரராக மாத்தளை சென்.தோமஸ் கல்லூரி அணியைச் சேர்ந்த என்.கே.வில்வராச்சி தெரிவு செய்யப்பட்டார்.

(த-23)

# 55 ஓட்டங்களால் சென்ரலை வென்றது ஜொலிஸ்ரார்

வலி.வடக்கு மார்ச் 10

கொக்குவில் கிழக்கு வளர்மதி சனசமூக நிலையத்தினால் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் அமரர்களான விக்ரம், கங்குராஜன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 30 இலக்குகள் மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டி ஆட்டமொன்றில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் 55 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற போட்டி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகமும் யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் 25பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 186 ஓட்டங்களைப் பெற்றது. மதுசன் 4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸ்சர் அடங்கலாக 52 ஓட்டங்களையும், மணிவண்ணன் 37 ஓட்டங்களையும், பகீரதன் 25 ஓட்டங்களையும், லட்சுமிகாந் 23 ஓட்டங்களையும், உமாதரன் 20 ஓட்டங்களுடன் உதிரிகளாக 18 ஓட்டங்களும் பெறப்பட்டன.

சென்ரலைட்ஸ்ள விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கோகுலன் 6 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றங்களுடன் 19 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளையும், வியாசன் 6 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 35 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், மயுரன் 38 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக் துடுப்பெடுத் தாடிய சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் 23 இலக்குகளில் அனைத்து பந்துப்பரிமாற்றங்களையும் இழந்து 131 ஓட்டங்களை பெற்றது. ஜேம்ஸ் ஜாக்சன் 4 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகளுடன்51 ஓட்டங்களையும், ஸ்ரீபன்ராஜ் 26 ஓட்டங்களையும், எட்வேட் எடின் 12 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 22 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தைச் சோந்த மதுசன் 6 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 16 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், லட்சுமிகாந் 6 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 31 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், பகீரதன் 5 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 26 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், ருஸ்மன் ஒரு பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 5ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள். (ங-86)

# வவுனியா தமிழ் ம.ம.வி. சம்பியன்

வவுனியா,மார்ச் 10

வவுனியா தெற்கு வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்டப் பூப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஆண்களுக்கான இரு பிரிவுகளிலும் வவுனியா தமிழ்மத்திய மகாவித்தியாலயம் சம்பியனாகத் தெரிவு செய்யப் பட்டுள்ளது.

இந்தப் போட்டிகள் கடந்த வாரம் வவுனியா நகர சபை ஆடுகளத்தில் இடம்பெற்றன. முதலில் இடம்பெற்ற 15 வயது ஆண்களுக்கான ஆட்டத்தில்வவுனியாதமிழ்மத்திய மகாவித்தியாலயமும், வீரபுர மாணிக்க வாசகர் வித்தியாலயமும் போட்டியிட்டன. இதில் 2:0 என்ற நேர் செற்றில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய அணி வென்று சம்பியனாகியது. இதில் 3 ஆம் இடத்தை பண்டாரிக்குளம் விபுலாந்தா கல்லூரி அணி பெற்றுக்கொண்டது. அடுத்து இடம்பெற்ற 19 வயது ஆண்களுக்கான ஆட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயமும், பண்டாரிக்குளம் விபுலாணந்தாக் கல்லூரியும் போட்டியிட்டன. இதில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய அணி வென்று சம்பியனாகியது. இதில் மூன்றாமிடத்தை வெளிக்குளம் கனிஷ்ட பாடசாலை பெற்றது.

15 வயதுப் பெண்களுக்கான ஆட்டத்தில் முஸ்லிம் மகாவித்தியாலயம் முதலாமிடத்தையும், இறம்பைக்குளம் மகாவித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

19 வயதுப் பெண்களுக்கான ஆட்டத்தில் இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி, வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மற்றும் வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயம் என்பன முறையே முதல் மூன்று இடங்களைப் பெற்றுக் கொண்டன.

(400)

# உதைபந்தில் வென்றவர்கள்.....



நல்லூர் பிரதேசசபை செயலக மட்டத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மணியம்தோட்டம் விளையாட் டுக்கழகம் வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்தது.

(ங-17)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## பொலிஸ் நிலையங்களில் முறைகேடா ? தயக்கம் ஏதும் இன்றி முறையிடுங்கள்

அச்சம் கொள்ளத் தேவையில்லை என்கிறது ஆணைக்குழு

கொழும்பு ,மார்ச் 10

பொலிஸ் நிலையங்களில் நிகழும் முறைகேடுகள் சம்பந்தமாக வாய்திறவாது அவற்றைத் தாங்கிக்கொண்டு பொறுமையாக இராது , பொலிஸ் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்துக்கு அல்லது மாகாண அலுவலகங்களுக்கோ நேரடியாக வந்தோ அல்லது கடித மூலமாகவோ ,தொலைபேசியின் மூலமாகவோ முறைப்படுகளை முன்வைக்க முடியும் என்று பொலிஸ் ஆணைக்குழு அறிவித்திருக்கிறது.

பொலிஸ் துறை மீது உள்ள பயத்தின் காரணமாக அத்தகைய அநீதிகள் சம்பந்தமாக பொலிஸாருக்கு எதிராக முறைப்பாடுகளைத் தெரிவிக்காதிருக்கும் சந்தர்ப்பங்களும் இருக்கக் கூடும் எனவும் அந்த ஆணைக்குழு தெரிவிக்கிறது.

அத்தகைய முறைப்பாடு ஏதும் கிடைக்கும் பட்சத்தில் உடனடியாகவே இன,மத, குல வேறுபாடுகளோ அரசியல் வேறுபாடுகளோ இன்றி பக்கச்சார்பற்ற விசாரணை ஒன்றின் பின்னர் பொதுமக்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு பொலிஸ் ஆணைக்குழு செயற்படும் என்று அதன் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதே போன்று தமது கிராமத்தில் அல்லது பிரதேசத்தில் இடம்பெறும் சமூகவிரோதச் செயல்கள் சம்பந்தமாக பெயரைக் குறிப்பிடாத விதமாகத்தானும் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகளைத் தெரிவித்தால் அதுசம்பந்தமாகத் தேடிக் கண்டறிந்து முறைப்படியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அந்த அதிகாரி கூறியுள்ளார். இது பொதுமக்களின் மனித உரிமைகளைப் பேணிக் காப்பதற்கும் ஒவ்வொரு குடிமகனுக்கும் சட்டத்தை நியாயமான விதத்தில் நடைமுறைப்படுத்தவும் ,நபர்களுக்கிடையிலான சச்சரவுகள் பாரதூரமான சம்பவங்கள் வரையில் நீண்டு செல்வதைத் தவிர்த்து விடுவதற்கும் பேருதவியாக இருக்கும் என்றும் பொலிஸ் ஆணைக்குழு சுட்டிக்காட்டுகிறது.

(ஒ-22)

## வீடு வாடகைக்கு

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அருகில் சிவகுருநாதர் வீதியில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- 0775497437

## திருத்தம்

09.03.2013 அன்று உதயன் பத்திரிகையில் 18ஆம் பக்கத்தில் பிரசுரமாகிய சுப்பிரமணியம்-நாகேஸ்வரி என்பவரின் மரண அறிவித்தலில் ஜீவகுமார், பத்மஜோதி, ஜீவபாலன் ஆகியோர் காலஞ்சென்றவர்களான என தவறுதலாக பிரசுரமாகி விட்டது என்பதனை அறியத் தருகிறோம். (34312)(14.16.8)

## கண்ணீர் அஞ்சலி

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிவான் நீதிமன்றில் பணிபுரிந்தவரும், மூத்த அலுவலருமான

### செல்லையா சுப்பிரமணியம்



பார்ப்பதற்கு எளியனாய்
பழகுவதற்கு இனியனாய்
உற்றநல் ஊழியனாய்
உயர்ந்த நல் பண்பினனாய்
அற்புத சேவை செய்த -எங்கள்
செல்லையா
சுப்பிரமணியத்தின் ஆன்மா
சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

துயருறும் சக அலுவர்களான-
சிவரூபன், றமேஸ், ஸ்ரீதரன், கேசவன், சுகானந்தம், ஆரூரன்

## மரண அறிவித்தல்

### திருமதி தவலிங்கம் ராஜேஸ்வரி



பூதவராயன் ஒழுங்கை, பருத்தித் துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவலிங்கம் ராஜேஸ்வரி நேற்று முன் தினம் (08.03.2013) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற முத்தையா தவலிங்கத்தின் (ஓய்வுபெற்ற இலிகிதர், இலங்கைவங்கி, பருத்தித்துறை) மனைவியும், ரவீந்திரா, காலஞ்சென்ற ரவிச்சந்திரா மற்றும் நிர்மலா, மணிமாலா, தவரவி ஆகியோரின் அன்புத் தாயும், செல்வச்சந்திரன், சுதாகரன் ஆகியோரின் அன்பு மாமியும், கௌசிகன், ஜதுசிகன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.03.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர் மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பூதவராயன் ஒழுங்கை,
பருத்தித்துறை. (2.6.7)(சி/6995) குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனை ஊழியர் புஸ்பராணியின் கணவரும் யாழ்.பிராந்திய நீர் வெறுப்பு நோய் தடுப்பியக்க பொது சுகாதாரப் பரிசோதகர் சதீஸ் அவர்களின் மாமனும் ஆகிய

### செல்லையா சுப்பிரமணியம்

அவர்கள் 08.03.2013 அன்று சிவபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, வேலணை.
சுகாதார வைத்திய அதிகாரியும் உத்தியோகத்தர்களும்.
(34355)(6.16.14)

## இந்திய வீட்டுத் திட்டம் குறித்து தமிழ்க் கூட்டமைப்புடன் பேச்சு

யாழ்ப்பாணம், மார்ச் 10

அடுத்த கட்ட இந்திய வீட்டுத் திட்டத்துக்குரிய கிராமங்கள் மற்றும் பயனாயளிகளைத் தெரிவு செய்வது தொடர்பில் இந்தியத் துணைத்தூதருக்கும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரதேச சபைத் தவிசாளர்களுக்குமிடையில் கலந்துரையாடல் ஒன்று நேற்று சனிக்கிழமை இடம் பெற்றுள்ளது.

இந்திய வீட்டுத்திட்டதை வடக்கில் நடைமுறைப் படுத்துவதற்கு, பிரதேச சபைத் தலைவர்கள், சிவில் சமூகத்தினர் ஒத்துழைக்க வேண்டும் என்று அண்மையில் வடக்குக்கு வருகை தந்திருந்த இந்தியத் தூதுவர் அசோக். கே. காந்தா தெரிவித்திருந்தார்.

இதற்கமைய யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்களுடன், இந்தியத் துணைத் தூதர் வி. மகாலிங்கம் யாழ். நகரில் நேற்று மாலை கலந்துரையாடல் நடத்தினர்.

இந்திய வீட்டுத்திட்டத்தின் மூன்றாவது கட்டத்தின் முதலாம் கட்டப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கவுள்ளன என்றும், இதற்காகத் தெரிவு செய்யப் படவேண்டிய கிராமங்கள், முன்னுரிமைப் படுத்தப்பட வேண்டிய கிராமங்கள் எவை என்பது தொடர்பில் இதன்போது விரிவாக கலந்துரையாடியுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

## கண்ணீர்க் காணிக்கை

### செல்லையா சுப்பிரமணியம்

(வேலணை ஆரம்ப நீதிமன்ற ஊழியர்)
இத்யம் எங்கோ போனதோ



சிந்தையிலே இனித்திருக்கும்
சிரித்த முகம் எங்கே
சிந்திக்க வைத்துவிடும்
சிறந்த பேச்செங்கே ?
குடும்பத்தோடு நட்பென்று
சேரும் நட்பு எங்கே
நாள்தோறும் எனது இல்லம் வந்து
நீ கூறும் அமுத வாக்கெங்கே
பேச்சிலும் மூச்சிலும் சங்கம் சங்கம்
எனக் கூறுவாயே
இறுதி மூச்சில் நீயும்
சங்கமமானேயே

தேடுதற்கரிய தந்தையை
இழந்து மீளாத்
துயருக்குள்ளான
குடும்பத்தவர்
அனைவரினதும்
துயரிலும் பங்கு
கொண்டு ஆத்ம சாந்தி
பெற இறைவனைப்
பிரார்த்திக்கும்

வேலணை - 05
இ.சிவநாதன் குடும்பம்.

## மரண அறிவித்தல்

### திருமதி பரமநாதி மீனாட்சி



காரைநகர் நாவலடிக்கேணியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமநாதி மீனாட்சி நேற்றுமுன்தினம் (08.03.2013) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் -கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு- செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், பரமநாதியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற உமாதேவி, பேரம்பலம் காலஞ்சென்ற குமாரசுவாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.03.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நாவலடிக்கேணி,
காரைநகர். 0213206631
க.ராசமோகன்
(ராசன்-பெறாமகன்)

## மரண அறிவித்தல்

### பழநி சுப்பிரமணியம் (சீவரட்ணம்)

யாழ்ப்பாணம், சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி, கோயிற் குடியிருப்பை வதிவிடமாகவும் கொண்ட பழநி சுப்பிரமணியம் கடந்த (07.03. 2013) வியாழக் கிழமை இறைபதமடைந்தார்.



அன்னார் காலஞ்சென்றவர்களான பழநி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரி (சீதா) யின் அன்புக் கணவரும், சுபோட்ரஞ்சன் (லண்டன்), சித்திராஞ்சன் (கனடா), சுபாஷினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், அனுஷாஞ்சலி (லண்டன்), சுபாஜினி (கனடா), சுவாமிநாதன் (ஆசிரியர், உசன் இராமநாதன் ம.வி) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற இராசையா மற்றும் தங்கரத்தினம் (லண்டன்), தனபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற அருளேஸ்வரி மற்றும் விநாயகலிங்கம் (கனடா), தர்மலிங்கம் (கொழும்பு), காலஞ்சென்ற சம்புலிங்கம் மற்றும் இராஜேஸ்வரி, காலஞ்சென்ற சரவணபவானந்தசிவம் மற்றும் சந்திரமலர் ஆகியோரின் மைத்துனரும், கேஸ்னா, ஹமிற்ரா, கதிர்ஜினி, ஷங்கவி, நிகேஷ், வைஷ்ணவன், வைதேகி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.03.2013) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விநாசித்தம்பி வீதி,
சாவகச்சேரி. (2.6.7)(சி/9226)
தகவல்: குடும்பத்தினர்.
021 227 0497

# பங்களாதேஷைத் தோற்கடித்தது இலங்கை

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணிக்கும், இலங்கை அணிக்குமிடையிலான 2 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது கட்டத்தின் இரண்டாம் நாள் முடிவில் பங்களாதேஷ் அணி போராட்டத்தை வெளிப்படுத்தியுள்ள போதிலும், இலங்கை அணி தொடர்ந்தும் முன்னிலையில் காணப்படுகிறது.


காலியில் இடம்பெற்றுவரும் இந்தக் கட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

3 இலக்குகளை இழந்து 361 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய நாள் ஆட்டத்தை ஆரம்பித்த இலங்கை அணி 4 இலக்குகளை இழந்து 570 ஓட்டங்களைப் பெற்றுத் தனது முதலாவது இன்னிங்ஸை இடைநிறுத்தியது.

நேற்றைய நாள் ஆட்டம் ஆரம்பித்துச் சில நிமிடங்களிலேயே அணித்தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் ஆட்டமிழந்த போதிலும், டினேஷ் சந்திமால், லஹிரு திரிமன்ன இருவரும் பிரிக்கப்படாத 203 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்தனர்.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக லஹிரு திரிமன்ன ஆட்டமிழக்காமல் 155 ஓட்டங்களையும், குமார் சங்ககார 142 ஓட்டங்களையும், டினேஷ் சந்திமால் ஆட்டமிழக்காமல் 116 ஓட்டங்களையும், திலகரட்ண டில்ஷான் 54 ஓட்டங்களையும், திமுத் கருணாரத்ன 41 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.









பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பாக சொஹக் கஷி 3 இலக்குகளையும், அபுல் ஹசன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 2 இலக்குகளை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்று, போராட்டத்தை வெளிப்படுத்தியுள்ளது.

3ஆவது இலக்குக்காக மொஹமட் அஷ்ரபுல், மொமினுல் ஹக் இருவரும் பிரிக்கப்படாத 69 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். துடுப்பாட்டத்தில் பங்களாதேஷ் அணி சார்பாக மொஹமட் அஷ்ரபுல் ஆட்டமிழக்காமல் 65 ஓட்டங்களையும், மொமினுல் ஹக் ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை சார்பாக ஷமின்ட எரங்க, அஜந்த மெண்டிஸ் இருவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

# மீண்டும் வரமாட்டேன்



மீண்டும் ஆஸ்திரேலிய அணிக்கு திரும்பும் எண்ணம் கிடையாது என்று மைக்கல் ஹசி தெரிவித்தார்.

ஆஸ்திரேலிய அணியின் சிறந்த நடுவரிசை துடுப்பாட்ட வீரர் மைக்கல் ஹசி. 79 டெஸ்டில் (6,235 ஓட்டங்கள்) பங்கேற்ற இவர், ஜனவரியில் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார். சுழற்பந்து வீச்சைச் சமாளித்து விளையாடுவதில் வல்லவரான இவர், இல்லாதது ஆஸ்திரேலிய அணிக்கு இழப்பு என்பது இந்திய அணிக்கெதிரான கடந்த இரு டெஸ்ட் போட்டியில் நன்கு வெளிப்பட்டிருந்தது.

இதனிடையே, ஆஸ்திரேலிய அணியின் துடுப்பாட்டத்தை வலுவாக்க, ஹசி மீண்டும் அணிக்கு திரும்ப வேண்டும் என்று கோரிக்கை எழுந்தது.

இது குறித்து ஹசி கூறுகையில்,

"இந்திய தொடருக்காக ஆஸ்திரேலிய அணி ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டு விட்டது. அந்த வீரர்கள் மீது ரசிகர்கள் நம்பிக்கை வைத்து, ஆதரவு கொடுக்க வேண்டும். இந்திய ஆடுகளங்களில் நிலைத்து விளையாடுவது கடினம். இதற்கு முன்னர் இந்திய மண்ணில் விளையாடாதவிடத்து, புதிதாக களமிறங்கும் வீரர்களுக்கு துடுப்பாட்டம் சவாலானது.

இதனால் தோல்வி குறித்து ஒன்றும் சொல்லத் தேவையில்லை. இதற்காக மீண்டும் நான் அணிக்கு திரும்பும் எண்ணம் கிடையாது.

மீதமுள்ள போட்டியில், அவர்கள் மீண்டு வருவர் என்று உறுதியாக நம்புகிறேன் என்றும் தற்போதைய நிலையில் தொடரை வெல்ல முடியாது என்றாலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தும் பட்சத்தில் தொடரை சமநிலை செய்யலாம்" - என்று கூறினார்.

# குக் அபார சதம்

நியூஸிலாந்து அணிக்கெதிரான டெஸ்டில் இங்கிலாந்து அணித்தலைவர் குக், காம்ப்டன் சதம் அடித்து கைகொடுக்க இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் 234 ஓட்டங்கள் எடுத்தது.

நியூஸிலாந்துக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி மூன்று போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் கட்டம் டுனிடினில் நடக்கிறது. இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 167 ஓட்டங்களுக்கு சுருண்டது.

மூன்றாவது நாள் ஆட்ட நேர முடிவில் நியூஸிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 7 இலக்குகளுக்கு 402 ஓட்டங்கள் எடுத்திருந்தது. மக்கலம் 44 ஓட்டங்களும், மார்டின் 17 ஓட்டங்களும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று நான்காவது நாள் ஆட்டம் நடைபெற்றது. அணித்தலைவர் மக்கலம் சிறப்பான ஆட்டத்தால் அரைச் சதம் கடந்தார். இவர் 74 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். மார்டின் 41 ஓட்டங்கள் எடுத்து அரைச்சத வாய்ப்பை இழந்தார். நியூஸிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 9 இலக்குகளுக்கு 460 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது கட்டத்தை இடைநிறுத்தியது.

இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய இங்கிலாந்து அணிக்கு அணித்தலைவர் குக், காம்ப்டன் ஜோடி நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. சவுத்தி, வாக்னர் பந்தை பவுண்டரிகளுக்கு விரட்டிய குக், டெஸ்ட் அரங்கில் தனது 24 ஆவது சதத்தை எட்டினார். மறுமுனையில் தன் பங்கிற்கு, காம்ப்டனும் டெஸ்ட் அரங்கில் தனது முதல் சதத்தை கடந்தார்.

இந்த இணை அணியின் ஓட்ட எண்ணிக்கையை நல்ல முறையில் உயர்ந்தது. குக் 116 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். நான்காவது நாள் ஆட்ட நேர முடிவில் இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் 1 இலக்கு இழப்புக்கு 234 ஓட்டங்கள் எடுத்து 59 ஓட்டங்கள் பின்தங்கியுள்ளது.


## மரண அறிவித்தல்



### சுப்பிரமணியம் நிர்மலாதேவி

நவாலி களையோடை அம்மன் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நிர்மலாதேவி நேற்று (09.03.2013) சனிக்கிழமை காலமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் மனைவியும், புலேந்திரன் (புலந்தி), தேவராசா (அப்பன்), புஸ்பவதி, செல்வம், கலாவதி ஆகியோரின் பாசமிகு தாயும், இராஜேஸ்வரி, புவனேஸ்வரி, கலாவதி, மோகனசுந்தரம் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.03.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி ஆரியம்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நவாலி.



நுனாட்டான் மகாவித்தியாலயத்தில் க.பொ.த. உயர்தர வகுப்பில் கணித, விஞ்ஞானப் பிரிவுகளில் கல்வி கற்கும் மாணவர்கள் வகுப்பாசிரியையான செல்வி துவாரகா விவேகானந்தனுடன் காணப்படுகின்றனர்.



கொழும்பு வர்த்தகரான வேலு ஜெயராசாவால் அக்கராயன் ம.வி. மாணவர்களுக்கு வழங்கப்பட்ட கற்றல் உபகரணங்களை பாடசாலை அதிபர் க.மதுரநாயகம் மாணவர்களுக்கு வழங்குகின்றார். (க-18)



அக்கராயன் வான் பகுதியில் பாயும் வெள்ளத்தின் ஊடாக நடந்து செல்லும் பெண்கள். (க-18)




பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் அகற்றப்பட்ட நிலையில் வெறிச்சோடிக் காணப்படும் அம்பாள்குளம் தற்காலிகச் சந்தை. (க-405)



கிளிநொச்சியில் கடந்த விழிப்புலன் இழந்தவர்களின் செயற்குழுக் கூட்டத்தின் போது செயற்குழு உறுப்பினர்களுடன் காணப்படுகின்றார் கிளிநொச்சி பொது மக்கள் தொடர்பு பொலிஸ் இணைப்பதிகாரியான எம்.எல். அரிப்டீன்.




கிளிநொச்சி ஸ்கந்தபுரம் கிராமத்தில் விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்வனவில் ஈடுபடும் தனியார் வர்த்தகர்கள். (க-18)



கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் அதிகாரிகளால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படுகின்றது. (க-18)



கிளிநொச்சி ஸ்கந்தபுரம் இல 2 பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டியின் சிலகாட்சிகள்.



ஜெய்க்கா நிறுவனத்தினரால் வட்டக்கச்சி மகாவித்தியாலயத்துக்கென மாடிக் கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. (க-405)



கிளிநொச்சியில் இருந்து வருகை தரும் மருத்துவருக்காகக் வன்னேரிக்குளம் மருத்துவமனைக்கு வெளியே காத்திருக்கும் நோயாளிகள். (க-18)



அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்துக் கென அமைக்கப்படும் கட்டட வேலைகளைக் கிளி நொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தலைமையிலான குழுவினர் பார்வையிடுகின்றனர். (க-18)

## advt@uthayan.com
## 0215671111

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

French மொழி கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இது ஓர் அரிய சந்தர்ப்பம்.மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.
புதிய வகுப்புகள் மிக விரைவில்... T.P.021.222.8093
61, Kachchery-Nallur Road, Jaffna
(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)

## சட்ட அலுவலர் பதவிக்கான வெற்றிடம்

### சட்ட உதவி ஆணைக்குழு

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய நிலையங்களில் சட்ட அலுவலராக (AAL) பணியாற்றுவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகுதியானவர்கள் தங்கள் சுயவிவரக்கோவையினை shaheema.lac.psu@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 10 நாள்களுக்குள் மின்னஞ்சல் செய்யவும்.

மேலதிக தொடர்புகளுக்கு: சுவஸ்திகா - 0775556648
(34304)(6.15.8)

## VACANCIES

**Aharam Solutions (Pvt) Ltd**
**#216, Navalar Road, Jaffna**

- **IT Lecturer**
(BSc or equavalant qualification)
- **Part time Auditor**
(min. 1 year Experience)
- **Marketing Executive**
(Good spoken English, young energetic individual with pleasant outgoing personality and computer knowledge of internet and e-mail)

**Contact no:**
021 222 9901
077 5632056

Interested Candidates should send their resume before 15th of March 2013 @ aharamsolution@gmail.com or above mentioned address.

## கடை வாடகைக்கு

1 தளம் 1500 சதுரஅடி கொண்ட 3 மாடி கடை தனியாகவோ பிரித்தோ வாடகைக்கு கொடுக்கப்படும் (கஸ்தூரியார் வீதியில் உள்ள செம்மா தெரு பள்ளி வாசல் அருகில்) அரச/தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு-0777324648 ,0777324637
(33854)(3.6.7)

## Personal Class (கணினி)

- உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
- MS Office, DTP, Web Design, Internet and E-mail, Graphic Design, சிறுவர்களுக்கான கற்கைநெறி
- சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- குறிப்பு: கணினி இல்லாதவர்களுக்கு எனது Laptop மூலமாக கற்பிக்கப்படும்.
- ஆசிரியர்: KRC
- T.P: 0779672038

நல்லூர்
(34212)(6.6.16)

## STUDY IN UK

உங்கள் **LONDON** செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்

**GCE(O/L)** தகமை போதுமானது

**April/ May Intake** ற்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

நடைமுறைகள் மாறினும் எவ்வித மாற்றமும் இன்றி **London** செல்லுங்கள்

**நீங்கள் ஏன் Exponet ஐ தெரிவுசெய்ய வேண்டும்**

- ஆகக் கூடுதலான விசாக்களைப் பெற்றுக்கொடுத்து சாதனைபடைத்துக் கொண்டிருப்பதால்
- பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்கள் VISA தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன
- 4 வருட visa உத்தரவாதம்
- ஒரு மாதத்தில் பயணம்
- 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி(per week)
- GCE(O/L) தகமை போதுமானது
- இலவச IELTS வகுப்புகள்

**HOTLINE : 021 7538395 / 021 2227230**
**011 7 555511/14**

EXPONET
379 - ½, Galle Road, Colombo 06.
197,Arasady Road, Jaffna.
E-mail:nimal@expogroup.lk
Web:www.expogroup.lk

## FRENCH LANGUAGE CENTRE

யாழில் சர்வதேச தரத்தில் French கற்பிக்கும் ஒரே ஒரு நிறுவனம்

## FRENCH CLASSES

Canada, French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட, International Certificates இனை பெற்றுக் கொள்ளலாம்...

ஆசிரியர் : Mr. V. Jegan (Teaching Training in France - 2007, University பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்).

Batch 1 - 16.03.13 Sat 11am
Batch 2 - 18.03.13 Mon 3pm
No. 23, Palaly Road, ஆரியகுளம்.
(அப்பலோ வைத்தியசாலை முன்பாக)
T.P. 0779 789 456

Batch 1 - 19.03.13 Tue 11am
No, 181, 1st Floor, Main Street, Nelliady. (சோதி வீதி முன்பாக)
இணைவு : BCLL English Courses
Deutsch, Sinhala வகுப்புக்களும்...

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
## பழைய மாணவர் சங்கம்
### யாழ்ப்பாணம்
## வருடாந்தப் பொதுக்கூட்ட அறிவித்தல்
## 2013

யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் நடப்பாண்டுக்கான ஆட்சிக் குழுவின் 27ஆவது கூட்டத் தீர்மானத்துக்கமைய வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 30.03.2013 **சனிக்கிழமை** மு.ப. 10 மணிக்கு கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

### நிகழ்ச்சி நிரல்

- தேவாரம்
- அகவணக்கம்
- தலைமை உரை
- அதிபர் உரை
- சென்ற கூட்ட அறிக்கை
- செயலாளர் செயற்பாட்டறிக்கை
- பொருளாளர் கணக்கறிக்கை
- விசேட கணக்காய்வுக் குழுவின் பரிந்துரைகள்
- ஆட்சிக் குழு உறுப்பினர் தெரிவு
- புதிய தலைவர் ஏற்புரை
- பிற விடயங்கள்
- நன்றி உரை
- கல்லூரிக் கீதம்

உறுப்புரிமையை உறுதிப்படுத்த விரும்பும், புதிய விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க விரும்பும் பழைய மாணவர்கள் அலுவலக நேரத்தில் கல்லூரியில் அமைந்துள்ள பழைய மாணவர் சங்க அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**10.03.2013** பதில் செயலாளர்.

## LONDON METROPOLITAN COLLEGE

சர்வதேச தரத்திலான ஆங்கில கற்கை நெறிகளை நடாத்தும் யாழ்ப்பாணத்தின் முன்னிலை ஆங்கில கல்வி நிறுவனம்.
புதிய பிரிவுகள் ஆரம்பம்

**IELTS** ACADEMIC & GENERAL
Duration: 48 hrs Week/ Week ends
- ஒவ்வொரு மாணவர்மீதும் தனிப்பட்ட கவனம்
- முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட கற்பித்தல் வசதி
- IELTS 5.5-6.5 Band பெறுவதற்கான உத்தரவாதம்
- இலவச Tutorial Facilities

**City & Guilds A1 A2 B1 B2**
Duration: 48 hrs Week/ Week ends
- UK அரசாங்கத்தினால் சிபாரிசு செய்யப்பட்டது.
- இதுவரை நடந்த பரீட்சையில் 100% சித்தி.
- காலவரையறையற்ற சான்றிதழ் பெறமுடியும்.
- ESOL, SESOL பரீட்சைகளை தனித்தனியாக தோற்ற முடியும்.

Certificate in **SPOKEN ENGLISH WITH GRAMMAR**
(Quick learning programme)
Duration: 60 hrs Week/ Week ends
- ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனை வளர்த்து கொள்ள விரும்புவோர்க்கான கற்கைநெறி.
- ஆங்கில உரையாடல் புலமையை வளர்ப்பது தொடர்பான பூரண விளக்கங்களுடன் கூடிய கற்கைநெறி.

**DIPLOMA IN ENGLISH**
Duration: 3 Months Week/ Week ends
Writing - 60Hrs Reading - 48Hrs
Listening - 48Hrs Speaking - 48Hrs
Be a power speaker INTENSIVE COMMUNICATION PROGRAM
- தொழில்தேடுவோர், தொழில்புரிவோர், A/L பரீட்சைக்கு தோற்றியோர் ஆங்கில புலமையை வளர்த்து கொள்வதற்கான கற்கைநெறி.
- Speaking, Reading, Listening, Writing ஆகியன விசேட செயன்முறைமூலம் விரிவாக கற்பிக்கப்படும்.
- மாணவர்கள் தமது தேர்ச்சிக்கேற்ப தொடர்ச்சியாக Advanced Dip. In English இனை எம்மிடமே கற்க முடியும்.
- O/L எழுதிய மாணவர்களிற்கு தனிப்பட்ட ரீதியில் கற்கைநெறி ஒழுங்குசெய்யப்படும்.

ஒவ்வொரு மாத முதல் வாரத்திலும் புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படும். தவணை அடிப்படையிலான மிகக்குறைந்த கட்டணம்

#197, Arasady Road, Jaffna, Sri Lanka | Tel: 021 222 7230 | 021 753 8395
E mail: info@lmcjaffna.edu.lk | Web: www.lmcjaffna.edu.lk

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

## நியூ சாயி அக்கடமி

### A/L CHEMISTRY

S.Suresh Bsc(Hons) MBA
2013 - 20 years paper
2014 - Physical & Industrial
2015 - Gases & Thermo
Temple Road, Nallur.
K.K.S.Road, Kokuvil
T.P-0775559028
(34310)(6.6.16)

## BRITISH COLLEGE OF LANGUAGE LEARNING

**PROFESSIONAL ENGLISH SPOKEN**
தொழில் புரிவோருக்கு
**Officers, Managers, Medical students, Doctors, Engineers.**
NIGHT CLASSES
021 373 4121 | 23, பலாலி வீதி, யாழ். | 0771 327 818
(c/6964)(10.6.7)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, இல.15, கென்மஸ் லேன(பழைய நீதிமன்றத்திற்கு முன்னால்) வீட்டுடன் கூடிய 20 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. வீட்டுடன் 5 பரப்பு, 7பரப்பு மற்றும் 8 பரப்பு என பிரித்தும் கொடுக்கப்படும். விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே.இல: 0770367143

## கடை வாடகைக்கு

சாவகச்சேரி நகர் மையப் பகுதியில் டச்சு வீதியில் அமைந்துள்ள 2800 சதுரஅடி கொண்ட கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0777874709
(34310)(6.6.16)

## பழைய பட்டுப்புடைவை பணமாகிறது!
## ஸ்ரீ காஞ்சிபுரம் பட்டு சென்ரர் (PVT)LTD.

## யாழ்ப்பாணம்

வாகன தரிப்பிட வசதியும் உண்டு

தியாகி அறக்கொடை நிறுவன வளாகம், T.C.T. வணிக வளாகம்.
527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

**Tel : 0756271966**

**10.03.2013 முதல் 19.03.2013 வரை**

10 தினங்கள் மட்டுமே!



**பழைய (கிழிந்த) பட்டுப்புடைவைகள்**
**பட்டு வேஷ்டிகள், பட்டுப்பாவாடைகள்,**
பழைய கிழிந்த கூறைப்புடைவைகளும், எந்த நிலையில் இருந்தாலும் காஞ்சிபுரம் மில் விலைக்கே வாங்கிக் கொண்டு உடனே பணம் தரப்படும்.

**பழைய டிஸ்யூ, புடைவைகள் ரூபா 5000/= க்கு மேல் ரூபா 20,000/= வரை வழங்கப்படும்.**

(34386)(2.6.7) குறிப்பு : எங்களுக்கு வேறு கிளைகள் கிடையாது.

வேலை நேரம் காலை 9.30 மணி முதல் இரவு 6.30 மணி வரை - ஞாயிற்றுக்கிழமை கடை உண்டு.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெற் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



பிணங்கள் வேட்டையாடப் படுகின்றன.

02

மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி நஷீத் மீண்டும் காவலில்



24



புற்றுநோயுடன் போராடிய சாவேஸ்

04



03

பஞ்சுக்குள் மறைக்கப்படும் நெருப்பு

தகப்பன் வழியில் தனயன்

21




# சூரியகாந்தி

உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
01

உதயன் 10 மார்ச் 2013 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள்: இருபத்துநான்கு


# காலமெங்கும் தீக்காடுகள்...

ஔண்யன்

01

*1988. வள்..வள்ள்...வள்ள்ள்ள்ள்*

பயமும், வெருட்டலும் இணைந்ததாக நாய்கள் குரைக்கத்தொடங்கினாலே தெரிந்துவிடும். நெய் மணம் முன்னே வர, இந்தியச் சிப்பாய்களின் ரோந்து வீட்டு வளவுகளுக்கூடாக அவர்களால் உருவாக்கப்பட்ட பாதைகள் வழியே தொடரும்.

ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு பாதைகள். ஒரே பாதையில் பயணிப்பதால் புலிகளின் இலக்கு வைப்புக்கு சுலபமாகி, தமது உயிரை இழக்க வேண்டிய நிலை வந்துவிடலாம். அதிலிருந்து தப்பிக்கவே ஒவ்வொரு முறையும் அவர்கள் 'கொலம்பஸாக' மாறி, புதிய வழித்தடங்களைக் கண்டுபிடிக்கவேண்டியிருந்தது.

ஆனால் அதொன்றும் கஷ்டமில்லை. வழியை மறித்து நிற்கும் வேலி மீது, அவர்கள் 'கண்' பட்டுவிட்டாலே போதும். அது பற்றியெரிந்து, வழிவிடும்.

இந்திய இராணுவம் வந்து போகும் தருணங்களில் இப்படி வேலிகள் மர்மமாக எரிவதை எல்லோரும் ஓர் அதிசயமாகவே பார்த்தனர். நெற்றிக்கண்ணால் நக்கீரரை சிவன் எரித்தது போன்று, இந்திய ஜவான்கள் தங்கள் வேலிகளை தீப்பெட்டிகளின் உதவியின்றி எப்படி எரிக்கிறார்கள் என்பது புரிய எம்மவர்களுக்குச் சிலகாலம் எடுத்தது. நீண்ட நாள் தேடலுக்கு பின்னர், இந்திய ஜவான்கள் வேலிகளின் மீது வெண்ணிறப் 'பவுடர்' ஒன்றை தூவுவதையும், அதன் பின்னரே வேலிகள் தீக்குளிப்பதையும் அவர்கள் கண்டனர்.

அந்த வெண்ணிறப்பவுடரின் பெயர் 'பொஸ்பரஸ்'. பெரும்பாலான ஈழத் தமிழர்களுக்கு விஞ்ஞான ஆய்வு கூடத்தையும் தாண்டி, 'பொஸ்பரஸ்' என்ற, ஒட்சிசனுடன் தாக்கமுற்று, தானாகவே எரியக்கூடிய இரசாயனப்பதார்த்தை அறிமுகப்படுத்திய பெருமை இந்திய இராணுவத்துக்கே உண்டு.

02

பொஸ்பரஸின் சிறப்பு இயல்பு எந்த எரிபொருளின் உதவியும் இன்றி எரியும் திறன்தான். மிகச்சிறிய அளவிலான பொஸ்பரஸ் துகள்களே பெரும் தீ விபத்தை உண்டாக்கக்கூடிய அளவுக்கு வீரியமிக்கவை. இதை விட 'பொஸ்பரஸின்' தாக்குதிறனையும், எரிபற்று நிலையையும் உயர்நிலையை அடையச் செய்து, உருவாக்கப்பட்டவையே 'பொஸ்பரஸ்' குண்டுகள். இவை வழக்கமான குண்டுகள் போன்று வெடித்தவுடன் இரும்புச் சிதறல்களை பரவவிடுவதில்லை. கட்டடங்களை தூளாக்குவதில்லை. பேரோசை கூட இல்லை. ஆனால் சத்தமின்றி நொடியிலேயே உயிர்குடித்துவிடும். அது எப்படி? வீழ்ந்தவுடனேயே, தன் இலக்கை தீமூட்டி, நெருப்புக் கோளமாக மாற்றி, சில நிமிடங்களில் மனித உடலின் சதைகளை சாம்பலாக்கிவிடும். மனிதகுலத்துக்கே இத்தகைய குண்டுகள் சாபக்கேடானவை என்பதால், சர்வதேச ரீதியில் தடைசெய்யப்பட்டிருந்தன.

ஆனால் தடையிடப்பட்ட பொருளுக்கே ஈர்க்கும் சக்தி அதிகம். தமது இருப்பைத் தக்கவைத்துக்கொள்வதற்காக பிறமனிதர்களை வேட்டையாடும் குணம் கொண்டவர்கள், இன்னமும் 'பொஸ்பரஸ்' குண்டுகளை வாங்கி கொண்டுதானிருக்கிறார்கள். அவற்றை விற்று தங்கள் பணப்பெட்டிகளை நிரப்புவர்களுக்கும் குறைவில்லை.

03

வன்னியில் போர் மேகங்களின் கருமை கூடத்தொடங்கியிருந்தது. உயிர்பிழைப்பதற்காக ஓடிக்கொண்டிருந்தவர்களை விடாது துரத்தின இயந்திர வல்லூறுகள். இரைகளை இலக்கு வைத்து, தம் பறப்புத் தூரத்திலிருந்து செங்குத்தாக கீழ் நோக்கித் தாழ்ந்து, சரேலென நிமிர்கையில் குண்டுகளை வரிசையாக எச்சமிட்டு செல்லும் அவை.

முதலில் கந்தகத்துடன் இரும்புச் சிதறல்களைக் கொண்ட குண்டுகளை எச்சமிட்ட வல்லூறுகள், பின்னைய காலங்களில் வேலைச் சுலபத்துக்காக பொஸ்பரஸ் குண்டுகளையே அதிகமாக எச்சமிட்டுச் சென்றன. தீ மூண்டெழுந்து, அதீத வெறியோடு மனித உடல்களை, உயிரோடு சுவைக்கத்தொடங்கியது. திகட்டும் மட்டும் அதன் உண்ணும் படலம் தொடர்ந்தது.

ஆனந்தபுரத்தில் வன்னியின் சரித்திரத்தை தீர்மானிக்க முடிவெடுக்கப்பட்டிருந்தது. எல்லா ஊடறுப்புச் சமர்களும் தோற்றுப்போன நிலையில், புலிகள் தம்முடைய எல்லாப்போர் நுட்பங்களையும், படையணிகளையும், சுடுகலன்களையும் ஆனந்தபுரத்தில் குவித்தனர். கைவசமிருந்த டாங்கிகள், ஆட்டிலறிகள் நிலத்தில் புதைக்கப்பட்டு, அவற்றின் சூட்டெல்லை நிலமட்டத்திலானதாக மாற்றப்பட்டிருந்தது. கிட்டத்தட்ட இதேபொறிமுறையைப் பயன்படுத்தியே முல்லைத்தீவுக் கடலோரமாக நாலைந்து டோறாப்படகுகளை கரையில் இருந்து, காலாட்டிக் கொண்டே புலிகள் அழித்திருந்தனர்.

இவ்வளவும் போதாதென்று, போர் நிகழும் இடத்தில் புலிகளின் தலைவரும் இருந்தார். சும்மாவே ஊடறுப்புச் சமர்களில் புகுந்து விளையாடும் புலிகள், தலைவரும் தம்முடன் இறங்கிவிட்டால், அவர்களின் ஆவேசத்தைக் கேட்கவா வேண்டும். ஓயாத அலைகள் எப்படி படைத்தரப்பை 'வெற்றி நிச்சயம்' ஆகப் புறப்பட்டுக் கைப்பற்றிய பகுதிகளை ஒரே இரவில் கைவிட்டோட வைத்ததோ, அதேபோன்று ஆனந்தபுரச்சமரும் திருப்புமுனைப்புள்ளியாக அமையும் என்று புலிகள் நம்பினர். அந்தளவுக்கு திட்டம் மிகத்துல்லியமாக இருந்தது.

எங்கே பிசகு நடந்தது? எவருக்குமே அந்த விலகலுக்கான புள்ளி பற்றி தெரிந்திருக்கவில்லை. புலிகள் சண்டைக்கான ஆயத்தங்களைச் செய்துவிட்டு நிமிர்ந்தபோது, இராணுவம் அவர்களைச் சுற்றி பல அடுக்குகளில் 'பொக்ஸ்' அடித்திருந்தது. இந்தச் சுற்றிவளைப்பால் தாக்குதலுக்குத் தயாரான புலிகளுக்கான வழங்கல்கள் யாவும் துண்டிக்கப்பட்டன. அவ்வளவுதான். இத்தோடு எல்லாமே முடிந்தது என்று படைத்தரப்பு எண்ணிய போது, புலிகள் சமரைத் தொடங்கினார்கள்.

திருப்புமுனையை ஏற்படுத்தும் சமர், தற்காப்பு சமராக மாற்றம் பெற்றது. பல அடுக்குகளில் முன்னணி நிலைகளை அமைத்திருந்த படைகளின், ஒவ்வொரு எல்லையையும் தகர்த்து, புலிகள் வெளியே வந்தும் விட்டனர். ஆனால் வானில் இதுவரையும் வட்டமிட்ட வல்லூறுகள், பொஸ்பரஸ் குண்டுகளை எச்சமிடத் தொடங்கின. தீக்காடு முளைத்தது. முற்றுகையை உடைத்து வெற்றியோடு வெளிவந்தவர்கள் அந்த தீக்காட்டிலே வெந்து போனார்கள். தளபதிகள், ஏராளமான போராளிகள் உயிரோடு கொள்ளி வைக்கப்பட்டிருந்தார்கள்.

அடுத்துவந்த நாள்களில் தாம் கைப்பற்றிய 'பயங்கரவாதிகளின்' உடல்கள் என்று இராணுவம் காட்சிப்படுத்திய புகைப்படங்களில் கேணல் தீபன் உள்ளிட்ட தளபதிகள், போராளிகளின்



உடலங்களில் சூட்டுக்காயம் காணப்படவில்லை. தீயில் வெந்து போன அடையாளங்களையே அவர்களின் உடலங்கள் சுமந்திருந்தன.

04

இப்போது மீண்டும் தமிழகத்தில் தீக்காடு. இங்கே யாரும் பொஸ்பரஸ் பவுடர் வீசவோ, பொஸ்பரஸ் குண்டு போடவோ இல்லை. ஆனாலும் தீ. உடலை ஆகுதியாக்கி, தன் தொப்புள் கொடி உறவுகளுக்காக, தீக்குளித்திருக்கிறான் மணி என்ற மனிதன். தன் சாவையே போராட்டப்பொருளாக்கி, பிறரின் விடிவுக்கு ஏதேனும் செய்யமுடியுமா என்று முயற்சித்திருக்கிறான் இந்த உயிர்க்கொடையாளி. வழமையாகவே தமிழ் மீதும், சமூகத்தின் மீதும் அக்கறை கொண்டவன் மணி. அத்தோடு இந்தியாவின் மீதும் நேசிப்பை பொழிந்தவன்.அதனால் தான் இந்திய மூவர்ணக்கொடியை தன்கையில், பச்சையாகக் குத்திக்கொண்டவன். ஆனால் காலம் அவனுக்கு காந்திதேசத்தின் கருவறுப்புகளை அனுபவமாக உணர்த்தியது.

ஜெனீவாவில் இலங்கை மீதான பிரேரணை கொண்டுவரப்படவுள்ள நிலையில், இந்தியாவின் கூட்டுமனச்சாட்சியை தட்டியெழுப்பி, இலங்கைக்கு எதிராக இந்தியா செயற்பட வேண்டுமென்பதற்காக அவன் தேர்ந்தெடுத்த ஆயுதம் தன்னுடல். பெற்றோல் அவன் சொற்படி, தேகத்தை தனக்குரியதாக்கிக் கொண்டது. முத்துக்குமார், செங்கொடி வரிசையில் ஈழத்தவர்களின் நல்வாழ்வுக்காக தீயிட்டெரிந்து, நீதிகேட்ட உயிர்க்கொடையாளிகளில் ஒருவனாக மணியும் மாறிப்போனான்.

பொஸ்பரஸ் குண்டுகளால் எரிக்கப்பட்ட மனிதத்துக்கு, பெற்றோலால் எரிந்து உயிர்கொடுப்பதற்காக மாண்டு போனான் மணி.

மணியின் உயிராலான குரல் ஜெனிவாவில் நியாயத்தை பெற்றுக்கொடுக்குமா? ★

# பிணங்கள் வேட்டையாடப்படுகின்றன

ஜெரா



உயிர்களைப் பலிகொடுத்த தமிழர்களுக்கு எந்த லாபமும் இல்லையா?

அதையும் இந்தியப் பெருந் தேசமும், நலன்சார்ந்த நாடுகளும் தட்டிப் பறித்துக் கொள்வது எந்த விதத்தில் நியாயம்?

சர்வதேச அரசியல் சந்தையில் எந்தக் காலத்திலும் பிணங்களுக்குப் பஞ்சமிருந்ததில்லை. மன்னர் காலம் தொட்டு இற்றை வரைக்கும் அதன் வரலாற்று நீட்சியை அவதானிக்க முடியும். மிக மிக மலிவாகவும், இலவசமாகவும் இவை கிடைத்து வந்திருக்கின்றன.

ஆபிரிக்கர்களும், இந்தியர்களும், யூதர்களும், மனித நாகரிகத்தின் தொடக்க வாயிலில் படைக்கப்பட்ட பிணங்களின் பெயர்களாய் இருந்திருக்கின்றனர். இந்தப் பிணங்களின் நிணத்தில் பயணித்த காலம் நவீன, பின் நவீன, பின்- பின்னான நவீன காலங்களை எட்டி நிற்கின்றது. ஆனால் பிணங்கள் மட்டும் குறையவில்லை. கால வளர்ச்சிக்கேற்ப நாடு கடந்து இன ரீதியாக, இனக்குழு ரீதியாக, சாதி ரீதியாக, மத ரீதியாக பிணங்கள் விழுந்து கொண்டிருக்கின்றன. ஆகவே பிண அரசியலின் ஆயுள் நெளிவு சுழிவுகளைக் கடந்தும் பயணம் செய்கின்றது.

தமிழர்கள் உலக மூலையொன்றில் நடத்திய விடுதலைப் போராட்டம், மோசமான படிப்பினைகளுடன் மௌனிப்பு நிலைக்கு கொண்டுவரப்பட்டது. யார் சொல்லும் கேட்காத பிள்ளையாக வளர்ந்த போர் வகைதொகையற்ற உயிர்களைக் கொன்று குவித்தது.

போருக்கு ஓய்வு அறிவிக்கப்படுவதற்குள் லட்சக்கணக்கான பிணங்கள் வீழ்ந்தன. ஒரு வாரத்திலேயே அவை நாறின. இரவோடிரவாக போர்க் கிராமத்தை விட்டு அகற்றப்பட்டன. ஆனாலும், பிணங்கள் ஆதாரங்களாயின. கொன்றவர்களே அதனையும் செய்தனர்.

விறுவிறுப்பான கொலைக் காட்சிகளை அனைத்து தரப்பினரும் விரும்பியும், விரும்பாமலும் ரசித்தனர். வெற்றித் திமிரின் பண்டமாகவே பிணங்களின் காணொலி பதியப்பட்டிருந்தது. ஆனால் பின்னர் அவற்றால் எல்லாமே மாறிப்போனது.

போர் மூர்ச்சையாகிச் சில மாதங்கள் கடந்தன. வெற்றிக் கொண்டாட்டங்கள் அடங்கின. அமெரிக்கா, ஐ.நா. மூலம் தன் வேலையையும் தொடங்கியது.

இசைப்பிரியா தொடங்கி நந்திக் கடற்கரையில் துடிதுடிக்கக் கொல்லப்பட்ட பிணங்கள் வரையில் அரங்குக்கு வந்தன. போரின் பின் முதல் தடவை நடந்த ஐ.நா. கூட்டத் தொடரிலும், அது எதிரொலித்தது. அப்போதுதான் நமது பிணங்கள் முதல் தடவையாக சர்வதேச அரசியல் நோக்கி பயணித்தன.

குற்றுயிரும் குறையுயிருமாக போரின் கரை திரும்பியோர் மிக்க நம்பிக்கையோடு இருந்தனர். தமது சாவுகளுக்கு சரியான முடிவொன்று கிட்டுமென்று. பத்திரிகைகளும் அப்படித்தான் எழுதின.

மஹிந்த ராஜபக்ஷவும், அவரின் சகோதரர்களும், சரத் பொன்சேகாவும், முகம் தெரிந்த சில கொலைஞர்களும் தூக்குக் கயிற்றில் தொங்குவது போன்ற கனவுகளை எல்லாம் மதவடி அப்புமார் கண்டனர். ஆனால் எதுவுமே நடக்கவில்லை. சின்ன மிரட்டலோடு இலங்கையை தப்பிக்க விட்டனர்; அல்லது எதையோ பெற்றுக்கொண்டு விடுவித்தனர்.

ஐ.நாவின் கொள்முதல் நாடுகள், இலங்கையை சீனாவின் கையில் இருந்து மீளப் பெற்றுக் கொள்வதற்கான மிரட்டல்பொருளாக ஈழப் பிணப் படங்களைப் பயன்படுத்தத் தொடங்கி விட்டனவோ என்ற சந்தேகம் மெல்ல எழுந்தது.

இரண்டாம் முறையும் ஐ.நா அவை கூடியது. முதல் தடவை போலவே அப்போதும் நடந்தது. இரண்டாவது ஐ.நா. அமர்வுக்கு முன்பும் சில ஆதாரங்களை 'சனல் - 4' விட்டது. அதற்கு அவற்றை யாரோ கொடுத்திருந்தனர்.

அதில் விடுதலைப் புலிகளின் தலைவரது மகன் பாலச்சந்திரனின் ஒருபடம் பிரபலமாயிருந்தது. பாலகன் போர் முனையில் சுட்டுக் கொல்லப்பட்டான் என்ற செய்தியைத் தந்தது - விளம்பரப்படுத்தப்பட்டது. அதனோடு 'பெரியளவிலான அழுத்தம்', 'போர்க் குற்ற விசாரணை' என்ற பதங்கள் அறிமுகப்பட்டன.

இந்த இரண்டில் ஒன்றை இலங்கை மீது அமெரிக்கா பிரயோகிக்கும் என்று சொல்லப்பட்டது. ஆனால் எதுவும் நடக்கவில்லை. மாறாக இலங்கைக்கு மேலுமொரு கால அவகாசம் கிடைத்தது. நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும், ஏற்கனவே அறிமுகமான, எழுத்தில் கிடந்த அறிக்கையை நடைமுறைப்படுத்தவுமே அவ்வளவு அவகாசம் என்றார்கள்.

இப்போது மூன்றாம் தடவை. அதே பழைய கதை. மூன்று படங்களோடு பிரபலமானது, பிரித்தானியா மற்றும் இந்தியாவின் ஊடகங்களும் இப்போது சேர்ந்து கொண்டது.

வெளியான 3 படங்களில் ஒன்று கடந்த முறையும் வெளியாகியிருந்தது. இரண்டுதான் பொது மக்கள் பார்வையில்படாதது.

பட்டிதொட்டியெங்கும் அலறியது. பாலச்சந்திரனின் புகைப்படம் என்பதால், அது மேலும் அதிக கவனம் பெற்றது. ஒரே ஒளிப்படக் கருவியினால், ஒரே இடத்தில் வைத்து ஐந்து நிமிட இடைவெளியில் எடுக்கப்பட்டது என்றார் ஆய்வாளர்.

இவ்வளவு கால இடைவெளி எடுத்து ஏன் தனித்தனியே வெளியிடுகிறீர்கள்? என்பதற்கு ஆய்வில் பதில் இல்லை என்றார். அரசியல் உண்டு என்கின்றனர் மற்றவர்கள்.

அதாவது அடுத்த முறையும், ஐ.நா. அவை நடக்கும். அதற்கும் படங்கள் சேமிப்பில் இருக்கலாம் என்கின்றனர்.

இந்தப் படங்களில் இருக்கும் சர்வதேச அரசியல் இதுதான். இலங்கை எப்போதெல்லாம் அமெரிக்காவையும், ஐ.நாவையும் மீறி, அவற்றுக்கு எதிரான நாடுகளுடன் அணி சேர்கின்றதோ, அப்போதெல்லாம் அதனைக் கட்டுப்படுத்த இந்தப் படங்கள் ஆயுதங்களாகப் போகின்றன.

இது ஒன்றும் புதிய முறையல்ல. ஏற்கனவே பிரயோகிக்கப்பட்டதுதான். அமெரிக்காவுக்கு பணிய மறுத்து அடம்பிடிக்கும் அனைத்து நாடுகளும், ஏற்கனவே புரிந்துவிட்ட மனிதப் படுகொலையில் வீழ்ந்த பிணங்களை வைத்துத்தான் கட்டுப்படுத்தப்பட்டன. ஈராக், தொடங்கி, சூடான் வரைக்கும் அனுபவங்கள் உண்டு. இலங்கை மீதும் அதே அரசியல் பிரயோகிக்கப்படுகின்றது.

ஈழத்தமிழரிலும், அவர்கள் மீது நடத்தப்பட்ட இனப்படுகொலையிலும் கவலைகொண்டு செயற்படுவது போலக் காட்டிக் கொள்ளும் மேற்படி நாடுகளின் ஆழ்மன ராஜதந்திரம் ஒருபோதும் உண்மையானதாக இல்லையோ?

இலங்கை பணியாத விடத்து அது வீழ்த்திய பிணங்களுக்கான விளைவை சந்திக்க நேரிடும் என்ற அச்சம் கொழும்புக்கு இல்லாமல் இல்லை.

ஆனால், வழமை போல இந்தியா தனது நரித்தனத்தை அரங்கேற்ற ஆரம்பித்திருக்கின்றது. தமிழக மக்களின் எந்த உணர்வையும் மதிக்காது இலங்கைக்குச் சார்பாகக் களமிறங்கியிருக்கின்றது.

எந்தப் பதவியும் வகிக்காத சுப்பிரமணியசுவாமி இலங்கைக்கும், இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் பறக்கின்றார். இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் இந்தியா தலையிட முடியாதென்கின்றார். ஜெனீவா அழுத்தத்தை, இலங்கை, அமெரிக்காவுடன் பேசி குறைத்துக் கொள்ளலாம் என்கின்றார்.

இலங்கை அமெரிக்காவுடன் பேசி, அவர்கள் கேட்பதற்கு இணங்கினால் எந்த அழுத்தங்களும் பிரயோகிக்கப்படமாட்டா, அல்லது தப்பித்துக் கொள்ளக் கூடியளவிலான அழுத்தங்களே பிரயோகிக்கப்படும் என்பதல்லவா அதன் அர்த்தம்?

ஆகவே, உலகமே பார்த்துக் கொதித்த ஈழத் தமிழரின் பிணங்களுக்குரிய அரசியல் பெறுமானம் வெறும் தந்திரங்கள் தானா?

உயிர்களைப் பலிகொடுத்த தமிழர்களுக்கு அதனால் எந்த லாபமும் இல்லையா?

போராடக் கூடியவர்கள் செத்ததால்தானே, அவர்களின் உடலங்களை வைத்துக் கொண்டு போராடத் தொடங்கினர் ஈழத்தவர்?

அதையும் இந்தியப் பெருந் தேசமும், நலன்சார்ந்த நாடுகளும் தட்டிப் பறித்துக் கொள்வது எந்த விதத்தில் நியாயம்?

இத்தகைய வினாக்கள் உண்மையையும், அறத்தையும் நேசிக்கும் ஒருவரது மூளைக்குள் எழுவது சரியானதுதான். ஆனால் அதுவே நியதியாகியிருக்கிறது.

இலங்கை அரசு படுகொலை புரிந்தது. அதனை விசாரித்தே ஆகவேண்டும், அங்கே மனித உரிமை மீறல்களும் ஜனநாயகமற்ற சூழலும் நீடித்துக் கொண்டேயிருக்கின்றது எனக் கூக்குரலிடும் அமெரிக்காவின் இலங்கை குறித்த மறுபக்கம் மிகக் கேவலமானது. போர்க்குற்ற ஆவணப் படங்களில் சிரித்தபடி அதிகளவில் 'போஸ் கொடுக்கும்' சவேந்திர சில்வா இன்றைய நிலையில் அமெரிக்காவின் நாயகன்.

அமெரிக்காவின் முக்கிய இராணுவப் படையணிக்கு *தீவிரவாதிகளை எப்படித் தோற்கடிப்பது* என்பது தொடர்பிலான பயிற்சியை வழங்கும் சிறப்பு விருந்தினராக வலம் வருகின்றார். என்னடா இது? என்று கேட்டால், இதுதான் அமெரிக்கா என்கின்றனர்.

அமெரிக்காவுக்கு அடுத்த நிலையில் இருந்து கொண்டு, ஈழ மக்களுக்கு பெரும் ஆதரவுச் சக்தியாக நிற்கும் பிரித்தானியாவும் நயவஞ்சகத்துடனேயே செயற்படுகின்றது.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் நடக்கின்றது, ஜனநாயகம் இல்லை, நீதித்துறை அரசின் கையில் இருக்கின்றது என்றெல்லாம் அடிக்கடி கண்டனம் செய்யும் பிரித்தானியாவின் மறுபக்கமும் கேவலமானதுதான்.

கடந்த ஆண்டில் மட்டும் பிரித்தானிய அரசு 3.8 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள ஆயுதங்களை இலங்கை இராணுவத்துக்கு விற்பனை செய்திருக்கின்றது. போரற்ற இலங்கைக்கு ஏன் இவ்வளவு பெரியளவில் ஆயுத விநியோகம்? சமாதான விரும்பிகளால் கேட்கப்படுகிறது. அந்தக் கேள்விக்கும் அதிகார அரசுகளிடம் பதில் இல்லை.

ஆக, நம்மை நோக்கி நீளும் உலகின் எந்தக் கைகளும் சுத்தமானதாக இல்லை என்பதே இவ்விடத்தில் முடிவுக்கு வரவேண்டிய விடயம். இந்த நிலத்தாரின் வாழ்வைத்தான் அழித்தார்கள் என்று பார்த்தால், எதிர்காலத்தையும்கூட விட்டுவைக்கிறார்கள் இல்லை.

ஆயினும் பொறுத்துக் கொண்டிக்கின்றோம் எப்போதும் மாறாத உலகு நோக்கிய நம்பிக்கையோடு. ஏனெனில் நாம் அரசியல் அநாதைகள். நமக்கு மீட்பர்களில்லை.

இரா.புத்திரசிகாமணி



# பஞ்சுக்குள் மறைக்கப்படும் நெருப்பு

இலங்கையில் இருப்பது ஒரே இராணுவம். அது இலங்கை இராணுவம். டட்லி இராணுவம், பண்டார நாயக்க இராணுவம், ஜே.ஆர். இராணுவம், பிரேமதாஸ இராணுவம், ஸ்ரீமாவோ இராணுவம் சந்திரிகா இராணுவம், ரணில் இராணுவம், மஹிந்த ராஜபக்ஷ இராணுவம் என்று எப்போதும் தனித் தனியான இராணுவ அமைப்புகள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

ஆட்சியில் இருக்கும் தலைவர்கள் மாறலாம். கட்சிகளின் நிறங்கள் மாறலாம். ஆனால் இராணுவ மற்றும் பாதுகாப்புப் படைகளின் சீருடைகளின் நிறங்கள் மாற்றப்படுவதில்லை.

நீண்டகால அரசியல் அனுபவம் கொண்டவரும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒரு தலைவராகவும், முப்படைகளின் தலைவராகவும் இருக்கும் ஜனாதிபதியே, பொலிஸ் உட்பட முப்படைகளிலும் கடமையாற்றும் ஒரு கடைநிலை ஊழியர் செய்யும் தவறுக்கும் பொறுப்புக் கூற வேண்டியவர். இதை மறந்து விடக் கூடாது.'

அப்படி இருந்த போதும் ''விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் இராணுவத்தினரால் கொல்லப்பட்டிருந்தால் அதற்கான பொறுப்பை ஏற்கும் கடப்பாடு எனக்குண்டு. ஆனால் எனது இராணுவத்தினர் இந்தப் படுகொலையைச் செய்யவில்லை. அது சோடிக்கப்பட்ட கதை'' என்று இந்தியாவிலிருந்து வெளியாகும் 'இந்து' பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் கூறியுள்ளார்.

அப்படியானால் கடந்த காலங்களில் இடம்பெற்ற பல செயல்களையும் இதே பாணியில் ஜனாதிபதி மறுக்கப் போகின்றாரா?

★ 18 வயதான பாடசாலை மாணவி குமாரசாமி கிருஷாந்தி கைதடிக் காவலரணில் கூட்டு வல்லுறவு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுக் கொலை செய்து, துண்டந்துண்டமாக வெட்டிக் கழிவறைக்குழியில் போடப்பட்ட சம்பவம் 1996 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி நடைபெற்றது.

இந்தக் கூட்டு வல்லுறவின் பங்காளிகளில் ஒருவரான சோமரெட்ண ராஜபக்ஷ, இந்த மாணவி எவ்வாறு துடிதுடிக்கக் கொல்லப்பட்டார் என்பதை நீதிமன்றில் ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார். செம்மணிக் கொலைகள் முழு உலகையும் கண்ணீரில் நனைத்தன.

★அம்பாறையில் கோணேஸ்வரி முருகேசுப்பிள்ளை என்ற குடும்ப மாது கடத்திச் செல்லப்பட்டார். இறக்கும்வரை அவர் மீது சீருடையினர் மாறி மாறி வன்புணர்ச்சியில் ஈடுபட்டதுடன் அவரது பிறப்பு உறுப்பில் கைக்குண்டை வெடிக்கச் செய்தனர். 1997 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி இடம்பெற்றது இந்தக் கொடூர சம்பவம்.

★ 1999 டிசெம்பர் மாதம் புங்குடுதீவில் சாரதாம்பாள் சரவணபவக் குருக்கள் என்ற பிராமணப் பெண்ணை வீட்டில் இருந்தவர்களைக் கட்டி வைத்துவிட்டு பலவந்தமாகக் கடத்திச் சென்றனர். மறுநாள் காலை 1999 ஆம் ஆண்டு டிசெம்பர் 28 ஆம் திகதி கடற்படை முகாமுக்கு அருகில் காமுகர்களால் கொத்திக் குதறப்பட்டு நிர்வாண நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இவை அனைத்துக்கும் பதிவுகள் உண்டு. இவை அனைத்தும் போர்க் காலங்களில் படையினர் மீதே குற்றங்கள் சுமத்தப்பட்டன. அவற்றில் கிருஷாந்தி மற்றும் உரும்பிராய் ரஜனி கொலைகளில் இராணுவத்தினர் கைது செய்யப்பட்டும் இருந்தனர்.

இத்தகைய கொடூரங்கள் புலிகளுக்கும் அரச படையினருக்கும் இடையில் ஏற்பட்ட சமரின் போதோ, நேரடித் தாக்குதலின் போதோ இடம்பெற்றவை அல்ல.

இவை படையினரின் முழுக் காவலில் இருந்த பகுதிகளில் இடம்பெற்றவை என்பதை எவராலும் மறுக்க முடியாது.

இவை ''சனல்-4'' காணொளி மூலம் காட்டப்பட்டவையும் அல்ல (அப்படியிருந்தால் ''காட்சிப்புனைவு'' என்று படைத்தரப்பு நிராகரித்திருக்கலாம்) மக்கள் நேரடியாகக் கண்டவை. செம்மணி மனிதப் புதைகுழி சர்வதேசத்தின் சிந்தனையை இலங்கையின் பக்கம் திருப்பியது. அதன் பின்னரே சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் உட்பட பல்வேறு அமைப்புகள் மிகவும் உன்னிப்பாக இலங்கையை அவதானிக்க ஆரம்பித்தன.

அவர்களது தளராத முயற்சியினால் போர்க் காலத்தின் போதும் பின்னரும் இராணுவத்தினராலும் பொலிஸாராலும் அவர்களுக்கு வால்பிடிக்கும் ஆயுதக் குழுக்களினாலும் மேற்கொள்ளப்பட்ட பாலியல் ரீதியான கொடுமைகளை அனுபவித்த 75 பேரின் ஆதாரபூர்வமான வாக்குமூலங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இலங்கை அரசு எப்போதுமே இங்கு நடந்த எதையுமே ஏற்றுக் கொள்ளவும் இல்லை. ஒப்புக் கொள்ளவும் இல்லை. எடுத்த எடுப்பிலே எல்லாவற்றையும் நிராகரித்து விடுவதிலும், சோடிக்கப்பட்ட போலியான கதை என்றும் மறுத்து விடுவதிலும் கவனமாக இருக்கிறது.

''படையினரால் கொல்லப்பட்டதாகக் காட்டப்பட்டவர் பிரபாகரனின் மகன்தானா? அப்படி ஒரு மகன் இருந்தாரா? அவரை நேரில் கண்டவர்கள் யார்? இது தயாரிக்கப்பட்ட படம்'' என்று வாய் கூசாமல் கூறுகின்றார் இராணுவப் பேச்சாளர்.

இராணுவப் பேச்சாளரின் கூற்றைப் பின்பற்றியே ஜனாதிபதியும் ''எமது படையினர் ஒருபோதும் இப்படியான செயல்களில் ஈடுபடமாட்டார்கள்'' என்று படையினருக்கு நற்சான்றிதழ் வழங்கி உள்ளார்.

நாம் ஏன் அந்தளவு தூரம் செல்ல வேண்டும்? இராணுவத்தால் மேற்கொள்ளப்படும் நில அபகரிப்பைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற அகிம்சைப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கான பொது மக்கள் கலந்து கொண்டனர்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட தென்பகுதிச் சிங்கள, முஸ்லிம், தமிழ் அரசியல் கட்சிகளின் தொண்டர்களும் கலந்து கொண்ட இந்தப் போராட்டத்தைக் குழப்பியவர்கள் பொதுமக்களால் பிடிக்கப்பட்டுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

''ஆனால் அப்படி ஒரு சம்பவம் இடம் பெறவே இல்லை. பொலிஸார் யாரையும் கைது செய்யவில்லை. யாரும் யாரையும் பொலிஸாரிடம் ஒப்படைக்கவில்லை. இது தயாரிக்கப்பட்ட புகைப்படம்'' என்று பொலிஸ் பேச்சாளர் அடித்துக் கூறுகின்றார். பட்டப்பகலில் பல ஆயிரம் பேர் முன்னிலையில் இடம்பெற்ற ஒரு சம்பவத்தைப் பல நூறு மைல்களுக்கு அப்பால் இருந்து கொண்டு ஒருவர் மறுக்கின்றார். இதுதான் இலங்கையின் ''உண்மை''. ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல் தமக்கு பாதகமான எந்த ஒரு சம்பவத்தையும் அரச தரப்பினர் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதற்கு இந்தச் சம்பவம் ஓர் உதாரணம்.

அரசு உண்மைச் சம்பவங்களை ஏற்றுக் கொள்ள மறுப்பது நெருப்பை மூடிப் பஞ்சைப் போட்டு மறைப்பதுக்கு ஒப்பானதாகும். உண்மைகள் ஏற்றுக்கொள்ளப்படாத வரையில், நெருப்பு விரைவில் பற்றி கொழுந்து விட்டு எரிந்து எல்லாவற்றையும் அழித்து விடும் என்பது உறுதி.

> ''விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் இராணுவத்தினரால் கொல்லப்பட்டிருந்தால் அதற்கான பொறுப்பை ஏற்கும் கடப்பாடு எனக்குண்டு. ஆனால் எனது இராணுவத்தினர் இந்தப் படுகொலையைச் செய்யவில்லை. அது சோடிக்கப்பட்ட கதை'' என்று படையினருக்கு வக்காலத்து வாங்கியுள்ளார் ஜனாதிபதி.



# ஆக்கிரமிப்பாளர்களுடன் மட்டுமல்ல, புற்றுநோயுடனும் போராடிய சாவேஸ்

“ வெனிசூலா என்னும் தேசத்தின், ரத்தமும் நகமும் சதையும் உயிரும் ஆன்மாவுமாக இருப்பவர் சாவேஸ். காஸ்ட்ரோவை முன்னோடியாக கொண்டு வெனிசுலாவை ஆட்சி செய்தாலும் இவர் கம்யூனிஸ்ட் இல்லை.

■ தொகுப்பு: அதிரன்

**1999** ஆம் ஆண்டு முதல் கடந்த வாரம் வரை வெனிசுலாவின் ஜனாதிபதியாக நீடித்த ஹியூகோ சாவேஸ், கடந்த 5ஆம் திகதி அதிகாலை மரணமானார். வெனிசுலாவின் தலைநகர் காரகாஸில் நடைபெற்ற அவருடைய இறுதி ஊர்வலத்தில் பல லட்சக்கணக்கான மக்கள், உலகத் தலைவர்கள் கலந்துகொண்டு அவருக்கு பிரியாவிடை கொடுத்தனர். அவர்களில் பலர் சாவேஸின் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களால் பயன் பெற்றவர்கள். சாவேஸின் புகைப்படம் பொறித்த பதாகைகளை ஏந்தியபடி அவர்கள் வீதிகளில் கதறி அழுததைத் தொலைக்காட்சிகள் காண்பித்தன.

புரட்சியாளராக வலம் வந்த அவரைப் புற்றுநோய் விட்டுவைக்கவில்லை.ஒரு புறம் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக முனைப்புடன் போராடிய அவர், மறுபுறத்தில் புற்றுநோயையும் எதிர்த்துப் போராடவேண்டி ஏற்பட்டது.இதற்காகச் சிகிச்சை பெற அவர் அடிக்கடி கியூபா சென்று வந்தார்.

கணக்கிடமுடியாத அளவுக்குப் பல முறை மரணமடைந்துவிட்ட தனது 86 வயது அரசியல் ஆசானை சாவேஸ் முந்திவிட்டார். 2005ஆம் ஆண்டில் சாவேஸ் அளித்த பேட்டியொன்றில் 'பிடல்காஸ்ட்ரோ எனக்குத் தந்தையும் தோழரும் ஆவார்.' என்று குறிப்பிட்டுள்ளார். கிட்டத்தட்ட இருபது ஆண்டுகளாக அரசியல் மேடையில் இரட்டையர்கள் போல், போராட்ட வீரர்களாக இருவரும் வலம் வந்ததை இந்த உலகம் அறியும்.

பிடல்காஸ்ட்ரோவுக்கும் ஹியூகோ சாவேஸுக்கும் இடையில் பல ஒற்றுமைகள் உள்ளன. கியூபாவில் நிலவுவது மக்கள் விரோத அரசு, எப்பாடுபட்டாவது அதைத் தூக்கியெறிந்தே தீர வேண்டும் என்று காஸ்ட்ரோ முடிவு செய்தார். அதே முடிவுடன்தான் வெனிசுலாவில் சாவேஸும் போராடினார். காஸ்ட்ரோவைப் போலவே சாவேஸும் ஆயுதப் பேராட்டத்தைக் கையில் எடுத்தார். -இருவரும் அரசுகளுக்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இருவரும் கைது செய்யப்பட்டு நீண்ட காலத்தைச் சிறையில் கழித்தவர்கள். விடுதலையான பின்னர் இருவருமே தங்கள் தங்கள் தேசங்களின் விடுதலைக்காகத் தங்கள் வாழ்நாளை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டனர்.

வெனிசுலா என்னும் தேசத்தின், ரத்தமும் நகமும் சதையும் உயிரும் ஆன்மாவுமாக இருந்தவர் சாவேஸ். காஸ்ட்ரோவை முன்னோடியாகக் கொண்டு, வெனிசுலாவை ஆட்சி செய்தாலும் இவர் கம்யூனிஸ்ட் இல்லை. மிகவும் பின்தங்கிய, பொருளாதார பலம் இல்லாத தேசமாக இருந்த வெனிசுலாவை, சாவேஸ் தமது திறமை மிகுந்த ஆட்சியாலும், அச்சமற்ற நடவடிக்கைகளாலும், வளரும் நாடுகளில் ஒன்றாக்கினார்.

அமெரிக்கா, தன் உளவுத்துறை மூலம் தூண்டிவிட்ட உள்நாட்டுக் கலகங்களைத் திறம்பட சமாளித்தார். தேசத்தின் வளர்ச்சியை மட்டுமே குறியாகக் கொண்டு செயல்பட்ட சாவேஸுக்கு இந்தச் சவாலினால் நித்தம் நித்தம் போர்தான். மரணம் வரையிலும் தினம் தினம் புரட்சிதான்.பெரியண்ணன் போக்குடன் செயல்பட்டு வந்த அமெரிக்க அதிபர் புஷ்ஷை ஐ.நா சபையில் 'சாத்தான்' என்று தைரியமாக விமர்சித்தவர் சாவேஸ். இதன்பின்னர் ஊடகங்களின் பார்வை இவர் பக்கம் திரும்பியது. ஐ.நா.வை, பேசாமல் ஜெருசலமுக்கோ அல்லது வேறு ஒரு வளரும் நாட்டுக்கோ மாற்றிவடலாம் என்று யோசனை கூறியவர் சாவேஸ்.

காஸ்ட்ரோ தனது பலத்தை கியூபா தேசத் தந்தையான ஹொசே மார்த்தியிடம் இருந்து பெற்றுக்கொண்டார். சாவேஸ், வெனிசுலாவின் போராளியான சிமோன் பொலிவாரைத் தனது முன்மாதிரியாக கொண்டு செயற்பட்டார். மார்த்தியை ஓர் சக்திவாய்ந்த அடையாளமாக காஸ்ட்ரோ உருமாற்றியதைப் போலவே பொலிவாரின் பெயரால் மக்கள் நலத் திட்டங்களை அறிமுகம் செய்து அவரை லத்தீன் அமெரிக்கா முழுவதுக்கும் கொண்டு சேர்த்தார் சாவேஸ்.



மக்களை வழிநடத்த இருவரும் கையாண்ட சித்தாந்தமும் ஒன்றேதான். சீனாவுக்கு ஏற்றபடி மார்க்சிசத்தைப் பொருத்திப் பார்த்த மாவோவைப் போல, ரஷ்யாவுக்கு ஏற்றபடி மார்க்சியத்தைத் தகவமைத்த லெனினைப் போல லத்தீன் அமெரிக்காவுக்கான நடைமுறை சோஷலிசப் பாதையை வகுத்ததில் இரு பெரும் தலைவர்களான காஸ்ட்ரோவுக்கும், சாவேஸுக்கும் மிகப் பெரிய பங்கு உண்டு.

ஆட்சிக்கு வந்ததுமே, அமெரிக்கவின் நிழலாகச் செயல்பட்டு வந்த நிறுவனங்களை காஸ்ட்ரோ ஒழித்துக்காட்டினார். சாவேஸ், எண்ணெய் வளத்தை நாட்டுடைமையாக்கினார். இருவரும் இதற்காகச் சந்தித்த எதிர்ப்புகள் அசாதாரணமானவை. மருத்துவம், கல்வி, அயலுறவு என்று கியூபாவும் வெனிசுலாவும் பல முக்கியத் துறைகளில் ஒன்றிணைந்து நடைபோட்டன.

இருவருக்குமே எதிரி ஒன்றுதான். நோக்கமும் ஒன்றே. அமெரிக்க வல்லரசின் ஆதிக்கத்தைக் குறைந்தபட்சம் லத்தீன் அமெரிக்காவிலும், முடிந்தவரை உலகம் முழுவதிலும் இருந்து அகற்றவேண்டும் என்பதுதான் அது. தங்கள் எதிரியை இருவரும் அதிகபட்ச சீற்றத்துடனும் பலத்துடனும் கையாண்டார்கள். அதனாலேயே ஏராளமான எதிரிகளையும் எதிர்ப்பிரசாரங்களையும் சம்பாதித்துக்கொண்டனர்.

பிரேசில் அதிபர் டில்மா ரோஸ்செப், பிரேசிலின் முன்னாள் தலைவர் லூயிஸ் இனசியோ லூலா டா சில்வா, பராகுவே நாட்டின் பெர்னாண்டோ லூகோ, அர்ஜென்ரீனாவின் ஜனாதிபதி கிறிஸ்டினா பெர்னாண்டஸ், தற்போது வெனிசுலா ஜனாதிபதி சாவேஸ்ஆகியோர் உள்ளிட்ட ஆறு இலத்தீன் அமெரிக்க நாடுகளின் தலைவர்களுக்குப் புற்றுநோய் தாக்கி இருப்பதாகக் கண்டறியப்பட்டது. இவர்கள் அனைவரும் அமெரிக்காவின் அடாவடியை எதிர்த்து வலிமையான கூட்டணியை உருவாக்கியவர்கள்.

தெளிவான அரசியல் பார்வையுடன் இயங்கும் ஒவ்வொருவருக்கும் நண்பர்களும் எதிரிகளும் இருக்கவே செய்வார்கள். யார் ஏற்கிறார்கள்? யார் நிராகரிக்கிறார்கள்? என்பதைப் பொறுத்தே அவருடைய பணிகள் மதிப்பிடப்படுகின்றன. இந்த அளவுகோலின்படி, காஸ்ட்ரோவைப் போலவே சாவேஸும் பெரும்பான்மை மக்களின் தலைவராகவும் தோழராகவும் திகழ்கிறார். அதனால்தான் தங்கள் நாட்டு எல்லைகளைக் கடந்தும் இந்த இருவருக்கும் பெரும் திரளான மக்கள் ஆதரவு திரண்டு நிற்கிறது.

இராணுவ வீரராகத் தொடங்கிய சாவேஸ் தனது திறமையால் வெனிசுலா ஜனாதிபதியாக கடந்த 1999ஆம் ஆண்டு பொறுப்பேற்றார். கடந்த ஆண்டு ஒக்ரோபரில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று 4 ஆவது முறையாக ஆட்சிப் பொறுப் பேற்றார். மக்களின் மனதில் உண்மையான புரட்சித்தலைவராக உயர்ந்த இந்த மக்கள் நாயகனின் மரணம், வெனிசுலா மக்களுக்கு மட்டுமல்ல புரட்சியை நேசிக்கும் அனைவருக்கும் பெரும் இழப்புதான். ★



# ம(றை)றக்கப்பட்ட போராளி - உதம்சிங்



1899ல் பிறந்த உதம் சிங் ஆசாத் இளவயதிலேயே தம் பெற்றோரை இழந்தவர். பல முறை ஆபிரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்குச் சென்று அங்கே இந்திய தேசிய நடவடிக்கைகளில் தீவிரப் பங்கு பெற்றார். கதர் (புரட்சி) எனும் இயக்கத்தில் உதம் சிங் இணைந்தார். 1927ல் பகத்சிங்கிற்காகத் துப்பாக்கிகளையும் தளபாடங்களையும் பாரதத்துக்குள் கடத்தி வந்தார். அதே ஆண்டு ஓகஸ்டில் அவர் கைது செய்யப்பட்டார்.

நீதிமன்றத்தில் தாம் இந்தியப் பாட்டாளி வர்க்கத்தின் சார்பாக பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளைக் கொலை செய்யப் போவதாக வெளிப்படையாக அறிவித்தார். இதனைத் தொடர்ந்து அவருக்கு நான்காண்டுகாலசிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அவர் சிறையில் இருந்த காலத்தில் (1931) பகத்சிங், ராஜ்குரு, சுகதேவ் ஆகியோர் தூக்கிலிடப்பட்டனர்.

1931ல் உதம் சிங் விடுதலை செய்யப்பட்டார். அப்போது அவர் காவல்துறையின் கெடுபிடிகளில் இருந்து தப்புவதற்காகத் தமது பெயரை முகமது சிங் என மாற்றிக்கொண்டார். மிகத் தெளிவான திட்டத்துடன் அவர் வேலை செய்தார். அவரது உடனடி நோக்கம் பிரித்தானியா செல்வதாக இருந்தது. அங்கே அவரது வாழ்க்கையின் நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்தது. பிரித்தானிய புலனாய்வாளர்கள் அவரைத் தொடர்ந்து கண்காணித்த வண்ணம் இருந்தனர். இந்நிலையில் அவர் 1933ல் காஷ்மீருக்குச் சென்று அங்கிருந்து உளவாளிகள் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு ஜேர்மனிக்குச் சென்று அங்கிருந்து 1934ல் இங்கிலாந்துக்குள் நுழைந்தார். அங்கே ஒரு காரும் துப்பாக்கியும் வாங்கி வைத்துக் கொண்டு ஜாலியன்வாலாபாக் படுகொலையைத் திட்டமிட்டு நடத்திய மைக்கேல் டயரின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க ஆரம்பித்தார். அவருக்கு டயரைக் கொல்ல பல வாய்ப்புகள் கிடைத்தன. ஆனால் அவர் அமைதியாக இருந்தார்.

ஏனெனில் தமக்கு எளிமையாக இருக்கும் என்பதைக் காட்டிலும் அச்செயல் உலக மக்களுக்கு ஒரு செய்தியாக அமைய வேண்டும் என்பதில் அவர் தீர்மானமாக இருந்தார். 1940 மார்ச் 13 "ஏறக்குறைய இருபது ஆண்டுகள்" சரியாக ஒரு மாத காலகட்ட இடைவெளி. காக்ஸ்டன் ஹாலில் கிழக்கு இந்திய அசோசியேஷன் மற்றும் ராயல் சென்ட்ரல் ஏஷியன் 'சொசைட்டி' ஆகியவற்றின் கூட்டத்தில் பங்கு பெற வந்திருந்த சீமான்களில் முக்கியமானவனாக வந்திருந்தான் டயர்.

கூட்டத்தில் கையில் ஒரு புத்தகத்துடன் உதம் சிங். புத்தகத்துக்குள் கச்சிதமாக வெட்டப்பட்ட பக்கங்களுக்குள் 0.45 ஸ்மித் வெல்ஸன் கைத்துப்பாக்கி. பஞ்சாப்பில் தாம் செய்த செயலுக்காகத் தாம் சிறிதளவும் வருத்தப்படவில்லை என்றும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் நீடித்த வாழ்வுக்காக பஞ்சாபில் தாம் செய்ததை ஆபிரிக்காவிலும் செய்யத் தமக்கு வாய்ப்புக் கிடைத்தால் அரங்கேற்றச் சித்தமாக இருப்பதாகவும் தன் பேச்சில் டயர் குறிப்பிட்டார். அத்தருணத்தில் கூட்டத்தில் இருந்த உதம் சிங் எழுந்தார். "அந்த வாய்ப்பு உமக்குக் கிடைக்கப்போவதில்லை மைக்கேல் டயர் அவர்களே" எனக் கூறியபடி துப்பாக்கியை எடுத்தார். உதம்சிங்கின் குறி தவறவில்லை. முதல் குண்டு அவன் மார்பையும் இரண்டாம் குண்டு அவனது சிறுநீரகத்தையும் சிதைக்க, தாக்கப்பட்ட மைக்கேல் டயர் அங்கேயே மரணம் அடைந்தார்.

இந்திய அரசுச் செயலாளரான செட்லாண்ட் காயமடைந்தார். சிரித்த முகத்துடன் கைதானார் உதம் சிங். உதம் சிங்கின் செயல் இந்திய மக்களிடையே பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. ஆனால் விடுதலைப் போராட்டத்தை அகிம்சைவழியில் கொண்டு செல்ல உறுதியேற்றிருந்த மகாத்மா மற்றும் பண்டித நேரு ஆகியோர் இதைக் கண்டித்தனர். "பைத்தியக் காரத்தனமான செயல்" என்று கூறினார் காந்தியடிகள். பண்டித நேரு, மகாத்மா காந்தி ஆகிய இருவருமே இச்செயலினால் தமது இயக்கம் பிரித்தானிய அரசிடம் நடத்திக்கொண்டிருக்கும் அரசியல் பேச்சுவார்த்தைகளுக்கு பங்கம் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தனர். ஆனால் பொதுக்கூட்டங்களில் மக்களிடையே உதம் சிங்கின் செயல் பெருமதிப்போடு பேசப்பட்டது.

தேசத்தின் மீதிருந்த களங்கம் துடைக்கப்பட்டுவிட்டது என்பதே மக்கள் மனதின் கீதமாக இருந்தது. பல வெளிநாட்டுப் பத்திரிகைகள் உதம்சிங்கின் தீரச்செயலைப் பாராட்டின. 1940ம் ஆண்டு ஜாலியன்வாலாபாக் படுகொலை நினைவு தினத்தன்று உதம்சிங் ஜிந்தாபாத் எனும் கோசம் எழுப்பப்பட்டது. அதே நேரம் பஞ்சாப் காங்கிரஸ் அரசு, உதம் சிங்கின் செயலைக் கண்டித்தும், ஜெனரல் டயரின் மனைவிக்கு ஆறுதல் தெரிவித்தும் தீர்மானம் இயற்றியது. இந்நிலையில் கொங்கிரஸ் பிதாமகர்களால் ஓரங்கட்டப்பட்டு அதனை விட்டு விலகிச் சென்று பாரத விடுதலைக்காகப் போராடத் தீர்மானித்திருந்த நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் மட்டுமே உதம் சிங்கை வெளிப்படையாகப் பாராட்டினார்.

தமது கோட்டையிலேயே தமது சாம்ராஜ்யத்தின் வலிமை வாய்ந்த தளபதியை ஓர் இந்தியன் கொன்றான் என்பது பிரித்தானியாவுக்கு அவமானகரமாக இருந்தது. "உதம் சிங் மனநிலை பிறழ்ந்தவர்" என ஒரு பிரச்சாரத்தை அவர்கள் தொடங்கினார்கள். இந்நிலையில் பஞ்சாப் பிரமுகர்கள் பலர் உதம்சிங்கை எப்படியாவது விடுவிக்க வேண்டும் என வழக்கறிஞர்களைத் தேடி அலைந்து இறுதியில் கிருஷ்ண மேனனை அமர்த்தினர். கிருஷ்ண மேனன் உதம் சிங்கைத் தான் பைத்தியம் என ஒப்புக்கொள்ளும்படியும் அப்படிச் சொன்னால் தப்பித்துவிடலாம் என்றும் கூறினார்.

உதம் சிங் வேதனையுடன் அதனை மறுத்துவிட்டார். நீதிமன்ற விசாரணையில் பிரித்தானிய ஏகாதிபத்திய நீதிமன்றுக்குத் தம்மை விசாரிக்க உரிமையோ தகுதியோ இல்லை என்று கூறியதுடன், பிரித்தானிய நீதிபதியையும் அங்கிருந்த இதர பிரித்தானியரையும் நோக்கி கூறினார்: "நான் மரணத்துக்கு அஞ்சவில்லை. நான் உயிர் துறப்பதில் பெருமைப்படுகிறேன். என் தாய் நாட்டை விடுவிக்கஉயிர்துறப்பதில் பெருமை அடைகிறேன். நான் போனபிறகு என்னுடைய இடத்தில் என் தேச மக்கள் வருவார்கள். வந்து அசிங்கம் பிடித்த நாய்களான உங்களை விரட்டுவார்கள். நீங்கள் இந்தியாவுக்கு வருவீர்கள், பிறகு பிரித்தானியாவிற்குத் திரும்பிப் பிரபு ஆவீர்கள், பாராளுமன்றத்துக்குப் போவீர்கள். நாங்கள் பிரித்தானியாவிற்குள் வந்தால் எங்களைத் தூக்கில் போடுவீர்கள். ஆனால் நீங்கள் பாரதத்திலிருந்து வேரும் வேரடி மண்ணுமின்றிக் களையப்படுவீர்கள். உங்கள் பிரித்தானிய ஏகாதிபத்தியம் சுக்கு நூறாகச் சிதறும். பாரதத்தின் வீதிகளில் எங்கெல்லாம் நீங்கள் சொல்லும் மேற்கத்திய ஜனநாயகத்தின் கொடியும் கிறிஸ்தவமும் ஆக்கிரமித்துள்ளதோ அங்கெல்லாம் இயந்திரத் துப்பாக்கிகள் குழந்தைகளையும் பெண்களையும் கொன்று குவித்து வருகிறது"

இத்தகைய உணர்ச்சி மயமான உரையின்மூலம் அங்கு வந்திருந்த பத்திரிகையாளர், பார்வையாளர்களுக்கு அவர் ஒரு பைத்தியக்காரர் என்கிற பிரித்தானியப் பிரசாரம் எத்தனை பொய் என்பதையும் தான் ஒரு தேசபக்தர் என்பதையும் புரிய வைத்துவிட்டார்.

வேறு வழியில்லாமல் அவரை நீதிமன்றத்திலிருந்து காவலாளர்கள் இழுத்துச் சென்றனர். நீதிபதி அட்கின்ஸன் அங்கிருந்த பத்திரிகையாளர்களையும் பார்வையாளர்களையும் அங்கு நிகழ்ந்தவற்றை வெளியே சொல்லக்கூடாதென உத்தரவிட்டார்.

யூலை 31, 1940 அன்று அவர் வந்தேமாதர கோசத்துடன் தூக்குக் கயிறை முத்தமிட்டார். "தியாகச் சிங்கம்" என அழைக்கப்பட்ட அவரது உடல், சீக்கிய மதச்சடங்குகளுக்கு தடைவிதிக்கப்பட்டு சிறைச்சாலையில் புதைக்கப்பட்டது.

1962ல் நேரு மனம்மாறி உதம் சிங்கை தேசபக்தர் என அறிவித்தார். 1974ல் உதம் சிங்கின் உடல் பாரதம் கொண்டு வரப்பட்டு அவரது மாநிலமான பஞ்சாப்பில் தகனம்செய்யப்பட்டுஅவரது அஸ்தி கங்கை நதியில் கரைக்கப்பட்டது. தன்நாட்டு மக்களைக் கொன்ற ஒருவனை அவனது நாடு தேடிச் சென்று கொன்றவனை தியாகி எனக் கௌரவிக்கின்றார்கள். தன் நாட்டில் இருந்து சென்று இன்னொரு நாட்டில் படுகொலை நடைபெறுவதற்குகாரணமானராஜீவ் காந்தியைக் கொன்றவர்களை பயங்கரவாதிகள் என்கின்றார்கள். அதற்கு உடந்தையாக இருந்தவர்களை தூக்கில் போட வேண்டும் என்று துடிக்கின்றார்கள். இதுதான் இந்தியாவின் நீதியும், நியாயமும். ★

**ஆதங்கன்**

## தவிட்டிலிருந்து எரிவாயு

### ஒரு தமிழனின் கண்டுபிடிப்பு...



இவர் பெயர் நாகராஜன், கடலூரைச் சேர்ந்த இவர் சிதம்பரத்தில் MSC., Software Engineering final year படிக்கிறார். இவருடைய கண்டுபிடிப்பு ஒரு மகத்தான வெற்றி தந்திருக்கிறது. தவிட்டில் இருந்து எரிவாயு (gas) கண்டுபிடித்திருக்கிறார், இரண்டு பக்கம் அடைக்கப்பட்ட தகரக் கொள்கலனில் அல்லது டப்பாவில் தவிடு போட்டு மூடி, அதைச் சூடாக்கினால், எரிவாயு உருவாகி அந்த கொள்கலனில் உருவாக்கி- அடைத்து சின்ன குழாய் மூலமாக வெளியேற்றப் படுகிறது, அதைத் தீக்குச்சியால் கொளுத்தியபோது நீல நிறத்தில் எரிந்தது. இந்த எரிவாயுவை எரிவாயு கொள்கலனில் அல்லது சிலிண்டரில் அடைத்து அடுப்பெரிக்க பயன்படுத்த முடியும் என்று நாகராஜன் தெரிவித்தார். ஒரு முக்கியமான தகவல். இந்த புதிய எரிவாயுவைக் கண்டுபிடித்த நாகராஜன் ஒரு மாற்றுத் திறனாளி (ஊனமுற்றவர்)




# 'எங்களூர் பொங்கல்கள்'

## மாறிப்போகும் வழிபாட்டு மரபுகள்



**பசிய மரங்களால் நிறைந்த பூமி என்பதால் தென்மராட்சிப் பகுதிக்கு குழைக்காடு என்று பெயர். அந்தப் பகுதியின் மரபார்ந்த விடயங்கள் எமது பண்பாட்டுக்கு வலுச்சேர்ப்பவை. நாகரிகத்தில் அதிவேக உட்புகுதலோடு அத்தகைய மரபுகள் மெல்ல மெல்லத் தமது அடையா ளங்களைத் தாமே தொலைக்கத் தொடங்கியுள்ளன. ஞாபகப் பரப்பில் தூறிக் கொண்டிருக்கும் குழைக்காட்டின் துளிகள் இங்கே பகிரப்படுகின்றன.**

அறத்தியம்மன் பொங்கலுக்கு புது உடுப்பு எடுப்பதாக சென்னேன் அல்லவா? புது உடுப்பு எடுக்க பளைப்பகுதி மக்கள் அதிகம் சாவகச்சேரிக்குத்தான் வருவார்கள். யாழ்ப்பாணம் வரும் பழக்கம் 1980 வரைக்கும் இருந்ததாக எனக்குத் தெரியவில்லை. சாவகச்சேரியில் நல்ல புடவைக் கடைகள் இருந்தன.

பொங்கலுக்கு உடுப்பு எடுக்க பணம் சேகரிக்க மக்கள் பெரிதும் கஷ்டப்படுவார்கள். பனங்கிழங்கு சீசன் பங்குனி சித்திரையில் நிலவும். பனங்கிழங்கை அவித்து பளைச் சந்தையில் விற்பார்கள். கிழங்கு வியாபாரப் பெண்கள் பலர் இருந்தார்கள். செல்லாம்மாக்கா, பொன்னு அக்கா-(இவர் சந்தையில் வியாபாரம் செய்தே மகளை பல்கலைக்கழகம் வரை படிப்பித்தார். மகன் சிவபாலன் B.Com பட்டதாரி பளை மத்திய கல்லூரியில் புகழ் பூத்த ஆசிரியராக இருந்து சாவகச்சேரியில் ஷெல் வீச்சில் இறந்து போய்விட்டார்.) மற்றும் இராசாத்தி அக்கா, செல்லாச்சி மற்றும் பலர்.


பனங்கிழங்கு விற்காத போது அதனை புளுக் கொடியல் போட்டு மொத்தமாக விற்று பணம் உழைப்பார்கள். எல்லாக்காசையும் பொத்திப் பொத்தி சேர்த்து பொங்கலுக்கு துணி மணி வாங்கிக் கொள்வார்கள்.

நல்லம் மாமிக்கும் கணவன் மணியத்தாருக்கும் உறவு நிலை சரியாக இல்லை. கதைத் பேச்சு கிடையாது. வீட்டுக்கு தேவையான சாமான் வரும். சமையல் நடக்கும். சாப்பாடு போட்டுக் கொடுப்பாள். சாப்பிடும் போது

"கொஞ்சம் சோறு"

"ம்"

என்று ஒலி வரும். இது தான் பேச்சு வார்த்தை.



நல்லம் மாமி ஒரு நாள் அம்மாவிடம் "இம் முறை வைகாசிப் பொங்கலுக்கு எனக்கும் பொடியளுக்கும் உடுப்பு எடுக்கிறதாம் நான் இடையில அறிஞ்சன்"

அம்மாவுக்கு ஒன்றும் விளங்க வில்லை

"என்னெணை"?

"உடுப்பு எடுக்கிறதாம்"

"ஆர்" அம்மா புரியாமல் கேட்டார்

"இந்தாள் தான் மார்க்கண்டு சொன்னவராம்"

"அப்படியே "அம்மா சிரித்ததாக எனக்கு ஞாபகம் இல்லை.

" ஏன் உனக்குசொல்லேலையே"

" அந்தாள் எனக்கு என்னத்தை சொல்லுகுது"

இப்படியும் வாழ்க்கைப் படகு சம்பந்தம் இல்லாமல் ஓடி விடும்.

வைகாசிப் பொங்கலை எம்மவர் பலர் அன்நாளில் " வைகாசிப் பொங்கல்" என சொல்வதைக் கண்டிருக்கின்றேன்.

" உன்ரை மூத்தவனுக்கு எத்தனை வயது"

என்று யாரேனும் கேட்டால்,

"இந்த வைகாசிப் பொங்கலோடை ஐந்தாகுது"

வைகாசிப் பொங்கல் மக்கள் மனதோடு இரண்டாகக் கலந்து விட்ட நிகழ்வாகவே இருந்தது.

பொங்கல் என்பது மக்களோடு மக்களாக கலக்கும் ( get together) நிகழ்வுதான். மக்களை ஒன்றாக்க வேண்டிய தேவை எப் போதும் சமூக கட்டுமானத்துக்கு இருந்து வந்திருக்கின்றது.

இந்த முறை சங்க காலத்தில் தோற்றம் பெற்று ஐரோப்பியர் காலம் வரை தொடர்ந்திருக் கின்றது. ஐரோப்பியர் கால மத்திய காலப் பகுதியில் தடை பண்ணப்பட்டு பின்னர் தொடர்ந்து நிகழ்கின்றது.

பொங்கல்களின் நோக்கம் பலவிதமான தாக இருக்கின்றது. பொங்கல் இடம்பெறும் காலம் மிகப் பிரதானமாகும். எல்லாக் கோயில் களிலும் வைகாசி மாதத்திற்கு பிறகே இடம்பெறுவதை அவதானிக்க முடி யும். இதற்குரிய காரணம் அதாவது எம் முன்னொர்கள் பொங்கலை வசந்த காலத்திற்கு பின்னர் வைத்துக் கொண்டதன் காரணம். இக்காலப்பகுதி மக்கள் தமது விளை நிலங்களில் அறுவடை முடித்த பின் மக்களிடம் நிறைய தானியம் இருக்கும்.

இதனால் பொங்கலை மிகவும் சிறப்பாக செய்ய மக்களிடம் வசதி இருக்கும். பொங்கலை எல்லோருடனும் பகிர முடியும்.

விதைப்பு காலம், அறுவடைக்காலம் முழுவதும் மக்களுக்கு ஓடும் வேலை இருக்கும் ஒருவரை ஒருவர் சந்திக்கக் கூட நேரம் இருக்காது.

இதனால் அறுவடைக் காலம் முடிய ஒரு நிகழ்வை வைத்து மக்களை ஒன்றாக்கி கலந்து மகிழ பெங்கல் ஏற்பாடாகி இருக்க முடியும்.

இதற்கு பொங்கல் நல்தொரு ஏற்பாடு ஆக வடிவமைக்கப்பட்டமை வியப்பானதாகும். எங்களூர் கோயில்களில் முந்தைய காலங்களில் திருவிழா கிடையாது. ஆரிய மரபு சார்ந்த வழிபாட்டு முறை ஆரிய மரபில் வந்த பிராமணர்கள், திராவிட மரபில் கலக்கப்பட்ட நிகழ்வாகும்.

நீண்ட காலம் வரை அம்மன்,வைரவர், வீரபத்திரர்,அண்ணமார் கோயில்களில் பொங் கல்-குளிர்த்தி வடிவமே இடம்பெற்றன. ஏனைய பிள்ளையார், முருகன் கோயில் களில் ஆரம்பகாலங்களில் அத்த தெய்வங் களுக்குரிய விரதங்களே பிரதான வழிபாட்டு நிகழ்வாக இருந்து வந்துள்ளன.

இடைக்காலங்களிலே திருவிழா புகுத்தப்பட்டதாக நாம் காண முடிகின்றது.

எனவே மிக நீண்ட காலமாக பொங்கல் எமது வழிபாட்டின் இலகு படுத்தப்பட்ட வடிவமாக இருந்து வந்துள்ளமையை உணர முடியும்.

பொங்கலின் பிரதான கட்டம் "வளர்ந்து" பொங்குதலாகும். வளர்ந்து என்பது பெரிய மண்பானை யில் வைக்கப்படும் பச்சரிசிப் பொங்கலை குறிக் கும்.

கிட்டத்தட்ட ஏழு கொத்து அரிசி போடக்கூடிய பெரிய மண் பானையிலே வளர்ந்து பொங்க வாங்குவார்கள்.

(1 கொத்து- நான்கு சுண்டு)

3 சுண்டு- 1 கிலோ அளவில் வரும்

(சுண்டு என்பதன் அளவு தற்போதைய பால்ரின் அளவு உடையதாகும்.

வளர்ந்து பொங்க உபய காரர்கள் இருப்பார்கள். இவர்கள் பல கிராமத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். இதன் காரணம் பொங்கல் எல்லா பிரதேச மக்களிடமும் பங்கிடப்பட வேண்டும். என்பதாக கருதப்பட வேண்டியதாகும்.

**(பொங்கல் இனியும்...)**

# அநாமதேய பரோபகாரி....

ரம்யன்

**2011** ஆம் ஆண்டு சுனாமி தாக்குதலில் பெரும் பாதிப்புக்குள்ளான ஒரு ஜப்பானிய நகரமக்களும் பிரமுகர்களும் ஆச்சரியத்தில் மூழ்கிப் போய் இருக்கிறார்கள். காரணம் அந்த நகரத்தின் அபிவிருத்திக்கென பெயர் குறிப்பிடாத பரோபகாரி ஒருவர் சுமார் 300,000 அமெரிக்க டொலருக்கும் அதிக மதிப்புள்ள தங்கக் கட்டிகளை அனுப்பி வைத்திருப்பதுதான்.

டோக்கியோ நகருக்கு வடகிழக்கில் சுமார் 350 கி.மீ (220 மைல்) தூரத்தில் உள்ள இஷினோ மாக்கி மீன் சந்தை நிர்வாகி மொத்தம் இரண்டு கிலோ (4.4 இறாத்தல்) தங்கக் கட்டிகள் 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தின் இரண்டாவது வருடாந்த தினத்துக்கு சுமார் ஒரு மாதம் முன்னதாக பெப்ரவரி முற்பகுதியில் வரப்பெற்றார். இஷினோமாக்கி மீன் சந்தையின் தலைவர் குனியோசுனோ என்பவர் தம் பெயருக்கு வந்திருந்த பார்சலை தற்செயலாக அவிழ்த்துப் பார்த்தார். எனக்குப் பெரும் அதிர்ச்சியாகவிருந்தது. உள்ளே இரண்டு கோப்பைகளில் 24 கரட் தங்கக்கட்டிகள் இருக்கக் கண்டேன்'' என்று அவர் பத்திரிகையாளர்களிடம் கூறினார். அவர் மேலும் கூறுகையில்:

இந்த நல்லெண்ணம் கொண்ட பெருமகன் யார் என்று அறிய நாங்கள் விரும்பவில்லை. ஆனால் அவருக்கு நாங்கள் நன்றியுடையவர்களாய் இருக்கிறோம் என்பதை அவர் அறிய வேண்டும் என்று கருதுகிறோம். முடியுமானால் அவரை எமது புதிய சந்தை பூர்த்தி விழாவில் கலந்து கொள்ளும்படி அழைக்க விரும்புகிறோம் என்றார்.

சுனாமியால் பாதிக்கப்பட்டு மீள் எழுச்சியில் ஈடுபட்டுள்ள வேறு அமைப்புகளுக்கும் இவ்வாறு தங்கக் கட்டிகள் அனுப்பப்பட்டுள்ளன. பார்சல்களின் உள்ளே "உதவி" என்று மட்டுமே எழுதப்பட்டிருந்தது. வேறு விவரம் எதுவும் காணப்படவில்லையாம்.

பார்சல்கள் எல்லாவற்றின் மீதும் முகவரிகள் ஒருவராலேயே எழுதப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது. அதனால் இந்த கைங்கரியத்தின் பின்னால் ஒருவரே இருக்கிறார் என்பதும் புரிகிறது என்றார் தங்கக்கட்டிகள் பெற்றுள்ள செயிட்டரரோசமாரி என்பவர்.

இஸாமோக்கி மீன் நிர்மாண ஆதார வலையமைப்பு இலாப நோக்கமில்லாத ஒரு நிறுவனம். அதன் தலைவரான யோஷிகானெக்கோ கூறுகையில் தபாலில் வந்த பார்சல் பாரமாக இருந்தது. சற்றுக் கவலையோடு அதனை பிரித்தேன். தங்கக்கட்டிகள் பளிச்சிட்டன. அங்கு நின்ற அனைவருமே "வாவ்" என்று வாய் திறந்து கத்தினார்கள் என்றார்.

2011 ஆம் ஆண்டு மார்ச் 11ஆம் நாள் ஏற்பட்ட பூகம்பத்தினாலும் அதனைத் தொடர்ந்து வந்த சுனாமியினாலும் இஷினோமாகி நகரம் பெரும் அழிவுக்குள்ளானமை குறிப்பிடத்தக்கது.

**தமிழ்ப் பத்திரிகைகளில் உண்மை இல்லையா?**

தென்னிலங்கையில் முஸ்லிம் பள்ளிவாசல்கள் சில தாக்குதலுக்குள்ளானமை குறித்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டு பேசிய போது தமிழ்ப் பத்திரிகைகளில் வந்த செய்திகளை எடுத்துக்காட்டியிருந்தார். அதற்கு அரசு தரப்பில் அளிக்கப்பட்ட பதிலில் எதிர்க்கட்சித்தலைவர் தமிழ்ப்பத்திரிகைகளில் வந்த செய்திகளைத்தான் எடுத்துக் காட்டியிருக்கிறார் என்று கூறப்பட்டிருந்தது. அதாவது தமிழ்ப் பத்திரிகைகளில் வருபவை நம்பக் கூடியவையாக இருப்பதில்லை என்பது போன்ற கருத்து தொனிப்பதாக அது இருந்தது. அதுமட்டுமல்ல அவ்வாறான சம்பவங்கள் எதுவுமே நடைபெறவில்லை என்றும் மறுக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரன் ஈவிரக்கமின்றி படுகொலை செய்யப்படுவதற்கு சற்று முன் வரை உயிருடன் இருந்ததாகக் காட்டும் சனல் -4 ஆவணப்படத்தில் ஒரு பாவமும் அறியாத அந்த 12 வயதான பாலகன் தான் ஒரு பொல்லாத இடத்தில் மாட்டிக் கொண்டிருப்பதை உணர்ந்துவிட்டவர் போல விழித்தபடி எங்கோ தன் பார்வையை செலுத்தி தெரிந்தவர்கள் யாரும் வரமாட்டார்களா, என்னை இந்தப் பொறியில் இருந்து விடுவிக்க மாட்டார்களா என்று ஏங்குவதுபோல் காணப்படுகிறார். காண்போர் மனங்களை உருகச் செய்யும் இந்தப் படமும் அதனுடன் வந்த பிஸ்கட் உண்பது போன்ற படமும் பின்னர் பாலச்சந்திரன் சுடுபட்டு விழுந்துகிடக்கும் படமும் தமிழ்ப் பத்திரிகைகளில் வெளியானதுபோல் சிங்கள மற்றும் ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளியாகவில்லை. தமிழ்ப் பத்திரிகைகளில் வெளிவருபவை எதுவும் உண்மையாக இருக்காது என்பது போன்ற ஒரு மாயை தெற்கில் உருவாக்கப்பட்டுள்ளது.

**ஒருவன் தப்பி ஓடினால் இருப்பவனுக்குத் தண்டனை**

சிறைச்சாலையில் இருந்து இரண்டு கைதிகளை சிறைக்காவலர்கள் நீதிமன்ற வழக்கு விசாரணை ஒன்றுக்காக அழைத்துச் சென்று கொண்டிருந்தார்கள். இடையில் ஓர் இடத்தில் கைதிகளை நிறுத்திவிட்டு காவலர்கள் தேநீர் குடிக்கக் கடையொன்றுக்குச் சென்றார்கள். இந்த இடைவேளையில் கைதிகளில் ஒருவன் தப்பிச் சென்று விட்டான். மற்றவன் மிக அமைதியாக காவலர்கள் வரும்வரை காத்திருந்தான். அவர்களும் திரும்பி வந்து கைதி ஒருவன் தப்பிச் சென்று விட்டதை அறிந்து கலவரமுற்றார்கள். உயர் அதிகாரிகளுக்கு பதில் சொல்லியாக வேண்டும் என்பது ஒரு புறமிருக்க நீதிமன்றத்திலும் கேள்விகளுக்கு பதில் சொல்லியாக வேண்டும்.

காவலர்கள் தங்களை தப்புவித்துக்கொள்வதற்கு ஒரு வழியைக் கண்டு பிடித்தார்கள். அதன் விளைவு தப்பி ஓடாமல் இருந்தவனான கைதியின் மண்டை உடைக்கப்பட்டது. இரத்தம் ஒழுக ஒழுக அவன் உயர் அதிகாரிகளின் முன் நிறுத்தப்பட்டான். இரண்டு கைதிகளும் எங்களைத் தாக்கிவிட்டு ஓட முற்பட்டார்கள். பெரும்பாடுபட்டு ஒருத்தனை பிடித்து விட்டோம். மற்றவன் தப்பி ஓடி விட்டான் என்று கதைவிட்டார்கள். அதிகாரிகளும் இதைநம்பி ஏற்றுக்கொண்டுவிட்டார்கள்.

**அசை போட ஒரு விடயம் 69**

இது கதையல்ல வெகு நாள்களுக்கு முன்பு இங்கு நடந்த ஒரு சம்பவம் ஓய்வு பெற்ற அதிகாரி ஒருவர் வெளியிட்ட தகவல். இதேபோல் இன்னொரு சம்பவம் இப்பொழுது தென்னிலங்கையில் நடந்துள்ளது. அதுபற்றிய செய்தி பத்திரிகைகளில் வெளிவந்துள்ளது.

இதில் சிறைக்காவலர்கள் சம்பந்தப்படவில்லை. இரண்டு பேரும் பொலிஸ் சார்ஜன்டுகள். செய்தி பின்வருமாறு:-

காலியில் யக்கலமுல்ல பொலிஸ் நிலையத்தை சேர்ந்த இரண்டு சார்ஜன்டுகள் ஒரு சந்தேக நபரை தப்பிச் செல்வதற்கு உடந்தையாக இருந்துள்ளார்கள் என்பதால் தற்காலிக பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்.

யக்கலமுல்ல பகுதியைச் சேர்ந்தவர் சந்தேக நபரான 14 வயது இளைஞர். வீடுடைத்து திருடினார் என்ற குற்றச்சாட்டில் அவர் கைதாகி காவலில் வைக்கப்பட்டிருந்தார். அவர் பத்தேகம நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் நிறுத்தப்படுவதற்காக கொண்டு செல்லப்பட்ட வேளையில் போக்குவரத்து நெருக்கடியான ஓர் இடத்தில் பஸ்ஸில் இருந்து குதித்து தப்பி ஓடி விட்டார். சந்தேகநபர் பதின்ம வயதினர் என்பதால் விலங்கிடப்பட்டிருக்கவில்லை எதுவானாலும் பொலிஸ் அதிகாரிகள் தப்பி ஓடிய சந்தேக நபரைப்பிடித்து விட்டதாகக் கூறி வேறு ஒரு பையனை நீதிமன்றில் நிறுத்தியுள்ளனர். இரு அதிகாரிகள் மீதும் இப்போது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக காலி பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவத்திலிருந்து குற்றவாளிகள் தப்பி விடுவதும் அப்பாவிகள் தண்டனைக்குள்ளாவதும் சாதாரணமாக நடைபெறும் சம்பவங்கள் போல் தெரிகின்றன.



# கொடுக்கவும் முன்வாருங்கள்

பஞ்சவர்ணன்

**ஆண்களால் காக்கப்படும் பெண்களின் உயிர்கள் சம உரிமையை எடுக்க அல்ல கொடுக்கவும் முன்வரலாம்**

"…. காத்து மானிடர் செய்கை யனைத்தையும்
கடவுளர்க்கினி தாகச் சமைப்பாராம்;
ஏத்தி ஆண்மக்கள் போற்றிட வாழ்வாராம்;
இளைய நங்கையின் எண்ணங்கள் கேட்டீரோ!

என பெண் விடுதலை பற்றிய பாரதியின் கனவுகள் அவன் கவிதையில் தெறித்தன. ஆனால்



அதையும் தாண்டி எமது மண்ணில் பெண்களை " ஏத்தியே ஆண்மக்கள் காத்திட வாழ்கிறனர் " எனலாம் கடந்த நாள்களில் " மகளிர் தினத்தை" கொண்டாடி ஓய்ந்திருக்கும் மகளிர் அமைப்புகளுக்கு " இனியும் இது தேவையா " என்ற எண்ணம் அடி மனதில் என்றாலும் எழத்தான் வேண்டும்.

மருத்துவம் உயிர் காக்கும் உன்னத சேவை எனலாம். " குருதிக் கொடை" என்பது அதனை உயர்த்தித் தாங்கும் உன்னத சக்தியாக உள்ளது. அப்படிப்பட்ட தன்னார்வக் குருதிக் கொடையாளர்கள் எம்மிடத்தே தாராளமாக உள்ளனர் எனும் போது ஒப்பற்ற உயர்வில் எமது சமூகம் உள்ளது எனக் கொள்ளலாம். அதில் மிகமிக அதிகளவான குருதிக் கொடையாளர்களாகக் காணப்படுபவர்கள் ஆண்கள் எனும் போது இந்த சமூகத்தைக் காக்கும் சக்தியாக ஆண்களே காணப்படுகிறார்கள் எனலாம். அது மட்டுமல்லாது, அதிகளவு குருதி தேவைப்படுபவர்களாக பெண்கள் காணப்படுவதால் " ஏத்தியே காத்திட வாழ்வாராம்" என பாரதியின் பாடலைச் சிறிது திருத்திக் கூறினால் பாரதியின் " பெண் விடுதலைத் தாகம்" தீர்ந்து விடும் எனலாம்.

## இரத்த வங்கி பெற்ற குருதி

யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்குச் சென்று 2742 பைந்த் குருதியை குருதிக் கொடையாளர்கள் (23.8%) வழங்கியுள்ளனர். அத்துடன் நடமாடும் சேவையினூடாக 4186 பைந்த் குருதிக் கொடையாளர்களிடம் (36.3 %) பெறப்பட்டுள்ளது. பிற வைத்தியசாலைகள் ஊடாக 4586 பைந்த் (39.9 %) குருதி பெறப்பட்டுள்ளது. இதில் யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு கடந்த ஆண்டு மொத்தமாகக் கிடைத்த குருதியில் ஆண்களிடம் இருந்து கிடைத்த குருதி 91.4% ஆகவும், பெண்களிடம் இருந்து கிடைத்த குருதியில் 8.6% எனவும் தரவுகள் கூறகின்றன.

## இரத்த வங்கி வழங்கிய குருதி

இவ்வாறு பெறப்பட்ட குருதி யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள நோயாளிகளுக்கு 8996 பைந்த் (84.7 %) குருதியும், பிற அரச வைத்தியசாலையில் உள்ள நோயாளர்களுக்கு 1304 பைந்த் (12.3 %) குருதியும், தனியார் வைத்தியசாலையில் உள்ள நோயாளர்களுக்கு 299 பைந்த் (2.8%) குருதியும் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு வழங்கப்பட்ட குருதியில் 50.2 % ஆன பகுதி புற்று நோயாளர்களுக்கும் 20.2 % ஆன பகுதி சத்திரசிகிச்சை நோயாளர்களும் பெற்றுப் பெரிதும் பயனடைந்துள்ளனர். இவ்வாறு அதிகளவு குருதியினைப் பெற்றுப் பயனடைந்தவர்கள் பெண் நோயாளர்கள் எனவும் தரவுகள் கூறுகின்றன. அதிகளவில் ஆண் குருதிக் கொடையாளர்களால் வழங்கப்பட்ட குருதியால் பெருமளவு பெண் நோயாளர்களே பயனடைபவர்களாக இருப்பதால் பெண்களும், இனிவரும் காலங்களில் அதிகளவான குருதிக் கொடையாளர்களாக மாறுவார்கள் என எதிர்பார்க்கலாம். இதற்கு மகளிர் அமைப்புகள் துணைசெய்யுமா!

## அதிகரித்து வரும் குருதித் தேவை

குருதியை செயற்கையாக செய்ய இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. எனவே குருதி இழப்பை ஈடுசெய்ய மனிதக் குருதியே தேவையாக உள்ளது. குருதியின் தேவையும் வருடா வருடம் அதிகரித்தே வருகிறது. சனத்தொகைப் பெருக்கம், விபத்துக்களின் அதிகரிப்பு, புற்று நோய் போன்ற நோய்த் தாக்கங்களின் அதிகரிப்பு, போசனைக் குறைபாடு, சத்திர சிகிச்சை அதிகரிப்பு, என்பவற்றை இதற்கு முக்கிய காரணமாகக் கூறலாம். சத்திர சிகிச்சையில், " சத்திர சிகிச்சைப் பிரசவம்" முக்கிய காரணியாக உள்ளது. அண்மைக் காலங்களில் சத்திர சிகிச்சைப் பிரசவங்கள் கணிசமாக அதிகரித்துச் செல்வதாகவும் கூறப்படுகிறது. எனவே இதற்கான குருதித் தேவையும் கணிசமாக அதிகரித்தே காணப்படுகிறது.

| ஆண்டு | பெறப்பட்ட குருதி (பைந்த்) | வழங்கப்பட்ட குருதி (பைந்த்) |
|---|---|---|
| 2010 | 7736 | 7091 |
| 2011 | 9261 | 9041 |
| 2012 | 11514 | 10646 |

## குருதிக் கொடையாளர்

அதிகளவு இளவயதினரே குருதிக் கொடையாளர்களாக எமது சமூகத்தில் காணப்படுவது ஆரோக்கியத்தின் அறிகுறியாகக் காணப்படுகிறது. குறிப்பாக 18 - 35 வயதுக்கு இடைப்பட்டவர்கள் ஊடாகப் பெறப்படும் குருதியே அதிகளவு உயிர்களைக் காக்கின்றது எனலாம். பிரதி உபகாரமாகக் குருதி பெறப்படாமல் தன்னார்வக் குருதிக் கொடையாளர்களாகவே இவர்கள் காணப்படுகின்றனர். கடந்த ஆண்டு 131 நடமாடும் இரத்ததான முகாம்கள் ஊடாக 4186 நபர்களிடம் குருதி பெறப்பட்டுள்ளது.

**கடந்த ஆண்டின் குருதிக் கொடையாளர் வயது அடிப்படையில் விவர வீதம்**

| வயதுப் பிரிவினர் | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 18-25 | 46% | 4.3% | 50.3% |
| 26-35 | 32.9% | 2.7% | 35.6% |
| 36-45 | 10.3% | 1.1% | 11.4% |
| 46-55 | 2.0% | 0.5% | 2.5% |
| 56-65 | 0.2% | 0.05% | 0.25% |

தற்போது எமது பிரதேசத்தில் உள்ள இராணுவத்தினரும் குருதி வழங்கி வருவது அதிகரித்துள்ளது. யாழ். போதனா வைத்தியசாலை, மந்திகை, தெல்லிப்பழை, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய வைத்தியசாலைகளின் ஊடாக இராணுவத்தினர் குருதி வழங்கி வருகின்றனர், கடந்த வருடம் பெறப்பட்ட மொத்தக்குருதியின் அளவில், கால்ப் பங்கிற்கு அதிகமான பங்கு இராணுவத்தால் வழங்கப்பட்ட குருதி என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது பெறப்பட்ட குருதியில் 26.8 % இராணுவத்திடம் இருந்து பெறப்பட்டது.

**இராணுவத்தால் வழங்கப்பட்ட குருதி விவரம் (பைந்த்)**

| இரத்த வங்கி | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|
| யாழ்.போதனா வைத்தியசாலை | 1019 | 961 | 1178 |
| மந்திகை | 90 | 265 | 55 |
| தெல்லிப்பழை | - | - | 40 |
| முல்லைத்தீவு | 107 | 1821 | 1551 |
| கிளிநொச்சி | 259 | 399 | 264 |
| மொத்தம் | 1475 | 3386 | 3088 |

## யார் குருதி வழங்கலாம்

இரத்ததானம் ஆபத்தானதொன்று அல்ல, மாறாக இரத்தத்தை புதுப்பித்துக் கொள்ள உதவுகின்றது. பொதுவாக உடலில் உள்ள 5 லீற்றர் அளவான குருதியில் 450 மில்லி லீற்றர் குருதியே ஒரு தடவையில் தானமாக வழங்கலாம். வழங்குபவரின் வயது 18 -60 எல்லைக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும். வழங்குபவரது ஆகக் குறைந்த நிறை 50 கிலோகிராமாக இருக்க வேண்டும்.

நாடித்துடிப்பு 80-100 துடி/ நிமிடம் என்பதுடன் அது ஒழுங்கான துடிப்பாகவும் இருக்க வேண்டும். உடல் வெப்பநிலை 37.5இற்கு கூட ஆகாது.

குருதி அமுக்கம் 160/60-110/60 ற்கு இடைப்பட்டதாக இருப்பதுடன் ஊசி குத்தும் இடத்தில் எந்தவித அடையாளங்களோ அல்லது ஏற்கனவே ஊசி குத்திய அடையாளங்களோ இருக்கக் கூடாது.

இரத்ததானம் செய்யும் பொழுது பல மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.இரத்த வீதம் (ஈமோ குளோபின்) குருதி வகை போன்றன சோதிக்கப்படும். கெப்பரைட்டிஸ் ஆ.இ, எஜஙு வைரஸ், சிபிலிஸ், மலேரியா போன்ற நோய்கள் உள்ளனவா எனவும் சோதிக்கப்படும்.

வீதி விபத்துக்கள், சத்திர சிகிச்சைகள், மகப்பேறு, குருதிச் சோகை, தலசீமியா, டெங்கு, குருதி உறையா நோய், எரிகாயங்கள், புற்று நோய், நீண்ட காலமாக சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் போன்றோருக்கு தானமாக வழங்கப்படும் குருதி பயன் மிக்கதாக உள்ளது.

இவ்வாறு தானமாகக் குருதியை வழங்குவதால் குருதிக் கூறுகளை உற்பத்தி செய்யும் என்பு மச்சையின் தொழிற்பாடு புத்துயிர்ப்பு அடைகிறது. கொலஸ்ரொல் அதிகரிப்பால் ஏற்படும் மாரடைப்பிற்கான வாய்ப்புக்கள் குறைவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

குருதிக் கொடையாளர்களால் வழங்கப்படும் குருதி, கூறுகளாகப் பிரிக்கப்பட்டு, எந்தக் கூறு நோயாளிக்குத் தேவைப்படுகிறதோ அந்தக் கூறு நோயாளிக்கு வழங்கப்படும்.

குருதி சேகரிக்கப்பட்டு ஆறு மணித்தியாலத்திற்குள் குருதி கூறுகளாகப் பிரிக்கப்படும். குருதிக் கூறுகள் 5 நாள் தொடக்கம் ஒரு வருட காலம் வரை அவற்றிக்கு ஏற்ற வெப்பநிலைகளில் களஞ்சியப்படுத்தி பாதுகாக்கப்படும்.

குருதியை முழுமையாகவும், அல்லது குருதிக் கூறு ஒன்றினையும் (குருதிச் சிறுதட்டு) தானமாகச் செய்யலாம். அத்துடன் ஒருவர் தனக்குத் தானே கூட இரத்ததானம் செய்யலாம். எனவே இவ்வாறான உயிர் காக்கும் செயற்பாட்டில் பங்கு கொள்ளப் பலரும் முன்வருவதால் சமூகத்தை ஆரோக்கியமாக்கும் எனலாம். ★

# அடிமைகளின் மீட்பர்

## ஆபிரஹாம் லிங்கன்

நெடுந் தொடர்

41

■ பா.உண்மை

தென்பகுதியில் இருந்த பல்லாயிரக் கணக்கான அடிமைகள் தப்பித்து வந்து, லிங் கனின் படையில் சேர்ந்துகொண்டார்கள். காடு, மேடு, சமவெளி, மலை, ஆறு எல்லாமே அவர் களுக்கு அத்துப்படியாகியிருந்தன. பெரும்பா லான சமயங்களில் படைகளுக்குப் பல வழி களில் உதவியாக இருந்தார்கள். வழிகாட்டினார்கள்.

'கறுப்பினப் பெண்கள் உள்நாட்டுப் போரில் ஆற்றிய பங்கு பொன்னெழுத்துக்களில் பொறிக் கப்பட வேண்டியது' என்கிறார்கள் ஆராய்ச்சி யாளர்கள். இராணுவத்துக்கு ஆளெடுப்பதிலிருந்து, அவர்களுக்கு மருத்துவ வசதி செய்துகொடுப் பது, அடிபட்டவர்களைத் தூக்கிக் கொண்டு போய் சிகிச்சையளிப்பது, ஆயுதங்களைக் கொண்டுபோய்ச் சேர்ப்பது .... எனப் பல உதவிகளை இந்தப் பெண்கள் பம்பரமாகச் சுழன்று சுழன்று செய்தார்கள்.

ஒரு நிலச்சுவான்தார் தன் நண்பருக்கு எழு திய கடிதத்தில் இந்தப் பெண்களைப் பற்றி இப்படிக் குறிப்பிடுகிறார்; 'இந்த நீக்ரோப் பெண்களைப் பார்த்தால் எனக்கு வியப்பாக இருக்கிறது. இந்தப் போரின் தலையெழுத்தை லிங்கன் அல்ல; இவர்கள்தான் தீர்மானிக்கப் போகிறார்கள் என்று நினைக்கிறேன்.'


அதேசமயம் தென்பகுதியில் அடிமை களைத் தப்புவித்து அனுப்புகிற பணியும் ஜரூராக நடந்துகொண்டிருந்தது. அப்போதுதானே அமெரிக்க ஐக்கியப் படையின் எண்ணிக்கை உயரும்? இதிலும் உதவி செய்தது நீக்ரோப் பெண்கள்தான். ஒரே இரவில் ஜோர்ஜி யாவிலிருந்து 1500 அடிமைகள் தப்பித்து, ரகசியமாக வொஷிங்ட னுக்கு வந்துசேர்ந்தார்கள். இவர்கள் தப்பிக்க உதவி செய்தது, 15 பேர் கொண்ட பெண்கள் குழு ஒன்று.

போர் நடந்து கொண்டிருந்த மூன்று ஆண்டுகளுக்கு, தென்பகுதி கூட்ட மைப்புப் படைக்கும் முழு வெற்றி கிடைக்கவில்லை. அமெரிக்க ஐக்கிய படைகளுக்கும் முழு வெற்றி என்று சொல்வதற்கில்லை. அமெரிக்க ஐக்கிய படைகள் கணிசமாக வெற்றி பெற்றிருந் தாலும், எல்லாமே சின்னச் சின்ன வெற்றி கள்தான்.

அமெரிக்க ஐக்கிய படைகளுக்குத் தலைமையாக யூலிசிஸ் கிராண்ட் (Ulysses S.Grant) பதவியேற்றதும் படைவீரர்களுக் குப் புது சுறுசுறுப்பும் முறுக்கும் வந்துவிட்டன. கிராண்ட் கொஞ்சம் முரட்டுத்தனமான ஆள். யார், என்ன, ஏது என்று பார்க்க மாட்டார். விளாசித்தள்ளி விடுவார். புத்திசாலி. சின்னச் சின்ன வெற்றிகள் படைவீரர்களுக்கு உற்சாகம் கொடுக்கும் என்று தெரிந்து வைத்திருந்தார் அவர். தென்பகுதியில் சின்னச் சின்னப் பகுதிகளைத் தாக்கி, வெற்றிக் கொடி நாட்டினார். ஹென்றி கோட்டை (Fort Henry) டோல்னெல்சன் கோட்டை (Fort Donelson) இரண்டையும் தாக்கிக் கைப்பற்றி எல்லோரையும் மூக்கின் மேல் விரலை வைக்கச் செய்தவர் இந்த கிராண்ட்.

கிராண்டின் தலைமையில் முழுவெற்றி கிடைத்து விடும் என்று நம்பினார் லிங்கன். இந்தச் சூழலில் அமெரிக்காவில் மறுபடியும் ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிக் கொண்டிருந்தது.

வாழ்கையெல்லாம் போராடி அமெரிக்க ஜனாதிபதியான லிங்கனின் பதவிக்காலம் முழுவதும் உள்நாட்டுப் போரிலேயே கழிந்து விட்டது. எப்போது பார்த்தாலும் ஏதாவது ஒரு பிரச்சினை. இந்தச் சமயத்தில் இரண்டாவது தேர்தல். தொழில் துறையில் உருப்படியான எதையுமே செய்ய முடியாமல் அமெரிக்கா தேங்கிக் கிடந்த காலம் அது.



லிங்கனை வெற்றி வீடுதேடி வந்து கொண்டிருக்க, அவர்மேல் கடுமையான விமர்சனங்களும் வீசப்பட்டுக் கொண்டிருந்தன. அவற்றுள் முக்கியமான ஒன்று, 'லிங்கன் ஒரு சர்வாதிகாரி.'

ஜனாதிபதித் தேர்தல் நெருங்க நெருங்க லிங்கனின் வெற்றியை முன்னறிவிப்புச் செய்கிற மாதிரி, போரில் சில திருப்பங்கள் ஏற்பட்டன. கிராண்ட்டின் தலைமையிலான படைகள், வடக்குத் திசையிலும், தெற்குத் திசையிலும் தாக்குதல்கள் நடத்தி, மிசிசிபி ஆற்றின் பெரும்பகுதியைத் தங்கள் கட்டுப் பாட்டில் கொண்டுவந்தன. விக்ஸ்பர்க் (Vicksburg), ஹட்சன் துறைமுகம் (Hudson harbour) இரண்டுக்கும் இடைப்பட்ட 250 மைல்கள் நீளமுள்ள ஆறு, தென்பகுதிக் கூட்டுப் படைகளின் கட்டுப்பாட்டில் அதுவரை இருந்துவந்தது. தென்பகுதிக் கூட்டுப்படைகள், வெளிநாடுகளுடன் தொடர்பு வைத்துக்கொள்ள இந்தப் பகுதிதான் வாசலாக இருந்துவந்தது. இப்போது அது அமெரிக்க ஐக்கிய படையின் கையில்.

கிராண்ட் மூன்று மாதங்கள் பொறுமையாகக் காத்திருந்தார். பிறகு துணிந்து லீயின் படைகளைத் தாக்கத் தொடங்கினார். மூன்று வாரங்களில் ஐந்து போர்க்களங்களில் வெற்றிக் கொடியை நாட்டினார் கிராண்ட். மிசிசிபியின் தலைநகர் கிராண்ட்டின் வசமானது. தென்பகுதிக் கூட்டமைப்புப் படைகளும் தங்கள் கைவரிசையைக் காட்டிக் கொண்டிருந்தன. 'விட்டேனாபார்!' என்று களத்தில் இறங்கிய அந்தப் படைகள், மேரிலாந்தின் (Mary Land) மேற்குப் பகுதியையும், பெனிசில் வேனியாவின் (Pennysylvania) தென்பகுதியையும், தங்கள் வசமாக்கிக் கொண்டன. அப்போது பொடொமாக் பிரிவுக்குத் தலைமைத் தளபதியாக இருந்த ஜோசப் ஹூக்கரைப் (Joseph Hooker) பதவியிலிருந்து தூக்கிவிட்டு, அவர் இடத்தில் ஜோர்ஜ் மீட் (George G. Meade) என்பவரை நியமித்தார் லிங்கன். ஒரே ஆண்டில் அந்தப் படைப் பிரிவுக்கு ஐந்தாவது தளபதியாக நியமிக்கப்பட்டவர் ஜோர்ஜ் மீட் (George G. Meade).

*1863. ஜூலை 1.* பெனிசில்வேனியாவின் தெற்குப் பகுதியில், கெட்டிஸ்பர்க் (Gettysburg) என்னும் இடத்தில் லீயின் படைகளும், அமெரிக்க ஐக்கிய படைகளும் மோதிக் கொண்டன. இரண்டு பக்கமும் அநியாயத்துக்கு உயிர்ச் சேதம். ஆனால் அந்தப் போரில் வெற்றி, அமெரிக்க ஐக்கிய படைகளுக்கு என்று முடிவானது. மேற்குப் போர் முனையில் தளபதி கிராண்ட், ஜூலை 4 ஆம் திகதி விக்ஸ்பர்க் நகரைக் கைப்பற்றினார்.

லிங்கனை வெற்றி வீடுதேடி வந்து கொண்டிருக்க, அவர்மேல் கடுமையான விமர்சனங்களும் வீசப்பட்டுக் கொண்டிருந்தன. அவற்றுள் முக்கியமான ஒன்று, 'லிங்கன் ஒரு சர்வாதிகாரி.'

*(மீட்பர் வருவார்)*

# பிறவி

இளைஞனே
நீ... உன்னை
அறிந்து கொள்க
கடமைகள்
உனக்காக....
காத்துக்கிடக்கிறது
கண்மூடிக் கொள்
கனவுகள்
உனக்குள்
ஊற்றெடுக்கட்டும்
புதிய சமுதாயம்
உன் அறிவுக்கண்ணை
திறக்கட்டும்
அப்போது புதிய
வார்ப்புகள்
இங்கே
பிறக்கட்டும்
நீயும்...
மனிதனாய்
வாழ்வாய்
அதுவரை நீயும்
ஒரு பிறவிதான்

முல்லை ரமணன்



# இசையோடு இழையும் மிருதங்கக் கலைஞர்

## இசைச்செல்வர் வை.வேனிலான்

சாதனைக் கலைஞரைச்
சந்திப்போம் சிந்திப்போம்

■வயாவிளான் தவமைந்தன்

மிருதங்கம் வாசிக்கும் முறைகள் பல வகைப்படும். அவற்றுள் பாடலைக் கேட்டு வாசித்தல், பாடகரின் தாளத்திற்கு வாசித்தல், பாடல் வரிகளின் சொற்களை அனுசரித்து வாசித்தல், இராக பாவத்தை உணர்ந்து இழைந்து வாசித்தல் என்பன முக்கியமான சில வழிமுறைகள் ஆகும். எனினும் எதையும் கவனிக்காமல் அடித்து முழக்குகின்ற முறைமைகளையும் சில முழுவியல் வித்துவான்கள் பின்பற்றி வருகின்றனர்.

தண்ணுமை என போற்றப்படுகின்ற தாளக் கருவியான மிருதங்கத்தை வரன்முறையாகக் கற்று அதன் இனிமை குன்றாமல் இசையின் தன்மைகளை அனுசரித்து பக்கவாத்தியப் பண்பு கெடாமல் வாசித்து வருகின்ற சிறந்த மிருதங்கக் கலைஞராகவும் லயநாதாலயா என்னும் மிருதங்கக் கல்லூரியின் இயக்குநராகவும் எண்ணற்ற மாணவர்களை உருவாக்கி வருகின்ற ஆசானாகவும் கடந்த கால் நூற்றாண்டிற்கும் மேலாகக் கலைப் பணியாற்றி வருபவர் கலாவித்தகர் வை.வேனிலான்.



நான் சிறுவனாக இருந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் எண்ணற்ற சபாக்கள் இருந்தன. அவை இசை விழாக்களையும் அடிக்கடி நடத்தி வந்தன. அதனால் மக்கள் மத்தியில் இசை இரசனை, ஆர்வம், இசைக்கலை மீதான மரியாதை என்பன உயர்ந்து காணப்பட்டன. தற்காலத்தில் யாழ்ப்பாண மக்களின் இசை இரசிப்புத் தன்மையானது குறைந்து விட்டது என்றே கூறலாம்.

மறைந்த வைரவப்பிள்ளை திருமதி ரங்கம்மா தம்பதியரின் மகனாக 1962இல் தெல்லிப்பழையில் இவர் பிறந்தார். கலைச் சூழலில் பிறந்து வளர்ந்த இவர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கற்று சென்னைப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப் பட்டதாரிக் கற்கை நெறியை முடித்து 1988இல் பட்டப் பின் கல்வி டிப்ளோமாவைப் பெற்று 1990இல் ஆசிரிய நியமனத்தையும் பெற்றுக் கொண்டார்.

அக்கரைப்பற்று ஆயிஷா பெண்கள் கல்லூரியிலும் அதன் பின் கொழும்பு டி.எஸ்.சேனநாயக்க கல்லூரியிலும் விஞ்ஞானத்துறை ஆசிரியராகக் கடமை புரிந்து வருகின்ற இவர் வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களின் கல்விச் சேவையிலும் பணியாற்றி வருவதுடன் தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்பட்ட கருத்தரங்குகளில் போதனாசிரியராகவும் செயற்பட்டு வந்துள்ளார்.

கல்வித் துறையில் இவ்வாறு உயர் நிலையில் இருக்கும் இவர் கலைத்துறையிலும் புகழ் கொண்ட கலைஞராக விளங்கி வருகின்றமை போற்றுதற்குரியதாகும். சமூகத் தொண்டராகவும் நல் மனிதராகவும் அந்தக் காலத்தில் வாழ்ந்த கணேசலிங்கக் குருக்களால் நிர்வகிக்கப்பட்டு வந்த தெல்லிப்பழை பாலர் ஞானோதயா சபையில் தனது ஆறாவது வயதில் இணைந்து குரலிசையை நேசபூபதி நாகராசாவிடம் கற்று அங்கேயே நடைபெற்ற இசை நிகழ்வுகளில் பாடகராக மேடையேறி எட்டாவது வயதில் இருந்து அந்தச் சபையின் ஒப்பற்ற மிருதங்க ஆசிரியரான சங்கீதரத்தினம் க.ப.சின்னராசாவிடம் மிருதங்கக் கலையை வரன் முறையாகக் கற்று வந்தார்.

வட இலங்கைச் சங்கீத சபையின் ஆசிரியர் தரம் வரை கற்று மிருதங்கக் கலாவித்தகராக ஏற்றம் கண்ட இவர் மாவிட்டபுரம் ராஜமணி சிங்கராசாவிடம் வயலின், குரலிசை போன்ற கலைகளையும் கற்றவர். அதன் பின்னர் தமிழகத்தில் கலைமாமணி திருவாரூர் பக்தவத்சலத்திடம் குருகுல முறையில் மிருதங்கக் கலையைக் கற்று அங்கு பல இடங்களில் நடைபெற்ற இசை அரங்குகளிலும் ஈழத்துக் கலைஞராகத் தடம் பதித்து இசைச்சக்கரவர்த்தி மதுரை சோமு, கல்யாணசுந்தர சாஸ்திரியார் போன்ற இசை மேதைகளின் இசைக் கச்சேரிகளிலும் மிருதங்கம் வாசித்து கிடைத்தற்கரிய அனுபவங்களைப் பெற்று அற்புதமான கலைஞனாக 1989இல் ஈழத்தில் கால் பதித்தார்.

லயநாதாலயா எனும் மிருதங்கக் கல்லூரியை இயக்கி வருகின்ற இவர் பல கலாவித்தகர்களை உருவாக்கியிருப்பதுடன் பல மாணவர்களை அரங்கேற்றியும் சாதனை படைத்துள்ளார். பக்குவமாகவும் தேவையான இடங்களில் அழுத்தமாகவும் விவகாரமாகவும் நேர்த்தியாகவும் இனிமையாகவும் சுவை குன்றாமலும் மிருதங்கத்தை வாசிக்கும் திறன் கொண்ட இவர் தற்போது கொழும்பில் நடைபெற்று வருகின்ற தென்னிந்தியக் கலைஞர்களின் இசை நிகழ்வுகளில் மிருதங்கக் கலைஞராக அணி செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மகாராஜபுரம் இராமச்சந்திரன், ஸ்ரீனிவாசன், என்.ரமணி, லலிதா, யு.பி.ராஜு, சாருமதி இராமச்சந்திரன் போன்ற பல தென்னிந்திய இசையாளர்களின் இசையரங்குகளைத் தனது மிருதங்கக் கலை வல்லமையால் அழகு செய்த இவர் பல இசை மன்றங்களில் மிருதங்க ஆசிரியராகப் பணிபுரிந்து இக்கலையை அர்ப்பணிப்புடன் வளர்த்து வருகின்றார்.

நான் சிறுவனாக இருந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் எண்ணற்ற சபாக்கள் இருந்தன. அவை இசை விழாக்களையும் அடிக்கடி நடத்தி வந்தன. அதனால் மக்கள் மத்தியில் இசை இரசனை, ஆர்வம், இசைக்கலை மீதான மரியாதை என்பன உயர்ந்து காணப்பட்டன. தற்காலத்தில் யாழ்ப்பாண மக்களின் இசை இரசிப்புத் தன்மையானது குறைந்து விட்டது என்றே கூறலாம். இதற்குப் பல காரணங்களும் உள்ளன.

தொடர்ச்சியான இசை விழாக்கள் இப்போது சரியான முறையில் நடைபெறுவதில்லை. கலை மன்றங்களும் தமது கலாமண்டபங்களைக் கல்யாண மண்டபங்களாக்கி விட்டன. எமது ஆலயங்களிலும் முழு இரவுத் திருவிழாக்கள் தற்போது கலையம்சம் கொண்டதாக நடைபெறுவதில்லை. நாட்டுச் சூழலும் இதற்கான காரணமாக இருக்கின்றது என்பதையும் மறுக்க முடியாது.

எனினும் யாழ்ப்பாணத்தில் மிருதங்க அரங்கேற்றங்கள் தொடராக நடைபெற்று வருவது மகிழ்ச்சிக்கு உரியதே. இதற்கும் ஒரு காரணம் உண்டு. மிருதங்கத் துறையில் ஏராளம் மாணவர்களை உருவாக்கி வருகின்ற முதுகலைஞர்கள் எவரும் இது வரையில் வெளிநாடு சென்று விடவில்லை. ஆனால் பாடகர்களில் பெரும்பாலானவர்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிவிட்டனர். இதனால் குரலிசை அரங்கேற்றங்களை எம்மால் காணவே முடியவில்லை.

இசையை பக்தி மயப்படுத்தி, ஆலயங்களில் இசை விழாக்களை நடத்தி இசை பற்றிய களப்பயிற்சிகளைத் துறைசார்ந்த வளவாளர்கள் ஏற்பாடு செய்து எமது இசைக் கலைக்கு உயிர்ப்பூட்ட முன்வர வேண்டும். இசை இரசனை குறைந்து வரும் இந்தக் கால யாழ்ப்பாணத்தை ஊரெல்லாம் சபா வைத்துச் சங்கீதம் வளர்த்த அந்தக் கால யாழ்ப்பாணமாக மாற்றியமைக்க அனைவரும் முயற்சிக்க வேண்டும் எனத் தனது அடிமனக் கருத்துக்களை ஆழ்ந்த கவலையுடன் கூறுகின்றார் கலைஞர் வை.வேனிலான்.

---

# காலக்கவலை

பிணக்காட்டில் இன்னுமெரிகிறது தணல்
வேகியும் வேகாமலும்
கனவு தீர்ந்துபோன நாள்களில்
நீயுமிருந்தாய்
அகதியாய் இடம்பெயர்வொன்றில்
இடருக்குள் உன்னைச் செதுக்கிற்று
காலம்
அதிகாரத்தின் நிழலில்
ரத்தவெடில் பரப்பிய மணத்தில்
முக்கரம் வாசமிழந்தன

என் பிள்ளாய்
என்ன செய்வேன்
திரும்பிவரா நாளில் மேற்கில் எல்லாம்
அஸ்தமித்து மாண்டன
நீயும் சனங்களுடன் தான்
பரிவாரங்களற்று
ஒற்றைச் சிறகுடன்
மரணம் கனக்கும் நாளில்
அந்தரிப்பதென்பது
சாவின் விளிம்பில் நிற்பதே
அதுவே நம்மினம்
உலகம் இதையும் காணக்
கலக்கமடையவில்லை

வா பிள்ளை
காட்டில் அந்தரித்ததை விட
கரிய தீயவர் உனைத்
தீண்டினரோ மகனே
14 வயதில் 5 சன்னங்களை
உன்னிலேவி என்னையும் கொன்றனர்
என் மகனே பிள்ளையாய்
உலகம் பழித்து எல்லாம் சபித்த நாட்டில்
எவர் வாழ்வும் தப்பாது
துப்பாக்கிக் குறிமுன்
மகனே என்னை
இழந்தே உன்னையும் இழந்தேன்



- சத்தியமலரவன்

# யாழ்ப்பாண இசைக் குழுக்கள்

எஸ்.எம்.கோபாலரத்தினம்

கல்லூரி இருந்த இடத்திலிருந்துதான் கில்னர் ஒழுங்கை தொடங்குகிறது. லயஞான குபேர பூபதி தெட்சணாமூர்த்தி இந்த கில்னர் ஒழுங்கையில் வாழ்ந்த காமாட்சிசுந்தரம் அவர்களிடம்தான் தவில் கற்றார்.

கில்னர் ஒழுங்கையிலிருந்து காங்கேசன்துறை வீதியில் சிறிது தூரத்தில் தட்டா தெருச் சந்தி. நாச்சிமார் கோயிலடி இங்கேயே ஆரம்பமாகிவிடுகிறது. இங்கும் ஒரு கண்ணன் பிறந்தான். கம்சனை அழிக்கப்பிறந்த கண்ணன் கையில் புல்லாங்குழல் வைத்து ஆவினங்களையே மயங்கவைத்தான்.



## அந்த நாள் ஞாபகம்..

இங்கே நாச்சிமார் கோயிலடியில் பிறந்த கண்ணன் ஒரு கோஷ்டியையே உருவாக்கி கேட்பவரெல்லாம் மயங்கும் இசை நிகழ்ச்சிகளை வழங்கிப் புகழ் பரப்பினான். இந்தக் கண்ணனின் கையில் எந்த வாத்தியத்தைக் கொடுத்தாலும் அது இசையை வழங்கும். கண்ணன் கோஷ்டியில் ஈழத்துச் சீர்காழி என்று புகழ் பெற்ற ஏ.ஆர்.ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும் மற்றொரு பெயர் பெற்ற பாடகர் அண்ணாமலையும் தங்கள் குரலினிமையால் மக்களை மயக்கினர். நண்பர் கிருஷ்ணமூர்த்தி எனக்கென்ன மனக்கவலை, என் தாயுக்கெல்லோ என் ஏற்படும்! அவர் மனக்கவலை இல்லாமல்தானாகவே தன் முடிவுக்கு வழி தேடிக்கொண்டார். அந்தக் குரலினிமையைத் தான் இன்றைய வளரும் பரம்பரை கேட்க முடியாமல் போய்விட்டது!

கண்ணன் கோஷ்டியிலிருந்து வெளியேறியும், வெளியேறியவர்களுடன் புதிதாகச் சேர்ந்தும் புதிய புதிய இசைக்குழுக்கள் தோன்றின. யாழ்ப்பாணத்தில் இரட்டையர் குழு, அருணா குழு, குப்பிளான் சுந்தரலிங்கம் குழு, மித்திரன் குழு, பக்தி இசைக்குழு, காந்தன் தேவன் எனத் தொடங்கி கீதாலயமாக முடிந்த குழு என பல குழுக்கள் உருவாகின. எல்லாக் குழுக்களும் இசை நிகழ்ச்சிகள் வழங்கின. மட்டக்களப்பில் முழக்கம் முருகப்பாவின் இசையும் பெயர் பெற்று விளங்கியது.

சிறுவயதில் கோவிந்தனாக நான் அழைத்த சிறுவன் வாலிபனாக தமிழரசுக் கட்சி மேடைகளில் முழக்கம் முருகப்பாவாக எனக்கு அறிமுகப் படுத்தப்பட்டான். நானும் மட்டக்களப்பை விட்டு வெளியேறி எனது பிள்ளைகளும் குடும்பங்களான பின் நான் பேரனுடன் மட்டக்களப்புக்குத் திரும்பியபோது 2000 ஆம் ஆண்டில் முருகப்பாவை விசாரித்தேன். சிலவாரங்களுக்கு முன்தான் காலமானதாக மகள் சொன்னபோது பெரும் கவலையாக இருந்தது.

எத்தனை மெல்லிசைக் குழுக்கள் தோன்றிய போதும் கண்ணன் கோஷ்டிக்கு மவுசு குன்றியதில்லை. விடுதலைப் புலிகள் கண்ணனை அழைத்து தம்முடனேயே சிறிது காலம் வைத்திருந்து அவர்களுடைய பாடல் நிகழ்ச்சிகளுக்கு இசையமைக்கக் கோரி கண்ணனின் இசைத் திறமையைப் பயன்படுத்திக் கொண்டனர். இப்பொழுது கண்ணனை தமிழ்நாடு அன்புப் பிடியில் வைத்திருக்கிறது. இப்பொழுது தான் சீடிக்கள் என்று என்னவெல்லாம் இசை ஒலிபரப்பிக் கொண்டிருக்கிறது. படங்கள் காட்சியளிக்கின்றன. இதற்கு மேலும் ஒரு கோஷ்டி தேவையா?

நாச்சிமார் கோயிலடியில் கண்ணன் கோஷ்டி தொடங்குவதற்கு முன்பே "கீதாஞ்சலி" நல்லையா என்ற ஒரு கலைஞர் நாட்டியப் பயிற்சியளிக்கும் நிலையம் தொடங்கினார். இந்த நிலையத்தில் பயிற்சி பெற்ற பலர் நாட்டிய தாரணிகளாகப் பிற்காலத்தில் பெயர் பெற்று விளங்கினர். வில்லிசை கலாவிநோதன் கணபதிப்பிள்ளை கீதாஞ்சலி நல்லையா அவர்களுக்கு மருமகன் முறை.

நாச்சிமார் கோயிலடியில் இப்போது உயிர் வாழும் கலைஞர்களில் குறிப்பிடக்கூடியவர்களாக சின்னக் கலைவாணர் பற்குணம் என்ற பீதாம்பரம் அவர்களையும் ''திப்புசுல்தான்'' லோகநாதன் அவர்களையுமே சொல்லலாம் . கண்ணன் இந்தியாவில், துரைசிங்கம் கனடாவில், சின்னமணியை காண்பதே அரிது! இந்த கலைக்குழுமத்தைச் சேர்ந்த கலை ஞானச்சுடர் வசிப்பது நல்லூர் முத்திரை சந்தைப் பகுதியில் என்றாலும் நாச்சிமார் கோயிலடி கலைஞர்களுக்கும் கலைகளுக்கும் பெயர் பெற்ற பிரதேசமென்பதில் மாற்றமில்லை!

(நினைவுகள் நீளும்.....)




# தாய் நிலம்




–சடா கோபன்

உப்புக் கடலுக்குள் இறங்கி
எழுந்துவருகின்ற ஊதல் காற்றில்
ஒட்டிக் கிடக்கின்ற உறவுகளையும்
உணர்வுகளையும்
எப்படி நான் பிய்த்தெறிவேன்

சிலுவை சுமப்புகள்
கண்களில் தெரிகின்ற

கல்வாரிப் பாடல்கள்
காதுகளில் கேட்கின்ற

ஒரு வாரத்தின்
கடைசி நாளில்
கடைசிப் பொழுதில்
கடைசி வினாடியில்
உனக்கான
அஞ்சலிப்பாவை எழுத
எனக்கு முடிந்திருக்கிறது

பகலுக்கும் இரவுக்கும்
சொந்தமில்லாத இந்தப் பொழுதில்
நொந்த மனங்களில்
மீட்கப்படுகின்ற ஞாபகங்களை
எது கொண்டு எழுதுவது

மீட்பனாய் நீ வந்தாய்
உயிர்ப்பை விரும்புகின்ற
எல்லா விழிகளிற்கும்
மீட்பனாய் நீ வந்தாய்

அந்திசாயும் பொழுதுகளில்
மெல்லிய புன்னகையோடு
நீ வருவாய்

வந்து....
அந்தப்பொழுதை
புளுகமான பொழுதாக்கி
நீ போவாய்

மீண்டும் வருவாய்
சந்தியாகாலத்தில் கூவுகின்ற
குயிலின் குரலோசையில் ஏறி
மீண்டும் வருவாய்

காற்றாகிப் போகிற காலத்திடம்
தோற்றுப் போகிற
மனிதர் நாம்

தோற்றுத்தான் போனோம்
நீ கால்பதித்த சாலைகளெல்லாம்
உன்னைக் கைவிட்டபோது

காலத்திடம் நாம்
தோற்றுத்தான் போனோம்

நீ விடைபெற்றுப்போனாய்
நாங்கள் விழியுடைந்து நின்றோம்

புல்வெளி தேடி
புறப்பட்ட பயணம்
முள்வேலியில் முடிவடைந்தபோது
முள்ளந்தண்டுகள் முளைவிட்டன

புல்வெளியெங்கும் பூத்திருந்தவனே
போய் வா!

குறித்து வைத்துக்கொள்
குறையாக எழுதிய பக்கங்கள்
நிறைவாக்கப்படும்
பிழையாக எழுதிய பக்கங்கள்
திருத்தி எழுதப்படும்
குறித்து வைத்துக்கொள்

புல்வெளியெங்கும்
பூத்திருந்தவனே
நீ......போய் வா!

# விடுகதைகளும் விடைகளும்

★ வாணலியில் சுட்ட பழம் மாதரசி இட்ட பழம், அது என்ன?
அப்பளம்

★ வானத்துக்கும் பூமிக்கும் ஊடே கம்பி, மக்கள் வாழ்வே இதை நம்பி அது என்ன?
மழை

★ தூங்கலுக்கு தாழ்வாரம், தூற்றலிற்கு மேல் வாரம், துவளும் கொடை மேடை, சுருட்டும் கரு ஆடை அத என்ன?
குடை

★ ஊற்றினால் தேக்கும், உதறினால் தெறிக்கும் அதது என்ன?
பேனா-மை

★ பள்ளத்தாக்கு இரண்டுக்கும் பாலமோ ஒன்றுதான் அது என்ன?
மூக்கு

★ கொத்தன் கட்டாத அறைகள், அவற்றில் கொட்டிக் கிடக்குது பன்னீர் அது என்ன?
தேன்கூடு

ப.அனோஜா, தரம் 9'டி.'
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

# தோழி

இதயச் சுமைகளை
இதமாய் போக்கிட
இனிய தோழி நீ வேண்டும்
கண்கள் கலங்கும் நேரம்
கவலை போக்கி
கனிவான தோழி நீ வேண்டும்
சின்னச் சண்டையிட்டு
சிரித்து மகிழ்ந்திட
சிநேகிதமாய் நீ வேண்டும்
நட்புக்கிலக்கணமாய்
நாமிருவரும் விளங்க
நல்ல தோழியே நீ வேண்டும்

ந.திவ்யா,
சாவகச்சேரி இந்துக் கல்லூரி.



# மன்னர்கள் கட்டிய குளங்கள்

| | |
|---|---|
| பராக்கிரமபாகு | -பராக்கிரம சமுத்திரம் |
| பண்டுகாபயன் | -அபய வாவி/ஜல வாவி |
| 2ஆம் அக்போ | -கந்தளாய் |
| மகாசேனன் | -மின்னேரியா/குருளு வாவி/கவுருலு வாவி |
| நிசங்க மன்னன் | -நிசங்க சமுத்திரம் |
| தாதுசேனன் | -போதக் கால்வாய்/பாணமது வாவி/பாணக்ம வாவி |
| தேவநம்பியதீசன் | -திஸ்ஸ வாவி/ சேனநாயக்க சமுத்திரம் |
| வசபன் | -மகாவிலாச்சியா/மாணாகட்டிய |

நாகேஸ்வரன் ரீனுஷா, தரம்-5,
யா/சங்குவேலி அ.த.க.பாடசாலை.

# குருவை மதிக்காத சிஷ்யன்!



சென்ற வாரத் தொடர்ச்சி..........

போதிசத்வரும் வீடு திரும்பி மாசிலனிடம் மன்னன் கூறியதைச் சொன்னார். மாசிலன் அது கேட்டு மனம் வருந்தினான். இது என்ன நியாயம்! ஒரே மாதிரியாக உள்ள இருவரில் ஒருவருக்கு நிறையச் சம்பளம்? மற்றவனுக்கு அதில் பாதியா? மன்னனிடமே இதற்கு விளக்கம் கேட்க எண்ணி அவன் மன்னனைச் சந்தித்தான்.



அப்போது, அரசே, இப்போது ஆஸ்தான வித்துவானாக உள்ளவரின் சம்பளத்தில் பாதியைக் கொடுத்து என்னை வேலைக்கு வைத்துக் கொள்வதாகக் கூறினீர்களாமே. நான் எந்த விதத்தில் அவரை விடக் குறைந்து போனேன்? அவர் எப்படியெல்லாம் வீணை வாசிக்கிறாரோ அதுபோல என்னாலும் வாசிக்க முடியும். இது பற்றி என் குருவிடமே நீங்கள் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். எனவே நீங்கள் எனக்கும் அவருக்குக் கொடுக்கும் அளவிற்கு சம்பளம் கொடுங்கள் என்றான்.

மன்னனுக்கு எரிச்சலாக இருந்தது. அவன், நீ குத்திலரின் சீடன் என்ற ஒரே காரணத்திற்காகத் தான் உனக்கு உத்தியோகம் அளிக்கச் சம்மதித்தேன். நீ அவருக்குச் சமமான வீணை வித்துவான் என நான் எப்படி நம்பமுடியும்? என்று கேட்டான். மாசிலனும் நீங்கள் எனக்கும் அவருக்கும் போட்டி வைத்துப் பாருங்கள். அப்போது தெரியும் என்றான். காசி மன்னனும் அதற்கு இணங்கி ஒரு போட்டியை வைத்தான். நீ இந்தப் போட்டியில் வென்றால் உனக்கு இங்கே உத்தியோகம் கிடைக்கும், தோற்றால் நீ இந்த நாட்டை விட்டே ஓடி விட வேண்டும் என்றான். மாசிலனும் அதற்கு இணங்கினான்.

மறுநாளே குருவிற்கும் சீடனுக்கும் இடையே போட்டி நடந்தது. அந்த போட்டியைக் காண்பதற்காகவும், கேட்பதற்காகவும் ஏராளமானோர் கூடி விட்டார்கள். இருவரும் ஒருவரை மற்றவர் வெல்வதற்காக வீணையை வாசிக்கலானார்கள். சற்று நேரத்திற்குப் பின் போதிசத்வரின் வீணை கம்பிகளில் ஒன்று அறுந்து போகவே அவர் மூன்று கம்பிகளில் வாசிக்கலானார். அவர் ஏதோ புதிதாய் செய்கிறார் என்றெண்ணிய மாசிலன் தன் வீணையின் ஒரு கம்பியை அறுத்து விட்டு அவரைப் போல வாசித்தான்.

போதிசத்வரின் வீணையில் மேலும் இரு கம்பிகள் அறுந்து போகவே, ஒரே கம்பியில் வாசித்தார். மாசிலனும் அவரைப் பார்த்து தன் வீணைக் கம்பிகளில் இரண்டை அறுத்து விட்டு ஒரே கம்பியில் வாசித்தான். போதிசத்வரின் வீணையின் கடைசி கம்பியும் அறுந்தது. கம்பி இல்லாமலேயே வீணையிலிருந்து அவர் இனிய நாதம் கிளம்பி வரச் செய்தார்.

மாசிலனும் தன் வீணையின் கடைசிக் கம்பியை அறுத்து விட்டு வாசிக்க முயன்றான்.

ஆனால் அவனது வீணையிலிருந்து எவ்வித நாதமும் வரவில்லை. சபையோர் போதிசத்வரைப் பாராட்டினார்கள். மாசிலனை கேலி செய்தார்கள். குருவின் திறமை தெரியாமல் அவரை போட்டிக்கு இழுத்த மாசிலனுக்கு பெருத்த அவமானம் ஏற்பட்டது. அன்றே தன் ஊரான உஜ்ஜயினிக்குக் கிளம்பி விட்டான்.

(முற்றும்)

## விடை தெரியுமா? 201

### உங்களுக்கும் பரிசுகள்

1. யாழ். நூலை எழுதியவர் யார்?
2. கண்ணாடி செய்யப் பயன் படும் மணலின் பெயர் என்ன?
3. உலகில் மிகக் குறைந்த வார்த்தைகளைக் கொண்ட மொழி எது?
4. இலங்கையின் முதலாவது பிரதம மந்திரி யார்?
5. தீப்பெட்டியைக் கண்டு பிடித்தவர் யார்?

### விடைகள் 199

1. ஆஸ்திரேலியா
2. ரொய்பிட்டர்
3. ரஷ்யா, பிரித்தானியா, பிரான்ஸ், சீனா
4. எல்லே, கரப்பந்தாட்டம்
5. மகாத்மா காந்தி

### வெற்றி பெற்றோர் விவரம் (199)

* கோ.துலக்சினி, தரம் -4, திருஞான சம்பந்தர் வித்தி.
* சூ.பிரியதக்ஷி, தரம் -9சி, மெதடிஸ்த.பெ.உ.பா.
* சே.விஜித்தா, தரம்-9,கிராஞ்சி அ.த.க.பா.
* சூ.புவித்தா, மெதடிஸ்த.பெ.உ.பா.
* சூ.விமலேசன், இல.129, தம்பசிட்டி வீதி, பருத்தித்துறை


சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

### விடை தெரியுமா?

தெரிந்தால் 16.03.2013 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.




ச.ஆர்த்திகா, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை



சி.அபிசரன், தரம்-1எல், புனித ஜோன் பொஸ்கோ வித்தி.




தி.ரிஷிகேன், எவர் ஸைன் முன்பள்ளி



ம.அபிநாசன், தரம்-8 சி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி



கு.மாதங்கி, தரம்-5ஏ, இணுவில் இந்துக் கல்லூரி



ம.திருமாறன், தரம்-5, கைதடி குருசாமி வித்தி.



சி.சுவேத்தா, தரம்-5, புனித ஜோன் பொஸ்கோ வித்தி.

41



# வெற்றி பெறலாம் வாங்க!

உங்கள் வாழ்க்கையை மாற்றப்போகும் தொடர்....

### நல்ல நண்பராக இருங்கள்

நல்லநண்பர்கள்கிடைப்பது அரிது. நல்லநண்பர்கள் இருந்தால், நீங்கள் தனியாக இருக்க வேண்டிய அவசியமில்லை. உங்களின் நல்லது கெட்டதைப் பகிர்ந்து கொள்ளும், உங்களின் கஷ்டகாலங்களில் உங்களுடன் நின்று துணைபுரியும், உங்களின் வெற்றியைக் கொண்டாடும் நண்பர்கள் இருப்பது மிக முக்கியமானது. இத்தகைய அரிய நண்பர்கள் இல்லாமல் வாழ முடியாது. இவர்களுடன் இருக்கும் போது நம் வாழ்க்கையில் ஒரு புதுப்பொலிவு உண்டாகும். அத்தகைய நண்பர் உங்கள் வாழ்க்கைத் துணைவராகக் கூட இருக்கலாம். அந்த நண்பர்கள் உங்கள் துணையை விட உங்களைப்பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும். உங்களுக்கு நல்ல நண்பர்கள் இருந்தால், நீங்கள் முக்கியமான நபராக ஆகிவிடுவீர்கள். இந்தச் சமயத்தில் நீங்கள் உங்களிடம் ஒன்றைக் கேட்டுக் கொள்ள வேண்டும். நீங்கள் அவர்களுக்கு எந்த அளவுக்கு நல்ல நண்பராக இருக்கிறீர்கள்? வெறுமனே பயன் பெறுவது மட்டுமல்லாமல், நாமும் பயன்தரும் வகையில் இருக்கலாம். மேலே குறிப்பிட்டபடி நல்ல நண்பர்கள் அமைந்து விட்டாலும் அவர்களுடன் இணைந்து பல நல்ல, அற்புதமான செயல்களைச் செய்ய வேண்டும். வெறுமனே அமர்ந்து குடிப்பதற்கு மட்டுமல்ல நண்பர்கள். பின்வரும் அத்தியாயத்தில் அதற்கான பல யோசனைகள் தரப்பட்டுள்ளன.

### நண்பர்களுடன் செய்யக் கூடிய 10 வேடிக்கையான விடயங்கள்

**பார்ட்டி:-** ஒரு பார்ட்டியை ஏற்பாடு செய்து அதில் வேடிக்கையான விளையாட்டுக்களை விளையாடுங்கள். நண்பர்கள் கூட்டத்தில் இந்த விளையாட்டை விளையாடுவதால், யாவரும் இதைத் தவறாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள்.

**பாட்டு:-** பெரிய ஸ்பீக்கருடன் கூடிய டி.வி.டி. பிளேயரை வாங்கி, உங்களுக்குப் பிடித்தமான பாடலைக் கேளுங்கள். இந்த முறை நன்றாக இல்லாவிட்டால், நீங்களே கூடப்பாடலாம். இது இன்னும் இனிமையானதாக இருக்கும்.

**மலையேறுதல்:-** மலையேறுதல் என்றதும் அது பெரிய மலையாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. ஆனாலும் நண்பர்கள் உதவியும் ஆதரவும் இருக்கும் போது, ரிஸ்க் எடுப்பதில் தவறில்லை. நண்பர்கள் அருகில் இருக்கையில் புதிய விடயங்களைச் செய்ய முயற்சிக்கலாம். இதனால் நண்பர்களுடன் நெருக்கம் அதிகமாகும்.

**மாளிகையை வாடகைக்கு விடுங்கள்:-** அதிக வசதியுள்ளவராக நீங்கள் இருந்தால், பல படுக்கையறைகள் கொண்ட மாளிகை ஒன்றை வாடகைக்கு எடுங்கள். பெரும் நண்பர் கூட்டத்தைக் கூட்டிக் கொண்டு ஒரு வார கால பார்ட்டி நடத்துங்கள். பார்ட்டிக்கு உதவிகரமாக இருக்கும் பணியாளர்களையும் வைத்துக் கொள்ளுங்கள்.

**ஓட்டப் பந்தயம்:-** உங்கள் நண்பர்கள் அல்லது பெரும் நண்பர்கள் கூட்டத்தோடு ஓரிடத்தில் போய், உண்மையான ஓட்டப்பந்தயம் போல நடத்தலாம்.

**கேளிக்கை விடுதி:-** உங்களுக்கான ஓர் அறை இருந்தால் நண்பர்களும் அவ்வளவு பேர் வருவார்கள் என்றால், அந்த இடத்தில் ஒரு பார் தொடங்கலாம். ஒவ்வொரு திங்கட்கிழமையும் நண்பர்கள் ஒன்று கூடலாம். ஏன் உங்களுக்கென ஒரு இடம் இருக்கக் கூடாது?

**பயணம் :-** தனியாகப் பயணம் செய்வதைவிட நண்பர்களுடன் இணைந்து பயணம் செய்வது இனிமையானதாக இருக்கும். நண்பர்களுடன் போனால் தனியாகத் தங்குவதற்கென்று ஒரு காட்டேஜ் எடுத்துக் கொள்ளலாம். இதனால் விடுமுறையை உங்கள் விருப்பம் போல அனுபவிக்கலாம்.

**விளையாட்டு :-** கோடைகால நண்பகல் வேளைகளில் குழந்தைகள் விளையாட்டை விளையாடுவது அற்புதமானதாக இருக்கும். குழந்தைகள் விளையாட்டை விளையாடும்போது, உடன் குழந்தைகளையும் சேர்த்துக் கொள்வது விளையாட்டை இன்னும் இனிமையானதாக்கும்.

**புதிய மொழியைக் கற்றுக் கொள்ளுதல் :-** நண்பனுடன் சேர்ந்து புதிய மொழியைக் கற்றுக் கொள்ளலாம் அல்லது மற்றவர்களுடன் சேர்ந்து கூட இதைச் செய்யலாம். இது கற்றுக் கொள்வதை எளிதாக்கும்.

**ஸ்போர்ட்ஸ் கார் வாங்குதல் :-** நண்பர்களுடன் இணைந்து உங்கள் கனவு ஸ்போர்ட்ஸ் காரை வாங்கலாம். சுழற்சி முறையில் ஒவ்வொருவரும் ஓட்டலாம். இது ''த்ரில்லான'' மகிழ்ச்சி அனுபவத்தை அளிக்கும்.

**நண்பர்களுடன் நெருக்கமாதல்:-**

நட்பு பலவீனமடையும்போது, நண்பர்களின் ஆர்வம் வேறு திசையில் பயணிக்கும் போது நமக்குக் கஷ்டமாக இருக்கும். ஆனால் நீண்டகால நட்புக்கு நம்மில் பொதுவாக இருக்கும் ஆர்வம் மிக முக்கியமானது. சில சமயங்களில் நாம் வெவ்வேறு திசையில் பயணிக்கத் தொடங்கும் போது, அதையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.



# கொலைத் தமிழ்




கெ.நிப்தன்,
கொழும்புத்துறை

தமிழன் இன்றுமுதல்
கொலையின் குழந்தை
தமிழ் பிராமணத்துள்
அசைவ அரக்கத்தனம்
புகுந்து தாண்டவமாடுகிறது
மேலார்
கொலையாணி பிடிக்கையில்
எழுத்தாணி எடுத்தவன்
தமிழன்!

இறுதியில்
ஜெயித்ததென்னமோ
கொலையாணிதான்- இருந்தும்
சரியவில்லை தமிழனின்
தன்மானம்
சரித்திரத்தையே
புரட்டிப் போட்ட
புயல் இவன் !
அதனால்தான்

கண்டகண்ட
இடத்திலெல்லாம்
கழுத்தறுத்த பிண்டங்கள்
துண்டு துண்டாய்க்
கிடக்கின்றனவோ?
புயல் கட்டுமீறிவிட்டது
காட்டுமிராண்டியாகிவிட்டது
கடிவாளம் இல்லாக்
குதிரைபோல.....!

## சொற்சிலம்பம் - போட்டி இல: 256



அனுப்புபவர் பெயர்:.......................................................

விலாசம்:.......................................................

.......................................................

கையொப்பம்:.......................................................

### இடமிருந்து வலம்

1. ஆறுவகையான ருசி
4. சத்தம்
6. பாதிப்புக்கான நிவாரணம்
8. பொருத்தமான நிலை
10. ரக
12. இரும்பில் பிடிப்பது
13. இடையரின் ஊர்
15. ஓர் இராசி
17. தலைக்கனம்
18. நிறுப்பது இக்கருவியினால்
20. ஒளி மங்க இது சூழும்
21. அரற்றல்
22. சமிக்ஞை

### மேலிருந்து கீழ்

1. ஓய்வு பெறும் வயது (பெரும்பாலும்)
2. முடிவு
3. எதிரி
4. இவரது கலகம் நன்மையில் முடியுமாமே
5. தங்களது
7. காப்பியம்
9. பாண்டவர்களில் மூத்தவர்
11. கம்பு
13. மாலை
14. காலணி
16. கைப்பிடியளவு
17. பெண்ணுக்கு மட்டும் காவல் அல்ல. ஆணும் கடைப்பிடிக்க வேண்டியது.
18. மரம்
19. சுடும் செயல்
20. வீடு

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 254 க்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) அருந்ததி (5) பகு (7) ரசி (8) வதிவிடம் (10) சகஜம் (12) சும்மா (13) மரம் (14) அவா (15) ரம்பம் (16) சதாம் (18) அம்மி (20) விலை (21) ரதி (23) சுண்டல் (24) இம்சை

**மேலிருந்து கீழ்**

(1) அரசமரம் (2) ருசிகரம் (3) தவம் (4) திதி (5) படம் (6) கும்மாளம் (9) விசுவாசம் (11) ஜம்பம் (17) தாமிரம் (18) அலை (19) கண் (20) வில் (22) திசை

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்ட சாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 256**
*நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (20.03.2013) ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.256இல்வெற்றி பெறுவோர்களது விவரம் 24.03.2013 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 254 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**விஸ்வகுமார். விஷ்ணுஜனா,**
சிவகுரு வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்

**2 ஆம் பரிசு**
**க. தில்லையம்பலம் .கதிர்காம, கோவிலடி**
வதிரி, கரவெட்டி.

**3 ஆம் பரிசு**
**திருமதி தி.புவனேஸ்,**
நாவற்குழி கிழக்கு, கைதடி

**4 ஆம் பரிசு**
**மு.கந்தையா,**
தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி

**5 ஆம் பரிசு**
**மு.அமுதலிங்கம்,**
கன்னதி வீதி, இடைக்காடு, அச்சுவேலி

**பாராட்டுப் பெறுவோர்**

**தெ.ஹம்சவாகினி,**
யாழ்/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, வல்வெட்டித்துறை.

**த.மகேஸ்வரன்,**
வைரவர் கோயிலடி, கரணவாய் வடக்கு ,கரவெட்டி.

**த.சுவர்ணா,**
இல 13, கொல்ல விளாங்குளம், வவுனிக்குளம்

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.*



## கலியுகச் சிரிப்பு....!

காற்றே .. கடலலையே
கரு நீல வான் பரப்பே..
நேற்றிருந்தவர்களில்
எஞ்சியவர்கள் தான்
மீண்டும் வந்து
பாடுகின்றோம்..
பார்த்ததை போய்ச் சொல்லுங்கள்
பாரிலே படும் பாட்டை
உருவமோ உருவங்களோ..?
எட்டி நடக்க முடியாமலிங்கே
ஊன்று கோலும்
களைக்கிறது..
கச்சை அவிழ்த்து
கழித்திட முடியாமல்
கைகளும் குறைகிறது
உச்சி வெயில்
உடலைக் கருக்க
உயிர் வெதும்பி வழிகிறது
பிச்சை எடுக்கின்ற
கதியிலும் கூட
பிறமொழி
சூழ்ந்து சுடுகிறது
எச்சில் சோற்றுக்கு
அடிபடும் நாய்களை
ஏழனமல்லவா கொல்கிறது
செத்துப் போன
இதயத்தைக் கிழித்து
சீதத்தையல்லவா குடிக்கிறது
யுத்தமுமில்லை சத்தமுமில்லை
கலியுகமல்லவா சிரிக்கிறது

**த.பருத்தி: தாசன்**

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

10.03.2013 முதல் 16.03.2013 வரை

தருபவர் - வித்தியா

**மேடம்**- எதிர்கால நலனை மனதில் வைத்து செயற்படும். உங்களின் லட்சிய கனவை நிறைவேற்ற, அதிர்ஷ்டவசமாக வாய்ப்பு உருவாகும். அதைத் தவறாமல் பயன்படுத்தி முழு அளவிலான நன்மையைப் பெறுவீர்கள். புத்திரர் அதிக அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வர். எதிரியால் தொல்லை இல்லை. தொழில் வியாபாரம் அமோக வளர்ச்சி பெறும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகைப் பயன் கிடைக்கும். மாணவர்கள் முறையான பயிற்சிகளை மேற்கொண்டு படிப்பில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.

**இடபம்**- உங்கள் செயலில் மதிநுட்பத்திறன் அதிகரிக்கும். பகைமை உணர்வுடன் வெளிவேஷத்துக்காக உங்களிடம் பழகியவர், விலகுகிற சூழ்நிலை உருவாகும். புத்திரர் நல்ல செயல் புரிந்து, பெற்றோருக்கு பெருமை தேடித் தருவர். இல்லறத்துணை மனதில், உங்களைப் பற்றி அதிருப்தி எண்ணம் வராமல், நடந்து கொள்வது நல்லது. அரசு தொடர்பான உதவி எளிதில் கிடைக்கும். உத்தியோகத்தர் சிறப்பாகப் பணி செய்து பாராட்டு, வெகுமதி பெறுவர். மாணவர்களுக்கு நினைவுத்திறன் அதிகரிக்கும்.

**மிதுனம்**- உங்களின் சிறியவேலைக்கும் அதிக முயற்சி தேவைப்படலாம். வாழ்வியல் சூழ்நிலையை சிறப்பாக மாற்றிட நண்பரின் உதவி, ஆலோசனை நல்வழி தரும். எதிர்மனப்பாங்கு உள்ளவர்களிடம் விலகுவதால், முக்கிய செயலை நிறைவேறுவது எளிதாகும். இல்லறத்துணை அன்பு, பாசத்துடன் நடந்து உங்கள் மனதில் நம்பிக்கையை உருவாக்குவார். தொழில் வியாபாரத்தில் அளவான உற்பத்தி, விற்பனை சராசரி பணவரவு கிடைக்கும். அரசியல்வாதிகள், சமரச பேச்சுகளில் பொறுமை குணம் பின்பற்ற வேண்டும். மாணவர்கள், வெளியிடம் சுற்றுவதைக் குறைப்பதால் படிப்பதில் கவனம் ஏற்படும்.

**கடகம்**- உங்களின் எண்ணமும், செயலும் சிறந்து, முக்கிய விடயங்களில் நல்ல தீர்வுகளை உருவாக்கும். பூர்வீக சொத்தில் பணவரவு சீராகும். எதிரி மனமாற்றம் கொள்கிற, நன்னிலை உண்டு. இல்லறத்துணை உறுதுணையாக உதவுவார். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சியும், தாராள பணவரவும் உண்டு. பணியாளர்கள், ஆர்வமுடன் பணிபுரிவர். பெண்கள், குடும்பநலன் பேணுவதில் அதிக அக்கறை கொள்வர். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பர்.

**சிங்கம்**- முக்கிய செயல்களில், எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். அன்பை பிரதானப்படுத்தி செயற்படுவீர்கள். இல்லறத்துணை புரிதல் திறன் குறைந்து, எதிர்மறை எண்ணங்களை வெளிப்படுத்துவார். உங்களின் அன்பும், பாசமும் நல்வழி நடத்தும். தொழில் வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தன்மைகளை பாதுகாத்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தர் நிர்வாகத்தின் உத்தரவுகளை செயற்படுத்துவதில் பொறுமை, நிதானம் பின்பற்றுவர். மாணவர்கள், அதிக கவனத்துடன் படிப்பதால் திட்டமிட்ட தேர்ச்சி இலக்கை அடையலாம்.

**கன்னி**-உங்கள் வாழ்வை வளம் நிறைந்ததாக உருவாக்க, புதியசிந்தனையுடன் செயற்படுவீர்கள். நீண்டநாள் தாமதமான முக்கிய செயல், சந்தோஷமான செய்தியை தரும். நற்பெயரை பாதுகாக்க, நிதானமாகப் பேசுவது நல்லது. இல்லறத் துணையின் கவனக்குறைவான செயலை, பெரிதாக எண்ணவேண்டாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும், ஆதாய பணவரவும் உண்டு. பணியாளர்கள், பணி இலக்கை குறித்த காலத்தில் நிறைவேற்றி சலுகை பெறுவர். மாணவர்கள், லட்சிய மனதுடன் படித்து சிறந்த தேர்ச்சி பெறுவர்.

**துலாம்**- உங்கள் வாழ்வியல் நடைமுறை சிறக்க, நண்பர் தாமாக முன் வந்து உதவுவர். நல்ல குணங்களை பின்பற்றி, சமூக அந்தஸ்தை பாதுகாத்துக் கொள்வீர்கள். எதிரியால் தொல்லை அணுகாத சுமுக வாழ்வு இருக்கும். இல்லறத்துணையின் கருத்துக்களில் உள்ள நியாயத்தை உணர்ந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற, அனுபவம் நிறைந்த நல்லவரின் ஆலோசனை கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு பழைய விவகாரம் ஒன்றில் சுமுக தீர்வு வந்து சேரும். மாணவர்கள், சக மாணவர்களின் உதவியால், கல்வியில் முன்னேற்றம் அடைவர்.

**விருச்சிகம்**- எந்தச் செயலையும் நேர்த்தி, விமரிசையாகச் செய்வீர்கள். புகழும், பணவரவும் அதிகம் கிடைக்கும். இளைய சகோதரருக்கு இயன்ற உதவி புரிவீர்கள். உங்கள் வாழ்வியல் சிறப்பைப் பார்த்து, எதிரி வியப்புடன் விலகுவார். இல்லறத்துணை அன்பு, பாசத்துடன் நடந்து உங்களின் அருமை, பெருமையை உறவினர்களிடம் சொல்வர். தொழில், வியாபார நடைமுறையில் சிறுமாற்றம் செய்வதால் உற்பத்தி, விற்பனை. அதிகரிக்கும். பணியாளர்கள், கூடுதல் வேலைவாய்ப்பை மனமுவந்து ஏற்றுக்கொள்வது நல்லது.

**தனுசு** - கடந்த தினங்களில், நீங்கள் கஷ்டப்பட்டு உழைத்த, பணிகளுக்கு உரிய நற்பலன் தேடி வரும். உங்களின் செயல், பேச்சு திறமையை, நண்பர் பாராட்டுவர். இல்லறத்துணையிடம், சுயகௌரவ சிந்தனையுடன் பேசுவதைத் தவிர்ப்பதால் மட்டுமே, குடும்ப ஒற்றுமை சீராகும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும், உபரி பணவரவும் உண்டு. உத்தியோகத்தர் பணியாளர்களை ஊக்கப்படுத்தி, பணி இலக்கை நிறைவேற்றுவர். மாணவர்கள் அறிவுத்திறனால் சிறந்த தேர்ச்சி பெறுவர்.

**மகரம்** - பிறரது புகழுரை விமர்சனத்தைப் பொருள்படுத்தாமல் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். புத்திரர் சொல்லும் வார்த்தையின் மகத்துவம், அமுதம்போல இனிக்கும். எதிர் மனப்பாங்கு உள்ளவரிடம் விலகி, மதிப்பை காப்பீர்கள். இல்லறத்துணை அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற வருகிற நல்வாய்ப்பைப் பயன்படுத்துவீர்கள். அரசியல்வாதிகளுக்கு, அதிகாரிகளின் அனுசரணை கிடைக்கும். மாணவர்கள், ஆரோக்கிய கல்வியில் அதிக கவனம் செலுத்துவர்.

**கும்பம்** -உங்களின் யதார்த்தமான பேச்சு, சிலர் மனதில் அதிருப்தியை உருவாக்கலாம். கவனம் தேவை. சுற்றுலா இடங்களுக்கு அழைத்துச் செல்வதால் மகிழ்ச்சி, நற்பலன் உண்டு. எதிர்மனப்பாங்கு உள்ளவர் உதவுவதுபோல், நடித்து நயவஞ்சகம் செய்ய முயற்சிப்பர். இல்லறத்துணை குடும்ப சூழ்நிலை உணர்ந்து, சகிப்புத்தன்மையுடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் சராசரி உற்பத்தி, பணவரவு கிடைக்கும். மாணவர்கள், தகுந்த பயிற்சி முறையால் மட்டுமே சிறந்த தேர்ச்சியை அடையலாம்.

**மீனம்**-உங்கள் எண்ணம், செயலில் சிறியளவில் முரண்பாடு ஏற்படலாம். பொது விவகாரங்களில் கருத்து சொல்வதை தவிர்ப்பது நல்லது. குடும்ப உறுப்பினர்களிடம் கருத்துக்களை பகிர்ந்து கொள்வதால், மனதில் தெளிவு பிறக்கும். உடல் நலத்திற்கு ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். தொழில், வியாபாரத்தில் அதிக முயற்சியால் உற்பத்தி, விற்பனை சீராகும். பணியாளர்கள் கால அவகாசத்தில் பணி இலக்கை நிறைவேற்றுவர். மாணவர்கள் சக மாணவர்களுடன் சுமுகமான முறையில் நடந்துகொள்ளுங்கள்.

## வேட்டைப் பூக்கள்

ஏராளமாக
பொசுங்குகிறார்கள்
எனது நாட்டின்
எதிர்கால ராஜாக்கள்

எத்தனை விட்டில்கள்
சமூக நெருப்பில்
கருகிவிட்டன

எத்தனை தீபங்கள்
தேசத்தின் இருட்டுகளை
துடைக்கும் முன்னே
துடைத்தெறிந்தீர்கள்

எத்தனை
இருதயங்களை
சிலுவையில் அடித்தார்கள்

எத்தனை
வைகறையை
கறைகளாக்கினார்கள்

எங்கே அவர்கள்?
முகமிழந்து தவிக்கும்
பிஞ்சுப் பௌர்ணமிகள்
வேலிகளுக்குப்
பயந்த பயிர்கள்
எங்கே போய்
முகம் புதைத்தார்கள்

சிறகிழந்து
மனமிழந்து
குறும்பிழந்து
குருடான குழந்தைகளே!
வாருங்கள்
உங்கள் சின்னவிழிகளால்
உங்களுக்கு எதிரான
சமூக வெருட்டல்களுக்கு
தீ வைப்போம்!

மெல்லிய மேகங்களின்
கண்ணீர் குரல்களோடு
கேட்கிறேன்!

இளமை பூக்காத
அந்த நட்சத்திரப் பூக்களின்
குறும்புகளோடு
கேட்கிறேன்!

வீரம் முளைக்காத
அந்த ரத்த நாளங்களின்
துடிப்போடு கேட்கிறேன்!

துஷ்பிரயோகங்களின்
போது
கதறிய இளம்
முகாரி ராகங்களோடு
கேட்கிறேன்!

மௌனத்தில் பூக்கும்
சங்கீதப் புன்னகைகளின்
சார்பில் கேட்கிறேன்!

சிறுவர் சுதந்திரவானுக்கு
தீ வைக்கப் பிறந்த
இழிந்த சமூகமே,

பூக்களை நசுக்க
புறப்பட்ட குருடர்களே!
உங்கள் தசைநோய்க்கு
ஜடப் பொருள்களை
பிரயோகியுங்கள்.

எங்கே ஒரு சிறுவன்
துஷ்பிரயோகிக்கப்
படுகிறானோ,
அங்கே எனதுபேனை
ரத்தம் கக்கும்

எங்கே ஒரு குழந்தை
குரூரம் சுமக்கிறதோ,
அங்கே எனது
எழுது கோல் கலகமாடும்

எம்.நேதா, நெடுந்தீவு

# மனவுலக இருளில் இருந்து...

- ஆதி



காலம்காலமாய் பெண்பற்றி ஊன்றப்படும் பிற்போக்கான கருத்துகளும் பெண்ணுக்குள் உருவாகும் தாழ்வுச் சிக்கலும் சேர்ந்து அவளை அடிமைப்படுத்தி விடுகின்றன. அடிமையாகிப் போகும் மனநிலை காலப் போக்கில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதுவே வாழ்வாகிப்போகிறது. உண்மையில் பெண் என்பவள் தனக்குள் இருக்கின்ற திறமையை, ஆற்றலை உணர்ந்து கொள்ளக்கூடியவளாக மாற வேண்டும்.

பெண்கள் எவ்வளவு தான் முன்னேற்றங் கண்ட பொழுதிலும் பெண்கள் பற்றிய சமூகப்பார்வை என்பது இன்னமும் சாபக்கேடானதாகவே இருந்து வருகிறது. 2000 ஆண்டுகளுக்கு முன் 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்று வள்ளுவர் எழுப்பிய கேள்வி முதலாக இன்று வரை பெண்ணினம் கேள்விக் குறியாகவே இருக்கின்றது.

பெண்களின் மாற்றங்களும், முன்னேற்றங்களும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியளவில் இருந்தாலும் பெரும்பாலும் துயரமும் ஆதங்கமும் நிறைந்ததாகவே இருக்கின்றன.

பெண்களின் ஆற்றல்களைப் பலமாக அங்கீகரிக்க பலரும் விரும்புவதில்லை. உதாரணமாக, யாருக்கும் அடங்காமல் அட்டகாசம் புரிந்து கொண்டிருந்த கொம்பன் யானையை தன் வலிமையால் அடக்கிக்காட்டிய வீரப்பெண் அரியாத்தை. ஆனால் இந்தப்பெண் தெய்வஅருளாலேயே யானையைப் பணிய வைத்ததாக கூறுவோரும் உள்ளனர். அதாவது பெண்ணின் ஆற்றலை ஜீரணித்துக் கொள்ளமுடியாத நிலையில் வெளிப்படுத்தும் கருத்தே இதுவெனக் கொள்ளலாம். தமிழ்ச் சமூகத்தில் மட்டுமல்ல உலகிலுள்ள பெரும்பாலான இனச் சூழலில் சமூகத்தில் இப்படியான கருத்துக்கள் இருப்பதை நாம் அறியலாம். பிரான்ஸின் மீது பிரிட்டிஷ் ஏகாதிபத்திய கரங்கள் நீண்டு விரிந்து தெரிந்த போது ஆர்க் எனும் கிராமத்திலிருந்து ஆவேசமாய் புறப்பட்டு ஆக்கிரமிப்பாளர்களை மோதிவென்று படை நடத்திய வீரப்பெண் ஜோன் ஒப் ஆர்க் பின்னாளில் சூனியக்காரியென்று எள்ளி நகையாடப்பட்டு, உயிருடன் தீமூட்டிக் கொளுத்தப்பட்டாள் என்பது வரலாறு.

இன்றைக்கும் பல கிராமங்களில் பெண் பிள்ளைகள் பரீட்சைகளில் கூடிய பெறுபேறு பெற்றால், விளையாட்டுக்களில் பரிசுகள் பெற்றால் அதை பிள்ளையின் கெட்டித்தனம் என்று மெச்சுவதை விடுத்து 'கடவுளின் கிருபை' என்று மாற்றுவதை நாம் கண்கூடாய்ப் பார்க்கின்றோம். காலம் காலமாக பெண்கள் பற்றி ஊன்றப்படுகின்ற கருத்து கருவூலங்களின் தோற்றப்பாடுகளே இவைகள். பெண்களின் உலகம் விரிவடைந்து வருகின்றது. பெண்கள் முன்னேறி வருகின்றார்கள். பெண்கள் சாதித்து வருகின்றார்கள். ஆனாலும் பெண்கள் மீதான சமூகப்பார்வை என்பது மாற்றம் காணாததாகவே இருக்கிறது.

இத்தகைய நிலைக்கு எந்த ஒரு தனி நபரையும் குற்றவாளியாகக் கூற முடியாது. சமூகத்தில் பெண்கள் பற்றி ஆழப்பதிந்திருக்கும் அடிப்படைக் கருத்தில் மாற்றம் காணப்பட வேண்டும். பெண் என்பவள் யார்? இந்த உலக இயக்கத்தில் பெண்ணின் பங்களிப்பு என்ன? அவள் தனது பங்களிப்பை முழுமையாக செய்யவிடாமல் தடுத்துநிற்கும் காரணிகள் என்ன என்பவை பற்றி சிந்திக்க வேண்டியது அவசியமாகின்றது.

ஆண்மைக்கும், பெண்மைக்கும் அப்பால் மனிதம் இருக்கிறது. அது மனிதப் பிறவிகளுக்குப் பொதுவானது. எனவே படைப்பியல் ரீதியாக பெண் வேற்றுமை காட்டப்படவேண்டியவள் அல்ல, மாறாக பெண் என்பவள் சமூகச் சுழற்சிக்கு உந்து சக்தியாகத் திகழவேண்டியவள்.

ஆனால் மிகவும் துரதிர்ஷ்டவசமாக பெரும்பாலான பெண்கள் தம் நிலை உணர்வதில்லை. அகங்கள் குறுகியிருப்பதால் முன்னேற்றங்கள் தடைப்படுகின்றன. முன்னேற்றங்கள் தடைப்பட்டு குறுகிய வட்டத்துக்குள் வாழும் போது அவள் தன்னாலும் பிறராலும் சுமையாக உணரப்படுகிறாள். இந்த உணர்வு காலப் போக்கில் பெண்ணுக்குள் தாழ்வுச் சிக்கலை உண்டு பண்ணுகிறது.

காலங்காலமாய் பெண்பற்றி ஊன்றப்படும் பிற்போக்கான கருத்துகளும் பெண்ணுக்குள் உருவாகும் தாழ்வுச் சிக்கலும் சேர்ந்து அவளை அடிமைப்படுத்தி விடுகின்றன. அடிமையாகிப் போகும் மனநிலை காலப் போக்கில் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதுவே வாழ்வாகிப்போகிறது. உண்மையில் பெண் என்பவள் தனக்குள் இருக்கின்ற திறமையை ஆற்றலை உணர்ந்து கொள்ளக் கூடியவளாக மாற வேண்டும். கல்வியில் நாட்டங் கொண்டு சிந்தனைத் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும். தலைமைத்துவப் பண்புகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும். தன்னம்பிக்கை அற்று ஒதுங்கிக்கொள்ளும் நிலையை மாற்றவேண்டும்.

நிர்வாகம் என்பது பெண்களுக்கும் ஏற்ற விடயம் தான் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். தன்னம்பிக்கை அற்று ஒதுங்கிக்கொள்ளும் நிலையை மாற்ற வேண்டும். 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்ற கேள்விக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின் என்றாலும் பதிலளிக்க வேண்டும் . உலக சனத்தொகையில் சரிபாதி பெண்கள் என்கிறார்கள். முன்னேற்றங் காட்டும் அல்லது ஆற்றல்களை வெளிப்படுத்தும் பெண்களின் தொகை மிகவும் குறைவானதாகவே காணப்படுகின்றது. உலகம் அறிவியலில் எவ்வளவோ தூரம் முன்னேறி விட்ட போதிலும் பிற்போக்கான எண்ணங்களையும், சிந்தனைகளையும் பற்றிப்பிடித்து தொங்கும் பெண்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். இன்றைக்கும் சீதனப் பிரச்சினையால் திருமணமாகாத பெண்களின் பட்டியல் இருக்கின்றது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி ஏமாற்றும் முகவர்களை நம்பி நடுத்தெருவில் நிற்கும் பெண்களின் கதைகள் வெளிவருகின்றன. காதலித்து ஏமாற்றப்படும் பெண்கள் இருக்கின்றார்கள்.

இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும் பொழுது பெண்களின் உலகம் அறியாமையிலிருந்து இன்னமும் முற்றாக விடுபடவில்லை என்றே கூறமுடிகிறது. குடும்பம் பல பெண்களுக்கு சுமையாக இருக்கிறது. 'யாராவது என் பாரத்திற் பாதியைச் சுமக்க முன்வரமாட்டார்களா?' என்று ஏங்கும் பெண்கள் பலர் இருக்கின்றார்கள். பொருளாதார ரீதியாக சுரண்டப்படும் பெண்கள் இருக்கின்றார்கள்.

பெண்கள் தம்மனவுலக இருளில் இருந்து வெளிவரவேண்டும். ஒளிமயமான எதிர்காலத்தை சிந்திக்க வேண்டும். 'நன்மையும் தீமையும் பிறர் தர வாரா' என்று முன்னோர்கள் கூறியுள்ளார்கள். எமது வாழ்வும் வலுவும் எமது கரங்களிலேயே தங்கியிருக்கின்றது. ஆரோக்கியமான சமூகத்தை - தேசத்தைக் கட்டி எழுப்ப வேண்டுமென்றால் பெண்கள் அகவிடுதலை அடையவேண்டும். பெண்கள் பற்றி சமூகத்தில் நிலவுகின்ற பிற்போக்குத்தனமான கருத்துக்கள் களைந்தெறியப்பட வேண்டும்.

பெண்களின் ஆற்றல்களும், ஆளுமைகளும் வெளிக் கொண்டு வரப்பட வேண்டும். தம்மீது ஆழப்புரையோடி நிற்கும் சமூகக் கொடுமையையும் அநீதியுமான ஒடுக்குமுறையையும் பெண்கள் உடைத்தெறிய வேண்டும். ★

## பொறுத்தது போதும்...

மூடச் சிறைக்குள்
முக்காடிட்டுக்
கிடக்கும் பெண்ணே!
மூடத்தனத்தை மூட்டை கட்டி
வைத்து விட்டு வாழ்வில்
முன்னேற முயற்சி செய்
உன் வாழ்வுக்கு
விதிக்கப்பட்டுள்ள
வரையறைகளை ஆய்வு செய்
இரவில் ஒளிரும் விண்மீன்
போல
என்றும் ஒளிரும் கனவு காண்

கண்களுக்கு மைதீட்டி
காலுக்குச் சலங்கையிட்டு
உதட்டோரம் சாயம்பூசி
கைக்குட்டையளவு
உடையணிந்து
கவர்ச்சி மட்டும்
காட்டத்தானா உன்னால்
முடியும்
எடுத்ததுக்கெல்லாம் கண்ணீர்
சிந்தி ஏமாற்றமான
வாழ்க்கைப்பட்டு
ஏதிலியாய் நீ இதுவரை
வாழ்ந்தது போதும்

வியத்தகு முன்னேற்றம் நீ
கண்டும் வீதியால் தனியாய்
சுதந்திரமாய்
நடமாட முடியாத உன்
ஏக்கம் புரிகிறது
வானிலே ஏறி வலம்
வந்தாலும்
வரதட்சணைக் கொடுமை
உன்னை வாட்டுவதை
எண்ணி
என் மனம் வருந்துகின்றது
பொறுத்தது போதும்
பெண்ணே
பொங்கியெழு
அடிமை விலங்குடைக்கப்
புதிய
ஆயுதம் கொண்டுவா



செ.ரவிசாந், குப்பிளான்.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் "திலகம்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .



# நமது பெருமை மிகுந்த மரபுரிமைகள்

ம.திருக்குமரன்



## பிராந்தியமொன்றின் இயற்கை மற்றும் பண்பாட்டுச் சின்னங்களாகப் பூங்காக்கள்

யாழ்ப்பாணத்தில் எமக்கு நெடுங் காலமாக சுப்பிரமணியம் பூங்காவைத்தான் தெரியும். கோட்பாட்டு ரீதியாக சுப்பிரமணியம் பூங்கா, பொது மக்கள் கூடுமிடம் எனும் வகையில் ஒரு பூங்காவே. என்றாலும் இலங்கைத் தீவின் வேறு பிராந்தியங்கள், பிற நாடுகளில் உள்ள பூங்காக்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அதுவொரு பெரிய வீட்டுப் பூந்தோட்டம் என்றே நினைக்கத் தோன்றும். பரவாயில்லை, அதுவென்றாலும் இருந்ததே என்கிறீர்களா? அதுவுஞ் சரிதான்.

பூங்காக்கள் எனப்படுவது பொழுது போக்கு மற்றும் ஒரு பிராந்தியத்தின் பாறையமைவுகள், மண், தாவரவர்க்கங்கள், நீர் மற்றுஞ் சில்வேளைகளில் விலங்குகள் - பறவைகள் முதலியவற்றை உள்ளடக்கிய இயற்கையமைவுகளைக் காப்புச் செய்வதற்கான (protect) ஓர் திறந்த நிலப்பரப்பாகும். அதேசமயம் அவை கட்டடங்கள் மற்றும் நீர்தூவி (fountain) முதலான பிற கட்டுமானங்கள் மற்றும் வெளிப்பாட்டமைப்புக்கள் (artifacts), சிறு விளையாட்டுத் திடல்களைக் கூடத் தமது நிலப் பகுதியாக்கிக் கொள்வதுண்டு. பூங்காக்கள் இயற்கையானதாகவோ (natural) அல்லது பகுதியியற்கையானதாகவோ (semi natural) அல்லது முற்று முழுதாகவே வடிவமைக்கப்பட்டதாகவோ (Fully designed) இருக்கலாம். எவ்வாறிருப்பினும் - அவை எவற்றை உள்ளடக்கியிருப்பினும் பூங்காக்கள் எனப்படுபவை தமது தோற்றத்தில் இயற்கையாக அல்லது மற்றொரு இயற்கையாக அல்லது கட்டடக்கலை தொடர்பில் பயன்படுத்தப்படுவது போல ஒரு கட்டுமானச் சூழலாக (built environment) அமையவேண்டும் என்பர்.

பல்வேறு சிறப்புத் தேவைகளை முன்னிறுத்திய அரச, அரச சார்பற்ற மற்றும் தனிநபர் சார்ந்த பலவகைப்பட்ட ஆயிரக்கணக்கான பூங்காக்களை உலகம் முழுவதிலும் காணலாம். இவற்றுட் சில பறவை - விலங்குக் காப்பினையும் (உதாரணமாக மான் பூங்கா), வேறு சில தாவர மற்றும் மண்ணியற்கோலங்களை காப்புச் செய்தலை முன்னிறுத்திக் கொண்டவையாகவும் (அமெரிக்காவிலுள்ள சிவப்பு மர பூங்கா, புகைக்குன்றுப் பூங்கா) அமைவதுண்டு. அதேசமயம் ஞாபகச் சின்னங்களாகப் பூங்காக்களை (செம்மொழிப் பூங்கா) அமைக்கும் வழக்கமும் உண்டு. இவை யாவுமே நாடுகளின் பண்பாட்டுச் சின்னங்களாகக் கொண்டாடப்படுகின்றன. இதேசமயம் இவற்றின் உலகளாவிய முதன்மை கருதி ஏறத்தாழ உலகளாவியளவில் சுமார் 76 பூங்காக்களை மரபுரிமைப் பூங்காக்களாக (heritage parks) யுனெஸ்கோ பட்டியற்படுத்தியுள்ளது. இவற்றுட் பல உலகின் இயற்கை மரபுரிமைச் சொத்துக்களாகும். இதேசமயம், தென் கிழக்காசியாவைப் பொறுத்தவரை, Association for Southeast Asian Nations Heritage Parks (ASEAN) என்றவொரு அமைப்பு தென் கிழக்காசியப் பிராந்தியத்தின் உயிரியல் மற்றும் புவியியற் பல்பரிமாணத்தையும், தனிச்சிறப்பினையும் பேணுவதை நோக்கமாகக் கொண்ட பூங்கா அமைவுகளை முதன்மைப் படுத்தி இயங்குகிறது.

இவற்றுள் பொதுப் பூங்காக்கள் (General Parks) அல்லது நகரப் பூங்காக்கள் (Urban parks) எனப்படுபவை பூங்காக்களின் முக்கியமான ஒரு பிரிவாகவும் நகர வடிவமைப்புக்களின் மிக முக்கிய பகுதியாகவும் காணப்படுவதோடு, தேசமொன்றின் இயற்கை மற்றும் பண்பாடுகளின் காண்பியச் சின்னங்களாகவும் உலக நாடுகளால் முன்னிறுத்தப்படுகின்றன. தேசிய பூங்காக்கள் என்ற கருத்தாக்கம் இவ்வாறு உருவாகிய ஒன்றுதான். இலங்கைத் தீவில் 22 தேசிய பூங்காக்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று முல்லைத்தீவில் 2010 ஆம் ஆண்டில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் எமக்கு நெடுங் காலமாக சுப்பிரமணியம் பூங்காவைத் தான் தெரியும். கோட்பாட்டு ரீதியாக சுப்பிரமணியம் பூங்கா பொது மக்கள் கூடுமிடம் எனும் வகையில் ஒரு பூங்காவே. என்றாலும் இலங்கைத் தீவின் வேறு பிராந்தியங்கள், பிற நாடுகளில் உள்ள பூங்காக்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அதுவொரு பெரிய வீட்டுப் பூந்தோட்டம் என்றே நினைக்கத் தோன்றும். பரவாயில்லை, அதுவென்றாலும் இருந்ததே என்கிறீர்களா? அதுவுஞ் சரிதான். அதன் பிறகு புலிகள் கிட்டுவின் பெயரால் ஒரு பூங்காவை, முத்திரைச் சந்தியில் இருந்த அழகிய பெருவிருட்ச வெளியை - அதன் அதிசயக் குட்டிச் சிறுபாதைகளை மூடிக் கட்டினார்கள். அதன் பழைய இயற்கைப் பிரமாண்டமும் -காண்பிய அதிசயிப்பும் அவ்விடத்திற்கு இல்லாது போயின. அதை அதனியல்புகளோடு ஒரு நினைவிடமாக்கும் எண்ணம் அவர்களுக்கு வரவேயில்லை. அதற்கும் பின்னால் சில தனிநபர் முயற்சிகள் நடந்தேறின. வணிக ரீதியாக பல்வேறு காரணங்களால் அவையொரு வெற்றிகரமான விடயமாக இன்றுவரை அவை தொடர்ந்தாலும் அவை கட்டமைக்கப்பட்டுள்ள முறை, வெளிப்பாடு என்பன பிராந்தியத் தனிச் சிறப்போடோ, தேர்ந்த வடிவமைப்புச் சிறப்போடோ அமையவில்லை. அவை இசை நாடகம் அல்லது "ஈஸ்மன் கலர்" திரைப்படக்கால பூந்தோட்டங்களை அடியொற்றிய ஜனரஞ்சகத் தோட்டங்களாகவே அமைந்தன.

எல்லாவற்றுக்கும் மேலாக இவையாவுமே நெரிசலான - இறுக்கமான அதிக வெளியிடவெளியற்ற அமைப்புக்களாகவே அமைந்தன. அதனால் அவற்றில் மூச்சிடவெளி இல்லை. எல்லாவற்றையும் போட்டு நெருக்கியடிக்கிறோம். அதனால் வெளி தரும் மனஓய்வும் இல்லை.

இதேநேரம் இவை எவ்வளவுதூரம் பிராந்திய தனியடையாளமுடையவை அல்லது எவ்வளவு தூரம் அதற்கான முயற்சிகள் இவற்றில் நடந்துள்ளதென்பதும் முக்கியமான ஒரு விவாதப் பொருளாகும். பூங்கா என்பதை அதிகபட்சம் ஜனரஞ்சக மேற்கத்தைய நிலைப் படுத்தியே புரிந்து கொண்டிருக்கிறோம். அதன் வேறுபட்ட மாதிரிகள் பற்றி நாம் எல்லாவற்றையும் போல சிந்திப்பதில்லை. மொஹலாயப் பூந்தோட்டங்களும், ஜப்பானிய தாவோ பூங்காக்களும் (Tao parks) இவ்வகைப்பட்ட மாற்று முறைகளுக்கான சில உதாரணங்களாகும்.

சைப்பிரஸ் மற்றும் அதுபோன்ற இன்னோரன்ன அதிகம் மேற்காகவே தென்படும், (மேற்கிலிருந்து வந்தாலும் எமது பண்பாட்டு அல்லது எமது நிலவுருமயப்படுத்தப்பட்டவை பற்றி இங்கு குறிப்படவில்லை) அதிகம் எமது நிலவுருவோடு இணையாத மரங்கள், செடிகொடிகள் மீது மோகங் கொண்டுள்ள நாம் எமது மரங்களால், எமது செடிகொடிகளால், எமது நில அமைப்புக்களால், எமது கட்டுமான வழிப்பட்ட அமைப்புக்களாலான ஒரு பூங்கா பற்றிச் சிந்திக்கத் தவறுகிறோம். பூவரசுகளாலும், சிதம்பரத்தைகளாலும், எமது யாழ்ப்பாணத்திலுள்ள பண்டைய கேணியமைப்புக்களாலும், பாலை, மலைவேம்புகளாலும் ஆன ஒரு பூங்கா பற்றிச் சிந்திக்கலாமா எனக் கேட்டால் எமக்கது சிலவேளை விதண்டாவாதம் போலும் தோன்றுகிறதில்லையா ? அவ்வளவிற்கு எம்மையறியாமலே நாம் மேற்கு வயப்பட்டிருக்கிறோம் அல்லது புதிய தடத்திலிருந்து சிந்திப்பதற்கான வழித்தடத்திலிருந்து எமது கல்விமுறை முதலியவற்றால் அந்நியப்படுத்தப் பட்டுள்ளோம்.

இதுவொரு புறமாயின், ஏற்கனவே கூறியதுபோல வெளிகளை அடைத்து மூச்சுவிடப் பாதையே இல்லாமற் செய்யும் ஒழுங்கமைப்பு முறை அடுத்த பக்கப் பிரச்சினையாகும். எந்தவொரு பௌதிகத் தோற்ற அமைப்பும் அதன் தோற்றச் சிறப்பை எய்துவது அது நிலைப்படுத்தப்பட்ட வெளி தரும் முன் தள்ளுகையாலேயே ஆகும். ஆனால் யாழ்ப்பாணிகள் பலர் மேற்படி மூச்சுவிடும் வெளியை "அருமந்த இடம் சும்மா கிடக்கே இதில் ஏதாவதைக் கட்டுவோம் அல்லது நடுவோம்" என்றவாறே சிந்திக்கின்றனர். அதனாற்றான் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கட்டடக் கலைஞர் ஒருவர், தான் யாழ்ப்பாணத்தவர் கட்டடம் வடிவமைக்கக் கேட்டால் ஏதாவது சாட்டுச் சொல்லி மறுத்துவிடுவதாகவும்

(19 ஆம் பக்கம் பார்க்க)

# விளம்பிய மொழியும் விபரீத விளக்கமும்



**17.02.2013 உதயன் சூரிய காந்தி இதழ் 18 ஆம் பக்கத்தில் வெளியான ''அர்த்தம் தெரியாமல் மொழியும் புரியாமல்'' கட்டுரைக்கான எதிர்வினை**

■ 'ஸனா'

மானிட வாழ்வின் போதும் மரணத்தின் பின்னரும் ஆற்ற வேண்டிய பல சடங்குகள் (சமஸ்காரங்கள், கிரியைகள்) உள்ளன. நாமகரணம், அன்னப் பிராசனம், வித்தியாரம்பம், உபநயனம், விவாகம் போன்றவைகள் பூர்வகக் கிரியைகளாகக் கொள்ளப்பட்டு வாழ்நாளின் போதும், மரணத்தின் பின் நடைபெறுபவை அபரக் கிரியைகள் எனவும் வகுக்கப்பட்டுள்ளன.

ஒரு குழந்தை பிறந்த பின்னர் முதன் முதலாகச் செய்யப்படும் சடங்கு நாமகரணமாகும். இந்த நிகழ்வு பெயர் சூட்டுதல் என வழங்கப்படுகின்றது. குடும்பப் பெரியவர்கள் ஒன்றுகூடி ஆராய்ந்து சூட்டப்பட வேண்டிய பெயரைத் தெரிவு செய்வார்கள். தங்கள் மூதாதையரின் பெயர்களை விரும்பிச் சூட்டுவதும் வழமையில் அமைந்துள்ளது. பேரன் என்பது பெயரைக் கொண்டவன் என விரியும். இவ்வாறு தெரிவு செய்யப்படும் பெயர்கள் இனிமை, புதுமை, ஓசைநயம், சோதிடம் என்பன உள்ளடங்கியதாக மிளிரும். இவைகள் சாதி, மத, மொழி மரபுகளின் படி அமையும். கருத்தாள மிக்க, அர்த்தம் புரியக்கூடிய பெயர்களைச் சூட்டுவது வரவேற்கத் தக்கதே எனினும் சூட்டப்பட்ட பெயர் எதன் அடிப்படையில் என்ன காரணத்துக்காகச் சூட்டப்பட்டது என ஆராயாமல் ஓடும் பேருந்தில் கேட்ட ''டுஷிக்கா'' என்ற பெயர் பற்றி விமர்சிப்பதும் அதன் அர்த்தத்தைத் தேடுவதும் எவ்வகையில் நியாயம்? துஷிக்கா என அழைக்கப்பட்ட பெயரே ஓடும் பேருந்தில் இரைச்சலில் டுஷிக்கா என்றும் கூடக் கேட்டிருக்கலாம்.

வரிசை முதலெழுத்துக்களாக வருவது தமிழ் இலக்கண மரபல்லவெனினும் வேற்று மொழிப்பெயர்கள் டானியல், டுமாஸ், டயானா, டேவிட், டிங்கிரி டெனிக்கா போன்வற்றை நாம் ஏற்றுக் கொண்டுள்ளதை நாம் மறுக்க முடியுமா?

இனி மதுவிழி என்ற புனை பெயரைப் பற்றிச் சிறிது சிந்திப்போம். மது என்றால் தேன் எனவும், போதை யூட்டும் குடிவகை எனவும் இரு அர்த்தங்களைக் கொடுக்கும். விழி என்பது கண் அல்லது நயனம் என அனைவருக்கும் தெரியும். மது விழி எனின் தேன் ஊறும் விழியா, தேன் சிந்தும் விழியா? மது பாவனையினால் சிவந்த விழியா? மதுவூறிச் சிந்தும் விழியா? மதுவாகிய விழியா? அர்த்தம் புரியவில்லை. பொருள் மயக்கமே முன் நிற்கிறது. மது மொழி எனக் கொண்டிருந்தால் தேன் போன்ற இனிமையான குரல் எனக் கொள்ளலாம். பாராட்டலாம் நிற்க. சுந்தரலிங்கம் பற்றிய மது விழியின் அர்த்த விளக்கங்களை நோக்குவோம். சைவ சமயிகளான எமது முழு முதற்கடவுள் சிவபெருமான் சிவனுக்கென மூவகைத் திருமேனிகள் அருவம், உருவம், அருவுருவம் என அமைகின்றன.

அருவம் ஊனக் கண்களாகிய எமது கண்களுக்குப் புலப்படாது ரிஷிகள் தபஸ்விகள் தம் அகக் கண்ணால் காணக்கூடியது.

உருவத்திருமேனியானது சகல அவயவங்களும் பூரணமாக அமைந்த தோற்றம் கொண்டது.

கை, கால் மற்றும் அவயவங்கள் பூரணமாக அமையாதிருத்தலினால் அருவம் எனவும், கண்களால் பார்க்கக் கூடியதாகவும் தொட்டுப் பார்த்து உணரக்கூடியதாகவும் இருப்பதால் உருவமென இரண்டு நிலைகளையும் கொண்டுள்ளமை அருவுருவம் ஆகும். இத்தோற்றம் சிவனுக்கு மட்டுமே சிறப்பாக அமைந்துள்ளது. இதுவே லிங்கம் ஆகும். சிவனுக்கு மட்டுமே சிறப்பாக அமைந்து சிவலிங்கம் எனவாயிற்று சிவாலயங்களில் இருக்கும் பிரதான திருவுருவம் சிவலிங்கமே.

லிங்கம் என்பதில் வரும் ''லிங்'' லயம் அல்லது அடங்குதல் எனவும் ''கம்'' என்பது தோன்றுதல் எனவும் பொருள் விரியும். உலகின் தோற்ற ஒடுக்கத்தைக் குறித்து நிற்கும் குறி அல்லது அடையாளமே சிவலிங்கம். இது முட்டை வடிவினது. எந்த ஒரு உயிரும்(பிராணியும்) கருவின் தொடக்கத்தில் கட்டியாகவே இருக்கும் என்பதும் உணரப்பாலது.

லிங்கம் என்பதன் விளக்கம் இவ்வாறு சிறப்பாக அமைந்திருக்க மது விழியின் விளக்கம் ஏற்புடையதா? கனியிருக்க காய் கவர்தல் போல சரியான அர்த்தத்திற்கும் விலக்காகக் கொச்சையான விகர்ப்பமான புறநடையான உபரி அர்த்தத்தை வலிந்து முன்னிலைப் படுத்தியது என்னே! அவருடைய கூற்றின் படி சுந்தரலிங்கம் என்பதன் விளக்கம் அழகிய ஆண் குறி எனின.

சிவலிங்கம் என்பது 'சிவனின்....' எனவும் மகாலிங்கம் என்பது 'பெரிய....' எனவும் அப்புலிங்கம் என்பது 'அப்புவின் (தந்தையின்)....' எனவும் கொள்ள வேண்டியேற்படும். அல்லாமலும் சிவலிங்க அர்ச்சனையில் (லிங்காஷ்டோத்திரம்) ''லிங்காய நம'' என முடிவுறும் 1008 நாமங்கள் அமைந்துள்ளன. இவற்றின் விளக்கங்களும் நாளடைவில் மதுவிழியால் ஆராயப்படலாம். வேத சாரமான அர்ச்சனை மந்திரங்களை யாத்த முனி சிரேஷ்டர்கள் கொச்சையான கருத்துக்களால் இறைவனை ஆராதித்திருக்க மாட்டார்கள் என்பது துணிவு.

இனி அடுத்ததாக அவர் குறிப்பிட்டு இருப்பது அபர்ணா என்ற பெயர். இதற்கான அவருடைய விளக்கம் ஆடையற்றவள் என்பது பேராயிரம் பரவி ஏத்தும் எம்பெருமாட்டியின் 1008 திவ்விய நாமங்களில் (ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம்) 754 ஆவது நாமமாயமைவது அபர்ணாயை நம. பர்ணம் என்பது இலை, தழை, கொடி போன்றவைற்றால் அமைந்தவைகளைக் குறிக் கும்.(ஆடையை மட்டும் அல்ல) காட்டில் இலை, தழை, கொடிகளால் அமைக்கப்பட்ட முனிவர்களின் தவச்சாலை பர்ணசாலை என அழைக்கப்பட்டது. சிவனைக் கணவனாக வேண்டி இலை தழைகளைத்தானும் உண்ணாமல் கடும் நோன்பு நோற்றுத் தவமியற்றிச் சிவனை அடைந்தவள் என்பதே பொருள். இதற்கான சான்று தேவைப் படுமிடத்து.

நூல்:''ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம்''

உரை:ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

வெளியீடு:இராமகிருஷ்ண தபோவனம்

பக்கம்:414

சொல் அல்லது நாமம்:754

இதிலமைந்த இரண்டு முழுப்பக்க விளக்கங்களை வாசித்தறிந்த பின்னராவது சரியான அர்த்தத்தை ஏற்றுக் கொள்ளட்டும். அபர்ணா என்ற பெயர் மிகப் பரவலாக பலருக்கு இருப்பினும் குறித்த பெயரமைந்த இருவர் மதுவிழியின் கட்டுரையின் தாக்கத்தால் ஏற்பட்ட ஆதங்கத்தை என்னுடன் பகிர்ந்து கொண்டமையே இவ்வாக்கியத்தின் பிறப்பு.

மேலும் திருமண வைபவங்களில் ''வள்ளுவன் வாசுகி'' போல் வாழ்க என வாழ்த்துங்கள். அஷ்ட காகங்களின் (அனந்த, வாசுகி, தக்ஷ, கார்க்கோடா, சங்கபால, குளிக, பத்ம, மகாபத்ம) ஒரு பெயராகவும் வாசுகி அமைகின்றது. அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகுத்தியது போல் இரு வரிகளில் அமைந்த திருக்குறளில் அரிய பெரிய கருத்துக்களை உள்ளடக்கி விளக்கிய திருவள்ளுவர் தன் மனைவி வாசுகியின் பெயரைப் பற்றி சிந்திக்காமல் இருந்திருப்பாரா? அக்காலதில் மது விழியின் விளக்கம் அவருக்குக் கிடைத்திருந்தால் ஒரு வேளை பெயரைத் திருத்தியமைத்திருக்கக் கூடும். தன் மனைவியின் பிரிவின் போது அடிசிற்கினியாளே, அன்புடை மாதே, பதிசொற்தவறாத பாவாய், எனக் கிலாகித்தே கூறிவருந்தினார். அழகிய தமிழ்ப் பெயரான வாசுகி என்பமை வலிந்து இரு கூறாகப் பிரித்து முதற் பகுதியான ''வா'' என்பதைத் தமிழ்ச் சொல்லாகவும் ''சுகி'' என்பதை வடமொழிச் சொல்லாகவும் வகுத்து சுகி என்பதன் பொருள் நுகர் எனவும் கொண்டு விளக்கமளித்திருக்கிறார். இவ் விளக்கம் நோபல் பரிசுக்கு பரிந்துரை செய்யப்பட வேண்டிய ஆராய்ச்சியே.

எவ்வாறாயினும் ஆண்குறி, ஆடையற்றவள், நுகர் போன்ற கொச்சை வார்த்தைகளை முன்னிலைப்படுத்திக் கைக் கொள்வதன் மூலம் தனது மன வெக்கிரங்களை வெளிப்படுத்தியுள்ளார். என்றே கொள்ள வேண்டும். காகத்திற்கு கனவிலும் ............... என்பது போல் கனவிலும் நினைவிலும் பகரும் வார்த்தைகளின் வெளிப்பாடே இவை.

''மதுவழி'' மயக்கத்தில் எழுதிய கட்டுரையாக இதனை மறந்து மன்னிப் போம்.

''இங்கு யாரையும் தனிப்பட்ட விதத்தில் சுட்டும் படியோ மனவருத்தம் செய்வதற்காகவோ இச் சொற்கள் குறிப்பிடப்படவில்லை'' எனக் கட்டுரையாளர் கூயிருந்தாலும் அநேக மக்கள் மனம் புண்பட்டது தெளிவான உண்மையே. ★

## யாருக்காக அழுவது...



யாருக்காக அழுவது
புரியவில்லை
ஊருக்காக வாழ்ந்துவிட்டுப்போன
அந்த உத்தமர்க்காக அழுவதா
பேருக்காக வாழும் இந்தப்
பித்தர்க்காக அழுவதா
நெஞ்சிலே நெருப்பெரியும் எங்கள்
சரித்திரங்களுக்காக அழுவதா
பிஞ்சிலேயே பழுத்துப் போன எங்கள்
சந்ததிக்காக அழுவதா
காணொளி காட்சிகளின்
அவலங்களுக்காக அழுவதா
காமற்போனவரை
தேடுபவர்க்காக அழுவதா
எம் அழுகைகளுக்காக அழுவதாய்
நடிப்பவர்க்காக அழுவதா
அழுகையே அழும் எங்கள்
தலைவிதிக்காக அழுவதா
பெற்றோரைப் புறம் தள்ளும்
பிள்ளைகளுக்காக அழுவதா
கற்றவரே பிழைவிடும்
காட்சிகளுக்காக அழுவதா
யாருக்காக அழுவது புரியவில்லை

புலோலியூர், வேல்நந்தன்



# 'குட்பை' திலான்

1998 ஆம் ஆண்டு சார்ஜாவில் இடம்பெற்ற இந்திய அணிக்கெதிரான ஒரு நாள் ஆட்டத்தில் தனது சர்வதேச கிரிக்கெட் அறிமுகத்தை திலான் மேற்கொண்டிருந்தார். துடுப்பாட்ட வீரராகவே அணிக்குள் இணைத்துக் கொள்ளப்பட்ட போதும் முதலாவது ஆட்டத்தில் திலானுக்கு துடுப்பெடுத்தாடும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. தனது இறுதி ஒரு நாள் ஆட்டத்தையும் இந்திய அணிக்கு எதிராகவே திலான் விளையாடினார். 2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற உலகக் கிண்ண இறுதியாட்டமே திலானின் இறுதி சர்வதேச ஒரு நாள் ஆட்டமாக அமைந்திருந்தது.

■ டிலீப்

இலங்கை கிரிக்கெட் அணியின் சிரேஷ்ட துடுப்பாட்ட வீரர்களுள் ஒருவரான திலான் சமரவீர சர்வதேச அரங்கிலிருந்து விடைபெற்றிருக்கின்றார். இளம் வீரர்களுக்கு வாய்ப்பளிக்கும் நோக்கிலேயே தனது ஓய்வை அறிவிப்பதாக 36 வயதான திலான் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையில் நடைபெறும் பங்களாதேஸுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் திலான் இணைத்துக் கொள்ளப்படவில்லை. ''பங்களாதேஸுக்கு எதிராக நடைபெறும் முதல் டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்தில் என்னை இணைக்காதிருக்க தெரிவுக்குழு எடுத்த தீர்மானம் வியப்பில் ஆழ்த்தியதாக குறிப்படும் சமரவீர, இது தொடர்பில் தான் தெரிவுக் குழுவினருடன் கலந்தாலோசித்ததாக தெரிவிக்கின்றார்.

தற்போது இடம்பெறும் பங்களாதேஷ் தொடர் அடுத்து சிம்பாப்வேயுடனான தொடருக்கு இலங்கை அணியில் 2 சிரேஷ்ட வீரர்களுக்கே வாய்ப்பளிக்க இலங்கை கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது. அத்துடன் 9 மாதங்களின் பின்னர் இடம்பெறும் பாகிஸ்தானுடனான தொடருக்கே எனது ஆதரவு தேவை என்று தெரிவுக்குழு தெரிவித்தது.

இது நான் ஓய்வு பெறுவதற்கான சரியான சந்தர்ப்பம் என்று கருதுகின்றேன். புதுமுக வீரர்களுக்கு வாய்ப்பளிப்பதற்காக, தேசிய கிரிக்கெட் தெரிவுக்குழு எடுத்த தீர்மானத்திற்கு சிரம் தாழ்த்தி மதிப்பளித்து விடைபெறுவதாக திலான் குறிப்பிட்டுள்ளார்.

1976 ஆம் ஆண்டு கொழும்பில் பிறந்த திலான் துசார சமரவீர நால்வர் கொண்ட குடும்பத்தில் இளையவராவார். இவரது சகோதரர் துலிப் சமரவீர இலங்கை கிரிக்கெட் அணியின் டெஸ்ட் வீரர். அவரது வழியிலேயே திலானும் கிரிக்கெட்டைப் பின்பற்றினார்.

கொழும்பு ஆனந்தா கல்லூரியில் பயின்ற திலான், பாடசாலையின் முதல்தர கிரிக்கெட் அணியின் தலைவராக இருந்துள்ளார். அதன் பின்னர் எஸ்.எஸ்.சி கழகத்தில் இணைந்து கொண்ட திலான், தனது அபரிமிதமான துடுப்பாட்டம் காரணமாக அணிக்குள் உள்வாங்கப்பட்டார்

1998 ஆம் ஆண்டு சார்ஜாவில் இடம்பெற்ற இந்திய அணிக்கெதிரான ஒரு நாள் ஆட்டத்தில் தனது சர்வதேச கிரிக்கெட் அறிமுகத்தை திலான் மேற்கொண்டிருந்தார். துடுப்பாட்ட வீரராகவே அணிக்குள் இணைத்துக் கொள்ளப்பட்ட போதும் முதலாவது ஆட்டத்தில் திலானுக்கு துடுப்பெடுத்தாடும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. தனது இறுதி ஒரு நாள் ஆட்டத்தையும் இந்திய அணிக்கு எதிராகவே திலான் விளையாடினார்.

2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற உலகக் கிண்ண இறுதியாட்டமே திலானின் இறுதி சர்வதேச ஒரு நாள் ஆட்டமாக அமைந்திருந்தது.


திலானின் துடுப்பாட்ட முறைமை பெரும்பாலும் டெஸ்ட்டுக்குரியதாகவே இருந்தது. நின்று நிதானித்து ஆடும் வல்லமை திலானுக்கு கைவந்த கலை. இதனால் ஒரு நாள் ஆட்டங்களில் திலான் முத்திரை பதிக்காவிட்டாலும் டெஸ்ட் ஆட்டங்களில் தனக்கென்று ஒரு இடத்தை நிலைப்படுத்தியிருந்தார். இலங்கை கிரிக்கெட் அணியைப் பொறுத்த வரையில் சங்கா, மஹேலவுக்கு அடுத்ததாக திலானே டெஸ்ட் தரப்படுத்தலில் உள்ளார்.

2001 ஆம் ஆண்டு இந்திய அணிக்கு எதிரானதாகவே டெஸ்ட் அறிமுகமும் இருந்தது. கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் டெஸ்ட் வீரராக அறிமுகமாகிய திலான், அறிமுக ஆட்டத்திலேயே கன்னிச் சதம் அடித்து அசத்தினார். ஆட்டமிழக்காமல் 103 ஓட்டங்களை அவர் பெற்றுக் கொடுத்திருந்தார். இறுதியாக கடந்த ஜனவரி மாதம் ஆஸ்திரேலியாவுடனான டெஸ்ட் தொடரில் பங்குபற்றியிருந்தார். அந்தத் தொடரில் பெரிதளவில் திலானால் சோபிக்க முடியாது போய்விட்டது.

திலான் இலங்கை அணியில் நிரந்தரமான வீரராக தன்னை நிலைநிறுத்த தவறியிருந்தார். அணியில் இடையிடையே வந்து போகின்ற வீரராகவே திலான் இருந்தார். இருப்பினும் டெஸ்ட் ஆட்டங்களுக்கு திலானது தேவை கட்டாயம் என்பதால் டெஸ்ட் அணியில் தொடர்ச்சியாக இணைத்துக் கொள்ளப்பட்டு வந்தார்.

இருப்பினும் இலங்கையின் சாதாரண சிரேஷ்ட வீரர்களுக்கு அணியில் கிடைத்து வந்த இடம் திலானுக்கு வழங்கப்படவில்லை. கிடைக்கின்ற சந்தர்ப்பங்களில் தன்னை நிலைநிறுத்த திலான் போராடிக் கொண்டேயிருந்தார்.

இலங்கை அணிக்காக தோள்கொடுத்த திலான், 2009 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் வைத்து தீவிரவாதிகள் இலங்கை கிரிக்கெட் அணி மீது நடத்திய தாக்குதலில் கடுமையான காயங்களுக்கு உள்ளாகியிருந்தார். இலங்கை அணியின் மத்திய துடுப்பாட்ட வரிசையை பலப்படுத்திய திலானின் வெற்றிடம் இனி யாரால் நிரப்பப்படப் போகின்றது ?



| | ஆட்டங்கள் | ஓட்டங்கள் | சதங்கள் | அரைச்சதங்கள் |
|---|---|---|---|---|
| ஒரு நாள் | 53 | 862 | 02 | - |
| டெஸ்ட் | 81 | 5, 462 | 14 | 30 |

# பிராந்தியமொன்றின்.....

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

- ஏனெனில் அனைத்து மூச்சுவிடும் வெளிகளையும் ஏதாவது கட்டுமானங்கள் போட்டடையுங்கள் என அவர்கள் வற்புறுத்துவதே அதற்கான தலையாய காரணமென்றும் தனிப்பட்ட உரையாடலொன்றின் போது கூறினார். அது உண்மைதான். பரவெளித் தத்துவம் பேசும் யாழ்ப்பாணச் சைவசிந்தாந்தப் பாரம்பரியத்தில் வந்தவர்கள் எனக் கூறும் யாழ்ப்பாணத்தவரிடம் எவ்விதம் இந்த வெளி எதிர்ப்பு வந்தது?

இவற்றையும், இவற்றையொத்த பலவற்றையும் கவனத்திற் கொள்ளும் வடிவமைப்பு முறையும், அதற்கான துறைசார் அறிவும் - நிபுணத்துவமும் உடையவர்களின் பங்களிப்போடு கூடிய செயற்பாடுகளும் எமக்குத் தேவைப்படுகின்றன. அவ்விதமான ஒன்றுதான் கூண்டு போன்று மூடியடைக்கப்பட்ட எமது கடந்த காலகட்டத்து பூங்கா அமைப்பிலிருந்து எம்மை விடுதலை செய்யும். அவ்விதமான ஒன்றே நாளையொரு பூங்காவை மரபுரிமைச் சொத்தாக பிரகடனப் படுத்துமாறு கோரவும் யாழ்ப்பாணத்திற்கே சிறப்பான விடயங்களால் ஆன, அதனால் தனித்துவமான அடையாளச் சிறப்புடைய, அதனால் மற்றவர்கள் தேடி வந்து பார்க்கின்ற பூங்காவை அமைக்க உதவும்.

எமது நிலவுருவைப் பின்தொடர்கின்ற, எமது மரஞ்செடிகொடிகளான, எமது பாரம்பரியக் கட்டுமானங்களின் நினைவுத்தொடர்ச்சியுள்ள, எமது நீரை - எமது காற்றை வீசுகின்ற ஒரு பெருவெளி வெறுங் கனவா? ★

ந.மயூரரூபன்

## மனமொழியின் செய்தி:

# அப்பாவின் சித்திரங்கள்



1

ஒரு தனியனைக் கடந்து சமூக முக்கியத்துவத்தை தனியனுக்கு அல்லாது, சமூக நிறுவனங்களுக்கான கவனிப்பை ''எமில் துர்கைம்'' தமது ஆய்வில் முதன்மைப் படுத்துகிறார். இங்கு ஒரு தனியனுக்கான முக்கியத்துவம், அவனது சமூக கூட்டிணைவான சமூக நிறுவனங்களில் ஒன்றான குடும்ப அமைப்பில் இருந்து வெளிக்கிளம்புவதை கவனம் கொள்ளலாம். ஒரு தனியனின் இறப்பின் பின்னான சடங்கார்த்த வெளிப்பாடுகளில் ஒன்றாக ''கல்வெட்டுகள்'' அமைகின்றன. குறித்த தனியனின் சமூக வாழ்வியல் இருப்புக்கான அடையாளங்களை அவை பேசுகின்றன- பேசி வந்தன.

'கல்வெட்டுகள்' அவற்றின் வெளிப்படுத்து முறையில் காலத்துக்குக் காலம் பல மாற்றங்களை உள்வாங்கி வந்துள்ளன. குறித்த தனியனின் சமூக அடையாளங்கள் அனைத்தையும் பெறுவதற்கான சாத்தியங்கள் ஒரு கால கட்டத்தில் இருந்தன. சமூக அந்தஸ்தின் குறிகாட்டியாகவும் அது அமைந்தது. இன்று அதன் வெளிப்பாடு என்பது; குறித்த தனியனின் வாழ்வியல் அடையாளங்களை முதல் நிலையில் இருந்து அகற்றி, குறித்த புலனாகும் சமூக தேவையின் அடிப்படைகளை முன்நிறுத்துவதாக மாற்றம் கண்டுள்ளது.

பின்வரும் மூன்று வகையான வெளிப்பாட்டு வடிவங்களை தற்கால 'கல்வெட்டு' வடிவங்களில் இனங்காணலாம்.

1. சமூக பயனுறுதியுள்ள, பேணத்தக்க எனும் சம கால கருத்து நிலைக்கு உட்பட்ட தெரிந்தெடுக்கப்பட்ட எழுத்து வடிவங்களை உள்ளடக்கியவை.

(மருத்துவக் குறிப்புகள், ஒழுக்கக் குறிப்புகள், கல்விக் குறிப்புகள் போன்றன)

இவை வெவ்வேறு நூல்களில் இருந்து எழுத்து பயன் படுத்தப்படுகின்றன.

இவை மரபான கல்வெட்டு வடிவங்களில் கையாளப்படும் தொகுதியின் பக்கங்களான 'வண்ணப்படம், திதிவெண்பா,பஞ்ச புராணம் இவை மரபான கல்வெட்டு வடிவங்களில் கையாளப்படும் தொகுதியின் பக்கங்களான வண்ணப்படம்- திதிவெண்பா, பஞ்சபுராணம், புலம்பல்கள், வம்சா-வழி என்பவற்றை உள்ளடக்கியுள்ளன.

11)தெரிந்தெடுக்கப்பட்ட கட்டுரைத் திரட்டுக்களின் வழமையான குறித்த பக்கங்களைத் தவிர்த்த , இறந்த தனியன் பற்றிய சிறுகுறிப்பினை உள்ளடக்கியவை.

111)இறந்த தனியனின் உறவு அல்லது குறித்த சூழலிலுள்ள படைப்பாளிகளின் கவிதைகளைக் கொண்டு தொகுக்கப்படுபவை. இங்கும் மரபான குறித்த பக்கங்கள் தவிர்க்கப்பட்டிருக்கும்.

இவ்வாறான மாற்றங்களுக்கு அடிப்படையான காரணம்; 'கல்வெட்டு' தொகுப்புகள் ஒவ்வொருவராலும் வீட்டில் வைத்து பேணப்படுவதாக நம்பிக்கைகளைக் கொண்டிருந்த நமது முன்னோர் ஒரு நடைமுறையைக் கையாண்டனர். கல்வெட்டுக்களின் முன்னட்டைகளில் கடவுளர்களின் வர்ணப்படங்கள் அச்சிடப்பட்டன. இதனால் சமய நம்பிக்கையூறிய சமூகத்தினர் அதனைப்பேண முனைந்தனர்.

இன்று சமய நம்பிக்கைகளும் கடவுளின் பெயரிலான பயபக்தியும் கேள்விக்குள்ளாகின. மாற்றங்கண்டு வருகின்றன. இன்று உத்திகளும் நடைமுறைகளும் மாறுகின்றன.

ஒரு தனியனின் இறப்பின் நினைவாக வெளியிடப்படும் தொகுப்புகள் அவனதும் அவனது சமூகத்தினதும் குறியாகவே (Sign) அமையும். ஒரு மனிதனின் குறிமொழி. மொழியால் தனது உறவின் குறியை உணர்த்துகிறான். தனது தேசத்தின் கொடியை மதித்தல் நாட்டுப் பற்று என்பதன் குறியாக நாம் கூறலாம்.இவ்வகையான தொகுப்பு எதன் குறி ?

2

த.அஜந்தகுமார், தனது தந்தையான சின்னத்துரை தருமராசாவின் 31 ஆம் நாள் நினைவாக 'அப்பாவின் சித்திரங்கள்: சூரியனுக்கு தீ மூட்டியதின் கவிக்கோடுகள்' எனும் சிறுகதைத் தொகுதியை வெளியிட்டுள்ளார். அவரது தந்தை பற்றிய பதினாறு கவிதைகளை உள்ளடக்கிய சிறுநூல் இது. அஜந்தகுமாரால் எழுதப்பட்ட அவரின் தந்தையின் நினைவு தரும் வலிகளைப் பேசும் பதினாறு கவிதைகளும், அவரது சகோதரியால் தந்தை நினைவில் எழுதப்பட்ட ஒரு கவிதையும், பேராசிரியர் கி.விசாகரூபன் கவிதை மொழியில் வழங்கப்பட்ட பின்னட்டைக் குறிப்பும் இதிலுள்ளன.

கல்வெட்டுகள் தொடர்பான சமகால வெளிப்பாட்டு வடிவங்களில் முற்பகுதியில் என்னால் கூறப்பட்ட மூன்றாவது வகைப்பாட்டிற்குள் இந்த தொகுதியினை பொருத்திப் பார்க்க முடியும்.

3

எங்கள் வாழ்வோடும் நினைவோடும் நிறைந்திருந்த அப்பா இன்று இல்லை. அந்த வலிகள் எனது வரிகளால் இங்கு ஓடுகின்றன. இவை எனது வலிகளின் வடிவங்கள் அவற்றை யாரும் என்ன பெயர் சொல்லியும் அழைக்கலாம். அப்பாவின் சித்திரங்களில் அஜந்தகுமார் கூறிய சிறுகுறிப்பு இது.

இங்க அப்பாவின் சித்திரம் காட்டும் குறி மனமொழியிலான இக்குறி அர்த்தமும் ஓசையும் கவிதையின் யாப்பிலக்கண ஓசை அல்ல. நிறைந்தது. அர்த்தமும் ஓசையும் இணைந்த மனமொழியின் பொருள் தந்தை தனயனின் வாழ்ந்த நினைவு சூழ் உறவினைப் பேசுகிறது.

பேராசிரியர் கி.விசாகரூபன் இதனை நயமாகச் சுட்டுகிறார்.

**''அப்பா ஒரு வரம்**
**அது எல்லோர்க்கும் வாய்ப்பதில்லை**
**வாய்த்தவர்களில் பலரும் அதனை**
**அனுபவித்ததில்லை**
**அஜந்தகுமார் அனுபவித்தான் அத்தனை**
**பொழுதுகளிலும்!**
**அப்பாவுக்காக அவன் அழத் தேவையில்லை**
**பிள்ளைகள் பெற்றோர்க்கு வரம்**
**அந்த வரத்தை அப்பாவும் அனுபவித்தார்**
**ஒளியிழந்த அப்பாவின்**
**கண்களாயினர் பிள்ளைகள்''**

அஜந்தகுமாரின் மனமொழியின் அர்த்தமும் ஓசையும் இதுதான்.

**''அப்பா! உனக்கு இனிப்பென்றால்**
**ரொம்பப் பிடிக்குமே**
**உனக்குத் தந்த தேநீருக்கு**
**சீனி போதுமா என்று**
**அப்போ யாரும் யோசிக்கவில்லை**
**நீயும் சீனி கேட்கவில்லை**
**பொச்சடித்துத் தேநீர் குடிக்கவுமில்லை**
**நான் உனக்குப் பருக்கிய தேநீர்**
**இப்போது என் இதயத்துள்**
**இறங்கி ஓடுவதை உணர்கிறேன்**
**உன் நினைவாய் அது சுடுகிறது**
**இனிக்கவில்லை எனக்கு''**

மனது கொள்ளும் இந்த அர்த்த-ஓசைகளின் கூட்டிணைவு அஜந்தகுமாரின் கவிதைமொழியில் அடுக்கப்படுகிறது. நினைவுகளில் சேரும் உறவினை, வார்த்தைக் கோடுகள் சித்திரங்களாக்கியுள்ளன.

**''நீயிருந்த அறை**
**வெறுமையாகிவிட்டது**
**அம்மாவின் நெற்றி போலவே!**
**உனது கோப்பைகளில்**
**நினைவு ததும்புகிறது**
**அம்மாவின் கண்ணீர்**
**அவற்றைக் கழுவுகிறது''**

4

இந்தத் தொகுதி வழமையான நினைவு வெளியீடுகளிலிருந்து முற்றிலும் மாறிவிட்டது. ஒரு 'கல்வெட்டு' தருகின்ற அனுபவத்திற்கு ஒரு கவிதைத் தொகுதி தருகின்ற அனுபவம் வேறானதுதான்.

அம்மாவின் நினைவில் அம்மாவைப் பற்றிய கவிதைத் தொகுதிகள் உருவாக் கப்பட்டுள்ளன. ஆனால் தந்தையின் நினைவுகளாலமைந்த இந்தக் கவிதைத் தொகுதி புதியது. 'பழமலய்' எனும் கவிஞரின் 'சனஞ்சனின் கதை' கவிதைத் தொகுதியும் எனக்கு அப்பாவின் சித்திரங்கள் தரும் அனுபவத்தினை தந்தது. (அது வெவ்வேறு உறவுகளைப் பற்றிய கவிதைகளாலானது)

ஒரு சமூகத்தில் இத்தகைய தொகுதி விட்டுச் செல்லுகின்ற செய்தி முக்கியமானது. இந்தப் படைப்பின் பின்னுள்ள படைப்பு மனதின் யதார்த்தம்; இன்றைய சமூகத்துக்கு அவசியமானது. குடும்ப அமைப்புகளும் உறவுகளும் தனிமையாக்கப்பட்டு (isolate) வருகின்ற கால அமைவில்; அப்பாவின் சித்திரங்கள் தருகின்ற மனப்படிமம் கவனத்திற்குரியது. தாய் தந்தையர் கைவிடப்பட்டு காப்பகங்களில் தனிமையுற்றுச் சாவுறும் காலத்தை கையகப்படுத்த விழையும் நாம்,-ஒரு மகனின் தந்தையுடனான உறவு தருகின்ற செய்தியைப் புரிந்து கொள்வது அவசியம்.


**''எல்லாம் பழங்கதை ஆயிற்று**
**உன் புன்னகை காணவும்**
**பழங்கதை அறியவும்பார்த்திருக்கிறோம்''.**



# தகப்பன் வழியில் தனயன்

"காலையிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த துப்பாக்கிச் சத்தம் இப்போது சற்றே ஓய்ந்திருக்கின்றது. இந்த இடைவெளிக்குள் மக்கள் இறந்தவர்களின் உடல்களைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இறந்தவர்களுக்காக அழக்கூட அவர்களுக்கு நேரமிருக்கவில்லை. ஏனென்றால் அடுத்த தாக்குதல் தொடங்குவதற்கு இடையில் அனைவரையும் புதைத்துவிட வேண்டும் என்பதே அவர்கள் எண்ணமாயிருந்தது.

■ தகனன்



**2009 ஏப்ரல் 27**
**அதிகாலை 3.45**
**இலங்கையின் முல்லைத்தீவு மாவட்டம்,**

புதுக்குடியிருப்பு கிழக்கில் உள்ள இரட்டை வாய்க்கால், வலைஞர்மடம் மற்றும் முள்ளி வாய்க்கால் பகுதிகள் மீது இராணுவத்தினரும், கடற்படையினரும் தாக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டு முன்நகர்வுக்காக முயன்று கொண்டிருக்கிறார்கள். அதே வேளையில் வான் படையின் வானூர்திகள் கடுமையான குண்டு வீச்சுத் தாக்குதல்களை பொது மக்கள் வசிக்கும் பகுதிகள் மீது நடத்திக்கொண்டிருக்கின்றன.

**காலை 5 மணி -**
**இந்தியாவின் தமிழக மாநிலம்**

சென்னை கோபாலபுரத்திலுள்ள வீட்டிலிருந்து வழக்கமாக அதிகாலை 4.30 மணிக்கு புறப்படுகின்ற முதலமைச்சரின் கார் அன்று 30 நிமிடம் தாமதமாகியிருந்தது. நாளாந்தம் அண்ணா அறிவாலயம் செல்கின்ற கலைஞரின் கார் அங்கு செல்லாமல் வழமைக்கு மாறாக மெரினா கடற்கரையில் உள்ள அண்ணா சமாதி நோக்கி செல்கின்றது. அண்ணா சமாதியிலுள்ள ஒரு நிழற் குடையின் கீழ் அமர்ந்து கொள்கின்ற கருணாநிதி ஈழத்தமிழர் பிரச்சினைக்காக உண்ணாவிரதம் இருப்பதாக அறிவிக்கின்றார்.

**காலை 10 மணி-** காலையிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த துப்பாக்கிச் சத்தம் இப்போது சற்றே ஓய்ந்திருக்கின்றது. இந்த இடைவெளிக்குள் மக்கள் இறந்தவர்களின் உடல்களைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இறந்தவர்களுக்காக அழக்கூட அவர்களுக்கு நேரமிருக்கவில்லை. ஏனென்றால் அடுத்த தாக்குதல் தொடங்குவதற்கு இடையில் அனைவரையும் புதைத்துவிட வேண்டும் என்பதே அவர்கள் எண்ணமாயிருந்தது.

காலையில் நடந்த தாக்குதல்களால் 200 ற்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்திருக்கிறார்கள் என்றும் மேலும் பலர் முள்ளிவாய்க்கால் வைத்தியசாலையில் உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கிறார்கள் என்றும் தமிழகத்தின் பிரபல தொலைக்காட்சி ஒன்றில் செய்தி ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கின்றது.

மறுபுறத்தில் அண்ணா சமாதிக்கு முன்பாக உண்ணா விரதம் இருந்த முதல்வர் கருணாநிதி, போரை முடிவுக்குக் கொண்டுவருவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. இனிமேல் மீட்புப் பணியில் மட்டுமே இராணுவம் ஈடுபடுத்தப்படும் என்று மகிழ்ச்சிகரமான செய்தி வந்துள்ளது. எனவே நான் எனது உண்ணாவிரதத்தை முடித்துக்கொள்கின்றேன் என்ற அறிவிப்புடன் உலக வரலாறுகளில் எங்குமே இடம் பெற்றிருக்காத 4 மணிநேர உண்ணாவிரதப் போராட்டத்தை, தனது காலை உணவிற்காக முடிவிற்கு கொண்டுவருகின்றார்.

இதற்கிடையில் படையினர் முள்ளிவாய்க்கால் பகுதியில் தமது தாக்குதல்களை மீண்டும் ஆரம்பித்திருந்தனர். மக்கள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு பதுங்கு குழிகளை நோக்கி விரைகின்றனர்.

**2009 ஏப்ரல் 28**

நேற்றும், ஏன்இன்றும்கூட இலங்கையில்தாக்குதல்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக செய்திகள் வருகிறனவே என செய்தியாளர்கள் முதல்வரைக் கேட்கிறார்கள்.

இலங்கையில் போர் நிறுத்த அறிவிப்புக்கு பின்னரும் தாக்குதல் நடைபெறுவதாக கூறப்படுவது, மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பதைப் போன்றது' என்கிறார் கலைஞர்.

★★★★

2009 இல் ஈழத்தமிழர் பிரச்சனையை தி.மு.க எந்தளவிற்கு தனது அரசியல் ஆதாயத்திற்காக பயன்படுத்தியதோ, அதே போல் தற்போது மீண்டும் ஈழத் தமிழர் விவகாரத்தை கையிலெடுத்து கடந்த சில வருடங்களாகஏற்பட்டுள்ள அரசியல்வங்குரோத்துநிலையை நிவர்த்தி செய்ய தீவிர முயற்சியில் இறங்கியுள்ளது.

2009 இல் வன்னியில் யுத்தம் நடந்து கொண்டிருந்த போது ஆளும் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் தி.மு.க. முக்கிய பங்காளியாக இருந்தது தமிழகத்தின் 39 நாடாளுமன்ற ஆசனங்களையும் இந்தக் கூட்டணி கைப்பற்றியிருந்தது. மத்திய அரசில் பல முக்கிய அமைச்சுப் பதவிகளையும் தி.மு.க பெற்றிருந்தது. மக்களவையில் தி.மு.க. உறுப்பினர்கள் கூட்டணிக்கான ஆதரவை விலக்கிக் கொண்டால் ஆட்சி கவிழும் என்ற ஒரு நிலையிருந்தது. ஆக மொத்தத்தில் தி.மு.க அன்று ஒரு பேரம் பேசும் சக்தியாக மத்திய அரசின் தீர்மானத்தில் தாக்கம் செலுத்தக் கூடியதானதொரு நிலைமை காணப்பட்டது.

ஈழத்தமிழர்களும் தி.மு.க சண்டையை நிறுத்த பாடுபடும் என்ற நம்பிக்கையில் இருந்தனர். அப்போதெல்லாம் கருணாநிதி, "மத்திய அரசின் நிலைப்பாடு எதுவோ, அதுவே தமிழக அரசின் நிலைப்பாடு" என்று கூறியதோடு மட்டுமின்றி, இலங்கை இறையாண்மையுடைய வேறொரு நாடு, அதன் உள் விவகாரத்தில் தலையிட முடியாது" என்று நொண்டிச் சாட்டு சொல்லி சமாளித்தார். இதை எல்லாம் மனதில் வைத்திருந்த தமிழக மக்கள் கடந்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க.விற்கு எதிர்க்கட்சியாகக் கூட வரமுடியாத அளவிற்கு பாடம் புகட்டியிருந்தனர்.

**திடீரென்று வந்த பாசம்**

ஈழத்தமிழருக்கு ஆதரவாக தலைநகர் புதுடில்லியில் மாநாடு நடத்தப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் 12 ம் திகதி தமிழகமெங்கும் கடையடைப்பு போராட்டத்திற்கும் 'டெசோ' அமைப்பினூடாக தி.மு.கவினரால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

டெசோ அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை சென்னையில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது. தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல் திருமாவளவன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். முழக்கங்கள் எழுப்பிய பிறகு டெசோ அமைப்பினர் இலங்கைத் துணைத் தூதுவரகத்தினை முற்றுகையிடப்போவதாக அறிவித்த நிலையில் ஸ்டாலின் உட்பட ஏறத்தாழ 4,000 பேர் கைதாகி பின்னர் விடுதலையாகி இருந்தனர்.

**ஸ்டாலினைப் பலப்படுத்தும் ஆயுதம் - டெசோ**

அடுத்த வருடம் இந்திய நாடாளுமன்ற தேர்தல் வரவிருக்கின்ற நிலையில் சரிந்து போன தமது செல்வாக்கை மீளப் பெறும் நோக்கில் தி.மு.கவினர் மீண்டும் 'டெசோ - ஈழத்தமிழர் ஆதரவு அமைப்பு' என்ற ஆயுதத்தைக் கையிலெடுத்துள்ளார்.

கருணாநிதி எவ்வாறு ஈழத்தமிழர் பிரச்சினையைத் தனது சுயநல அரசியலுக்காக பயன்படுத்தினாரோ, அதே வேலை இப்பொழுது ஸ்டாலினால் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தி.மு.க வில் கலைஞருக்கு பின்னரான தலைமைத்துவப் போட்டியில் ஸ்டாலினை முன்னிலைப்படுத்தும் ஆயுதமாகவே 'டெசோ' பார்க்கப்படுகின்றது. 'டெசோ' போராட்டங்களுக்கு ஸ்டாலினே தலைமை வகிக்கின்றார். ஸ்டாலின் விம்பத்தை உயர்த்தக்கூடியவாறான கருத்துக்களும் தி.மு.க.வினரால் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

**அண்டப்புளுகுக்கு விழுந்தது ஆப்பு!**

இந்தியாவில் தற்போது பாலச்சந்திரனின் புகைப்படம் மற்றும் சனல் 4 இன், புதிய காணொளி என்பன அடுத்தடுத்து வெளியாகியிருந்தமையே ஈழத்தமிழருக்கு ஆதரவான ஒரு நிலை தற்போது சடுதியாக அதிகரிக்க காரணமாகும்.

இந்நிலையில் சனல் - 4 தொலைக்காட்சியின் தயாரிப்பாளர் 'கெலம் மேக்ரே' டெசோ போராட்டத்துக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார் என தி.மு.கவினர் ஒரு புரளியைக் கிளப்பி விட்டிருந்தார்கள்.

கெலம் மக்ரேயுடன் கருணாநிதி தொலைபேசியில் கதைத்து "நீங்கள் தயாரித்துள்ள இந்த ஆவணப்படமானது தமிழ் நாட்டில் பெரிய உணர்வலைகளை தோற்றுவித்துள்ளது, என்றும், இந்திய நிலைப்பாட்டில் மாற்றங்களை கொண்டுவர அது உதவும்" என்று கூறியதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

ஸ்டாலின் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது, தொலைபேசியில் அழைத்த கெலம் மக்ரே போராட்டத்துக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார் என்றும் கதை கட்டப்பட்டிருந்தது. ஆனால் தனது உத்தியோகபூர்வ 'ருவிற்றர்' பக்கத்தில் கருத்து வெளியிட்டுள்ள கெலம் மக்ரே 'தான் எந்தத் தனிப்பட்ட கட்சியுடனும் பேசவில்லை அந்த செய்தி தவறானது' என மறுத்திருக்கிறார். இதன்மூலம் தி.மு.க.வின் புளுகிற்கு ஆப்பு விழுந்திருக்கின்றது.

கருணாநிதி ஈழத்தமிழரின் சாபக்கேடாகி விடுதலைப் போராட்டம் தோல்வியடைய காரணமானதைப் போல, தற்போது கலைஞரின் மகனும் தகப்பன் வழியில் ஈழப்போராட்டத்தை தனது தலைமைத்துவ இருப்புக்கான ஆயுதமாக பயன்படுத்த தொடங்கியுள்ளார். எனினும் எல்லாவற்றையும் அமைதியாக அவதானித்துக் கொண்டிருக்கும் தமிழக மக்கள் வருகின்ற தேர்தலில் இவர்களுக்கு நல்ல பாடம் புகட்டவே செய்வார்கள்.

★

# சர்வதேச மகளிர் தினத்தில் இலங்கைத் தமிழ்ப் பெண்கள்

ஞாயிறு காரம்



இந்திராகாந்தியிடம் அதிகாரங்கள் குவிந்து கிடந்தன. அவர் துணிச்சலான பல காரியங்களை நிறைவேற்றியதும் உண்மைதான். ஆனால் அவரால் இந்துத்துவ மேலாதிக்க அரசியல் என்ற வட்டத்துக்கு வெளியே வரமுடியவில்லை. பெண்களின் விடுதலைக்காக ஒரு துரும்பைக்கூட எடுத்துப்போட முடியவில்லை. இலங்கையிலும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, திருமதி சந்திரிகா விஜயகுமாரணதுங்க ஆகியோர் நாட்டின் அதிகாரம் மிக்க பதவிகளை வகித்த போதும் சிங்கள பௌத்த மேலாதிக்க தடத்தை விட்டு அவர்களால் வெளியே வரமுடியவில்லை. சிங்களப் பெண்களின் உரிமைகளை நிலை நாட்டக்கூட இவர்களால் எதையும் செய்ய முடியவில்லை.

சந்திரசேகரஆஷாத்

நேற்று முன்தினம் உலகம்முழுவதும் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. ஆர்ப்பாட்டப் பேரணிகள், கனல்கக்கும் அறிக்கைகள், கண்காட்சிகள், கலை நிகழ்ச்சிகள் எனப் பல முனைகளிலும் பெண்களின் குரல்கள் ஓங்கி ஒலித்தன. இலங்கைப் பெண்களும் வெவ்வேறு மட்டங்களிலும், வெவ்வேறு விதங்களிலும் இந்த நாளைக் கொண்டாடினர்.

ஆனால் உலகெங்கிலும் சரி, இலங்கையிலும் சரி, பெண்கள் மீதான ஒடுக்குமுறைக்கு முடிவு கட்டப்பட்டுள்ளதா என்பது இன்று வரை இல்லையென்பதைப் பதிலாகக் கொண்ட ஒரு கேள்வியாகவே நிலவி வருகிறது.

1887 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் சம சம்பளம் கோரி பெண்கள் நடத்திய போராட்டமே, அவர்கள் தங்கள் உரிமைகள் தொடர்பாக விழிப்படைந்து எழுச்சி பெற்ற முதல் சம்பவமாகக் கருதப்படுகிறது. 1909 இல் ஐரோப்பாவில் உள்ள பெண் தொழிலாளர்கள் பெப்ரவரி மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமையை பெண் தொழிலாளர்கள் தினமாகக் கொண்டாடினர். 1910 இல் இது முழுப் பெண்களினதும் தினமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன் பின்பு ஐக்கிய நாடுகள் சபை மார்ச் மாதம் 8 ஆம் நாளை உலக மகளிர் தினமாகப் பிரகடனம் செய்தது.

பெண்கள் தம் உரிமைகளுக்காக விழிப்புணர்வு பெற்றுப் போராட ஆரம்பித்து நூறு வருடங்களுக்கு மேலாகியும் பெண்கள் மீதான ஒடுக்கு முறை முடிவுக்குக் கொண்டு வரப்படவில்லை. பெண்கள் நடத்தும் போராட்டங்கள், ஒடுக்குமுறையின் வடிவங்களை மாற்றுகிறதே ஒழிய, அவற்றை முற்றாக இல்லாமல் செய்யும் சாதனையைச் செய்து விட முடியவில்லை.

இன்று பெண்கள் அரசியல் ஒடுக்குமுறை, பொருளாதார ஒடுக்குமுறை, பாலியல் ஒடுக்கு முறை, சமூக ஒடுக்குமுறை, மத ஒடுக்குமுறை எனப் பல்வேறு கோணங்களில் இம்சைப் படுத்தப்படுகின்றனர். இந்த ஒடுக்கு முறைகளின் மூல வடிவம் அரசியல் ஒடுக்கு முறையின் ஆணாதிக்க மேலாண்மையாகவே விளங்கி வருகிறது. அது மட்டுமன்றிக் கீழைத் தேசங்களில் நிலவும் குடும்ப அமைப்பு முறை பெண்களை தம்மீது திணிக்கப்படும் அடிமைத்தனத்தை மனப் பூர்வமாக ஏற்றுக் கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதை இங்கு நிலவும் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ மதங்கள் தங்கள் கோட்பாடுகள் மூலம் மேலும் வலுப்படுத்தி வருகின்றன.

மேலை நாடுகளில் பெண்கள் ஓரளவு சுதந்திரம் பெற்று விட்டதாகக் கூறப்படுகின்றது. இங்கு பெண்களுக்கான பாலியல் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனால் பெண், ஆண்களின் பாலியல் வக்கிரங்களை நிறைவு செய்யும் ஒரு பாவனைப் பொருளாகவே பார்க்கப்படுகிறாள். பாலியல் தொழிலாளிகளாக பெண்கள் மட்டுமே பயன்படுத்தப்படுவதன் மூலம் பெண் ஒரு மனிதப் பிறவியாகப் பார்க்கப்படாமல் ஆணின் ஒருநுகர்வுப் பண்டமாகப் பார்க்கப்படுவதை நாம் அவதானிக்கலாம். அங்கு பெண்களும் உழைப்பில் ஈடுபடுவதால் ஆண்களுக்குக் கட்டுப்படும் நிலை இல்லையெனக் கூறப்பட்டபோதிலும், குடும்பம் என்ற அமைப்பில் அவள் தனது கணவன், பிள்ளைகள் ஆகியோருக்கு சேவை செய்யும் நிலையே நிலவுகிறது.

இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் வேதகாலம் தொட்டு இன்று வரை சமூக அமைப்பில் வர்ணாச்சிரமம், தர்மமுறை, நிலமானிய சமூக அமைப்பு, முதலாளித்துவ சமூக அமைப்பு எனப் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும், பெண்ணடிமைத்தனம் இன்று வரை நிலை குலையாமலே நிலவி வருகிறது. மகாபாரதத்தில் குந்திதேவிக்கு ஆறு கணவன்மார். பாஞ்சாலிக்கு ஐந்து கணவன்மார், என தாய் வழிச் சமூக அமைப்பின் எச்சங்கள் காணப்பட்ட போதிலும் காவியம் முழுவதுமே கண்ணன், பாண்டவர்கள், கௌரவர்கள், ஆசாரியர்கள் என ஆண்களே மேலாதிக்கம் வகிக்கின்றனர். இராமாயணத்தில் பெண்கள் முழுமையாகவே அடிமை நிலையில் சித்தரிக்கப்படுகின்றனர். சீதையின் கற்பைப் பரிசோதனை செய்ய அவளைத் தீக்குளிக்க வைத்ததும், அகலிகையை கல்லாகப் போகும்படி சாபம் போட்டதும், பெண் அடிமைத்தனத்தின் உயர்மட்ட வெளிப்பாடாகும். சமண முனிவரான இளங்கோவடிகளால் பாடப்பட்ட சிலப்பதிகாரத்திலும் கண்ணகி நியாயத்தைத் தேடும் போர்க்குணம் மிக்கவளாகச் சித்தரிக்கப்பட்ட போதிலும், அவளின் வாழ்வு, சாவு அனைத்துமே கணவன் கோவலனின் நலன்களை அடியொற்றியே அமையப் பெற்றுள்ளன. மணிமேகலையிலும் அவள் தன்னை அரச குமாரனிடமிருந்து பாதுகாக்க அவனைக் கொலை செய்த போதிலும் இறுதியில் அவள் துறவறம் பேணும் நிலைக்கே தள்ளப்படுகிறாள். சமண, பௌத்த சமயங்கள் சம்பந்தப்பட்ட நூல்களில் பெண்களின் எழுச்சி முன் வைக்கப்பட்ட போதிலும் அது நிலமானிய சமூக வரம்புகளுக்கு வெளியே வரமுடியவில்லை. இன்றைய முதலாளித்துவ சமூக அமைப்பில் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் கல்வி, பதவிகள் என்பவை காரணமாகப் பெண்கள் மத்தியில் முன்னேற்றம் காணப்படுவதாக ஒரு தோற்றப்பாடு தெரிகிறது. ஆனால் அது கூட வெறும் போலித் தோற்றப்பாடு மட்டுமே.

இந்தியா என்ற பல்லினங்கள் வாழும் ஒரு பெரும் தேசத்தின் பிரதமராக அதி உயர் பதவி வகித்தவர் இந்திராகாந்தி. அவரிடம் அதிகாரங்கள் குவிந்து கிடந்தன. அவர் துணிச்சலான பல காரியங்களை நிறைவேற்றியதும் உண்மைதான். ஆனால் அவரால் இந்துத்துவ மேலாதிக்க அரசியல் என்ற வட்டத்துக்கு வெளியே வரமுடியவில்லை. பெண்களின் விடுதலைக்காக ஒரு துரும்பைக்கூட எடுத்துப் போட முடியவில்லை. இலங்கையிலும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, திருமதி சந்திரிகா விஜயகுமாரணதுங்க ஆகியோர் நாட்டின் அதிகாரம் மிக்க பதவிகளை வகித்த போதும் சிங்களபௌத்தமேலாதிக்கதடத்தை விட்டு அவர்களால் வெளியே வரமுடியவில்லை. சிங்களப் பெண்களின் உரிமைகளை நிலை நாட்டக்கூட இவர்களால் எதையும் செய்ய முடியவில்லை. மாறாக ஆணாதிக்க மேலாதிக்க அதிகாரத்துக்கு தலைமை தாங்கி நடக்க வேண்டிய நிலைக்கே தள்ளப்பட்டிருந்தனர்.

இத்தகைய நிலை, ஒரு சர்வதேசிய, தேசிய சூழ்நிலையிலேயே நாம் எமது இலங்கைத் தமிழ் பெண்களின் நிலையை நோக்க வேண்டியுள்ளது. போரின் போதும் சரி போரின் பின்பும் சரி எமது பெண்களின் மீது பலவித ஒடுக்கு முறைகள் திணிக்கப்பட்டாலும், அவை அனைத்துக்கும் மூலவேராக அரசியல் ஒடுக்கு முறையே விளங்கி வருகிறது.

இன்றைய ஆட்சியாளர்களின் அரசியல் ஒடுக்குமுறை காரணமாகப் படுகொலைகள், சிறைப்படுத்தல், சித்திரவதைக் குட்படுத்தல், காணாமல் போகச் செய்யப்படல், பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தல், தமிழர் சுதந்திரம், நடமாட்ட சுதந்திரம் என்பன மறுக்கப்படல் போன்ற கொடுமைகள் அரங்கேற்றப்படுகின்றன. அவற்றின் காரணமாக எமது பெண்கள் உடல்ரீதியாகவும், மனோ ரீதியாகவும், சமூக வாழ்விலும் பெருங் கொடுமைக்கு உட்படுத்தப்படுகின்றனர். இவற்றின் காரணமாகப் பல தற்கொலைகள் கூட இடம் பெற்றுள்ளன.

போரின் போதும் அதன் பின்பும் இடம்பெற்ற படுகொலைகள் காரணமாக ஆண்களும், பெண்களும் பல்லாயிரக்கணக்கில் உயிரிழந்தனர். ஆண்கள் கொல்லப்படும் போது அந்தக் கொலைகள் மூலம் பெண்களும் படுமோசமாகப் பாதிக்கப்படுகின்றனர் என்பது தான் ஒரு முக்கிய விடயமாகும். ஆண்கள் கொல்லப்படும் போது பெண்கள் கணவன்மாரை இழந்து விதவைகளாகின்றனர். தகப்பனை இழந்து அநாதைகள் ஆகின்றனர். சகோதரர்களை இழந்து ஆதரவற்றவர்களாகின்றனர். இதன் காரணமாக வறுமை, தனிமை, சில சமூக விரோதிகள், படையினர் உட்பட சிலரின் பாலியல் துன்புறுத்தல் என்பவற்றுக்கு ஆளாகின்றனர்.

ஒரு பெண் விதவையாக்கப்படும் போது, தன் பிள்ளைகளையும், வீட்டிலுள்ள முதியோரையும் பராமரிக்க வேண்டிய பொறுப்பு அவளின் தலையிலேயே சுமத்தப்படுகிறது. அதே வேளையில் அவள் தன் இயற்கையான பாலியல் தேவைகளையும் நிறைவேற்ற முடியாத மன அழுத்தத்துக்கு உட்பட்டு வெறும் நடைப்பிணமாக வாழ நிர்ப்பந்திக்கப்படுகிறாள். அதே வேளை அவள் படையினர், சமூக விரோதிகள் ஆகியோரின் பாலியல் அச்சுறுத்தல்களிலிருந்து தப்பவும் போராட வேண்டியுள்ளது.

அதேவேளை, காணாமற் போனோரின் உறவுகளாக இருக்கக்கூடிய பெண்களுக்கு மேற்கண்ட துயரங்களுக்கு மேலதிகமாக தங்கள் கணவனோ, சகோதரனோ, மகனோ உயிருடன் இருக்கிறார்களா இல்லையா என்ற தவிப்பில் உழல வேண்டியுள்ளது. அதன் காரணமாக சிறைக்கூடங்களையும், தடுப்பு முகாம்களையும் தேடி அலைகின்றனர். காணாமல் போன தங்கள் உறவுகளைத் தேடித் தரும்படி கோரி ஆர்ப்பாட்டங்களையும், உண்ணாவிரதங்களையும் நடத்துகின்றனர்.

மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் இடம் பெற்று வரும் வேளையில், அண்மையில் கொழும்பில் காணாமல் போனோரைத் தேடித் தரும்படி கோரி நடத்தப்படவிருந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொள்ளச் சென்ற உறவுகள் வவுனியாவுடன் தடுத்து நிறுத்தப்பட்டனர். அவர்கள் வவுனியா நகரசபை மைதானத்தில் திறந்த வெளியிலேயே இரவைக் கழிக்க வேண்டியிருந்தது. அவர்கள் அடுத்த நாள் வவுனியாவிலேயே பேரணியை நடத்தி மகஜர் கொடுக்க முயன்ற போது அரச அதிபர் வெளியே வந்து அதை வாங்க மறுத்து விட்டார். அதன் அர்த்தம் இலங்கை வாழ் தமிழ் பெண்களுக்கு அழும் உரிமையோ, தங்கள் குறைகளைத் தெரிவிக்கும் உரிமையையோ கூட இன்றைய ஆட்சியாளர்களால் மறுக்கப்படுகின்றது என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

போரின்போது படையினரிடம் சரணடைந்த பெண்களைப் பலர் முன்னிலையில் நிர்வாணப்படுத்தி சித்திரவதை செய்யும் கொடுமைகள் இடம்பெற்றன. பல படையினர் பெண்களைப் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தினர். இறுதியில் கொன்று பிணங்களாக வீசினர். பெண்கள் நிர்வாணமாக வீசப்பட்ட காட்சியையும், பிணங்கள் உழவுப் பெட்டியில் குவிக்கப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டதையும் சனல்-4 காணொலிப் பிரதி அம்பலப்படுத்தியது. அரசும், அரச படைகளும் பெண்களை மனித உயிர்களாகப் பார்க்காது தங்கள் பாலியல் வக்கிரத்தை அரங்கேற்றும் ஆணாதிக்க வெறியின் வெளிப்பாடுதான் அது.

இதேபோன்று ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பத்து பதினைந்து வருடங்களுக்கு மேலாக விசாரணையின்றி சிறையில் வாடுகின்றனர். இவர்களின் உறவுகளோ இவர்கள் வரவை எதிர்பார்த்தும் வறுமையில் வாடி துயரம் சுமக்கின்றனர்.

இன்றைய ஆட்சியாளர்களின் பெண்கள் மீதான ஒடுக்குமுறை சிங்கள, முஸ்லிம் பெண்களையும் விட்டு வைக்கவில்லை. அந்நிய செலாவாணியைத் தேடும் ஒரே நோக்கத்துக்காக அவர்கள் வீட்டுப் பணிப்பெண்களாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றனர். அவர்களில் பலர் கொடிய சித்திரவதைக்கு உட்படுத்தப்படுகின்றனர். சிலர் பிணங்களாகவும் அனுப்பப்படுகின்றனர். அண்மையில் ரிசானா என்ற இளம் முஸ்லிம் பெண் சவூதியில் சிரச்சேதம் செய்யப்பட்டுக் கொல்லப்பட்டாள்.

அது மட்டுமின்றி பல சிங்கள இளம் பெண்களும் சிறுமிகளும் சுற்றுலாப் பயணிகளின் பாலியல் வக்கிரங்களை நிறைவு செய்ய விபசாரத்தில் ஈடுபடுத்தப்படுகின்றனர். எவ்வளவுதான் மகளிர் தினங்கள் கொண்டாடப்பட்டாலும், இலங்கையில்பெண்கள் மீதான ஒடுக்குமுறைகள் அரசியல் ஒடுக்குமுறையின் பகுதிகளாகவே அரங்கேற்றப்படுகின்றன. எனவே அரசியல் ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்களின் ஊடாகவே பெண் விடுதலையைச் சாத்தியமாக்க முடியும். ★



# “பிள்ளைய தேடுறத்துக்கு எங்கள விடுங்கோ...”

## ஒரு தாயின் கண்ணீர் மொழிகள்

ஔரீஷ்

எங்கட பஸ் வவுனியாவுக்குக் கிட்ட வரேக்குள்ளேயே நல்ல கொட்டு மழை. ஜன்னலை மூடின பிறகும் கூட தூவானம் எத்திக் கொண்டிருந்திச்சுது. கொழும்புக்குப் போக இன்னும் எட்டு மணித்தியாலம் ஆகும் எண்டு பக்கத்தில இருந்தவர் சொன்னார். காலம சாப்பிட்டதுக்குப் பிறகு முறிகண்டியில ஒரு ரீயும் வடையும்தான். எண்டாலும் ஏனோ பசிக்கேல. பேர்சுக்க இருந்த மூத்தவன்ர படத்தை எடுத்து இதோட பதினெட்டாவது தரமா பார்த்தன்.

தேப்பனைப் போல பிறந்திருக்கிறான் எண்டு எல்லாரும் அவனைப் பார்த்துச் சொல்லுவினம். ஆள் நல்ல ஸ்மாட். ஆனால் வெளித்தோற்றத்துக்குத்தான் அவன் அப்பிடி. உள்ளுக்க இன்னும் சின்னப்பிள்ளைதான். இரவில ஒண்டுக்குப் போற தெண்டாக்கூட துணைக்கு நான் போகவேணும். அவ்வளவு பயம். சண்டை தொடங்கின பிறகு கோழிக்குஞ்சு மாதிரி அவன காப்பாத்த நான் பட்ட பாடு வற்றாப்பளை அம்மாளாச்சிக்குத்தான் தெரியும். எண்டாலும் கடைசியா ஒரு நாள் அவன் பிடிபட்டிட்டான். நல்ல வேளையா சண்டை முடிஞ்ச அண்டைக்கு கையில ஒரு காயத்தோட என்ர கண்ணில எத்துப்பட்டிட்டான். என்னோட அவனையும் கூட்டி வரேக்க “விசாரணைக்கு கொண்டு போறம் கொஞ்ச நேரத்தில விடுறம்'' எண்டு சொல்லி, மூண்டு ஆமிக்காரர் இழுத்துக் கொண்டு போனாங்கள்.

''அம்மா நீயும் வாணை'' எண்டு குளறிக்கொண்டே போனான். நானும் நிண்டு பாத்து களைச்சுப் போனன். மற்றப் பிள்ளையள் பசியில கத்தத் தொடங்கிட்டுதுகள். இனியும் நிண்டா அதுகளையும் இழக்க வேண்டியிருக்கும். அங்க நிண்ட ஆமிக்காரரை கேட்டுப் பார்த்தன். ''நீங்க காம்புக்குப் போங்க. நாங்க கொண்டு வந்து விடுறம்'' என்று சொல்லி விட்டார்கள். அதுக்குப் பிறகு நாலு வருசமா மூத்தவனை நான் தேடாத இடமில்லை. ஒரு இடமும் அவனைக் காணேல்ல. போகாத கோயில் இல்லை. எல்லாச் சாத்திரி மாரும் அவன் திரும்பி வருவான் எண்டு சொல்லிக் கொண்டுதான் இருக்கிறாங்கள்.

